

உ

சிவமயம்,

திருச்சிற்றம்பலம்

# உறையூர்ப்புராணம்.

நிகமாகமசித்தாந்த சைவசமயாசிரியபீடமாய

விளங்காநின்ற

திருவாவடுதுறை ஆதீனவித்துவான்

திரிசிரபுரம்

**மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களாற்**

செய்யப்பட்டது

---

உறையூரிலிருக்கும்

கல்லூர்ச்-சொக்கலிங்க முதலியார்

குமாரர்

மதுரைநாயக முதலியார்

வேண்டுகோளின்படி

திரிசிரபுரம்

**சி. தியாகராச செட்டியாரால்**

சென்னையில்

தஞ்சைச்-சதாவதானம்

சுப்பிரமணிய ஐயரவர்களது

வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

---

விஷு-௵ ஆனி௴

MAHAMAHOPADHYAY

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்

கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

## சாமிநாத ஐயரவர்கள்

இயற்றியது.

ஈன்றதிருந்தந்தையணி மலருடைமுற் பெறுமுரிமை யெய்திலேம்யாம்
ஆன்றவவன்புத்திரர்க ளாயிருந்திங்கென்னபய னடைந்தோமென்று
மான்றமனத்தினராகிக் கரிமுகனுமறுமுகனும் வருந்தவோர்சேய்
தோன்றமுனம்பெருந்தவஞ்செய் திணையின்றிநனிவிளங்கு சோழநாட்டில்.

பிறையுறுஞ்சடைமௌலிக் கறையுறுங்கந்தரத்துப் பெருமான்செய்ய
மறையுறுமுறையுறு மடியனையாண்டருள்பஞ்ச வர்ணநாதன்
றறையுறுந்தவப்பயனாத் திருக்காந்திமதியம்மை சமேதனாக
வுறையூரென்றறிஞர்புகழ் தரவிளங்குமுறையூரா முயர்தலத்தின். (௨)

வாய்ந்தமான்மியமுழுது மெல்லோருமுணர்ந்துசைவ மார்க்கந்தேர்ந்து
பாய்ந்தவிருமைப்பயனு நுகர்ந்துலவாப்பேரின்பப் பயனுமெய்தத்
தோய்ந்ததலத்தமிழின்மொழிபெயர்க்கவெனப்பரமனடிதொண்டுபூண்டோ
ரேய்ந்தவன்பினொடுவேண்டக் கடைப்பிடித்தியாம்பெறும்பேறிதுவேயென்று.

வன்னமைந்திலதிக விருப்புடைமையினாற் சிறப்பெழுத்தாவன்னமைந்து
மன்னவமைமொழியினுநல் விருப்புடையன்பரமனென்று மனத்தினோர்ந்து
பன்னவமைகாப்பியமென் றறிஞர்கொளவதனுறுப்புப் பலவுநன்கு
துன்னவமையெந்நயமு நன்னரமைதரவினிது சொற்றான்மன்னோ. (௪)

அத்தகையபெருங்கீர்த்திக் கவிநாதன்யாவனெனி னமலையோடு
மித்தனுறைபலதலமான் மியமினியசெந்தமிழி னிகழ்த்தினோனங்
கைத்தலவாமலகமெனத் தனையடைந்தோர்பலர்க்குமின்ன காலமென்று
மெத்தகையபெருநூலு மெளிதுணர்த்திப்பயனுறுத்து மிணையிலாதோன். (௫)

அருத்திமிகவெனையருகி லிருத்தியருந்தமிழ்நூல்க ளறைந்துபின்னர்த்
திருத்துறைசையமர்தருசுப் பிரமணியவருட்கடலின் றிருமுன்சாரப்
பொருத்தியெனையாண்கருணைக் கிலக்காக்கியிருபயனும் பொருந்தச்செய்தோன்
மருத்தபொழிற்சிரகிரிவாழ் மீனாட்சிசுந்தரநா வலவரேறே. (௬)

அனையனவில்சிவதலமான் மியம்பலவற்றுளுமுதலா வமைந்ததாய
தனையனையவிவ்வுறந்தை மான்மியத்தைத்தமிழ்நாட்டிற் சார்ந்தோர்யாரும்
புனைதரக்கற்றெந்நூலுந் தந்நூலாம்வணஞானம் பொருந்தியுய்ய
வனைதருபல்லோர்புகழ வயங்கச்சிற்பதிப்பித்து வழங்குகென்று. (௭)

தோளாதமணிநிகரனையன் றிருத்தொண்டைநாட்டுளத் தொண்டைநாட்டு
வேளாளர்குலதிலக னவனடியர்சரிதையலால் வேறொன்றென்றுங்
கேளாதசெஞ்செவியன் றிருவுறையூர்ப்பதியழகு கெழுமவாழ்வோன்
றாளாளனெழிற்சொக்க லிங்கமுகில்புரிபெரிய தவமாஞ்செம்மல். (௮)

இந்நூலாசிரியனிடங் கற்றுணர்ந்தோனவன்விரும்பி யியற்றுநூலு
மெய்ந்நூல்கள்பிறவுமெழு தாதவெழுத்திலையவிக்க விருப்பமுள்ளோன்
பொய்ந்நூல்கள்பிதற்றுவன பொருளொன்றுமருளாத புந்தியாளன்
எந்நூலும்புகழீச னடியாரைப்பெற்றதா யெனப்புரப்போன். (௯)

வஞ்சமனப்படிற்றொழுக்கச் சமடருளத்திடைமருவா மாதேவன்றாட்
கஞ்சமலரணியுளத்தன் குவளைமலரணிபுயத்தன் கலைவலோர்கள்
நெஞ்சமுவந்திடவதன மலர்ந்தினியமொழியொடவர் நேயம்பூணு
மஞ்சலிலாதுதவுமெழின் மதுரைநாயகக்குரிசி லியம்பக்கேட்டு (௧௦)

யான்செய்தமாதவந்தா னிருந்தபடியெனனையென் றிறம்பூதெய்தி
வான்செய்தவனையாயதூ பதிப்பித்துவழங்கினனம் மாண்பின்மிக்கான்
றேன்செய்தமதுரமுடைத் தெள்ளியசெந்தமிழென்றுந் தெரிவைமுனனந்
தான்செய்தமாதவமோ ருருவமெடுத்தெனத்திகழுந் தகைமையாளன். (௧௧)

இனங்கொள்ளுமாணுக்கர்க் கரியனவுமெளியனவா வியம்பியன்றூர், மனங்கொள்ளும்படியுணர்த்தி யவர்கொள்ளுமகிழ்ச்சியைத்தன் மகிழ்ச்சியென்போன், கனங்கொள்ளும்பேரறிஞ ரினங்கொள்ளுமினியவுளா கபூறிச்சீர்த்தி, தினங்கொள்ளுமறிஞனென்பாற் றிரங்கொள்ளுமன்புடைய செம்மைகொண்டோன். (௧௨)

நலம்பூத்தசிவபெருமான் றிருப்புகழேயெடுத்துரைக்கு நாவினனற்
புலம்பூத்தகவிவலவர் சிரந்துளக்கமதுரகவி புகறல்வலலோன்
குலம்பூத்தபுலவர்புக லினியகவிக்குளமகிழுங் குணமாமேரு
வலம்பூத்தவியற்றமிழ்தேர் தியாகராஜப்பெயர்நா வலவனமாதோ. (௧௩)

தருமபுர ஆதினம்
பரமசிவ சுவாமிகளாற்
செயயப்பட்டது.

---

உலகினிற்சமுதாயப் பெருகியோர்நதியா யொழுகிடாதுறுபல நதியா
யிலகிவீண்படாது பயிர்செழித்தோங்க வெங்கணும்பரந்தடைந்தோர்கண்
மலமறவீட்டி வீட்டிடையுய்ப்ப மாமுகப்பிள்ளையா லுதவ
நிலவியபொன்னி நதிவளஞ்சுரக்கு நிகரறுசென்னிநன் னாட்டில். (௧)

புண்ணியமலிசூ விளவனமுக்கீச் சரமுறையூர்முதற் புகல [து
வெ யுல்பெயர்கொ டலத்தின்மான்மியத்தை யிருந்தமிழ்க்கடல்குடித் தின்
மண்ணிடைப்புலவர் மதிநிலங்குளிர வளமுறுகவிமழை பெய்ய
நண்ணியகொண்மூ வென்னுமீனாட்சி சுந்தரநாவலர் பெருமான். (௨)

வானவரமுதங் கைத்திடமதுரம் வாய்ந்தசெந்தமிழினல் வயங்கத்
தேனுறுமின்சொன னலம்பொருணலங்கள் செறிதரச்செய்தன னதனைத்
தானுறவுணர்ந்தே யடைந்தபேரின்பந் தகைமைசாலறிஞர்கள் பலரு
மேனகவடைவான் றன்னுளாதெண்ணி விளங்கவச்சியற்றினனென்று. (௪)

வேறு.

பொருட்சுவைதானாதலினாற் பொதுநடிக்கும்பெருமான்றற் போதம்வென்ற
தெருட்பெறுதேசிகனான வாதவூரடிகளன்பாற் றிருவாய்விண்ட *
மருட்கெடுவாசகத்தமைந்த சொற்சுவையினைமகிழ்ந்தான்மற் றதுவேயன்றி[ன்.]
யிருட்கெடவப்பொருட்சுவையு முணர்ந்தின்பமடைந்தென்று மிலங்குதூயோ

இந்தருக்கன்முதலான வெவ்வெளிக்குமொளியளிக்கு மிறையாஞ்சோதி
சந்ததமும்விளங்குதலாற் றனதிசயமானசமோ ருசமுன்னான
கந்தம்வரவிரிந்திலங்கு காலமலர்க்கவலைபிணி முதலாங்கங்குல்
வந்துலவக்குவிந்திடல்கண் டறியாதவலிமைபெறு மகிமைமிக்கோன. (௫)

ஊருணியும்பயன்மரமு முற்றோர்க்குமற்றோர்க்கு முதவியாகக்
காருணியமிகுந்துலவிக் காயமனம்வாக்கிவற்றாற் கலக்கமின்றிப
பாருணயந்தரப்பிரமன் வேண்டுமெனப்படைத்தனனோ பலரும்பன்னாள்
சீருணியவியற்றுதவப் பெரும்பயனோவெனமதிக்கச் செனித்தசீலன். (௬)

சீர்மருவுதிருத்தொண்டை நாட்டுவேளாளர்குலஞ் சிறப்புற்றோங்க
நார்மருவுசொக்கலிங்க மகிபாலன்புரிந்ததவ நலம்விளங்க
வேர்மருவுதிருவுறையூர்க் கொருதிலகமாகியென்று மெய்திவாழ்வோன்
பார்மருவுபுகழ்புனைந்த மதுரைநாயகவள்ளல் பகரக்கேட்டு. (௭)

நன்றாகமதாசிரிய னியற்றியபல்பயன்கெழுமு நற்புராண
மென்றூழுலகிடைப்பலவாய விளங்குறுமாறெண்ணியிவ னேவலுள்ளத்
தொன்றுபெருமகிழ்வுறுநனு மிதநமதுபுண்ணியமென் றுவந்துவாரி
துன்றுலகமிகமகிழப் பதிப்பித்தானயாவனெனிற சொல்லுவாமே. (௮)

மைவண்ணமுகிலிருந்த வளக்குறையாப்பெருங்கடல்சூழ் மகிமைமிக்க
விவ்வண்ணப்பெரும்புவியிற் றமிழ்க்கடலைமதித்துமதி யென்னுமத்தாற்
செவ்வண்ணத்தெளிவமுதை யாவருக்குமகிழ்ந்தளித்தச் சீரவேலை [லோன்.]
கைவண்ணங்கெடக்கடைந்தோர் கலையுறப்பெரும்புகழ்கைக் கொண்டமே

மன்னுமிந்நூல்செய்தவியற் கவிராதனிடைக்கல்வி வாய்ப்பக்கற்ற
பன்னுபலமாணாக்கர் குழுவினிடைப்பெருந்தலைமை படைத்துவாழ்வோ
னுன்னுபலநூலுணர்ந்த புலவரெல்லாங்கொண்டாட வோங்குகல்வி
நன்னலஞ்சார்ந்திலங்குபுகழ்த் தியாகராசப்பெயர்நன் னாவலோனே (௧௦)

உ

சிவமயம்.

# திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிச்செய்த

## திருமூக்கீச்சரத்

## தேவாரப்பதிகம்,

பண் - செவ்வழி

திருச்சிற்றம்பலம்.

சாந்தம்வெண்ணீறெனப் பூசிவெள்ளஞ்சடை வைத்தவர்
காந்தளாரும்விர லேழையோடாடிய காரண
மாய்ந்துகொண்டாங்கறி யந்நிறைந்தாரவ ரார்கொலோ
வேந்தன்மூக்கீச்சரத் தடிகள்செய்கின்றதோர் மெய்ம்மையே. (௧)

வெண்டலையோர்கல னாப்பலிதேர்ந்து விரிசடைக்
கொண்டலாரும்புனல் சேர்த்துமையாளொடுங் கூட்டமா
விண்டவர்தம்மதி லெய்தபின்வேனில்வேள் வெந்தெழக்
கண்டவர்மூக்கீச் சரத்தெம்மடிகள்செய் கன்மமே. (௨)

மருவலார்தம்மதி லெய்ததும்மான் மதயானையை
யுருவிலாரவ்வெரி யூட்டியதும்முல குண்டதாற்
செருவிலாரும்புலி செங்கயலாணையி னான்செய்த
பொருவின்மூக்கீச்சரத் தெம்மடிகள்செய்யும் பூசலே. (௩)

அன்னமன்னநடைச் சாயலாளோடழ கெய்தவே
மின்னையன்னசடைக் கங்கையான்மேவிய காரணந்
தென்னன்கோழியெழில் வஞ்சியுமோங்குசெங் கோலினான்
மன்னன்மூக்கீச்சரத் தடிகள்செய்கின்றதோர் மாயமே. (௪)

விடமுனாரவ்வழல் வாயதோர்பாம்பரை வீக்கியே
நடமுனாரவ்வழ லாடுவர்பேயொடு நள்ளிருள்
வடமனீடுபுகழ்ப் பூழியன்றென்னவன் கோழிமன்
னடன்மன்மூக்கீச்சரத் தடிகள்செய்கின்றதோ ரச்சமே. (௫)

வெந்தநீறுமெய் யிற் பூசுவராடுவர் வீங்கிருள்
வந்தெனா[illegible]ளை கொள்வதுமிங்கொரு மாயமா
மந்தணமா[illegible]ர னேரியன்செம்பிய னாக்கிய
வெந்தைமூக்கீச்சரத் தடிகள்செய்கின்றதோ ரேதமே. (௬)

அரையிலாருங்கலை யில்லவனோடு பெண்ணுமா
யுரையிலாரவ்வழ லாடுவரொன்றலர் காண்மினோ
விரவலார்தம்மதின் மூன்றுடன்வெவ்வழ லாக்கினா
னரையன்மூக்கீச்சரத் தடிகள்செய்கின்றதோ ரச்சமே. (௭)

ஈர்க்குநீர்ச்செஞ்சடைக் கேற்றதுங்கூற்றையு தைத்ததுங்
கூர்க்குநன்மூவிலை வேல்வலனேந்திய கொள்கையும்
மார்க்கும்வாயா னரக் கன்னுரத்தைநெரித் தவ்வடன்
மூர்க்கன்மூக்கீச்சரத் தடிகள்செய்யாநின்ற மொய்ம்பதே. (௮)

நீருளாரும்மலர் மேலுறைவானெடு மாலுமாய்ச்
சீருளாருங்கழ றேடமெய்த்தீதிர ளாயினான்
சீரினாலங்கொளிர் தென்னவன்செம்பியன் வில்லவன்
சேருமூக்கீச்சரத் தடிகள்செய்கின்றதோர் செம்மையே (௯)

வெண்புலான்மார்பிடு துகிலினர்வெற்றரை யுழல்பவ
ருண்பினாலேயுரைப் பூரமொழியூனம தாக்கினா
னெண்புலால்வேண்மிக வல்லவனேங்கெழிற கிள்ளைசேர்
பண்பின்மூக்கீச்சரத தடிகள்செய்கின்றதோர் பச்சையே. (௧௦)

மல்லைவார்மும்முடி மன்னர்மூக்கீச்சரத் தடிகளைச்
செல்வராகநினை யும்படிசேர்த்திய செந்தமிழ்
நல்லராய்வாழ்பவர் காழியுண்ஞானசம்பந்தன்
சொல்லவல்லாரவர் வானுலகாளவும் வல்லரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# உறையூர்ப்புராணம்

## பாயிரம்.

நிலவுவெண் மருபபி லொன றினைமுறிதது நெடுஙகையிற்படை
யெனத்தாஙகி, வலவுடற்பகையைச செற்றபினமரா மஞ்சனமாட்
டிட்டபெற்றுக், கலவுறிறபகைகைக கோடலாமென்று கதிரசசடைய
ம்மருபபமைததாங, குலவுமொண்பிறைவைத் தெவாக்குமஙகலஞ்
செ யுத்தமக்களிற்றையேததொடுபபாம. (௧)

மறுவறுசாயிலைக கோபுரவாயதன் மருவியொண்புழைக்கரநீட்டி
ச, சிறுவளிவிடுதல வாஙகுதலபலகாற் செய்திளஙகோககளைசசுமந்
தாங, குறுபறவைகளணடசுவாகாறு முற்றிடபபோககியுமீட்டும,
பெறுசிறுபடமென் றுடல்செய்கணேசப பிளளைதாளுளளிவாழநதி
டுவாம. (௨)

### வேறு.

சீரூத்தமாலயனிந் திரனமரா முதனமறறைச செமமையோ
ரு, மோரூததமலாபலவற் றினுமதிகமவிலவமென் றிட் டிறைஞசப
பெற்றுந், தாரூததநதியவதன் மேலவைத்த பெருவிழைவு தணி
யாகுப, பாரூதததிருவுறையூா விலவவனத தமாநதானைப பரவி
வாழ்வாம். (௩)

கைவண்ணத்துடையாறகுங கதிரவண்ணத்தாமரையிற் கலந்
துளாற்கு, மெயவண்ணப்பெருமறைக்கும் வெளிவணணமாகானை
விள்ளாவன்பாக், குய்வண்ணபடொருநதலன்றி நைவண்ணபபொரு
ந்தானை யுறையூாமேவு, மைவண்ணபபெருமானை யலாவண்ணபபுது
மலர்தூ யகத்துள்வைபபாம. (௪)

சுருக்கார்ந்திகழுமாறு செய்வாமன்பினையனறே தொட்டபாசத்,
தருக்கார்ந்தியக்கமெலா மறவொழிப்பாமபுவனமெலாஞ் சலிக்கத்தோ
ன்றும், பெருக்கார்ந்திவலையாகச் சடைவைத்தாருளமவைத்துப் பெரி

துபார்க்குந், திருக்காந்திமதியம்மை மருக்காந்திமலர்மலர்த்தாள் செ ன்னிசேர்ப்பாம். (ரு)

நெருங்குமலர்க்கருங்குழலுஞ் செவ்வாயும்வெண்ணகையு நில வுதோடு, மிருங்கருணைபொழிவிழியு மலர்முகமுந்தனதடமு மெழி ற்பூங்கையுஞ், சுருங்குமருங்குலுங்கலையுங் கண்டமுமங்கலநாணுந் து கடீர்செல்வ, மொருங்குதவுங்காந்திமதி யம்மைதிருத்தாளுமுளத் து ள்ளிவாழ்வாம். (சா)

தோற்றமொருகைத்துடியிற் றிதியபயந்தருகரத்திற் றுலை வோர்செங்கை, யேற்றகவைக்கொழுந்தழலிற் றிரோபவமூன் றியதா ளி லெடுத்ததாளின், மாற்றரியவருள்வயங்க விருமுனிவர் பணிந்தே த்த மறைகள்வாழ்த்தச், சாற்றரியவம்பலத்தி னடநவிலும்பெருமா னைச் சார்ந்துவாழ்வாம். (எ)

திருநெடுமான்முதலியபல் லுயிர்த்தொகைகளிடத்துநனி செ ழித்துநாளும், வருநெடுமாகருணைசுரந் திடவொளிர்பொன்னம்பல த்தின் மறைகள்காணு, வொருநெடுமாதேவனுநற் றுனந்தத்திருந டங்கண் டுவத்தலபூண்ட, கருநெடுமானமருட்டுவிழிச் சிவகாமசுந் தரிதாட் கமலம்போற்றி. (அ)

வேறு.

முழுதுணர்முனிவர்தேற மூவகைப் பாசமாய
பழுதறவொழிந்தான்மாக்கள் பதநிழ லடங்குமுண்மை
செழுமலர்பொருவுமங்கை விரல்களாற் றெரிதரியாரும்
தொழுதெழக்கலலானீழல வதிபவர் துணைத்தாள்போற்றி. (கூ)

வேறு.

வருத்தவருமவுணனவிடங் கனிகளெனப் பிரிந்துதவ வாங்கிவா ங்கிப், பொருத்தமுறமகிழ்ந்துண்டு புத்தேளிருலமுழுதும பொன் றிடாமே, யுருத்தவிடமொருதிரளை யாக்கியயிறந்தையினு முறுசீர் கொண்ட, நிருத்தகயமருத்தபத மருத்திகொடுகருத்தினிடை நிறு த்திவாழ்வாம். (க0)

திருவமிகுதேவர்தொழு தேவனுதலிற்றேவர் செம்மலீன்ற, பருவமடமகளையும்பைந் துளவணியுமபிறைக்கோட்டுப பன்றிகுன் றி, வெருவவருவேடர்தொழு வேடனுதலின்வேடர் வேந்தனீன்ற, வுருவமகளையுமணந்தின் பெவர்க்குமருளொருமுருக னொளிர்தாள் போற்றி. (கக)

வேறு.

உலகமூன் றினுக்கும் தானேயொருமுதலெனத்தெரித்தாங
கலகிறீபபொறிகடுமயி யலஙகுமுததலே வேறுஙகி
வலனுடைமாயனுநி வானவா செருககுமாறப
பலருமுளளஞ்சசெயததோாப பலிகொண்டோன் சரணஞ்சாாவாம்.

முடிகெழுகூடனமாறன முழுபபரஞ் சிவனேயென்றே
ரடிகொடுதெரிநதபினனு மயங்குவாாக கறிவிபபானபோல
வடிவுடைமாயனுஙி வானவா களைபபிரமபா
னெடியவெணகயிலேவெறபிற புடைகருநின மலனருள்போறறி. ()

வேறு.

உயிரசஞ்செறி யவிததையாமிருணமுழு தொழிததுய
செயிரிலாபபுகழ நிரணமெஙசணுஞ் செலசசெலுததி
வயமிகுநதமிழச செஙகநிருநிததிட வாயதத
பயமிகுஙகுணக குனறமாமகததியற பணிவாம. (கச)

வேறு.

பானமணககுஞசெவவாயுந தேன்மணககுமபஙகயபபூம பைந தாரோடு, நானமணககுநதிருமாாபு மருண்மணககுமிருவிழியு நா றையோடு, சேனமணககுமவயறகாழித திருஞானசமபநதத தேவ னின்பச, சானமணககுமலரடியு முளளுவாமவினேயனைத்துந் தள்ளு வாமே. (கரு)

கந்தைமிஙகயாஙகருத்துங கையுழவாரபபடையுங கவினவெண் ணீறுஞ, சிநதையிடையறுவன்புஞ் சிவஞானமபமுதறொழுகு செய் யவாயுந, தநதையொடுதாயிலான றிருவடிதைவருமனமுந தாரைக் கண்ணு, நிநதையறுமுழுத்துறவு முடையபிரானடிபணிநது நீடுவா ழுவாம. (கசு)

மலாமுகமுந்திருபபாடற் செவவாயுமவெண்ணீறு மாலேத்தோ ளுமம், பலாபுகழுமணிபபூணும் பரவையாாமுலேச்சுவடு பதிந்தமார் புங, கடரணுகாபபெருந்தகையைக் கொண்டுபணிகொண்டருளக் க நிக்குமனபு, மலாபணேசூழ்திருநாவ னமபிதிருத்தாளுமுளத் தமை ததுவாழ்வாம். (கள)

விதியறிதற்கரியமுடி மண்கூடைசுமபபாறு விரைப்பூஞ்செல்வி
பதியறிதற்கரியவடி மலாவையகைகளைாஙறப பாயதிஞ்சொற

றுதியறிதற்கரியபொரு ளமைத்துருகியுருகியுளஞ் சொற்றதேவைக்
கதியறிதற்கரியயான மூப்போதுநினைந்துவினை கழிததுயவேனே. ()

வேறு.

விணணியலமரா முனிவராபுடவி மிடைந்தவாயாவருமிகழுப, பு
ண்ணியமபுரிநது பாதகமாககிப பொலிவழிதககனபோலாது, நணணி
யகொடுமபா தகமபுரிந்கியாருநனறெனுமபுண ணியமாககித,திணணி
யபொலிவுற றானடியடைநத சேயநலூாபபிளளை தாடொழுவாம.

வேறு.

புகழ்மிகுசரியைமுன்றுப் புகலுநாற பாதநதமமு
ளிகழுவறுததத மககொன றேறறசாதனங கைககொணடே
யகழுமலததினராயமமா னடிநிழ லடைநதுநாளுந்
திகழுறுபததுமூவா சேவடிசெனனி சேரபபாம. (உ0)

வேறு.

குருமலியுநதணகயிலை நநதிபிரானவினறவருள கொழிகுநு
லைத், திருமலியுஞ்செநதமிழின் மொழிபெயாததான்மரபிறசோர தீ
பமான, தருமலியுமாவடுதண டுறைநமசிவாயகுரு சாமிசெயய, ம
ருமலியுமமபுயததா ளுளததிருததிவாழவதுவே வாழ்ககையாமால.

வேறு.

நாமலியுலகில வினைசசிமிழபபுணடு நெடுமபவததமூழ்கிமாழாநது
காாமலிகொடிய நரகொடுசுவாககங கலநதுளமலநதுழலாம
ஞாமலிதருத னடியரிறசோாதது நாயினேனையுமினிதாணட
சீாமலிதுறைசை யமபலவாண தேசிகன றிருவடிபோறறி. (உஉ)

வேறு.

மறையாதிமுழுதுணாநது மகமாதியறஙகளபல வயஙகசசெய
து, மிறையாதிபகவனெருு சிவனேயெனறெணணா யெணணே
மெனறுங, கறையாதியொழுகுபல நோயராயமறமபலகைக கொண
டாரேனு, மறையாதியுருகினைந துருகுவாமவரையாற கணபராகில

வேறு.

மனமொழியுடலமூன்று மாதேவ னடிககேயாககிக
கனவினுமறறோாதெயவங காண்கிலாப பெரியோாகேட்ப
வினிதெனவுவநதுறநதை யிலஙகுகூ விளவனததுத
தனிமுதலவன்புராணந தமிழினுற பாடலுறறேன. (உச)

யாயநானமறையுநதேறுப பணணவ னுறையூாமேய
தூயவனறிருபபுராணஞ் சொறறிடத தகுதியாய

நேயமொன்றுமையுன்னி யிருந்தன னெடுநாள்வாளா
மேயதோர்வேணவாவால் விளம்பிட லுற்றேனின்னும். (௨௫)

இலக்கணமுடையசொல்லோ டிலக்கணப் போலிசொல்லு
மிலக்கணமுணர்ந்தோராள்வ ரியல்பென வெடுத்தஃதேபோ
லிலக்கணமாய்ந்தசான்றோ ரின்றவின செய்யுளோடைந்
திலக்கணவழுவென்போலிச் செய்யுளு மெடுத்தாள்வாரால். (௨௬)

பண்ணியலொலியினோடு பாவிமா னொலியுமேற்கும்
புண்ணியனாந்துவன்னை புகழ்ந்துரு செவிக்குமெய்ந்நா
னுண்ணியகேள்வியோர்நா நுவன்றவின் கவிகளோடு
கண்ணியஞானமில்லேன் கவியுமேற் குமாலோ. (௨௭)

உயர்குணநிறத்தினோடு மற்றைய குணங்கட்குள்ள
பெயர்வறுநிறங்களுந்தன் மேனியிற் கொண்டபெம்மா
னுயர்வுறுபெரியோர்சொற்ற வொண்சுவைப் பாடலோடு
பெயர்வறுசிறியேன்சொற்ற பாடலும் பெரிதுகொள்வான். (௨௮)

வேறு.

உவமானமபுநலவொன்றுந் திருவுறந்தைமான்மியத்தை யுவரி வைப்பி, னவமானப்பசுந்தேறல் கவிந்தொழுகுசெந்தமிழி னலக்கச் செய்தான், சிவநேயமிகுந்தமைப் புலமைநிலவுலகமெலாஞ் செலுத்துமேலோன், றவநேயமீனாட்சி சுந்தரநாவலவனெனுந் தகைமையோனே. (௨௯)

மாமேவுசன்மார்க்க முதலியநான்மார்க்கருமுண் மகிழ்ந்துகேட்பத், தேமேவுதிருவுறந்தை மான்மியத்தைச்செந்தமிழாற் சிறப்பச்செய்தா, றாமேவுஞானகலை முதலியபற்பலகலையு நன்குதேர்ந்தோன், பூமேவுமீனாட்சி சுந்தரநாவலவனியற் புலவரேறே. (௩0)

பாயிர முற்றிற்று.

---

## திருநாட்டுப்படலம்.

மதியணிவேணிபஞ்ச வண்ணநா யகனார்காந்தி
மதியொடுமடியார்க்கின்ப வளஞ்சுரந் தினிதுவைகும்
பதியெனுமுறந்தைமுன்னுப் பஃறலந் தழுவிநாட்டின்
பதியெனவிளங்குஞ்சோழ நாட்டணி பகரலுற்றாம். (௧)

மறைமுதற்கலைகள்யாவும் வகுத்துணர் புலமையோருங
குறையறவிளைவுசெய்யுங் குடிகளுந் தாழ்விலாது
நிறைபெருஞ்செலவத்தோரு நீங்குத லின்றியென்று
முறைதருபெருஞ்சிறப்பை யுடையது சோழநாடு. (௨)

மிகுபொருளுடைமையாலே வேற்றுநாட் டவரும்பெட்கத்
தருவதாயொருகேடின்றிச சா[illegible]வும விளைவதாகிப
புகுமுறுபசியுமோவாப பிணிகளும பொருமைமேற்கொண்
டிகுதிறற்பகையுஞ்சேரா தியலவது சோழநாடு. (௩)

மற்றுளநாட்டின்பார மனைத்துமவந் துற்றபோதுஞ்
சற்றுமஞ்சாமற்றாங்கித் தன்னுடை யிறைவனுக்கு
முற்றமுன்னிறையேநல்கி யுவக்குமா கரம்பலகொண்டு
நற்றவர்புகழவோங்கு நலத்தது சோழநாடு. (௪)

அறவினைப்போகமூட்டி யமைத்தநா ளொழிந்தஞான்றே
திறமிறக்கிழேதளுந் தெய்வநாட் டினைபபோலாது
பெறலருந்தருமமூட்டிப பிறங்குதற் சாரந்துளோரை
நிறமருவுறமேலேற்று நிலையது சோழநாடு. (௫)

எவ்வகைத்தானத்துள்ளு மேற்றமா கியமெய்த்தானஞ்
செவ்வியவன்னதான மெனமறை செப்புமன்றே
யவ்வியற்றானநாளு மமைதர யாககுநல்கி
யொவ்வமெய்க்கீர்த்தியேபூண் டொளிவது சோழநாடு. (௬)

வேறு.

நிகழுமேன்மைசா லுறந்தைமாநகருறை நிமலன்
றிகழுமுன்முக வுருக்கொடுகுயின்குழாஞ் சென்று
புகழுமாகடல குடித்தெழீஇபபோற்றுவார் வினையை
யகழுந்தென்முக வுருக்கொடுமீண்டுவா னடைந்து. (௭)

நதியணிந்தசெம மேனிநாயகன்பசுங காந்தி
மதியொடுங்கலந் திருந்தெனவொற்றைவில வாங்கிய
பொதியவிழ்ந்தசெவ் விதழியபுராதனன் சடைபோற்
றிதியமைந்தமண் ணுலகெலாந்தெரிதர மின்னி. (௮)

உலகமெங்கணும் வெதும்புறவெப்பநோ யுறுத்தி
யலகில்பைம்பயி ராதியகருகுற வமைத்த
வலமிகுங்கடுங் கோடையைமாய்ப்பமின் றென்னு
நிலவுவஞ்சினங் கூறல்போலுருமொலி நிகழ்த்தி. (௯)

மழைபொழிந்துதாம் வளர்த்திடவளாபயி ராதி
விழைதருஙகருக் கொண்டிடவுதிக்கும்வெண் மதியின் |
றழைபசுங்கலை நாடொறுஙகவர்ந்துசெ றகாத
பிழையறிந்தென வினனொளியெழாவகை பிணித்து. (௧௦)

நுவலும்வேனிலா னுலகிரின்றளவுறு நோனுக்
கவலைதீர்மினயாம் பொழிவதுகாணுமி னென்று
தவலினூறுநா றுயிரங்கோடிதாரைக் கோர்
திவலையேயுறை யிட்டெனவள்ளுறை சிதறி. (௧௧)

கதிக்குநீறுபூத் துடலம்வீஙகியசெழுங் காயபோல்
விதிக்குமோர்வியப் பெய்திடக்கனோபலம் வீழ்த்தி
மதிக்குமொவ்வொரு தாரைகள்வயங்குமால யானைத்
துதிக்கைநேர்தரச சோவெனப்பெருமழை சொரிந்த. (௧௨)

வரைவயபபறை யரிந்தவன்மாகட லுடுத்த
தரையுடற்றொரு பகையுடலாதலிற் சலிகக
விரையவசிரத் தியற்றியகழுக்கடை வெள்ள
நிரையமைத்தன நிகாத்தனநெடுமழைத் தாரை. (௧௩)

வரையடங்கலும பொழிந்தனமலாவிரி கானத்
தரையடங்கலும பொழிந்தனதாமரைப பழன
நிரையடஙகலும பொழிந்தனநெய்தலங் கைதைத்
திரையடஙகலும் பொழிந்தனசெழுஙகொடை யவாபோல. (௧௪)

வானமோஙகுதிண் வரையகமலிந்தன வருவி
கானமார்நதன குறுஞ்சுனைகலித்தகான் யாறு
மானவோடைகா லலரிகணிரம்பின மருதம்
பேனநெய்தலூ றினநனிபெருமணற் கேணி. (௧௫)

பொழியிரத்தலூ னழலபுகுந்திழிவினைப் போக்கிய
பழியிலவானவாக் கமுதமாயினதுபோற் பற்பல்
கழியுடைக்கட லுவர்த்தபுன்னீர்கனம் புகுந்தாங
கிழிவினைத்தொலைத் தமுதமேயாயின தெவர்க்கும. (௧௬)

நாடுவார்கட லரசுபுல்லறலுறு நல்கக்
கூடுமேகவா னுண்டுயிர்க்கன்றுளங் குளிர
நீடுபார்க்குடம் வழிதரப்பொழிந்தநன் னீர்ப்பா
லோடுமாற்றுவா யுண்டதக்கடலர சுவந்தே. (௧௭)

காழிமாமணி கருணைசெய்தளித்தவெண் பூதி
வாழிதென்னவன் மேனிமேற்பரத்தலு மாய்ந்த
பாழிவெப்பென முனிவ்சுரந்தளித்தவொண் பாணி
யாழிஞாலமேற் பரத்தலுங்கோடைமாய்ந் தன்றே. (௧௮)

தவநிலைப்பவத் தினரவருஞ்சாரவுந் தனிமைச்
சிவபிரானரு ளேகுபுகிருந்துவ னதுபோ
லுவரொழிந்தநீர் பண்டுபோலுவரினை யுறவும்
புவனநோக்கிமீட் டுங்கழித்திடுமூவா புயலகள். (௧௯)

நினையின் வேறுவ மிப்பதற்கரியதாய் நிலைத்த
வினையமாமழைப் பெருமவளமுற்றுமப்பா ரிசைப்பார
வினையமேமிகுந் தமைந்தநூற்கேள்விசால விரகின்
புனையுமைந்திணை வளஞ்சிறிதறிந்தவா புகலவாம். (௨௦)

வேறு.

பிரமன்மான்முதல்வானோர்கள் கரங்குவித் தேத்தப்பெற்ற
பரமனார்கரங்குவிக்கப் பெற்றபைங் கடப்பந்தாரான்
கரதலங்குவித்துவள்ளி கதிர்முலைதழுவி யினப்ப
விரவிவீற்றிருக்குமேன்மை பூண்டன மிளிர்வெற்பெல்லாம். (௨௧)

தமமுடைக்குலத்தோர்பெண்ணைத் தழுவிய வருடெரிந்தோ
தெமமுனைசாயக்குமாயப் பனறினைச் சினந்துபற்றி
விம்முமொய்ம்மருப்புவாங்க வேடுருக் கொண்டதோர்ந்தோ
செம்மலவேளிருக்கைசூழ விறவுளர் செறிந்துவாழ்வார். (௨௨)

சந்தனமகின்முன்னான தருக்களவே ரறக்களைந்து
கொந்தொளிமணிகள்வாரி யெறிந்துவிற் கொளுங்கைவேடர்
செந்தினைவளமேகொள்வார் பெருமணிப் பணிமுனிந்து
நந்துமென்பணிதோலாடை கொண்டருண் மபனேபோல். (௨௩)

தம்மிடைப்பிறந்தநீயூந் தாளமுந் தாழுமவேட
ரிமமடவார்தங்கிணகற் பழனகைத் தோட்குதத்தோற்ற
விம்முநாணத்தாலவானறேய வேயதலை சாயக்குநாணுஞ்
செம்மைசேர்ந்தவரையண்மிற் சென்னிசாயத் திடலவியப்போ. (௨௪)

தினைவளர்குரல்கொள்பாக்குச் சென்றபைங் கிளிகள்காவற்
புனையிழையவர்சொற்கேட்டுப் பொருக்கென வஞ்சுமங்கை
வனையுகிரெழில்கண்டஞ்சும வருகவண் கலலிற்கஞ்சு
நினையினேரின்மைசாரு நிலையெனி லச்சுறுதோ. (௨௫)

கருவிகொண்டகழுநதோறுங காசினி முழுதுமவிற்கு
மருவிலேமணியுமபொன்னுந தோனறுவ வுகற்றிவேடா
பொருவறுவிழைவினமூல மொனறுமே புகழுந்துகொளவாா
பெருவளநதுறநதுபிசசை நயநதிடும பெரியாரானா். (உசு)

மிடைந்தநலவேஙகையெலலா மிளிாதரப பூததுவண்டு
குடைநதுதேனுகராவணண நிறபன குமரபபுததேள்
படாந்தசீரவளளிகாணக கொண்டவைந தருவுருபபோ
லடைந்தனதெயவததனமை யெனறுளத தியாருமெணண (உஎ)

கணியுடைசசினைகடோறுங களிமயி லுலாவுஙகாட்சி
யணியுடைககடபபநதாரா னூசிய கணியிலேறி
மணியுடைபபணிபூணகொஙகை வளளிநா யகியாரமபொற
பிணியுடைமலாமுறகொயயா வுலாவிய பெறறிகாட்டும. (உஅ)

தெறுஙகலிகிராதாநாளிற றினைவிதைத திடுவானுஙகாங
கிறுமபடியகிலசநதாதி யெரிகொளு வுதலாறறேனறு
நறுமபுகையவாவியனறே நமமையா ளுடையசெவவே
ளுறுமபுயறசிகரவோஙகற காணிகொண் டுறையுநதனமை (உகூ)

பளகறவுலகஙகாககு மனனாபைம புனமேகாககுந
தளரிடைபபணைததகொஙகைத தையலாா போகமவேட்டே
யுளமுறபபகலிராவு மூறறுசா ருழன்றுநதாழநதுங
களவுமேற்கொளினமமாதா கட்டழகெனச சொலகேனே. (ங0)

துடிபலகறஙகுமோதை தொண்டகந துவைககுமோதை
கடிமுருகியஙகலிககு மோதைமா களிநலயானை
செடிதுறமுழஙகுமோதை கிமிாவலி மடஙகலோதை
படிமுழுதுமபரககும பயனபடுவாாதரு சீாபோல. (ஙக)

மாதாஙகொஙகையானை மருஙகுலாஞ் சிஙகந்தேமபி
யேதமதுறவருநது நாளுமென றிசைததறீரக
காதுவெமமடஙகலயானை மருபபுவோ கழியததாககி
மேதகமகிழுகோனுப பழிவரின வெகுளாாயாரோ. (ஙஉ)

விற்படுகாநதளபூதத வியலிட நெடுமாறுஞ்ச
லற்புதககுமரபபுததே ளருளவரம பெறுவானவேண்டி
யெறபடுமனையானசூழ லெயதுபு நெடுமாலெனபான்
பற்பலபடமவிரிககும பாமபினமேற கிடததலொககும. (ஙங)

ஒருதலைக்காமம்பின்ன ருரைக்குமன் புடையகாம
மிருமையிலபொருந்தாக்காம மெனத்திணை யேழிவற்றுட்
பெருமையைந்திணையவற்றின் பிறங்குரிய பொருளுட்கூட்டந்
தருவதின்பதற்காந்தேமிக் குறிஞ்சியேற் சாற்றுவாராயா. (௩௪)

சேயகோற்றேன்பிழிந்து செந்தினை யிடியிற்கூட்டித்
தூயதேககிலையமைத்து முனைவைத்துத் தொழுங்கிராதாக
காயனுனமுருகபபுத்தே ளருளபொழிந் தமாகுறிஞ்சிப
பாயசீரசொற்றுங்கான வளஞ்சில பகராலுற்றும். (௩௫)

பொருந்துபாற்கடலிற் றுஞ்சும புண்டரீ கககண்மாயன
திருந்துமேவிடத்துமினமை தெரிந்துமிக குண்மைநோக்கிப
பிருந்தைதையத்தழுவியினபம பெறுவதற கிடமிதெனறே
குருந்தமாகானவாழ்க்கை கொண்டனன றெய்வமாகி. (௩௬)

ஓடிவறுகானவாழ்க்கை யுவந்தசா தனதநிறுலே
வடிவமாயவனயோததி மனனுயைய பிறந்தபோது
நெடிபடுகானஞ்சோந்தா னெடுங்களிப படைந்துமீட்டுங
கடிநகரடைந்ததொபபி னிளவலைக காககுமாறே. (௩௭)

தூயதோர்சுரபிகூட்டந தோனறுமாப பிரியனெனறுந
தீயவையொழியநாளு மிடைததொழில செய்வானெனறும
பாயதங்குலததொடுஞ்சம பந்தமிக குற்றனெனறு
மாயனைவிடாதுசூழ்ந்து வாழ்க்கையுற் றிருப்பராயா. (௩௮)

சுடாவளையாயசசிமாரக யேபால குமுததநீயிட்
டடலபுரிதோறுங்குன்றிச சுவைகுனறு ததிகமாகு
மடனறமுற்றுமோர்ந்து வளமபொலி புலமைசசெலவ
ரிடாமிகுதோறுங்குன்றிக குணங்குனறு வியலபையொத்தே. (௩௯)

உயர்கொடையினாசசார்ந்தோர்கள் ளுற்றதம புலமைகாட்டி
நயமிகுபொருளபெற்றுப்பன் னுளனு பவிப்பார்போனறே
வயமிகவொருநாளேறு தழுவியாய மடவார்பெறறுக்
குயமணைந்துவப்பார்நாளுங குறுமபொறை நாடரமமா. (௪0)

விரையறுநீரினின்றே விளையுநெல விருமபாராகிப
புரையறுவிரைநன்குள்ள பூமிசை தினறுநாளும
வரையறவிளையுஞ்சாமை வரகுபைம பயறுமுன்னுக
கரையறவாக்கிக்கொண்டு களிப்பரா விரத்துளோரே. (௪௧)

செழுமணிவளைசீராழிச செஙகைமான மஙகையெனபாள
வழுவிலகறபுமையாளபாகங கொணடது மனததினோர்ந்து
தழுவுநாயகறபிரிந்து தனிததுறை வருததநதீர
முழுமுதலவனறுணமாலை பிதழிமொயத தெஙகுமபூககும. (சஉ)

சுவையபான மணமுநதிணமைத நோயதயிா மணமுமவெணணெயக
குவையடுமணமுமாயசசி மாதாமெய மணமுஙகொளவா
னவையறுவளமைககானு நாசீாள படைததாறபோலச
செவையுறுமிடஙகளெஙகுங தேஙகுமிழ மலருமாதோ. (சஙு)

தகாமவாாமலாமெனகூாதற றடமுலைப பசியவேயததோட
புகாகொளவேறகருஙகட செவவாயப பொதுவிய ருவகைபூபபப
பகாநமாலாயசணணன பலலுரு வெடுததுநிறற
னிசருமாஙகாஙகுபூதது நிறகினற நெடியகாயா (சச)

ஓடியவருததமேவ வொருவாசிண கருவிகொணடு
வெடடியகுளத துநீருங குடிததிடா விடுபடாது
சடடியவேலிதாணடா பயிாகளுங கறிததுமேயா
கிடடியமுயலகடகுறற சுதுணமெனக கிளததுகேனே. (சரு)

அவிருறுபபொனறுனமானென றறைதா லனறியுளள
சவியுறுபபனைததுமவாயதது மானெனப பெறறதையல
குவிமுலைகுழையபபுலலுங சொணடறங கிடமெனறெணணிப
புவிபுகழகானநீயகா பொலிநதுதாயத திரியுமானகள. (சசா)

கொனறைமுறறருஙகளபூதத சொழுமலாத துகளவீழநதுநத
துனறுமானகுளமபுபடட சுவடடினைக காணுநதோறு
மொனறுமனபுடையமாத ரொணகுறி யுனனியுனனி
நினறுநினறழுஙகுவாாக டொழிலினமே னிகழுமைநதா. (சஎ)

சவிபடுமாயாநிமபாற றடமுலைப செருதத லாககள
குவிதாவிரிநதநெஞசங குவிதர யாவருககுஞ
செவிகவாகினறகொனறைத தீஙகுழ லூதுவாாகள
புவிபுகழமஙகையெஙகள புனிதவா ஞயாநோ. (சஅ)

கனறணைகயிறுதபபிக காலிகடக கிடபபமாலை
மென்றகையாயசசிமாாக ளாவென வெருவமுலலை
நன்றெனநகைககுநீயென னகைததனை யெனபபறிததக
குனறனமுலையாாகடடிக குழலவனச சிறையிலவைபபாா (சகூ)

உடையநாயகனுக்கேவா யுற்றதேவியுமாய் வெலனும்
விடையுமாயின்னுமாகும் விருபபன்வாழ் தருகானச்சி
ரடைவுதேர்ந்துணைப்பாராயாரோ யறிந்தவர்சொற்று மிபபாற்
புடையமர்மருதவைபபின் வளஞ்சில புகலலுற்றும். (ருo)

வேறு.

செய்யவிதழரம்பைதழீஇச செறிகட்டா மனைவாய்பபுற்
றையதருமிழன்மருவி யணிவேழ மேற்கொண்டு
மையறுபலவளமபொலிந்து மன்னுதனக் கிறையாய
கையமாவச்சிரமேந்துங கடவுணிகாத் திடுமருதம். (ருக)

கருநிறவண்டுளர்மனைசோ கருநிறச்சே றுடைமருதங
கருநிறமாயவன்முன்னோன் கருநிறமங குலையுகைக்குங
கருநிறவிந்திரன்கடியிற் களுலுறுத லதுதெரிந்த
கருநிறமிக்கவராய களமாகளா யிடைவாழ்வார். (ருஉ)

காவரசினிழலமாந்து களிற்றரசின் பிடரேறுந்
தேவரசுதனிகாக்கச சிறந்துபொலி யித்தேத்துப
பூவரசாகியயாமும புகுந்துறைதல கடனெனறே
மாவரசரோருகங்கண் மலாவனவா லிடமெங்கும். (ருங)

தம்மையூர்பவனுறையுந் தனிவீட்டிற் றுமுறைதல
செம்மையேயெனத்தெரிந்து சோந்துறைத லதுமான
வெம்மைதீர்புனற்றடத்து மிகமலர்தா மரைகடொறுங
கொம்மையோதிமங்கள்பல குடிகொண்டு வாழ்வனவால. (ருச)

வண்டானங்குருககன்றின் மடநாரை செழுமபோதா
தண்டாமைகொண்டெகின முறைதருதண் ணியதடத்துக்
கண்டாரகண்மனஞ்சுழலக களிசிறந்து குழுச்கூடுங
கொண்டாடுமன்னமுள விடத்தரிதோ குழுக்கூடல. (ருரு)

புள்ளுமலிதண்பழனம் புடையுடைத்தண் ணடைகடொறும்
விள்ளுதலின்மனைக்கிணறு பலமேவி மிகுசுவைத்தாத்
தெள்ளுபுனனனியுதவுந் தெய்யவிறைத் திடுதோறுங்
கொள்ளுதொறுங்கொளளுதொறுங் கொடுபபார்தங குணநிகர்த்தே.

கன்னிமதிற்றமிழ்க்கூடற் சுந்தரர்வெங் கடுங்குறட்கு
மன்னியதாகந்தணிப்பான் வரவழைத்த பெருவெள்ள
முன்னிலிதற்கொருதிவலை யாகுமெனு வுலகுணாப்பப
பொன்னிநதிப்பெருவெள்ளம் புடைபரவி யார்த்துவரும். (ருஎ)

பரமதநூற்பொருளுணர்ந்த பான்மையோர் சிந்தையென
விரவுமுழக்கொடுவருகா விரிவெள்ள நனிகலங்கித்
திரமருவுபுகழ்ச்சைவ சித்தாந்தப் பொருளுணர்ந்தோர்
வரமருவுசிந்தையெனத் தெளிந்ததுமா ணலமருவ. (ருஅ)

காவிரிநன்னதியாதி கண்டுவரச் செல்வனபோற்
பூவிரிதண்புனற்கெதிரோ பொலிந்தேறுஞ் சிலமீனகள்
பாவியவந்நதிமுடிவும் பார்த்துவரச் செலவனபோன்
மேவியவப்புனலொழுக்கின் விரைந்தொழுகுஞ் சிலமீன்கள். (ருகூ)

வறிதுசெலும்வழியடைத்து வண்பொருள் சிவாலயமுற்
குறிகொளறவழிச்செலுத்துங் குணமிக்க பெரியவர்போ
னெறிகொளகரை யுடைப்படைத்து நெடுநீத்த மேரிதடஞ்
செறிதருகாலாதிகளிற் செலச்செலுத்து வாரமள்ளர். (சு0)

ஓங்குபெருங்கல்விகொடை யுடையாத மொப்பிலபுகழ்
பாங்குபெறவுலகெங்கும் பரவுதல்போற் றண்ணளியு
நீங்குதலில்பெருக்குமுடை நெடும்பொனனிச் சுவையபுன
றேங்குமுதமலர்செறியுஞ் செறுவெங்கும் பரவுமால். (சுக)

நட்பாபகப்புணர்கலர்போற் புணர்ந்துகமா நனிசெய்த
பெட்புறவிலகடுங்கோடை யுள்நாணப் பெரும்பொனனித்
தட்பமிகுபுனலபுணர்ந்தக் கமர்பொருத்தித் தவப்பகவோ
ருட்பகாமலுமபுணரு முத்தமரை யொத்ததுவால. (சுஉ)

விரவுநயவறிவுடையோர் மிளிர்பொருள்கை யுறுமன்றே
கரவிலறத்தொழிலபுரியக் கழிமகிழ்வின் விரைவதுபோற்
பரவுபுனற்பெருவெள்ளம் பண்ணைதொறு நிரம்புதலு
முரவுமிகுகருங்களம ருழுதொழிலி னனிவிரைவார். (சுங)

நிலமகடன்பொறுமையினை வெளிப்படுத்து நிலையினர்போற்
குலவுநுகத்திருக்கடையும் பகடுபிடர் கொளப்பூட்டி
யலமுகவெங்கொழுத்தேய வணிமேழி யிடக்கைபிடித்
துலவொருகைக்கோலவாங்கி யுரப்பியுழு குவாமள்ளர். (சுச)

வடதிசையினின்றிளங்கால வருதிசையிற் செலவுய்த்துங்
குடதிசையினின்றுமுதற் குணதிசையிற் செலவுய்த்துந்
தொடர்தருசாலுருவழியத் தோற்றியபுல லாதியறப்
படர்வயன்மைக் குழம்புபடப் பகடுநடத்துவர்மள்ளர். (சுரு)

ஏழுதகழுனிகளவன்மே டொழிவுற்றுச சமமாகிய
ஏழுதகல்சஞ்சனங்கரப பரமபுநடத் தியபினன
ஏழுதரியபுகழ்படைத்த விந்திரதெய்வத மன்பிற
றெழுதுகளமாகண் மகிழ்விற் சொனமுளைவித் துவாநாளால். (சுசு)

தஙகண்மனப படிதொழிலிற் றலைநின்ற பகட்டினஙகட்
கங்கணினிதாற்றுவரா யலரோடை புகசசெலுநதித
துங்கமிகுகீருஙகளமா சுடாநாஞ்சி றேரோங்நிப
பஙகமினீலுடையுடுத்த பண்ணவனபோற் புறபடுவார். (சுஎ)

கண்டருமததககடவுள கமழ்சிவஞா னநதழையத
தொண்டருளத்தளவழிநது துலஙகருணீா பாயசநதலபோன்
மண்டொடுதிணைகருவிகொடு மளளாவயன் மடைதொறுமபுக
சண்டுறுகாற்புனன்முளையி னளவழிந்து பாயசநவரால. (சுஅ)

எங்கள்பிரானைவண்ணத திருவணணஞ் சாநதனவென
றஙகணுலகெடுதநியமப வவிாதருவெண முளைபலவுஞ்
பொஙகுபசபபுறறெழுநது பொலிவுறறு வளாநதனவாற
றஙகுகனவிரதமுறி லிவைசாாத லொருவியபோ. (சுகூ)

குலவகையுளிருபிறபபுக கொணடுயாநத மறையவாபோற
பலபயிருளிததகுநெற பயிருமிரு பிறபபிணையுற
றலகிலுயாவடைநதனவென றநத்துளளி யகனசெறுவி
னலமருவுநாறுபறித துவபபினடு வாாகளமா. (எo)

சிறுசாய்வுநட்டமுதல பொருந்துபுசின் ஞளின்வசை
யறுகாமாகொடுமிாநதொன் றொருபஃதுநா றுயிரமாயா
குறுகாதமபுரமபொடிதத கோமானமெய யடியவாகை
யுறுதானமெனத்தழைதத வுலகுகளி சிறநநிடவே. (எக)

கல்வியவாயுணரொருவன் காமரறி விஞசகூறுய
மலகுமிடிபிணியாதி வந்துநெருக குவபோல
வொல்குதலில பயிாபபொலிவுக கூறுகியரவிநத
மல்குகயிரவமாதிக களைகணெருங் குவவமமா. (எஉ)

கல்லாரமுண்டகமுற் களைகளையும் பருவமிதென்
றல்லாருஙகுழனெடுங்க ணாற்றுக்கா லாட்டியாககுச
சொல்லாடமள்ளரவர் தொகையாகிச செறுபபுகுவாா
புலலாரானெல்லார்க்கு மூறுறினுள் பொருந்துவர்யாா. (எங)

கொங்குவிரிபங்கயமொண் குமுதநறுங் குவளைசீர்
தங்குமணிச்சம்பசிய சைவலமா னனம்வாய்கண்
பொங்குமெழிலடிகதுப்பிற் கெதிராகிப் பொலிவனவென்
றங்கடுதலபோற்களைப வாற்றுக்கா லாட்டியரே. (எச)

ஒருவினையின் முயலுறுபோ தொண்பொருளவே றுகவுநல்
லருவினையிற்பெறுபவர்போ லவயவங்கண் டினமென்று
மருவுகயலகமடமல வன்வரா லிவையெளிதிற்
பெருகுகளைகளைபொழுது பெறுவர்புகழந் துழத்தியரே. (எரு)

மாறுயகளையொழிந்த வண்பயிர்சூற் கொண்டன
வீறுயவிளங்கதிர்கண் மேனோக்கி யெழுகாட்சி
பேறுயதாழ்நிகக பிறங்கியுகத் திடுமபத்தோ
டாறுயகலையுடையாற் சாணவர் வியதேய்ககும். (எசு)

பருவமுதிர்நதொலலெனொலி படைத்தகதிர்ச செஞ்சாலி
மருவுதமைப்பரித்தநில வளநோக்கி னைநதுபோ
லுருவமிகுதலைவணக்கு மோவாத செம்மையொடு
பொருவருமின்சொலலுடைத்தேத் திவ்வணக்கம பொருந்தரிதோ.()

தொழுவர்குயங்கரத்தேந்தித் தொகுசாலி முதல்குறைத்துப
பழுதிலரிசோத்திடையிற் கட்டுவர் பருஞ்சுமையர
வெழுதரியசீர்த்தியரி யிடையிற்கட் டுண்டதுவு
முழுதுலகமெடுத்துரைக்கும புகழன்றே முதுங்குறைவீர். (எஅ)

கண்ணன்வரையெடுத்ததெனக் களமரிச சுமையெடுத்துப
பண்ணையயற்களஞ்சேர்த்துப பைம்பொன்வரை போற்பலபோர்
விண்ணளவபுரிந்துபினர் விழசசரித்துக் கரியபக
டெண்ணரியபிணித்தவைமேன மிதிக்கநடத் துவரெங்கும. (எகூ)

தொகுத்தபகட்டினங்களுக்குந் தொழினின்ற தங்களுக்கும
பகுத்திடுவர்போற்களமர் பலாலமவே றறவொதுக்கி
மிகுத்தநெல்வேறுக்குவித்து வீசுவளிக் கெதிர்தூற்றி
யிகுத்தகரிசுடைநெலலை யளவுசெய்வா ரிடமெங்கும். (அ0)

வேறு.

ஆறிலொன்றுல காளுமன்னவர்கொள வறமுற்
கூறுபல்லவு மகிழ்ச்சியிற்குறைவற நல்கி
வீறுபண்டியின் விஞ்சியநெற்களை யேற்றி
மாறிறம்மனைத் தொகுப்பர்பல் லோர்களும்வாழ. (அக)

இன்னதாகிய நெல்வளமீட்டுந ரொருபாற்
கன்னலாட்டியின் கட்டிகொள்வார்களு மொருபான
மன்னிலாஙகலி கந்தியின்வளஙகொள்வா ரொருபா
றுன்னுபல்வளத் துடஙகையாகுநாகளு மொருபால். (அஉ)

பொன்னியாடியுஞ் செஙகதிரவெயில்புகாப பொதுமபா
மன்னியாடியும பொதுமடமகளிரபான மருவிப
பின்னியாடியு மூடறீாத்தும பெருஞ் செலவந
துன்னிவாழ்பொலி வூரதொறுமூாதொறுஞ் சுரக்கும். (அஙா)

ஏகநாயக னாகியவெமபெரு மானு
நாகநாடுமோா பதிவயினன்னிலத் துழவ
னாகநண்ணியத தொழிலமைந்தானெனின மருதப
போகம்யாாசொல்வாா நெயதலினவளஞ்சில புகலவாம. (அச)

நீடுதம்வலை வளமபொலிதரஙகிழ் சுறவக்
கோடுநாட்டுப பரதவாதொழூஉதொறுங குறைதீாத
தாடுசிாபபுன லிறையவனுட்சிகொண் டமரும
பாடுபெற்றது கானலசூழ்பரப்புடை நெயதல, (அரு)

தேங்குபேரருட் சிவபிராற்கியற்றுதோங் தீாக்கப
பாஙகுசேரிட மிதுவெனபபடாநதடைந் தனபோ
லோஙகுகைதைக ளொலிகடற்கரைமருங குறநது
வாங்குபேரலை வருந்தொறுமூழகுவ மாதோ. (அசு)

மூதற்குமுன்புரி கரிசுதன்னலையினுன் முருக்கு
மிதற்குயாம்புரி மாறெவனென்றுளத் தெண்ணிபு
புதற்குமேற்செல்கை தைகளபுலாலபோக்குபு புணரி
யதற்குநன்மணம் வீசுவவலாநததம் மலரால. (அஎ)

பொருவிலசாரமா முனிவரன்பாதலம புகுந்து
மருவுநன்மலா புவியிடைபபரப்பிய வாபோல
வெருவிலாவிறற் றிமிலாகள்வீரையுட் குளியா
வுருவவெண்டர ளஙகளைபபரபபுவ ருறவே. (அஅ)

நிலவுவெண்ணகைப பரத்தியர்நெடுவிழிக் கெதிரா
யுலவுகின்றமை யுளத்துணாந்தழிபபவ ரொபபப
புலவுமீனுட லிரட்டையாரிலையெனப போழ்ந்தப
யலவுமுன்றிலி னுணக்குவாாபெருங்களி பயப்ப. (அகூ)

வணங்குநுண்ணிடை நுளைச்சியர்காவலின் மருவு
முணங்கன்மீன்கவர் வேட்கைகொண்டுறுகருங் காக
மிணங்குமங்கலா ரினியசெற்பகைக்குயிற் கிடமீந்
தணங்குபோக்குதந் தோகினைந்தணுகுறு வகலா. (கூ0)

துலங்குவெள்வளை சிந்துபுகண்டுளி தூற்றிக
கலங்கியுள்ளிரா வணைவெறுத்தரற்றிடுங் காரோ
ணலங்கொணுயகர் பிரிவுன்னியிரங்குநங கையர்க்கண்
டலங்குதானுமற் றவாசெயலடைந்ததொத் தம்மா. (கூக)

அருப்புமென்முலைப பரத்தியர்குழலணி யானை
மருபபுநேருமவெண் டாழைநன்மலர்மண மருவப
பொருப்புநேர்தரக் குவித்தமீனுணஙகலின் புடையுஞ்
சுருப்புமேவுவ சுழலுவபாககஙக டோறும். (கூஉ)

புணரியின்கரை யிடைதருகானலம புன்னை
வணரிருங்கிளை மீதுமீன்றுய்மண லுகுத்த
விணரரும்புக ளாயிடைச்செல்லுந ரொவரு
முணர்வினுய்வகை நித்திலமெனமயக் குறுத்தும். (கூங)

அறையுவர்க்கடன் மதுக்கடலாமென வாழ்ந்த
நிறைபுனற்பெருங கழிதொறுஞ்செற்றிய நெய்தல
சிறையுடைக்கரு வண்டினம்வெறுத்திடச சிந்து
நறைமதுப்பெரு வெள்ளமாய்பபாய்தரு நாளும். (கூச)

விறல்விராவிய மழுப்படைவிண்ணவ னுயிரின்
மறல்விராவிய மாமலமபிரித்திடும வகைபோ
லறல்விராவிய வுபபிணைபபிரித்துவே றுக்குந்
திறல்விராவிய வுமணராயிடைபபலா செறிவார். (கூரு)

செபபுதண்கடற் றிமில்விடுதிமிலாகம் பலையுப
துப்பமைந்தமீன் படுவலைபிழுபபவா துவைப்பு
முப்பளந்திடு மளவாதஞ்சும்மையு மொன்றிப
பப்பமைந்தவக் கடலொலிக்கெதிரெனப் பரவும். (கூசா)

அறம்புரிந்தவ ரப்பயன்மறுமையி னடைவார
திறம்பலின்றியென் றுரைப்பதுநிற்கவான் சிந்து
புறம்படர்ந்துநீ ர்ாடுவார்க்கிம்மையே பொற்ப
விறம்படர்ந்தவித் துருமமுத்தாகிக ணிரைக்கும். (கூஎ)

பரவையாகவப் பாாசுறவுவாவலே பாய்மா
விரவுபாரதி வையமீனெறிபவர் வீர
ருரவுமீனொளி வாளெனத்தோன்றுவ வுடன்று
பொரல்செய்வாரக்கிட மிதுவெனக்காட்டுதல போலும. (கூஅ)

வெருள்செய்வாரிதி தீவுளபலபொருள் விரவி
மருள்செயவெமபகை கடநதுபாரதி பயிலவளத்த
தருள்செய்செநதமிழ் முனிவயினமாநதவா ரிதிககட
பொருள்செய்பாரதி பயிலவதுமோரிறும பூதோ. (கூகூ)

சிவனிலேத்தவா போறறமனமுடிகுஞ் சிததததா
ணவமலர்ககிடங கொடுததவுணணமமதி பதத
ரவதரித்தசீர் நெய்தலினவளமெவ ரறைவாா
பவமகற்றுமூ துணாவிாகாளசுரவளம பகாவாம. (௧00)

வேறு.

அறையுகானிலமருங் கடுத்தவெமபர
னிறைதருமூரமபினை நெடிதுபறறியே
குறைவறுவேனினண் பகலிற்கூாததிடு
மறைபுகழ்கொற்றவை வைகுமபாலேயே. (௧0௧)

கொற்றவைதெயவமாயக குடிகொளபாலையிற
பற்றியமறவர்கள் பரவிவாழுகுவா
மறறவளருளினுன் மருவுஙகொறறமென்
றற்றமதறவுணாங தையநாளுமே. (௧0௨)

செருமலிவாளுடைச செலவிதாளடுத
தருள்பெறுவார்புயத தணிநதுவபபுறக
குருமலியன்னவள கோட்டபபாஙகெலா
மருமலிவாகைநன மலருதிககுமே. (௧0௩)

செருபபயிலெயினாகள் குறுமபிறறேமொழி
யருபபிள்முலேயெயிற் றியாகளோடமாந
திருபபுறுகுரமபைக ளிநதினமேயதலாற்
கருபபைகளமாந்துசெய கவலேயிலலேயால. (௧0௪)

தலேவாயினன்பொடு படருந்தையலாா
மலரடிகனறிடா வகையிதஞ்செயு
நிலேபெறுபாலுடை நீணெறிக்கணே
யலகில்கோஙகுநிாத் திடவமைந்தபஞ்சியே. (௧0௫)

## திருநாட்டுப்படலம்.

வழியினடச்செலபவா மகிழ்ந்துகைக்கொள
கழிபெருநெல்லியொண் கனியுகுததிடு
மழிதுயாவெபபனோ யகலததண்ணெனப
பொழிமதுபபாடலம புரியுநனனிழல.

புரிதருபொயதலம பாவைபோகினா
கரிசறுகற்பிறை கணவாபினறொடாந
தரிமதாமரைநசறு ரணிகினறொனப
பரிவுறுகுரவஙகள பாவைநலகுவ. (க0எ)

யாருமஙகழிநர வமைநதாலலினை
தேருவாபோதகரு செழிததுவாழவன
கூருடைவாளுடைக கொறறியினனருள
சாருபுவிஞசையிற றலைமைபெறறென. (க0அ)

சிறையுதிரொருவைவாயச செறிததவுணினை
யறைபருநதடாநதுசென றவாயபபறிதநிடு
மறைவிலவவழிசசெலு மைநதாமாதாசகு
நிறையிறுமபூதுள நிலவுமாறறோ. (க0கூ)

பணியிகலபசியதோட பாரபபூண் முலை
யிணையறுகொறறவை யெனனுமெஙகளா
யணிதருசுரவள மறையமுறறுமோ
திணிமயககமுஞ்சில செடபுவாமரோ. (கக0)

வேறு.

திதியமாலவரைக கழியறியாதுகின் றுயஙகு
முதியமாநகிகான றெறுவியா விலைசெயமுனனிப
பதியமெனறலை வைததவொணடாழியிற பாயநது
புதியவெணடயிா வாரியுணடுறுதுயா போககும. (ககக)

உழைமுழுஙகுபு குகிககமாதவிசிப லுறற
பிழையிலகானவா ரணமவெரிஇசசிறிதவண் பெயாந்து
பழையவெமபகைப பெயாபடைததுளதெனப படாநது
தழையுமாலவரை வேஙகைநனனிழலச சாரும. (ககஉ)

வரையிலவானா முகினமுழக்கஞ்சுபு மருதத
தரையிலாஙகலி மீதுபாயதாவுகிா பழநதண
டிரையிலஞ்சிவீழ வஞ்சியோதிமஞ சிலமபடையுங
கரையிலசீரஃ தசைவிலோதிம மெனககருதி. (ககங)

மலையெடுததசெந தேத்திருலவலயமவே டுவரங்
நிலையெடுத்துழித் தபபியொண்செஙகதிா நிகா
வலையெடுத்தவா பயிலகடலவிழுமநிப பிறைபோ
லலையெடுததெறி சுடனவளைவளைசசுனே யழுநதும. (கக௪)

இரவைவாட்டிய குழறறிருவளாநிறத தேந்த
லுரவையுறறசெங கையமாசஙகமே யொபபப
பரவைவெண்டிரை யெடுததெறிசஙகமொண பணைா
விரவையமபுயச செமமலாமீமிசை மேவும. (ககரு)

கானமேவிய தொறுவியாதாவுமான கனறும
பானலாரவய லுழததியரோதிமப பாாபபு
மீனவாரிதி நுளைசசியாககளிததுவெண முதத
மூனமேவுறு விததுருமஙகளகொண டுவபபாா. (ககசு)

பெருகுவாாகடற றுகிாகசொடிகானகம பிரியா
முருகினமுலலையங கொடிவளைககறிகொடி மூனறும
பொருவிலபண்ணையிற கநதியைததழுவின பொலிவ
வொருவனைபபல மாதாகடமுவிய தொபப. (ககஎ)

பணைகொடெஙகிஞெண பழமவிழுபபருபபதத தருககோட
டணையிருலகிழிந தொழுகுதேன முன்றிலினுற
விணையிலாயசசியா வைததபாலவீழுவிப பாகடம
பிணையனுாகள்வா யூறலபோலருநதுவா பெடபின. (கக அ)

குனறமாமயிற் பெணணடித்திடவனங குலவி
நினறகொன்றைநன மலாபபசுமபொனனெடி தளிபப
வினறடம்பணைத தாமரைமலாககர மேறப
வொன்றவாாகட னெயதலஙகணகளகண டுவககும. (ககசு)

மின்னிநுண்ணறி வுடையராயவினையறுத தயாநதோா
மன்னிவாழுவுறு பறபலநாட்டிற்கும வளஞசோ
சென்னிநாடியா சென்னிநாடெனததிகழந தமைநத
தென்னினமறறதன சிறெனதுரைககடங கிடுமோ. (கஉ0)

திருநாட்டுபபடல முறறியது.

ஆகததிருவிருத்தம கரு0.

# திருநகரப்படலம்.

மதிவளம்பொலிய வணிநதருளோநது வண்ணநாயகரடி யவர்க்
குக், கதிவளமருளிக காநதிசோமதிபபோக கௌரியோடினிதுவீற்
றிருககு, நிதிவளமலிநத தெயவவாலயநத னிறையகநதழீஇபபொ
லியுறநதைப, பதிவளமுழுது முணாககரிதேனும பகருதுஞசிலதொ
குததமமா. (௧)

பொழிமதுககமல முறுககுடைநதலரப புனிறறிளங கதிாவிரி
தெதெழுவோன, பழிதபுகுலததிற றோனறிமறறுளள பாாதிபாய
லருளுமுயாந்து, கழிமகிழபூபப வுயிரொலாஞசெஙகோல கைககொ
டுபெருமபுகழசசோழா, வழிவழியரசு செயவதறகிடமாய வயஙகிய
தொருதிரு வுறையூா. (௨)

அருநதவவலியா லகததியமுனிமுன னாகியபறபலா சிரியா, தி
ருநதநனகுணாதத விலககணமுழுதுஞ செயிரறககேடடுமிக குணா
நது, கருநதடஙகணணி யொருபுறககடவுள காமாசேவடியுளமபு
தைதத, பெருநதமிழபபுலவா பறபலாபுகழப பேரொளிமருவிய து
றையூா. (௩)

நிலமபுகழயனமான முதறபலவுயிாககு நிறைபுகழத தநதை
தானன்றி, நலமபுரிதாயுந தானெனவெவரு நனகுணாதரவொரு வ
ணிகக, சலமபுனைமகளுக கனனையாயளிதத கணணுதன மேவுதெ
னகயிலைச, சிலமபினைததனது குணதிசைததழுவிச சிறநதுவாழ வ
துதிருவுறையூா. (௪)

எழிலசெயபலலறமு முறைதலாலுறையூ ரெனறுரைபபாாகளு
ஞசிலரோ, பழியினனபொருணமிககுறைதலாலுறையூ ரெனபபகாவா
ாகளுஞசிலரோ, கழிசுவையினப முறைதலாலுறையூ ரெனககரைவாா
சளுஞசிலரோ, யழிவருமுததி யுறைதலாலுறையூ ரெனறறைவாாக
ளுஞசிலரோ. (௫)

ஒலிகெழுபொனனிக குளிாபுனறனபா லுறறுமூழகுறாககினி
தருள, வலிகெழுவரமேன மேலுஙகொளபாககு வலஙகொளல போ
னமலரோநதிப, பொலிதருவெளளை விடையுடைபபெருமான புரமெ
னுமுறநதைமாநகா, மலிதருமோடைகாலகளினவழியே மறபபி
னறிவைகளுஞசூழும. (௬)

மலாநதுதணணெனறு குழைநதுகனகவிாநது மணநதுளஙக
வாநதுறத தழைநது, நலநதலைசிறநது தமபிரானருணோ நறுமலாச்

சோலைகள்சூழ்வ, கலந்துமீமிசையச் சோலையிற்றவழ்வ கருமுகில்
வள்ளுறைசிதறு, மலர்ந்தபோரறிஞ ரிடுகுறிப்பெயரன றறையுறை
யூரெனலெனவே. (எ)

வடிமலர்ப்பொழிலு மதனடுப்பொலியும வாவியுங்கண்டசிற் ற
றிஞா, கொடியிடைமடவா ரிளங்கலநுகரக குலவிடமென்பர்பே ரறி
ஞா, கடிதலிலசிவபூ சனைசெயறகேற்ற கணணெனபாவாதலூ ருகித
த, வடிகள்வாயமலர்ந்த கோவையைவிருப்புற றறைகுதல புனைதர
மாதோ. (அ)

ஓங்குமாசசீரு முறுவிளசசீரு முறைாதநிடபபட்டகாயச சீருஞ்,
தேங்கனிசசீருஞ் செறிமிழற்சீருஞ் செயயபூசசீருமுள ளடக்கிப, பா
ஙகுறபபொலியும பற்பலசீரும பதிநதவோர செயயுளுமபோலு, நீ
ஙகருஞ்சிறப்பு நிறைதருபுகழ நிலவுதெனனுறநதை சூழ்சோலை. (௯)

கருவிழிச்செவ்வாயப பரத்தையரோடு களிப்பிஞ்ட்டயாதரு
ஷமைந்தா, பொருவிறணடலையிற் புணாசசியின்விசேடம புகனறிடக்
கேட்டபைங்கிளிகள, குருமலிதெயவத தருவுடைநதாஙகுக குலவு
பைங்கிளிகட்கோதப, பெருகவையரமபை யருஙகுரைாதனபோற
பேசிடவவரமுக கறுபபாா. (௧0)

கூவிளவனத்துக் குடியிருந்தொளிரக கூவிளந்தளிரபுனைகினறு
றுவினைனலன்யா முதவுபூவாதி யுடஙகுமேற்கொளகினறுனெனறு
தேவாஙந்தனமு மசசுறவெழுந்து திசைகளெலா நறுமண மவீசி
மூவகைமலரு நறுநதளிரவேரு மொயத்தநந்தனமபல சூழும. (௧௧)

தண்ணியபூவிற கருஙகலமபொஙகு தாமரையேயெனப புகழநதா
புண்ணியநாவுக் கரசராதலிறற பொலிநதனமயாஙகளே யென்று
மெண்ணியகாந்தி மதியருடகுரியோமயாஙகளேபொலிநதனமெனறு
மண்ணியபஙகே ருகமரககாமப லலாதருதடமபல சூழும. (௧௨)

இலஞ்சியுண்மலாநத தாமரைநீவி ரிரவலரொனபபெயா படைத
தீர, நலஞ்செறிவெஙங ளுமபலகாளென்று நவிறலபோலாஙகுவண
டறையு, மலமபுதேனுமபல பெணடிரைசசுமக்கு மமபுயஙகாளிர வ
லரோ, தலமபுகழ்பரம ரிழிவெவனெனறு சாறறலபோலாஙகுவண
டறையும. (௧௩)

மன்னறற்றடத்துக கருவிழிசசெவவாய மஙகையராட்டயர
தோறு, மன்னவாபாஙகி மாரெனவுடனின் றுடுவபொலஞ்சிறை யன

ணம,பனனருமவளஞ்சே ரிளமரககாவிற் பன்மலாபறித்திடு தோறு,
நனனலமடயகருஞ சாயலகணடுவநது நடநதுபின றிரிவன மயிலகள.

புகழ்மிகுமுறநதை மாநகாமேனமை பொதுமையிற சிலவெடு
ததுரைததா, மிகழதலிலசிறபபிற சிலவெடுததுரைபபா னெணணி
முனபுடைநகாச சிறபபு, மிகழபெருஞசெலவ நிலைபெறவிளஙகு நெ
டியநலலிடைநகாச சிறபபு, மசழுடுததோஙகு முண்ணகாசசிறபபு ம
றைகுவமுறையினுள ளறிவீா., (கரு)

வேறு.

மலையரசுயிாததகாநதி மதியெனு முமையாட்காண
மலையெலாமொருஙகுவநது வநதுசூழந தனநினறுறபோன
மலையுமாலயானைவெளளம வரைவகை செருககிநிறகு
மலையவானமுகடுயாநத வாரியு ணிசளமபூண்டே. (கசு)

வாரிமேறறவழாநினற மஙகுலைப புழைககைபறறி
யூரிமாகளிநலயானை முறுககிநீா பிழிநது தூறறுஞ
சோரிசோாமருபபிறகுததும துவைககுஙகாத திரஙகளகொணடு
போரிகலயானையெனறு புநதியி னினைநதுமாதோ. (கஎ)

எழுயாகளிநலயானை யெழுமத மொழுகுந்தோறுஞ
சூழுமவணடனநதங்கோடி தொடாநதுஞ தொழியுமாகி
லாழுமவாரிதியேயாகு மணையிட வலலாாயாவா
தாழுமவாாகூடமவஙகந தறிநெடுங கூமபாமாலோ. (கஅ)

துனனலாசெனனிமோலி துகளபடக குரமழுததும
பொனனலாடரிதிவையம பூணடவேழ மாவுமஞச
மினனலாவிசுமபிறபாயும வேலையு மிமைபபிறறுவ
முனனலாபரிகளயாதத மநதிரம பலவாமாஙகண. (ககூ)

செணடுபோமபரிகளவாயிற சிநதிய விலாழிபாய
மணடுசேறுகுமபொனசெய வயபபுறப பருமநினறு
விண்டுவீழவயிரமாதி மிளிாமணி செறிதலாலே
கண்டுமேனடபபாசேறு காலுறா களிததுசசெலவாா. (உ0)

மூடடுபோாபபரியிலாய முகடடுவான முகிலுலாவ
ஞுட்டுவாமபரியாபபினனா நணணிவெம பகைசவடட
வேட்டிவவாமபரிகட்சாாநது வீரமா திகளைககறபான
யாட்டுவண்டுளாதுழாயமால பயிலவது கடுககுமாலோ. (உக)

ஊரும்வார்கொடிப்பொற்றேர்க ளூட்கொளு நிலைகள்யாவு
மீரும்வாளவுணர்ச்சாடு மிமையவர் விமானத்தோடு
சாரும்வாட்பரிதிதேருந் தடைபட வுயர்ந்துநிற்கு
மேருவோடிகலிநின்ற விந்தமால வரையையொத்தே. (உஉ)

வலிகெழுமைந்தரூரும் வாரகொடி நெடுந்தேராழி
யொலிகெழுமறுகிற்கிளா தொழியுமே லனையதேரின்
மலிதரப்பூண்டபாய்மா வாய்விடு விலாழிவெள்ளம
பொலிதரபபெருகுமவேறு போகிட மின்றிமாதோ. (உ௩)

அறுதொழிலாளாதூவு மறலின்வெம பகைஞாநீஙக
வுறுகதிரவையநேரே யோடலொன் றேபயினற
தெறுழ்கொண்மாற்றலாகடாமே யிரியநே ரினுமறிதது
மறுகிலிவ்வையமோடு மாலைமாற றினைநிகாததே. (உச)

மண்ணகத்துள்ளபோல மால்களி றிவுளியாதி
விண்ணகத்துளவென்பாரஞ் சாதியும விளஙகுமாயிற்
கண்ணுறக்காண்பாமென்று கழுத்துமே னீட்டிநோககி
யெண்ணறத்திரியாநிற்கு மிரவண நிலைகளபலல. (உரு)

பாய்புலிபபோத்துநோவா படாசினந் தலைக்கொண்டாலவெங
காய்சினககூற் றினமேலுஞ் சென றுவெங் கண்டுமீளு
மாய்திறலவீராபறப லவிரபடைக கலஙகடாஙகி
யோய்வறபபயிறருஙகல லூரியு மனந்தமாஙகண. (உசு)

வென்னிடலபுரியாபோரில விழித்தகண் ணிமையாவீர
மன்னுதிண்புகழின்மேலா முயிரொன வைததுநோக்கா
பன்னருந்திறல்விலவீரா பளகறு வலிககயோத்தி
மின்னகுகழலிராமன் விசையனு தியருமொவவா. (உஎ)

சூட்டுடைச்சேவலொன்று துளைக்கைமால யானையோடு
மூட்டுபோராபுரிநததான மிதுவெனின் முசலமொளவா
டட்டுவேல்பலகைவாளி சிலைமுதற் றழுவியாஙகு
வேட்டுறைவீராவன்மை விளமபுதற் கமையுஙகொலலோ. (உஅ)

உம்பலாதிகட்குவேண்டு முணவுக ணனியமைத்த
நம்புமாலிடமுமபலல நாலவகைப படைக்குமவேண்டுங
கிம்புரிகண்டந்தோட்டி கிடுகுமத் திகைவாராழி
வெம்பயிலாதியாக்கும் வினைஞாசே ரிகளும்பலல. (உகூ)

தடையறவுணர்ந்தசான்றீர் தண்மல ராளியாலும்
புடைநகர்வளங்கண்டுற்றும் புகல்வதற் காமோரிற்க.
நடையனநிகருமாதர் நலங்கெழு மைந்தர்மேவு
மிடைநகர்வளத்திற்சிலல வெடுத்துரைக் கின்றுமாதோ. (௩௦)

வேறு.

பரவுசித்திலப் பந்தரும்பளிக்குமே டைகளு
மரகதப்பெருஞ சாளரஙகளுமணி யரஙகு
மரமியத்தலங களுமவிர்பொன்செய்வே திகளும்
விரவுதெற்றியுந் தருவனதேவர்க்கும் வியப்பு. (௩௧)

பாங்குமாளிகைப பின்னர்வண் படிகள்சுற் றமைத்த
தேஙகுநீர்த்தட மதனயலசெழுமலர்ப புதனமற்
றோங்குவாழைசூ தம்பனசஙகமு குயாதென்
வாங்குமாரல்சூழ்ந் தொன்றற்கொன் றிளையென வயங்கும். (௩௨)

மைந்தர்மங்கையர் சிவிறியும் பந்துங்கை வாங்கிச
சந்தமென்முலைத் தடத்தினுந்தடமபுயத் தினுமொண்
கந்தமென்புனன் மாறிமாறிக்கடி தினிற்றூய்
நந்தவாவியிற் காமநீர்பெருக்கிநன் குவபபார். (௩௩)

வரமடந்தையர் வாவிநீராட்டிடை மருங்குல்
விரவுபூந்துகி லவிழ்ந்தலகுறுன்றலால் வெள்கிக்
கரதலஙகொடு புதைத்தட்ங்காமைகண் டோடி
யுரவுமைந்தர்கண் புதைபபாமற்றவருள மூவப்பார். (௩௪)

இந்துகாந்தமே னிலையகத்தேந்தெழின் மாதர்
தந்துநேரிடைக் கலைதடமபுயத்தவா நெகிழ்பப
நந்துநாணினெய் விளக்கவரவிபபர்மென் னறும்பூம்
பந்துகொண்டுபல் விளக்கணிமணிசெயப பரிவார். (௩௫)

அரமியத்தலத் தமைத்தசெம்பொற்பரி யஙகத்
தரவுமைந்தரோ டுறுபுதுக்கடிமினர் வெள்க
விரவுநீக்குமொண் முழுமதிக்கதிரவ ரொண்ணிப
பரவுநீன்மணிப் பணியணிந்திருள்பரப புவரால. (௩௬)

வண்ணமேனிலை யூடறீர்தரப்பணி மைந்த
ரொண்ணலம்புயத் தணங்கனாபதமெடுத் துதைப்பச்
செண்ணவஞசிலம் பொலியெழூஉத்தேவர்தஞ் செவியி
லண்ணமற்றவர்க் கூறுவகாமமிக் காயே. (௩௭)

மின்செய்மேனிலைப் புலர்த்தவர்கொங்கைமேற் றுகிலை
மன்செய்சாளரம் புகுமலையாநிலம் விலக்கக்
கொன்செய்மைந்தர்கண் டுவந்தனரிருகையுங் குவிப்பா
ரின்செயலகுன்மேற் றுகிலையும்விலக்குமென் றெண்ணி. (௩௮)

உரந்தவாமணை வாளர்பாற்சிலம்புமே லொதுக்கிக்
கரந்துமேனிலைச் செல்பவாக்கண்டைபைங் கிளிகள்
பரந்தவன்பினீ ரெம்மையுங்கொடுபுகா வீரென
யிரந்துவேண்டுவ வறிதரவாயமுத லெவரும். (௩௯)

கொழுதிவண்டுதேன் கூட்டுணுநறுமலர்க் குழலார்
பழுதின்மைந்தர்த மார்பிடைப்படர்முலை நெருங்கத்
தழுவுவார்தமர் தொழிவாசுற்றுடியிற் சாயை
கெழுவவேதில ரெனநினைந்துள்ளநாண் கிடைத்தே. (௪௦)

கதிர்செய்மாளிகை முகில்பொதிந்தொழிந்தரக் கவினென
றதிர்பொலன்சிலம் பன்னலாராயகுழற் கூட்டு
மெதிரிலின்புகை பொதிதரும்பழவுறை யிரித்துப்
புதியவேறுறை யிட்டதுபோன்மெனப் புகல. (௪௧)

மாதருடலை யுணர்தரமைந்தர்தாழ் தோறுங்
கோதகன்றமெல் லலத்தகக்குழம்புதோ யம்பொற்
பாதமோச்சுவ ரவர்தலைப்பலசுவ டொளிர்வ
சீதவாரிசச் செவ்விதழ்மலர்ந்தது சிவணும். (௪௨)

தவளமாளிகை மேனிலைக்கொங்கைக டதும்பத்
துவளநுண்ணிடை மடந்தையர்சரித்திடுந் தோறுந்
திவளலத்தகக் குழம்படிச்சுவடுக டிகழ்வ
பவளவொண்டளிர் பாற்கடல்விளங்குத லேய்க்கும். (௪௩)

பளிக்குமேனிலத் தணங்கனா பந்தெறிந்தாடக்
களிக்குமஞ்சுரும் பிணைதநெழு கதுப்பினின்றுதிர்ந்த
துளிக்குந்தேமலர்க்குப்பைக டொழில்செய்வா ரகற்ற
வொளிக்குலத்தரு மலருகுத்ததுயாத்துவ குப்பை. (௪௪)

விளங்குசந்திரகாந்தத்தா லாக்கியவிடங்கம்
வளங்குலாமதி யெழுதலுங்கா லுநீர் மலிந்து
துளங்குமாளிகை மேலெலாம்வழிந்துகா றுறுத்த
களங்கமோவுறக் கழுவும்தொழில்செய்வார் களிப்ப. (௪௫)

உயர்ந்தமாளிகை மேனிலத்தமர்ந்தொளிர் மடவார்
வியந்துமித்தில வம்மனையெறிதர விசும்பி
னியைந்துபற்பல பதிந்தனவவற்றையே யின்னு
நயந்து மண்ணுளோர்தாரகைக் கணமென நவில்வார். (சசு)

பொங்குமேனிலப் பூவைமார்முகமதி நின்றுந்
தங்களுக்கமு துதவுதண் மதியிதென் றமர
ரங்குறப்பகுத் துணரவோரறிகுறி யமைத்தா
ரிங்கண்மேயவர் களங்கமென் றிசைப்பராலின்னும். (சஎ)

வண்ணவாய்வளை மடந்தையர்மகிழ்நாமேல் வாசச்
சுண்ணம்வீசுநா ளஃதெழீஇப்பனிபொழி துவாரம்
விண்ணடைத்தமை யுணர்ந்திலர்பனியின்மை வினவி
லெண்ணுகாலமின் மையினெனயாவரு மிசைப்பார். (சஅ)

தாரதரம்புரை மாடமேற்கொடிமரத் தலையி
லிராகநேத்திரங் கருமைசெம்மையி னியைந்தசைவ
விராகுகேதுபன் னுளுநீக்குடலுரி யெல்லாம்
விராவிவிண்ணிடைத் துயல்வருவியபினை நிகரும். (சகூ)

மாடுசேருமே னிலைவெளிமைந்தரோ டாடி
வாடுவல்லிபோற் கிடப்பவரிளைபபொரீஇ வயங்க
நீடுவார்கொடி மரத்துகினிலவுவான் கங்கை
யூடுதோய்ந்துநுண் டுளியவர்மேனியி லுகுக்கும். (ருO)

திருந்துபொன்விலை மாதரிற்றீர்ந்துபின் சிந்தை
பொருந்துதம்மிலம் புகுவதற்கடைந்ததிண் புயத்தார்
வருந்துகற்புடை மனையவர்புலந்திடா வண்ணம்
விருந்துநாடுவ ருடன்கொடுசெலமிளிர் மறுகில் (ருக)

உடையசாளரத் தயலுறுமுவாமதி யினைநா
லிடையணங்கனு ராடியென்றங்கையி னெடுப்பா
ரடையநோக்கியீ தொருமுயற்கூடென வறிந்து
புடையிலேகென விடுப்பர்மற்றதுசெலும் புகழ்ந்தே. (ருஉ)

மன்னுமாளிகை மேலுலாமைந்தர்கண் மதியின்
மின்னுமாரமு தெளிதுணலாமது விரும்பார்
துன்னுமாதரார் முகமதிவாயமு தினுந்தோன்
றின்னுறுஞ்சுவை யுடையதோமற்றஃ தெண்ணின். (ருங)

ஒளிசெய்மாளிகை மேலிருந்தாடிய மடவார்
தளிசெய்சித்தில வடமெடுத்தெறிவார தண் மறுகிற்
களிசெயுஞ்சில சிலாக்கணியாயசசில கவலுஞ்
சுளிசெயுஞ்சிலர்க கடிதளைந்தாழ்வினைத் தொடாபோல. (ருச)

மருவுமேனிலத் திந்திரநீலத்தின் வகுத்த
பொருவிலாநெடு மாளிகைசசுருங்கையிற் புகுந்து
பருவமாமதி வெளிவரல்கரியவெம பாந்தள
வெருவுவாயிடைப புகுந்துபினவெளிவரல கடுக்கும. (ருரு)

சோமனென்பவன கருநிறத்தவனானாந துணிபே
காமாமாளிகை வெண்சுதையுடலெலாங் ஏலப்ப
மாமகிழ்ச்சியிற் றவழ்ந்துவெண் ணிறமருவினனாள
ளேமமிலகறுப புஞ்சிலநாடவழந் திரிக்கும. (ருசு)

இலகுபனனிற மணிகளைவேறுவே றெடுத்துக்
கலவுறாதுகோத் தயாந்தபொற்காலபல நிறுவி
யலகிலாவளம பொலிதரயாததகோ ரணங்கனை
மலாவிசுமபுறு மிந்திரசிலையினை மானும. (ருஎ)

முத்தவெண்சுதை தீற்றியமூரிவான மாடத்
தொததமேனிலத் தொண்டமைப்பசுமயி லுலாவுஞ்
சுத்தவெண்பனி பொதிவரைத்தந்தைதன றோணமேற்
மைத்தமேனியெம பராபரையுலாவிய படிபோல. (ருஅ)

பமரவார்குழன் மாதாகைவழிவிழி படரச
சமரவாள்விழி வழிமனஞ்செலத்தவ நடிதத
லமருள்ளழுக் கறுபபநோககுபுாளிப படைவார
குமரவேளனை யாாபலமைந்தாகள குழுமி. (ருகூ)

கருபபுவிலலுடைக காமனுமிரதியுங கதிரப்ப
விருபபுமேவுபல லுருக்கொடுவிளங்கினு லன்ன
பொருபபுநோபுய மைந்தாமாதாசளபலா புணாவுற்
றிருபபுமேவிடை நகாசொற்றுமுண் ணகரினசடப்பாம. (சுo)

வேறு.

கடையுறுதேத்துசசூழ்த றகாதெனக கருதினனனீ
ருடையமாகடலாநின றுமுவாககட லாதியாறு
மிடையுமவாரிகட்குமுனனுமம வியலிட மேவிசசூழ்நதாங்
கடைமதிற்புறதது ச்சூழு மாழ்ந்தநீ ரகழிமாதோ. (சுக)

கண்ணுதலபாதஙகாண முயன்றமால கருமாவாகி
மான, மனனவனனேய வுதஙகமாமுனிவன வாரணுசியிறறவந திர
ணடா, லனனமாமுனிவ ரொடுமுறைநாளி லமைநதமுறபவததின
மமரரா, பொனனனிகவாநதாட புணாநதகாரணததாற பொலிவ
ழிவெயதிய தவுறகே. (௭௩)

குணமொருமூனறுஞ் சததுவமாகக கோதறுகரணமோா நான்
குந், தணவுறவொனறி நிறபவைமபொறியுந தன்பணிதலேக்கொளக்
கொனவுற, மணமலிசடையாற் றியானிததுமகிழு மாமுனிமனஞுசி
று வினேவந, தணவலிறறெனற லெதிாசிறுசுடாபோ லசைதரத்தொ
டஙகிய தன்றே. (௭௪)

அனனதுதெரிநது நெஞ்சநெக்கழுங்கி யதுவாறகேதுவுந் தெ
ரிந்தே, யின்னதுசைவத் தலமெலாநனிசென றிறைஞசினலாலக லா
தென், றென்னதுவினேதிாத நினிதெடுததாளு மிணையிலானினேய
டிபோது, தன்னதுமனததே யிருவினனெழுநதான றணமைசா
லுதஙகமா முனிவன். (௭௫)

வேறு.

வளைமருவு மகிற்றுணியு மயிற்றழையு மாமணியும்
புளையறுசந தனககுறடும பொருகரிவெண கோடுசளும
விளைகெழுமு மாமலரு மேனமேலு மெடுததாத்துக
கரைசெறியத் திரையெறியுங் கஙகைநீ ரிடைபபடிந்து. (௭௬)

அரிபிரமர் காணானை யாடரவப் பூணானை
யெரிசெய்விட வூணானை யேத்துவார்பாற் கோணானைத்
தெரிவரிய வேணானைச் சிலையுரக நாணானை
விரிதருநன் மாணானை விசுவநா தனைத்தொழுது. (எஎ)

ஐயனைத் திருக்காசி யமலனை யழலேந்துங்
கையனை வளியலைக்கக் கடந்தலையும் பெருநீர்போன்
மையனோ வினையலைக்க மனமலையு மதுநிறுவி
வெய்யனேற் புரத்தியென விடைபெற்றுப் புறம்போந்தான். (எஅ)

ஆதார மடியார்க் காயவொரு பெருந்தகையை
மாதார நிறங்கொண்டான் வந்துதொழ வரங்கொடுக்குங்
கேதார மேயானைக் கிடைத்தன்பிற் றுதிசெய்து
பாதார விந்தமலர் பணிந்தெழுந்து புறம்போந்தான். (எகூ)

பருப்பதவில் லுடையானைப் பருப்பதமன் மகள்கொங்கைப்
பருப்பதம்புல் வானைமதப் பருப்பதமொன் றுரித்தானைப்
பருப்பதங்க டொழுங்கயிலைப் பருப்பதம்வீற் றிருப்பானைப்
பருப்பதத்திற் கண்டுமலர்ப் பதம்பணிந்து புறம்போந்தான். (அ0)

நீளத்தி கிழிதரப்பாய நெடுமுகலிப் புனன்மூழ்கி
வாளத்தி மாலையொடு மதியுமணி வானையுரற்
றூளத்தி யுரியானைச் சலதரமே லுலவுதிருக்
காளத்தி மலையானைக் கைதொழுது போற்றினான் (அக)

அனைபோலு நல்லானை யடையாரிற் புல்லானை
வினையாவு மில்லானை விளங்குமறைச் சொல்லானைப்
புனைமேரு வில்லானைப் புரிசடையிற் செல்லானை
யெனையாள வல்லானை யெழிற்காஞ்சி யிடைப்பணிந்தான். (அஉ)

காராலங் காட்டுபுகழ்க் கந்தரனைச் சுந்தரனை
நாராலங் காட்டுவகக்கு நம்பனையீ தூரியற்குச்
சீராலங் காட்டுநெடு நாளுமெனச் செய்தமைத்த
வேராலங் காட்டுவள ருத்தமனைப் போய்த்தொழுதான். (அங)

வெற்றிமுழு விடையானை வெண்சூலப் படையானைக்
கற்றைநெடுஞ் சடையானைக் கமழிதழித் தொடையானைப்
பற்றலரு ளடையானைப் பாலொருசிற் றிடையானை
யொற்றிநக ருடையானை யுருகன்பிற் றுளப்பணிந்தான் (அச)

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

கொல்லையா னினிதுகைக்குங் குழகனூர் திருமயிலை
யல்லனோ குழன்மடவா ராட்டோவா வான்மியூர்
வில்லைவீ சணிமாட வெண்பாக்கம் வேற்காடு
முல்லைவா யிலும்பணிந்தான் முழுதுணர்ந்த வுதங்கமுனி. (௮௫)

இழுக்குன்ற னிடத்தினெனை வினையிருவாய் மலர்ந்தடியே
னழுக்குன்ற வருள்புரிய வல்லைநீ யருளாயோ
மழுக்குன்ற மேந்துபட மணிக்குன்றம் போற்றுதிருக்
கழுக்குன்ற மேயபினைக் கைக்குன்றே யெனத்தொழுதான். (௮௬)

பாங்கானைக் கொடியமைத்த பண்பானைப் பசியநறுந்
தேங்கானத் தருமிதழிச் சடையானைத் தெரிந்தவர்பா
னீங்கானைத் தமியேற்கு நிரம்புறவைத்த தருணையம்
வாங்கானைத் தூங்கானை மாடத்தானைப் பணிந்தான். (௮௭)

மலையானை யுரித்தபுய மலையானை வயலருமுக
மலையானை யொருபால மலையானைக் கைத்துடிய
மலையானைக் கைதைமலர் மலையானை யெனையாள
மலையானைத் திருவண்ணா மலையானைக் கைதொழுதான். (௮௮)

தொழுமலையு நறுந்துழாயத் தூயனமுதற் சுராமுயிற
வழுமலமிக் குறுமியந்த மாஞ்சோலை புடையுடுத்த
பழுமலையி னுறைவானைப் பற்றாயேன் வினைய
கழுமலபங் குடையானைக் கண்டுதொழு தின்புற்றான். (௮௯)

பாவலூர் ரிளம்பொழில்சூழ் பனங்காட்டூ ராமாத்தூர்
நாவலூர் திருவெண்ணெய் நல்லூர் வண்டிருவதிகை
கோவலூர் திருமாணி குழிமுதற் பலவிடத்துமமா
காவலூர் மூன்றுமெரி கதுவவைத்தாற் றொழுதான். (௯௰)

பொன்னாரும் பாதிரிமேற் புலியிருக்கு மூர்பணிந்து
தென்னாரு மற்றுமுள திருத்தலமெலாம் போற்றித்
துன்னாருந் திடயாருந் தொழுகுலத்து மாமுனிவன்
மின்னாருந் தில்லைதொழ விருப்புற்று வழிக்கொண்டான். (௯௧)

குளமெலாஞ் செங்கமலங் குழியெலா மரக்காம்பல்
தளமெலாம் பொறிவண்டு சாலெலாஞ் செறிசங்கம்
களமெலாஞ் செஞ்சாலி காலெலாங் கயலாக
வளமெலாம் பொலிபண்ணைசூழ் மாத்தில்லை நகரடைந்தான். (௯௨)

கருமேவு மழைமுகிலிற் கதிர்த்தவுடுக் கணஞ்சூழ
வுருமேவு பிறையுறலபோ லொண்கமலப பாசடையிற்
குருமேவு மணிசூழப பொறையுயிர்த்த கூன்வளைசேர
திருமேவு புகழ்த்தெய்வச சிவகங்கைப புனன்மூழ்கி. (சுங)

திருவளைபபுல லுடையாடச் செமபவளச சடையாட
விருமுனிவர் புடையாட விணர்ந்தழித தொடையாட
வொருவிலபணிக ளிடையாட வுமைமேற்கட் கடையாடப
பொருவருமன் றிடையாடும புண்ணியனைப போயதொழுதான். ()

காழிநகர்மேயானைக் கருதலருட் டோயானை
யேழிசைசொல் வாயானை யெஞ்ஞான்று மாயானை
யாழிநெடும் பாயானை யம்பாக்குந் தாயானை
வாழியருட்டாயானை மனமுருகிப் போற்றினன். (சுரு)

கள்ளிருக்கு மிதழியொடீர்ங் கதிரிருக்குஞ் செஞ்சடையும்
வள்ளிருக்குஞ் சூலமழு வைத்திருக்குங் கைகளுமென்
னுள்ளிருக்குந் திருவடியு முற்றிருக்கு மொருமுதலைப்
புள்ளிருக்கு வேளூரிற் போய்த்தொழுதா னுதங்கமுனி. (சுசு)

பண்காட்டு மந்தீஞ்சொற் பணைகாட்டுந் தோண்மடவார்
கண்காட்டுங் கருங்குவளை கைகாட்டுஞ் செங்கமலந்
தண்காட்டுந் தடங்காட்டத் தகைகாட்டி மிகைகாட்டும்
வெண்காட்டுள் விறல்காட்டும் விமலனார் பதம்பணிந்தான்.(சுஎ)

காமருவு நறுமலர்கள் கான்றசுவை யுடைசெந்தேன்
றேமருவு காலோடிச செஞ்சாலிப் பயிர்வளர்த்துப்
பூமருவு தடநிரப்பிப் புணரிபுகுந் துவரகற்றும்
பாமருவு திருக்கடவூர் பணிந்துமயா னமும்பணிந்தான். (சுஅ)

நள்ளாறு தருமபுர நன்னகைக்காரோணந்
தெள்ளாறு முடிவைத்தார் செங்காட்டங் குடிமருகற்
புள்ளாறு காலுழக்கு பூம்பொய்கை சூழ்புகலூ
ரொள்ளாறு புகுத்தாவிவ் வியற்றலமெ லாந்தொழுதான். (சுகூ)

செந்துகிரும் வெண்முத்துந் திரைக்கரங்க ளாலெடுத்து
வந்துகட லடியுறையா வைத்துவணங் குறுமறைக்காட்
டிந்துமலி சடைக்கணிந்த வெந்தைபிரான் கழல்பணிந்து
முந்துமுனி யதுசூழ மொய்தலமெ லாம்பணிந்தான். (எ00)

வெற்பகலின் றெழுகதிர்நேர் விளக்கஞ்சா லுதங்கமுனி
யற்பகமோங் குறக்கவரி யலரிலஞ்சி பாயவேரீஇக்
கற்பகத்தின் கழுத்தொடியக் கருவாளை பாய்மருதப்
பொற்பகநீங் காதுடுத்துப் பொலிதிருவா ரூரடைந்தான். (௧0௧)

அடுபுலித்தோ லுடையானை யனைத்துலகு முடையானை
வடுவில்களங் கரியானை மாலயனுக கரியானைப்
படுபுனன்மா சடையானைப் பவமெனுமா சடையானை
நெடுமணிப்புற் றுறைவானை நின்றவானைப் பூசித்தான். (௧0௨)

காரூரு மணிமாடங் கண்வழுக்கக் கதிர்வீசு
மாரூரி னின்றும்போந் தலர்த்தடஞ்சூழ் வாஞ்சியநன்
னீரூரும் பெரும்பண்ணை நிலவழுபுர் மாகாள
மேரூருந் திருவீழி மிழலையும்போ யிறைஞ்சினான். (௧0௩)

அடலானை யுரித்தபிரா னமருமரும் பதியிறைஞ்சி
மடலாரும் பூஞ்சோலை மயிலாடு துறைவணங்கி
விடலாகாப் பிறதலமு மெய்யன்பிற் போய்ப்பணியா
வுடலாமுப் பகைவென்றோ னெண்டுறைசைப் பதியடைந்தான்.

ஆவடுதண் டுறையமரு மரும்பெறன்மா ணுணியைவகிர்
மாவடுநேர் விழியுமையாள் வாமத்தானைத் தொழுது
கோவடுவே லேந்துவர குணவழுதி போற்றியமா
லேவடுபொற் சிலையாளி யிடைமருதும் போய்த்தொழுதான். ()

வேறு.

மடந்தைபாகனை மால்விடைப்பாகனைக்
குடந்தையானைக் குடந்தம்பட்டேத்திநீர்த்
தடந்தைதாமரைத் தண்மலர்சாய்வழி
நடந்தையாறு தொழுதனனற்றவன். (௧0௬)

கூடுமன்பினிற் கும்பிடுவாரொலா
நாடேஞ்ச நகத்தினைச்சூழ்வுற
நீடுபற்ப தலங்களு நேசியாத்
தேடுமாமுனி சென்றுசென் றேத்தினான். (௧0௭)

வானைக்காவல்செய் வானயன்மான்முனோ
ரூனைக்காவல்செ யாவுணர்வோங்கவுட்
டேனைக்காவல்செய் வண்டிற்செறித்திடு
மானைக்காவி லடைந்தனனந்தணன். (௧0௮)

சாரம்பூண்ட கனியைத்தவாதபே
ரீரம்பூண்டவ ருள்ளுறை யின்பத்தை
வீரம்பூண்ட பரசுடைமேருவை
யாரம்பூண்ட வழுதினையேத்தினான். (௧௦௯)

யாவராயினு மூழ்கினிருவினை
யோவநீக்கு மொளிர்புனற்காவிரி
நாவலான்புகுந் தாடிநலங்கிளர்
தேவதேவன் சிராப்பள்ளி சேர்ந்தனன். (௧௧௦)

திரிசிராமலை மேவியசெம்மலைப்
பரிசிராமன் பணிந்தெழும்வள்ளலை
விரிசிராவண முங்கனைமென்றுதி
துரிசிராவணந் தோன்றுறச்செய்தனன் (௧௧௧)

துதிசெய்தன்பிற வெழுதவணீங்கியே
மதிசெய்மாமுனி வாளைக்முகினமேற
குதிசெய்பண்ணைக் குடதிசைநோக்கிறு
ணிதிசெய்பேருறை யூரைநினைந்தரோ. (௧௧௨)

ஆன்றபேருறை யூரடைவாமெனச்
சான்றமாமுனி தாழையும வாழையு
மீன்றசெந்நெலுங் கன்னலுமீண்டியேர்
தோன்றமேவிச் சுடர்வழிகூடினான். (௧௧௩)

ஆறடைந்த வருந்தவ மாமுனி
யூறடைந்த சிறுவினையூசகத்தான்
மாறடைந்த மனதினலைவிறகோ
ரீறடைந்தில தின்னுமென் றெண்ணுவான். (௧௧௪)

அலையினீரொன வுள்ளமலைதரத்
துணைவியாலவருந் சூழ்வினைதாங்கினேன்
பிணையனொரு பாகப்பெருந்தகை
யிணையிலானரு ளென்றுபெற் றுய்குவேன். (௧௧௫)

முந்தைநாளவினை முற்றுமற்றுத்தெளி
சிந்தைவாய்த்துந நிகழ்பொலி வெய்திடப்
பந்தைநேர்முலை யாளொருபாலுடை
யெந்தையாரு ளென்றுகிடைப்பதே. (௧௧௬)

என்றுளம்படர்ந் தேகுமுனிவனுக்
கன்றுதோறும் விழியுமானரு
டுன்றுமாறுவலத்துத் துடித்தன
நன்றுநன்றிவை யென்றுளநாட்டினன். (கள)

மழையைநேர்களத் தண்ணல்வயங்கருள்
பிழையினேன்பெறு தற்கிடமீதென்றே
விழையுநெஞ்சின் விரைந்துநடந்தறந்
தழையுமாவுறை யூரெல்லைசார்ந்தனன். (கஅ)

எல்லைசாரவு மென்னுரைக் கேன்முனி
தொல்லைமாவினை யாவுந்தொலைந்தன
வொல்லையின்மன மோர்வழிப்பட்டதங்
கல்லைநேர்களத் தண்ணலருளினல். (ககூ)

தஙகுவாய்மை யுதங்கமுனிமன
மெங்குமேகலற் றேவியதீபமேய்ந்
தங்குநினறமை யாய்ந்துமகிழ்வுறீஇப்
பொங்குமிக்க பொலிவடைந்தானரோ. (க௨௦)

ஆடினன்மகிழ்ந் தஞ்சலிசென்னிமேற்
சூடினன்சொல் லரும்புளகத்தின்மெய்
மூடினன்முடி வற்றசிவானந்தங்
கூடினனெனக் கோதின்முனிவனே. (க௨க)

இத்தலத்துக் கிணையுயர்வாந்தல
முத்தலத்துமில் லென்றுமுன்னிக்குவி
கைததலததின னுயென்றுங்கண்ணுத
லத்தலத்துறை தற்குளவாவினன். (க௨௨)

நண்ணுவாாதலம்வேறுள் ளனநசைஇ
யண்ணுவார்நினை வற்றனனேயறக
கண்ணுவார்குணங் கண்டமருந்தைவிட்
டெண்ணுவார்கொன்மற் றென்றுகையேற்றுண. (க௨௩)

குன்றுங்காணுங் குலநதித்திரமுஞ்
சென்றுமாமுயல் செய்வர்மனம்பொறி
யொன்றுறுமலிவ் வொண்டலங்கண்டில
ரின்றியான்பெற்ற தியார்பெறுவாரொன்றுன். (க௨௪)

வேறு.

கறங்குபோற்பொறி வாய்ப்புகுந்துழன்மனங் கலைதெரியு தங்கற்குப், பிறங்குகூவிள வனமெனுஞ்சீருறை பேருறையூரொல்லை, யறங்குலாவவன் தடைதலுமசைவற நின்றதாலஃதோரி, னிறங்குலாவுநூன் மார்பினீரத்தல நிகாவதெத்தல மண்மேல்.

உதங்கமுனி பொலிவடைந்தபடல முற்றிற்று.

ஆகத திருவிருத்தம்-௫௧௫.

## பஞ்சவர்ணப்படலம்.

அடியவர்க்கெய்ப்பில்வைப்பே யாகிய கருணைமூர்த்தி
படிமுதலுலகுமூன்றும் பகர்வில்வா ரணியநாத
னெடிவறுகேள்விசான்ற வுதங்கமா முனிவன்காணக்
கடிதலில்பஞ்சவர்னங் காட்டிய வாறுசொல்வாம். (௧)

மறுவறுகல்விசான்ற மாமுனி யுதங்கனென்பான்
றெறுசிறுவினையினீங்கிச் செம்மைசால் பொலிவடைந்தான்
கறுவினங்காந்துபற்றுங் காரரா வாயினீங்கி
யுறுசுடர்பரப்பித்தோன்று மொண்கலை மதியமொத்தான். (௨)

பொறிவழிவிரையவோடிப் புகுமனமலைக்க நொந்து
தறிநிகராகிநிற்கத் தலைப்படு மகிழ்ச்சிபூத்தோன்
குறிகடந்தோடியோடிக் கொடும்பரி யலைக்கநொந்து
நெறியினின்றிடமகிழ்ச்சி நிரம்பிய பாகனொத்தான். (௩)

கூவிளவனத்திற்காந்தி மதியொடு குடியிருக்குங்
காவியங்கண்டத்தெண்டோட் கண்ணுதற் சாமிதன்னை
மேவியான்பணிவலென்று விழைந்துசென் முனிவனுங்காங்
காவிசான்மருதவைப்பி னணிவளநோக்கிச் செல்வான். (௪)

மருவுமுட்டுறவுபூணர் துறந்தவர் போல்வஞ்சித்துக்
கருதுவம்பலர்கைச்செம்பொன் கவர்ந்துவாழ் வன்கணர்போற்
பொருவமெய்த்துயில்கொள்ளாது பொய்த்துயில கொண்டுநீரின்
வருகயலலகானள்ளி வயிற்றடை குரண்டங்கண்டான். (௫)

நசையுறுமைந்தர்ப்பற்றி நன்பொருண் முழுதும்வவ்விப்
பசையிலையென்னநீத்தல் செய்யும்பைந் தொடியார்போல
வசையறுகரும்பைப்பற்றி மருவுசா றடங்கவாங்கி
யிசையில்கோதென்றுநீக்கு மெந்திரம் பலவுங்கண்டான். (௬)

ஓருடனின்றுந்தாமற் றோருடல் பாயத்தக்க
சீருடைச்சித்திபெற்ற செல்வர்போ லொருசெஞ்சாலி
நீருடைவயலினின்று நெடியமற் றொருசெய்பாயும்
வாருடற்றகட்டகட்டு வாளைமீன் பலவுங்கண்டான். (௭)

விரவுகேவலத்தினின்றும் விமலனு ரருளினாலே
யுரவுசேர்சகலம்பெற்று விளங்குமான் மாக்களொத்துப்
பரவுவெண்முட்டைநின்றும் பரிந்துதா யணைத்தலாலே
புரவுகொள்பணையுற்றன்னப் பார்ப்புகள் பொலிவகண்டான். ()

உற்றொருதடத்தின்மூழ்கி யுமாபதி கருணையுந்தப்
பெற்றொருதடதிறறேன்றிப் பிறங்கிய வபபரோபோற்
சுற்றொருதடத்தின்மூழ்கிச் சுருங்கைநீ ருந்தப்பெற்று
மற்றொருதடத்திறறேன்றி மகிழுமோ திமங்கள்கண்டான். (௯)

மாங்குயிற்கிளவிபாகன் வண்புகழ் விரித்தழுவர்
தேங்குசீர்வாதவூரர் செய்யுளின் சுவையேபோல
வோங்குமுப்பழத்தின்சாறு முடைபடு கரும்பின்சாறு
மாங்குபல்லிடங்கடோறு மளவறப் பெருகல்கண்டான். (௧௦)

சாலியிற்கரும்பிற்காலிற் றலைவிரி யரம்பைக்காவில்
வேலியிற்சங்கமூரு மென்பணை யுடுத்தகூடம்
சூலியிற்கதிபெற்றுள்ள நாரைதன் சுற்றமாய
பீலியிற்பிளிறுநாரை பெடையொடு திரிவகண்டான். (௧௧)

வரமிகுநாளைப்போவார் மங்கையா ஞயாபாணர்
பரமனைப்பாடுவார்கள் பரிந்திசை பாடல்போல
விரவுபல்பொறிவண்டெல்லா மெல்லிசை விழைந்துபாட
விரதவின்மதுப்பூமலரு மெண்ணினங் தனங்கள்கண்டான். (௧௨)

எறிபுனற்கழனிசெஞ்சா லிளங்கதி ரீட்டியாக
முறிவிலேரிலைமேனிற்க முடங்கரி தோட்டியாகச்
செறிசுவைக்கழைதண்டாகச் சினக்கலிப் படைவராது [ன்.
மறிதரப்படைபல்கொண்ட வண்ணம்போற் பொலிதல்கண்டா

ஏமநன்னெறியேசேரற் கெண்ணியங் நெறியிற்செல்வோன்
றேமகல்கழனிவாழைச் சுருள்விரி யாககுருத்து
வாமமார்மதியைத்தீண்டி மலர்க்கணை யைந்துந்தாங்குங்
காமவேள்கவிகைதாங்குங் காம்பெனப் பொலிதல்கண்டான். ()

இருபுறநிரையாயுள்ள விலாங்கலி கால்களாக
வருகுபைங்கன்னல்கந்தி யரம்பைகாற் கணிந்தவாகக்
கருமுகின்மேற்பரப்பாக் காவணப் பொலிவிற்றோன்று
மருதநல்வழிச்செல்வோன்பல் வளமெலாங் கண்டுபோனான். ()

அத்தகுமுனிவர்கோமான் சிவத்தினை யடையவான்ம
தத்துவமுதலாமூன்று தத்துவங் கடந்துசேற
லொத்தணிமருவிநின்ற புறமிடை யுள்ளென்றோது
முத்தமநகரமூன்றுங் கடந்தனனுவகையோங்க. (கசு)

மேருமால்வரையையொத்து விளங்குகோபுர முஞ்சூழச்
சாருமாமதிலுங்கண்டான் றம்பிரான்றளியிதென்றே
யோருமுள்ளகத்துக்கொண்டா னுரைக்கரு முவகைபொங்க
வாருமன்பினனாய்த்தண்டி னவனிமேற் பணிந்தெழுந்தான். ()

கண்ணிணைநோக்கமுந்துங் கையிணை கூப்பமுந்தும்
புண்ணியம்பயப்பமென்றா ளிணைவலம் போதமுந்து
நண்ணிநாத்துதிப்பமுந்து நன்மன மெண்ணமுந்தும்
பண்ணியதவர்க்கொன்றானும் பயன்படா வுறுப்புண்டாங்கொல்

பரவுமைம்புலன்களென்னும் பனைக்கைமால் யானைவென்ற
வுரவுயர்முனிவர்சிங்க முடல்களி றுரித்துவென்ற
புரவுடையமரர்சிங்கந் தனைக்கண்டு போற்றப்புக்க
தரவுகீழ்மேலுந்தாங்க வாழ்ந்துயர் சிகரிவாய்தல். (ககூ)

தடாவலிப்பஞ்சபாசத் தடைகடந் தேகுவாரின்
விடாதருட்குரிமைபூண்ட மெய்த்தவ ரேறுபோல்வான்
வடாதுவெற்பெனச்சொல்பஞ்சா வரணமுங் கடந்துள்புக்கான்
கெடாதெழுமுவகையோடு கிளப்பருமன்பும் பொங்க. (உ0)

வருந்துமோர்வறிஞன்செம்பொன் வைப்பெதிர்கண்டாற் போலக், கருந்துழாய்க்கண்ணியானுங் கமலமேனண்ணியானும் வருந்தியுங்காணாத்தேவை மாமறைவில்வமூலத், திருந்தருள் கோவையம்மா விருகணுங்களிப்பக்கண்டான். (உக)

நறுமலர்வில்வமூல முளைத்தநற்கரும்பைநாடிப்
பெறுபவர்க்கினிக்குந்தேனைப் பேசுவார்பெயராப்பாசந்
தெறுமருள்வடிவமாஞ்சித் திரவிலிங்கத்தைக்கண்ட
வுறுவரற்கப்போதுற்ற வுவகையாருரைக்கவல்லார். (உஉ.)

நெற்றிமண்டோயத்தாழ்ந்தான் ஞரோலெனவெழுந்தானன்றே
பற்றியபந்தஞ்சிந்தும் படிபெற்றேனென்றுதுள்ளி
வெற்றியவிமிலேறூரும் விமலன்முன்குடந்தம்பட்டு
முற்றியவன்புபொங்க நின்றிவைபன்னலுற்றான். (௨௩)

மாலயனுணராவள்ளல் வைகியவில்வமூல
ஞாலமுன்கயிலையென்கோ நான்மறையந்தமென்கோ
சீலமாரன்புமிக்கார் சிந்தையேயென்கோவோர்கல்
லாலமர்தருவென்கோமற் றியாவுமென்கோவென்சொல்கோ. ()

சித்திரகாயத்தின்றோ லுடைத்திருவரையும்வெய்ய
சித்திரபானுவாழ்க்கை சேர்நுதற்கண்ணுநண்ணு
சித்திரமனையாள்சேர்ந்த பாகமுமுடையவிந்தச
சித்திரலிங்கமூர்த்தி சித்திரம்யாவர்சொல்வார். (௨௫)

இவர்வடிவெட்டுளொன்று மதிசடையிருப்புளொன்று
மிவர்விழிமூன்றிலொன்று மதியுலகேத்தாநிற்கு
மிவரிடப்பாலுங்காந்தி மதியெனிலெந்தஞான்று
மிவர்திருவடிக்கேசேர்க வென்னுடைமதியுமாதோ. (௨௬)

பன்னருமண்டரண்ட பகிரண்டத்துயிர்களெல்லாந்
தன்னடிவைகவைக்குந் தம்பிரான்குடைந்துதேனுண்
டின்னிசையளிகள்பாட விணர்விரிதருமாலூர
மன்னடிவைகுமென்னில் வானினுஞ்சிறந்ததிம்மண். (௨௭)

விதிக்குநாயகனொழுங்கு விதிக்குநாயகன்பொன்மாது
பதிக்குநாயகன்பேரன்பு பதிக்குநாயகனின்பாய
கதிக்குநாயகனென்னுள்ளுங் கதிக்குநாயகனெல்லோரு
மதிக்குநாயகனிக்காந்தி மதிக்குநாயகனேயாமால். (௨௮)

மெய்யெனும்பொய்யைவேண்டார் வெறுக்கைமேல்வெறு
க்கைபூணார், செய்யவள்புணர்மான்முன்னோர் திருவின்மால்
சற்றுங்கொள்ளார், மையறவொன்றியொன்று நிலையின்பமருவி
வாழ்வா, ரையவிவ்விலிங்கமூர்த்தி யாலயங்கண்டபேரும். (௨௯)

என்றுளத்தின்னமுன்னி யீறிலாவன்புபொங்க
நின்றுளமுருகுநல்ல நெறியுடையறிஞன்கேட்பக்
குன்றுவில்லாகவாங்கிக் கொடிமதின்மூன்றுஞ்செற்ற
மன்றுளானருளேகாய வாணியாயின்னகூறும். (௩௦)

வேறு.

முறைதெரியுதங்கமா முனிவகேண்மதி
மறையுயர்வொப்பற வயங்குமவெண்டிசை
யறைகடலுடுத்தபா ரகம்விளங்கவிக
குறைவறுதலமெனக் கூறுநாளுமே. (௩௧)

திகழ்தருமுமையவ டிருமுன்வெம்பவ
மகழ்சிவதீர்த்தமொன் றைதுநாவலா
புகழ்வளத்ததுமிகு புண்ணியத்ததோ
ரிகழ்வறவிளங்குவ தெந்தஞான்றுமே. (௩௨)

பார்த்திவர்முதலிய பாருளோர்களும்
பூர்த்தியற்பயன்முதற் புலவருந்தொழு
சீர்த்தியின்மிக்கசித் திரவிலிங்கன
மூர்த்திதன்மான்மிய மொழியவல்லர்யார் (௩௩)

தலமுதலாவுளா தந்தமூன்றொடு
பலபொறிவண்டினம் பருகிப்பாண்செய
வலர்மதுமடைதிறந் தளிக்கும்வில்வமு
நிலவுறல்விசேடமென் றுரைக்குநீண்மறை. (௩௪)

ஆதலினித்தகு தலத்தையையநீ
காதலினடைந்தது கருதுன்புண்ணிய
மாதலமிதிலொரு மடஞ்சமைத்துநா
லோதல்கொணீயுறை யொருவவெண்ணுமேல். (௩௫)

குலவுதென்பாற்கங்கா கூபநீர்முகந்
திலகுசித்திரவிலிங் கத்திற்காட்டுதி
மலர்முதலியகொடு காலந்தோறுமா
ணிலவுறப்பூசிகைக கோடிநீள்கதி. (௩௬)

என்றசொலிருசெவி யேறசிந்தையு
ளொன்றியபெருமகிழ் வுடையனாயப்பணிந்
தன்றுகாலையிற்புன லாடியையனை
நன்றுபூசனைசெயுங் கருத்துணாட்டினான். (௩௭)

புறம்பொலிதிருமுனி பொற்பிற்றாடினு
னறம்பொலிதருசிவ தீர்த்தமாடினன்
றிறம்பொலிநீற்றுமெய் திகழமூடினன்
னிறம்பொலிநறுமல ராதிநேடினன். (௩௮)

மறைமுனிவள்ளல்பால் வருமக்காலையி
லறைபுகழ்சசித்திர விலிங்கமாகிமுன்
னிறையெழிலருளுரு நீத்துநீப்பரு
மிறையவனரதந விலிங்கமாயினான். (௩௯)

அரதநவிலிங்கமா யருளின்வைகிய
வரதனைசசெய்மையே கண்டமாமுனி
யிரதநீராடியாம வருமுனிஙகுவந்
தரனையர்ச்சித்தவர் யாரொனறுள்ளுவான். (௪0)

அளகையான்பூசனை யாற்றிச்சாத்திய
வளமலிசெய்யபட் டொளிகொல்வாசவன்
பளகறச்சாத்திய பாவுசெம்மணிக
கிளரொளியாங்கொலிக் கேடிலசேயொளி. (௪௧)

அண்டர்செங்கமலங்கொண் டருச்சித்தார்கொலோ
துண்டவெண்பிறைநுதற் றொண்டைசசெய்யவாய்க்
கொண்டலங்குழலர மாதர்குங்கும
மெண்டகவப்பின ரோகினார்கொலோ. (௪௨)

பாதலத்துறையாப் பலவுமிங்ஙனுற
ருதரவொடுமணி யனைத்துங்கான்றுகைப
போதகமுரித்தவர் மேனிபோர்த்தவோ
மாதர்கொளினையகண் வழுக்குஞ்சேயொளி. (௪௩)

இன்னதென்றுணர்கிலே னெம்பிராட்டியு
மன்னருட்காந்திசேர் மதியிவ்வையனு
முன்னருமழவிளங் கதிரகொலோவெனத்
தன்னுளேநினைந்துவந் தருகுசார்ந்தனன். (௪௪)

உற்றுநோக்கினன்பிறி தொன்றுங்கண்டிலன்
மற்றிது திருவருள் வள்ளலாடலென்
றற்றமின்முனிவர னதிசயித்தனன்
பற்றுபூசனைவிதிப் படிதொடங்கினான். (௪௫)

முற்படுகிரியையே முதலவாகிய
பற்பலகிரியையும் பாங்கிற்செய்தனன்
சொற்படுபெரும்புகழ்த துவாரபாலகர்
பொற்புறுபூசையும் புரிந்துள்புக்கனன். (௪௬)

நிருத்தன்மாதேவனின் மலனிரஞ்சனன்
றிருத்தன்மாபூசனை செய்துமுற்றிட
வருத்தன்மாவூறுறு வகைசெய்மங்கல
வொருத்தன்மாமலரடி யுன்னிப்பூசித்தான். (சஎ)

முன்னுமாவாகன முதலெலாஞ்செய்து
பன்னுதன்கமண்டல நிறையப்பனீரராய
கொன்னுமின்சுவைகசங்கா கூபநீர்முகப்
துன்னுமாமறைமுத லொருவற்காட்டினன். (சஅ)

கந்தமக்கதைநறுங் கவின்செயாகவிர,
வந்தளிர்முதற்பல வலருநகைந்தொடு
மந்திரவிதிப்படி மகிழ்ந்துசாத்தினு
ணிந்தியமவித்தபே ரொழிலதொன்மாமுனி. (சகூ)

துதிநிகமப்படி தூபதீபமு
மதியுறக்கோட்டினன் வள்ளலாலமைமயி
கதிமிகுபலந்தையுங் கனிவினலிரு
னுதிசிவபத்தியே யுருவமாயினன். (ரு0)

அரதனவளையிடை யமாதற்சேர்ப்பவோர்
வரதனமெனப்பல ரறைதல்காட்டமோவா
வரதனப்பூணுமை யாங்களிக்கவோ
வரதனவிலிங்கமா யடிகளவைதல். (ருக)

எனப்பலதுதிகளு மியம்பியற்புதன்
முனர்த்தனியிருந்தருண் மூலமந்திர
மனத்துறச்செபித்தனன் மதியின்மேலவ
ருனற்கிடமாகிய வுதங்கமாமுனி. (ருஉ)

அருளுறுகாந்திசேர் மதியையன்பிறும்
பொருளுறுமறைப்படி புரிந்துபூசித்தான்
றெருளுறுதண்டிபூ சனையுஞ்செயதனன்
மருளுறுநெறியுறு வரதமாமுனி. (ருங)

விடைமதிமதிவிளங் குவாவின்மேலவர்
குடையுமந்தாகினி கூபநீர்முகந்
துடையவற்காட்டின னுன்னும்யாவையு
மடைவரநாளாக ரமலற்காட்டுவோர், (ருச)

மலர்மிசைவதிபவ னனையமாமுனி
யலர்குணமதிறபுறத் தருகிலோர்மடஞ்
சிலாபுரிந்துதவிடச சிறபபிற்சென்றவண்
பலாதொழவிருந்தனன் பரனையுளளியே. (ருரு)

உசசிமேற்புனலுடை யொருவன்றுளினை
யுசசிமேறறியானஞ்செ யுறுவர்யாவரு
முசசிமேற்கொளபபொலி யுதஙகமாமுனி
யுசசிமேற்றிரிகதிா செய்ததோாநதனன. (ருசா)

நடுப்பகலாயிற்றென் றெழுந்துநன்முனி
தடுப்பரும்புகழ்சசிவ தடமடைந்தனன்
விடுபபறுங்கதிய விரதமுற்றினன்
கடுபபயில்கண்டன்முன் கனிவினெய்துவான். (ருஎ)

வரமுனிதன்புடை வருமககாலையி
லாதகவிரிஙகமா யமாநதவைபணும்
பரவுசெஞ்சடைதகிரி பதகைவெண்புன
றரமிகுமுடலெலாந தழுவிற்றுமென. (ருஅ)

கற்பநீறணிந்தொரு சவின்கொண்டாலெனப
பொற்பமர்துரோணமென புதியவெண்மலர்
மற்படுமேனியை மறைததாமென
விறபடுபிறையமு தொழுககிவிடடென. (ருகூ)

முடியறியாவன முயன்றுதான்புரி
படியறுதவததிறை பரவருடபேறீஇக
கடிதுகண்டிருசிற களைவிரிததினி
தடிமுதன்முடிவரை யவாயததழீஇயென. (சா0)

போகிரூற்றமரர்கள் பூவின்மேலவ
ஞகி வனத்தொடை நாதனமாதவர்
யோகியர்பணிந்துள முருகவெண்ணெய்யே
யாகியோர்தலத்திடை யமாந்தவாறென. (சாக)

அமரரான்பயம்பொழிந் தாட்டினுலென
வமரர்வான்சுதையெடுத தப்பினுலென
வமரசெய்சோற்றபி டேகமாமென
வமரும்வெண்பட்டலங் காரமாமென. (சாஉ)

வேறு.

அடியர்நினைந்த யாவும்வழங்கு மருளாலே
நெடிதுவிளைந்த மாபுகழ்பொங்கி நெறியேதன்
வடிவமொருங்கு மூடியதென்ன வளமார்வெண்
படிகவிலிங்க மாயினனெங்கள் பரமேசன். (௬௩)

அன்னதுகண்டா னுடலுவந்தா னருளுன்னி
முன்னர்வணங்கி யெழுந்துவகைக்கடன் முற்றுற்றே
துன்னியமாமல ராதியகொண்டு தொடங்குற்றுன்
மன்னியபூசனை செய்தனனன்பின் வழாவாறே. (௬௪)

வெள்ளியமால்வரை வெள்ளியமால்விடை வெண்டும்பை
வெள்ளியவான்மதி வெள்ளியவான்புனல் வெண்ணீறு
வெள்ளியவார்குழை கொண்டுவிளங்குறு தற்கேற்ப
வெள்ளியமாபடி கத்துருவாயினை மேலோயே. (௬௫)

என்றுதுதித்தரி திற்புறமேகியி னன்றேறூர்
குன்றுநிகர்த்த மதிற்புறமேய மடங்கூடி
மன்றுவெடுத்த நறுங்கமலத்தை மனத்துன்னி
நன்றுகளித்தினி தாகவிருந்தன னலமிக்கான். (௬௬)

வேறு.

மாலைவண்டுசூழ் தண்டுழாய்செய்தணி மணித்தோண்
மாலைவண்டுசெய் வள்ளலார்நிறமரு வந்தி
மாலைவண்டுறை சென்முனிவந்தது நோக்கி
மாலைவண்டுமுத் தீன்சிவதடமருங் கடைந்தான். (௬௭)

சந்திவந்தனை முடித்தனன்றண்மல ராதி
முந்திநேடினன் முன்னவன்பூசனை முடியபா
னிந்தியங்களை யவித்தவனேகுறு மேல்வை
யந்திவண்ணனுங் கிரணியவிலிங்கமா யமர்ந்தான். (௬௮)

கண்டுதாழ்ந்துதாழ்ந் தெழுந்தனன்களித்திறும் பூதுங்
கொண்டுநெக்குநெக் குருகினன்குணப்பெருங் குன்றைப்
பண்டுபோலவே நேசித்துப்பூசித்துப் பணிந்து
மண்டுபேரன்பு துன்றமுன்னின்றிவை வழுத்தும். (௬௯)

கோடுவார்சிலை யெனக்கரங்கொண்டது மம்பொன்
பாடுசானடஞ் செய்யுமம்பலமுகன் பைம்பொன்
றேடுமால்விடை புணர்தரப்புணர்த்ததுஞ் செம்பொன்
ளேடுநீர்ச்சடை யொருவனின்னருட்குறி யும்பொன். (௭௰)

ஐயநின்றிரு வளையுறசூழ்வது மாசை
னையநின்னடி யார்கொழிப்பதும்பிறப் பாசை
யையநின்னருட் குறியுமொப்பில்லதோ ராசை
லையநின்னடிக் கேசெலுமடியனே னாசை. (௭௧)

ஓங்குமாமறைத் திரட்குநீயொருவனே யருத்தம்
பாங்குமேனியிற் பராபரைகொண்டது மருத்தந்
தேங்குநின்னருட குறியுமொண்செம்மைசா லருத்தந்
தீங்குதீரவெரு செவிக்குநின்சீரன்றி யருத்தம். (௭௨)

வண்டுவார்குழை வள்ளன்மூடிகமது கைத்துத்
தொண்டுளாககரு ணின்மகவுயிர்துலைக கைத்து
விண்டுவாதிய ரோதுநின்குறிமிளிர கைத்து
கண்டுளோர்தமக் குறுவதும்பிரபஞ்சக கைத்து. (௭௩)

ஒருநின்றேர்விடு பாகனுக்குறையுள்கோ கனக
மருமலாக்கரம் வளைத்ததுமன்னுதங் கனகம்
பொருவினின்னருட் குறிபொலிவுற்றசெங் கனக
மருமையானநிற் றொழுதெழுவாககுணடாங் கனகம். (௭௪)

எனத்துதித்துமுன் னிருந்தனன்பின்முதல் யாமம்
வனத்துழாயவன் முதலியோருயிரொடும வாழக
கனத்தினுங்கரி தாகியகண்டனைப் போற்ற
மனத்தினுன்னின னெழுந்தனன்செழுந்தவ மறையோன். (௭௫)

எழுந்தமாமுனி யணிமையினேகுறு மேல்வை
யழுந்தும்வெம்பவக கடல்கடந்தாருயி ரொலலாஞ்
செழுந்தண்முத்தியங் கரையிவர்தரத்திகழ் வேதக
கொழுந்துவசிர லிலிங்கமாயிருந்தது குலாவ. (௭௬)

நோக்கினான்முனி நோக்கடங்காத்திரு நோக்கைத்
தேக்கினான்பெரு மகிழ்ச்சியையின்பத்துட டிளைத்தான்
வாககினான்மனத் தானளவிடற்கரு மணியைத
தூக்கினான்மறைப் படிதுதிபூசனை புரிந்தான். (௭௭)

விழைந்துமாமலை மகடழுவுறத்திரு மேனி
குழைந்துளானெனுங் கூற்றுரைமாற்றுதல் குறித்தோ
தழைந்தமாபுகழ்ச் சாமிநீகுழைதரா வண்மை
நுழைந்தவசிர மாயினைகாணநோற றேன்கொல். (௭௮)

நேயமார்தரு நினக்கமைகருவியு நீயே
பாயபேருலகஃ தறிந்துள்ளகம் பதிப்பத்
தாயனுய்தனக் கமைதருகருவியுந் தானே
யாயவொள்வயி ரகசூறியாயினே யழகே. (எகூ)

முருகுநாறுபொற் கொன்றையாய்மூவுல குய்யக
கருகுகண்டநீ வயிரமாயிருக்கினுங் கண்ணிற்
பெருகுநீருற வலாமினுற்பெரிதுநெக் குள்ள
முருகுவார்க்குமுன குழைதராமையுமுனக் குண்டோ. (அ0)

வேறு.

குத்திரமினறியின்ன துதித்திருந் தனபுகூர்ந்து
பத்திரமலர்கொண்டத்த யாமதநிற் பூசைபண்ண
வத்திரமலர்ந்தெழுந்த மாமுனி காணமுனபோற்
சித்திரவிலிங்கமாகி யிருந்தனன் றேவதேவன. (அக)

ஆடினுனெக்கிநெற்றி யணிநிலங் தோயத்தாழ்ந்தான
மூடினனபுளகப்போர்வை முகிழ்த்தகை தலைமேலேறச்
சூடினுனுவகைபொங்கத் துளளினுன றெய்வவேதம்
பாடினுனகனிந்துபூசை பண்ணினுன் பறிசசினுனே. (அஉ)

ஐயநின்னழகுகாண்டற் காயிரங் கண்கள்பெற்ற
செய்யபொன்னுலகவேந்தே சிறந்தவ னவனுநோக்கி
மையகல்கணகள்போதா வெனமனம் வருந்துவானேற்
றெய்யகண்ணிரண்டேயுள்ள சிறியனே தெரியக்காண்பேன். ()

மலைமகள்பாகங்கொண்ட வள்ளலே மறுவிலுன்சீர்
கலைமகனுவிற்கொண்ட கடவுளே மொழியவல்லன்
றலைமைசாலவனும்பேசத் தகேனென வொதுங்குவானே
லுலைவறுகல்விசாலாச சிறியனே வுரைக்கவல்லேன் (அச)

அரியநின்பாதபூசை யன்பினுற் செய்யவல்லோ
னுரியசெந்திருவாழ்மார்பத் தொருவனே யவனுமோர்பூ
விரியவத்தவறுநோக்கி யிடந்தன னொருகண்ணென்முற்
பெரியவசிறியேன்கொல்லோ பிழையறச செய்யவல்லேன். ()

வேறு.

மண்புனலனல்கால் வெளியியமானன் மதிகதிரொனுமூரு
வெட்டும், வண்புகழ்த்தொழிலோ ரைந்திற்குமுதலாய் வயங்கு

ருவொன்பது மனுமு, னெண்படிமத்து வாக்கமென்றுரைக்கு மி யலுருவாறுநன் குடையாய், பண்புசாலுறந்தைப் பதிவயின்மே ய பஞ்சவர்னேசனே போற்றி. (அசு)

இழிவுறுமலகே வலத்துறுமுயிர்கட் கிணர்மலருடைத்தரு வழலாய், மொழிதனுவாதி யடைந்திடுகாலை முரணுடைக்கடுஞ் சிலையழலாய்ப், பழிபடுபந்த மறுத்துயாவீடு பற்றியகாலயத் த ழலா, யழிவறுமின்பா யுறைதருமுறந்தை யறநதிகழண்ணலே போற்றி. (அஎ)

கருமலமழுந்து முயிர்களைப்பற்றுங் காலமோர்ந்தருளினு லெடுத்து, மருவுடலாதி விந்துமோகினியென மாயைகளாற்கொ டுப் பித்துப், பொருவறுசததி பதிவினேரோகிப் புண்ணியக்கு ரவனுயருளிப், பெருகுமினபமுந்த வழுததிடுமுறந்தைப் பெண் ணொருபாகனேபோற்றி. (அஅ)

பூதமோபூதத் தாகியவுடலோ பொறிகளோமனமுதற் கர ண, பேதமோபரவு மாயையோவுணர்வு பெருகவாராயினமற் றி யாதென், றேதமோடுழலா வகையடியேனுக கிவையலாவொன் றினையருளு, நாதநாதாந்த போதவேதாந்த நலஙகெழுமுறந்தை யாய் போற்றி. (அகூ)

கந்தமுனைந்தா யிரதமுனைகாய்க் கதித்திடுமுருவமுன் மூ ன்றாய்ச், சந்தமெய்யுணரு மூறுமுனனிரண்டாய்ச சத்தமொன முய்த்தொ முதல்வா, னந்தமெண்பூத மைந்தினுநிறைந்தா யா வியாயாவியுள் ளறிவாய்ப், பந்தமாய்வீடு மாய்வயங்குறந்தைப் பஞ்சவர்னேசனே போற்றி. (கூ0)

வேறு.

நன்றுமாதீத்துமாகி யிருளுநல்லொளியுமாகி
யொன்றுமாய்ப்பலவுமாகி யுருவுமாயருவுமாகித்
தொன்றுமாய்ப்புதிதுமாகித் தோற்றமீறின்றிநின்றாய்
மன்றுளாட்டயர்வாய்காந்தி மதிமணவாளபோற்றி. (கூக)

கன்னிபோர்பாகங்கொண்டும் விகாரமில்கடவுள்போற்றி
துன்னியைந்தொழில்புரிந்துந் தொழிலொன்றுமில்லாய்போற்றி
பின்னியெல்லாங்கலந்துங் கலப்பிலாப்பெரியோய்போற்றி
மன்னியவுறந்தைக்காந்தி மதிமணவாளபோற்றி, (கூஉ)

விச்சுவாதிகனேயோங்கும் விசுவசேவியனேவேத
வச்சுவாவித்திலாம லடங்கலும்விளைவுசெய்வாய்
கச்சுவாய்ந்தெழுந்தகொங்கைக் கருங்குழற்செய்யவாய்வா
மச்சுவாகதச்சொற்காந்தி மதிமணவாளபோற்றி. (கூ௩)

வானக்கண்மிடைந்தோரானும் வையக்க ணடைந்தோரானு
ஞானக்கண்ணாலுங்காணாற் கரியநின்றொடனாயே
ஞானக்கண்காணக்கால மேருனாந்துஞ்செய்தாயொண்மான்
மானக்கண்கொண்டகாந்தி மதிமணவாளபோற்றி. (கூ௪)

சிதரனிரந்துவேண்டச செழுமலாத்தவிசுளானை
யாதரமைந்தனாக வருளினையனையாள் வேண்டத்
தாதவிழ்துழாயினனைத் தந்தனைமைந்தனாக
மாதவாவணங்குங்காந்தி மதிமணவாளபோற்றி. (கூ௫)

அறைவினையுடலேயானென் றவத்தைகடோறுஞ்சார்ந்து
மிறைதருபிறப்பிறப்பில வீழ்தராதடியேனுக்கு
நிறைசழல்காட்டியாண்ட நின்மலக்கொழுந்துபோற்றி
மறைபுகழுறந்தைக்காந்தி மதிமணவாளபோற்றி. (கூ௬)

தருமவெளவிடையாய்போற்றி சக்கரப்படையாய்போற்றி
குருமலிசடையாய்போற்றி கொடுமனத்தடையாய்போற்றி
மருவதளிடையாய்போற்றி மணங்கொளாததொடையாய்போற்றி
யொருமகள்புடையாய்போற்றி யுறநதைவாழ்வுடையாய்போற்றி. ()

சுருதிசொனேசபோற்றி சுயம்பிரகாசபோற்றி
தெருள்பவநாசபோற்றி சிவபுர வாசபோற்றி
பொருதமூலாசபோற்றி புணாதராப பாசபோற்றி
குருவளாமகேசபோற்றி கூவிள வனேசபோற்றி. (கூ௯)

நிறைதருமன்புபொங்க நெக்குநெக் குருகியுளள
மறைமுடிவிளங்குந்தெய்வ மாசிலா மணியையிவ்வா
றறைதருதுதிகள்பேசி யானந்த வெள்ளத்தாழ்ந்தா
னுறைதவபபெருமைசான்ற வுதங்கமா முனிவன்மாதோ. (கூகூ)

தண்மைசாலுதங்கமேலோன் றன்னெதிர பரமன்றோன்றி
வண்மைசான்முனிவவேண்டும் வரமெவ னுரைத்தியென்ன
வுண்மைசாலடிகள்போற்றி யொன்றுமி லாதநாயேற்
கண்மைசால்பெரியோர்க்கேயா மருள்பெற வளித்தியைய. (௪00)

இதனின்மேலிழுதையேன்கொள் வரமெவ னிமையோர்வாழ்வு
மதனுடையசுரர்ச்சாடும் வச்சிர பாணிவாழ்வுஞ்
சததளக்கமலமேயான் வாழ்வுந்தண் டுளபத்தோளச்
சதனுடைவாழ்வும் யானோர் துரும்பெனக் கழித்துநின்றேன். (௧0௧)

ஐயவித்தலமும்வாச வலாச்சிவ தடமுமேலாஞ்
செய்யநின்குறியுமென்பேர் சிவணியே விளங்கலவேண்டும்
பொய்யகலன்பினின்றுள் பூசிக்க வென்றும்வேண்டு
மையறவீற்றுமுத்தி வழங்கவும வேண்டுமின்னும. (௧0௨)

ஐந்துகாலங்கடோறு மைந்துரு வங்களான
மைந்துசேரருளுமின்ன வகையெனத் தெரிக்கவேண்டும
பைந்துழாய்விடையாயென்னப் பணிந்தனன் பரமனுள்ள
மைந்துளாற்கைந்துவண்ணங் காட்டிய நலமுன்சொற்றேன். (௧0௩)

அன்னதுறுமக்குச்சூர வாதித்தன் கதையிற்றோன்றும்
பின்னர்மெய்க்கதியாண்டோரா யிரஞ்செலப பெறுதிமற்றை
யென்னவும்வழங்கினுமென் றிலிங்கத்துண் மறைந்தானைய
வன்னயமுனிவிர்தோமி னென்றுநன் குரைத்தான்சூதன். (௧0௪)

சீர்மிகுமினையகாதை செவியுறக் கேட்போரொன்று
நார்மிகுமுளத்தமைபபோர நற்றவன் முதித்தயாவு
மேர்மிகுபஞ்சவர்ண ரெதிரின்று துதிபபோர்செலவம
பார்மிகுவாணிற்றுய்த்துப பரகதி யடைவர்பின்னும். (௧0௫)

பஞ்சவர்னப்படல முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௬௨0.

## கத்துருப்படலம்.

பத்துருவுடையமாயன் பரவுமைந் துருவமைந்த
சித்துருவமலன்மேன்மை செஞ்செவிக் கினிமையாக
முத்துருகீர்த்தவெண்பன் முகிலுருப் புனையுங்கூந்தற்
கத்துருவான்பாற்கேட்ட காதையை யெடுத்துச்சொல்வாம். (௧)

அருமறைநான்காறங்க மமைந்தவா கமங்கணூலேழ்
பெருகுபாகமங்கண்மற்றைப பிறங்குநூல் யாவுமோர்ந்தா
னொருவினல்லொழுக்கமெல்லா மோருருக் கொண்டதொப்பான்
கருமலமுனிந்தநின்ற காசிப முனிவனென்பான். (௨)

மறைகள்வாழ்த்தெடுப்பவம்பொன் மன்றநின் றாடல்செய்யு
நறைகமழ்கொன்றைவேணி நாயனா தூயபாத
நிறைதருமுளத்தான்றெய்வ நீற்றொளி பழுத்தமெய்யா
னறைதருமவன்றன்மேன்மை யாவரே யறிகிலாதார். (௩)

அனையமாமுனிவற்கம்மா வருந்ததி யனையகற்பின்
மனைவிமாரிருவர்தெய்வ மகளிரை யழகின்வென்றார்
முனையுவேற்கண்ணினாரம் முனிவனுக் கிருகண்போல்வார்
புனையுநாயகன்றனேவல் போற்றியின் றொழுகுநீரார். (௪)

மற்றவர்தம்முண்மூத்தாண் மறலியுண் ணடுங்கியோடச்
செற்றவா * டடற்றொளிக்கச் சிறுகண் வினதையென்பாள்
பொற்றசீரிளையாள்பொங்கிப புடைத்துவாா கிழித்துவீங்குங்
கற்றடமுலைசுமந்த கத்துருவென்பாண் மன்னோ. (௫)

வேறு.

கனமலர்க்குழன் மாதாகளிருவருங் கருங்கொடிகண்ணுக
வனகமாதவ முனியுமக்கண் மணி யாயொழுகுறுநாளில் [ள
வினதையெனபவ ளருண னுக்கிளவன்முன் விகங்கம்யாவையுமீன்று
பனகம்யாவையு மீன்றனளிளையபொற் பாவைகத்துருவென்பாள். ()

குறைவுதீாதர மகவுயிாத்திருவருங் குணமிகவாழ்நாளுட், பொ
றைகொண்மாமுனி காசிபன்வாசவொண் புதுமலர்க்கருங்கூந்தற், க
றைகொள்கூரயி லனுக்கியம்பலைத்துவெங் கடுமருட்டியவாட்கட், பி
றைகொள்வாணுதல் வினதைபால்மனம்பெய ராவகை † பிணைவை
த்தான். (௭)

கடங்கொண்மாமுலைத் தடஞ்சுமந்தொசியிடைக் கத்துருவஃ
தோர்ந்தா, டிடங்கொண்மாதவ முனிவரன்மயங்கிய செயலெனமன
த்தோராள், விடங்கொள்வாள்விழி வினதையேமயக்கினண் மெய்
யெனவனையாண்மேன், மடங்கொணெஞ்சிடைக் குய்யம்வைத்தன
ளது மாதருக்கியல்பன்றே. (௮)

ஒருவர்தந்தன் ரறிவெனிலிலக்கண முணர்ந்தவராண்பாலே [க்
மருவவப்பொதுப் பெயர்வினைக்குறைசெய்து மாற்றுவர்பெண்பாலை
கருவிமாமுகிற் கருங்குழற்செய்யவாய்க் கத்துருமுதலாய
வுருவவேோடரித் தடங்கணார்மடமையை யுள்ளுறவுணர்ந்தன்றே. (௯)

* தடறு - உறை. † பிணை - ஆசை.

அலைதிரைக்கடல் கடைந்தெடுத்திடுசுதை யமரரேகவாந்துண்ணச்
சிலைவலிபடியத் தானவர்வறியராய்த் தேமபியசெயன்மானக்
கொலைவிடக்கரு நெடுவிழிவினதையே கொழுநன்மாட்டுறுமின்ப
நிலைமையிற்பெற மெலிவலோயானென நெட்டுயிரபபெறிவாளால்.(கo)

இளையளாயயா னிருக்கவுமகிழ்நனே யிரவெலாமவசஞ்செய்து
விளையுமினபமிக் கனுபவிபபாளொரு வினதையேநனவின்க [றால்
ணுளையமெலலணை மிசைந்தனிகிடநதியா னுயிரத்துயிரத்துறநகுற்
வளைதருஙகன வின்கணேநுகருவன மணமகனறருபோகம். (கக)

இனியகாதலனிடத்திவள் சாரவதுமென்னேயே திலளாக்கத்
தனியவாய்பபல வுரைபபதுமறவினித தடுபபனமற்றதுகாறு [டாள்
முனிவுநீஙகிநட்பாகியே யொழுகுவன் முறைமையினெனக்கொண்
கனியவாவுமஞ் செயயவாய்ககரியசட் கததுருவென்பாளே. (கஉ)

இனையள்குய்யமவைத் திவ்வணமொழுகுற விதயத்துமெய்
வைத்தே, யனையள்பண்டுபோ லொழுகுறு ளாகளிலன்பின்முன்ன
வளோர்நாட், புனையலர்த்தொடைக் கருஙகுழலவெண்ணகைப பொ
ற்றொடியிளையாளே, துனையவாபயப் புணரிசாரந்ததன்வளத் தொ
கையுறிவாமென்றாள். (கங)

என்றுரைத்திட முன்னவளபொருகவென வெழுநதனளிளை
யாளு, மொன்றுமுள்ளமுற் றவளொடநடநதன ளுவந்துசென்றிரு
வோருந், துன்றுசெய்யதா மரைபலமலாந்தொரு சுடாவிடுமுழுநீலக்,
குன்றுதான்கிடந்தெனக் கிடந்தரிதுயில் கொளுங்கடலடைந்தாரே. ()

கருமபினுஞசுவை கனிநதவந்தீஞ்சொலவண் கவின்குடிகொள
வீங்கி, யருமபுகொஙகைமுன் மஙகைதனறஙகைமெல் லஙகைசெங்
கையிற்பற்றிச, சுருமபுகிண்டுதாக் கருஙகுழலிளையமென் றேநகைநீ
காண்கென்று, விரும்புபற்பல வளமெலாங்காட்டுபு விரித்துரைசெய்
வாளால். (கரு)

தங்கணுயகன் றேன்றியபேரிடத் தனிவளநனிநோக்கத்
துங்கவாளுடுக் கணமெலாமிவண்மரீஇச் சூழ்ந்துறைந்தாற்போலப்
பங்கநீத்தவெண் டரளஙகணெடுங்கரைப் பரபபெலாஙகிடந்தம்மா
செஙகணேறறிமின் முலையிலுயொளிருமத் திறபபெருவளநோக்காய்.

கன்னிபாகன்வெண் ணீற்றணிமேனிமேற் கவின்றசெஞ்சடைவீழ்ந்து
மின்னினுலென வித்திருப்பாற்கடல் வெண்டிரையெழுந்தோறுங்

துன்னிமேலெழீஇ யொண்பவளக்கொடி துலங்குறுவளமன்பு
மன்னியென்னுடன் றேன்றியகிளரிள மடக்கருங்குயிலேனுக்காய். ()

வேறு.

பொருவின்மாதேவன் செஞ்சடைக்காட்டுட் பொருந்துமந்தாகி
னிபுனலின், மருவுவெண்பிறையா டுதலபொரப்படாத வாரகொ
டிச்செந்துகிரக்காட்டு, னொருவுறுத்தீமபா லாகியபுனலி னுற்றகூன்
வளைவிளையாடுங், திருவுடாமவளம்பூ மருவுலாங்கூந்தற செருவுலாம்
வாட்கண்ணிநோக்காய். (௧௮)

திருமலனங்கை விரலிற்காழியுமொண ண்ணிறத்தினுக் கொரும
தாணியுந்தம, முருவெடுத்துதவி மிகுபுகழ்தமக்கு முறுத்தியபிரான்
றுயிலிடமென், றெருவுறுவாகிக கயல்கமடஙக ளுறுகளியடைந்துலா
ம்வளத்தைக், கருவிழிசசெவ்வாய் வெண்ணகைப்பசுந்தோட் கத்து
ருமாதுநீநோக்காய். (௧௯)

பருமணிசெறியிவ் விரங்குவெண்டரஙகப பாற்கடல்வட்டமும
தனுண், மருவியெஞ்ஞான்று மரிதுயிலமரு மாமணிவண்ணனுமவா
ணப, பொருவருமுழுவெண் மதியமுமதனுட் பொருந்தியகளங்கமு
மானும், பெருவளமபெருகு முலைசுமந்தொசியோர் பிடியிடைப்பிடிந
டைநோக்காய். (௨௦)

இத்தகுவளஙக ளிளையவளுணர வெடுத்தெடுத்தியம்பினன்
காட்டி, முத்தவெண்முறுவற் கூற்றெருடுமபொருத முடஙகல்விட்
டெழுதருதடங்க, ளுத்தமவினதை நின்றிடுகாலை யும்பாகோன்புர
விமேற்செலலு, மத்திறமுணர்ந்தவ் வினதைபின்னவளுக் கறையு
மப் புரவியின்வரவை. (௨௧)

முருந்திளமுறுவற் கனிபடிதுவாவாய் முகிழ்முலைத்தங்கைநீ
கேட்டி, மருந்துகொள்பாக்கு வானவாமேனள் வளைந்தசறிதாழியி
க்கடலாத், திருந்துவெண்மதியந் தறியெனநாட்டித் தின்வரைமத்
தெனக்கூட்டிப், பொருநதவாசுகியை நாணெனபூட்டிய பொங்குற
க்கடைந்தனர்மாதோ. (௨௨)

சடையிடைமதியந் தவழ்தரவைத்த தம்பிரானனுழைவாங்கா
து, கடைதலினாறுய்க் கொடுவிடந்தோன்றக் கண்டுமாலயன்முதல்
யாரு, மிடைதரவோடி வெள்ளிவேதண்ட மேவினர்பணிந்திரத்த
லினவ், விடையிருந்தேயப் பரனழைத்தொருகை யேந்தியவ்விடத்
தினையயின்றான். (௨௩)

அழைத்துவெவ்விடத்தை யமுதுசெய்ததுகண் டரகரவென்ற டிபணிந்து, பிழைத்தனமபிழைத்தே மென்றரியயன்முற் பிறஙகு வானவரெலாம்பெருமான், றழைத்தபேரனுளை கொண்டனாமீண் டு தண்கடன்மதித்திடவுதித்த, விழைத்தடமுலைமா வொடுகவுத்து வமு மிணாத்துழாய்மாலையன்கொண்டான். (உச)

மிருசுவையமுதம் விண்ணவாகொண்டார வெறுமையையடை ந்தனரசுரர், தொகுமலாத்துணாதநேக கற்பகத்தருவுந் தூயதேனு வுஞ்செழுநிதியு, ரகுமருபபொருகான் குடையகுஞ்சரமு நண்ணலா துண்ணெனத்தாவிச, செகுதிறனமிக்கு விளஙகுமிவ்வுசசைச் சிரவ மூமிந்திரன்பெற்றன. (உரு)

ஞாலமேற்புரவி பலவுளவிதுபோ லொடினுமொருமறுவின்றிக்
கோலமாமேனி முழுவதுமவிளாத்த குணததுகண்டதுமுண்டோ
சாலநீநோக்கா யிபபரிகருரியா டடமுலைகொடியபிராணி
யாலவடிருவே திருவெனவுரைத்தா ளன்புருவாகியவினதை. (உசு)

புள்ளவாமன்னை யுரைக்கவஞ்சனையிற் புகலுவள்கத்துருவெ ன்பா, லுள்ளதேயுரைத்தா யாயினுமபடிறென் றுளதாலதனிடை யந்தோ, வள்ளவாய்மலரோன் மகன்வயிற்பிறந்துவந்து காசிபன்ம னையாய, கள்ளமொன்றறியா ணமிதுபேசக கற்றதெங்கோகொடிதெ ன்றாள். (உஎ)

பங்கமில்வினதை யெஙகையேயுண்மை பகர்ந்தனன்பொய்யிலை யென்றூ, டுஙகமாதருநீ தவ்வையாதலினின் சொலலெலாமெய்மை யேபுரவி,யஙகமவெண்ணிறமவான் மாத்திரங்கறுபபென றறிநதிலை போலுமவாள்விழியிற், றிஙகள்வாண்முகத்தாய பொருந்துறநோக்கி த் தெரிநதுபின்பகரொனறு ளிளையாள். (உஅ)

கருநிறமவான்மற் றுடலெலாமவெண்மை கலந்ததிபபரிக்கெனவி சைத்தாய், திருவனுய்முழுதும வெண்மையேயிதனைத் தேர்ந்துபின் னுாையென்றுளவினதை, மருமலர்க்கூந்தலிளையளுமென்சொல் வாய்மையே கருமைவாலொழிந்த, பெருவடிவனைத்தும வெண்மை யேயென்றாள் பெரிதழுண்டதுபெருங்கலாமே. (உகூ)

- தவ்வையிப்பரிவால் வெண்மையேயென்று டங்கைமற்றதுகறு ப்பென்றாள், செவ்வையென்மொழியே மெய்யென்றுண்முன்னு டிரு ந்துமென்மாற்றமே மெய்மை, கொவ்வையங்கனிவா யெம்பெருமாட்

டி குறித்துணரொனறன ளிளையா, ளவ்வயினிவ்வா றிருவருங்கலாய்
த்தாரறைதரு சமையவாதிகள்போல். (௩௦)

ஒருவருக்கொருவ ரிவவணங்கலாயத்தே யுறுபெருஞ்சினந்தனைக்
கொண்டு,பெருகுறுவசைசசொற் களுமபலவாகப பேசிவஞ்சினஞ்செ
யத்துணிநதா, பொருவறுதவத்தாற் கலவியாறபொறையாற் புகழி
னுற்றனககிணையிலலா, வருமைசானமுனிகா சிபனமனேவியரா யமை
ந்தமறறிவரிருவோரும். (௩௧)

மிககவென்னுரைமெய் யாயிடினிளையாள வினதையென்றுகு
வையெனறு,டககவெனனுரைமெய யாயிடிவமூததா டஙகையென்
னுகுவையென்றுள,புககவாமபரியின் வாலவிளாடபென்னிற் பொருந்
துமென்வாழுநாளளவுந, தொககநின்பணிசெ யடிமையாகுவலிச கூ
டவறேன்றவஞணே. (௩௨)

என்றனளெஞசம வஞ்சமவைத்திளையா ளெயிற்றருமபிலஙகுற
நக்கு, மன்றலஙகுழலாய தெயவதபபுரவி வானிறஞ்சிறுகறுபபெனி
னு,மொனறநின்னடிமை யாயபணிபுரிவே னுரைததவஞ்சினந்தவ
றேனயா,னின்றவெனமகிழ்ந ளுணேயெனறுரைததா ணிகரறுகுண
பபெருவினதை. (௩௩)

வஞ்சினமிவவா றியற்றினரிளையாள் வானிறமவானிறமென்ற
வெஞ்சினவினதா யறியலாமபரிசேல விணபுகூஉ வருதியென்றுரை
த்தா, ளெஞ்சிலவஞ்சிலலா வினதைநீராடி ஙியதிநீததிற்புகுந தீர
ந், துஞ்சியவுடைசூழ்ந தடைவனீஙகென்று சொற்றனளபோயின
ண் மாதோ, (௩௪)

மூன்னவளாய கன்னலஙகுதலே மொழியினுள் போயினபின்பு,
பன்னருஙகொடிய பழுவினேத்தொடாபாற் பாவைசத்துருவெனும்
கொடியா,ளுன்னருமவஞ்சம புரிவதறகெண்ணி யுரகமாகியமக வெல்
லா, மின்னினிவருக வென்றுகூயினளவந் திறுத்தனவன்னேபால்
யாவும். (௩௫)

வேறு

அரவமயாவு மணேந்தடிதாழ்ந்துபூங
குரவவாாகுழற் கோற்றொடியன்னேநீ
பரிவினெம்மை யழைத்தபணியெவன்
விரைவிநேதுநி யென்றுவிளம்பின. (௩௬)

உரகமின்ன வுரைக்கவுவந்துதிக்
கரவுமேவுளக் கத்துருவோதுவாள்
பரவுந்தந்தையைப பாவிமுன்றனைத்
தரணியோரகத் தன்வசமாககினாள். (௩௭)

எனையுமெண்ணல ளெண்ணருநும்வலி
தனையுமெண்ணல டன்றொழிலாலவரும
வினையுமெண்ணலள் வெய்யவினைதையா
ணினைவுகூரவி தாரிடைக்கூறுகேன். (௩௮)

சீற்றமோவு செழுந்தவனெனனொடு
மாற்றமொன்று சொலற்குமனமபொரு
ட்டேற்றமிக்க சிறுமையுண்டாககியென்
றாற்றந்தீரக் கொடுமைநடாத்துவாள். (௩௯)

கணவன்மாற்றவள கைவசபபட்டதாற்
புணருமெய்பபரம் போககததுணிந்தன
னுணர்விலமிக்கமக் காளுமைநோககியே
தணவுறுதுயிர்தாஙகி யிருககின்றேன். (௪௦)

அனையளோடிங் கணைந்தனனிற்றைநாள்
புனையுந்தெய்வப புரவியைக்கண்டன
ணினையுமவாலவிளர்ப பென்றுநிகழ்த்தினாள்
வினையள்யான்கறுப பென்றுவிளமபினேன். (௪௧)

காரிவாமபரிவால கறுபபென்னிலயான்
சீரினின்பணி செய்வலென்றாளவண்
மூரிவால்விளர்பபென்னிலுன் மொய்தொழி
ஞாரியாவலென்றியானுநவிற்றினென. (௪௨)

ஆதலாலிங கவள்வருமுன்னநீர்
மாதர்வாமபரி வாலசறுபபாயிடப
போதந்தாலம்புகுத்திற் புழுங்குமென்
னேதந்தீருமொன் றின்னமுங்கேட்டிரால் (௪௩)

பணியெல்லாந்தொழப பாக்கியஞ்செய்துளேன்
பணியெலாம்புனை பாவைவினைதைவாய்ப்
பணியெலாஞ்செவி யேற்றுப்பைதத்தவள்
பணியெலாஞ்செய் தனர்ப்படுவேன்கொலோ. (௪௪)

தாயாசொற்ற பணிதலைத்தாங்கியே
பாயநேயத் தொடுமைபரிந்தாற்றுதற்
காயவச்சுத ரசசுதரன்பினா
தூயாநலலா சுகுணனொனுமறை. (௬௫)

நலகுதாய்சொல வழிநடவாதவ
ரலகுநாய்வயிற் றுருவாமுத்தர
மலகுநிமைமி லேசசருமவாயநிண ம
பிலகுவேடரு மாவரப்பேயரின் (௬௬)

ஓதிமேன்மையுற் றூடபிழைத்தோருமாயத
நீதிவாநத நரகமெலலாந்திளைத
தேதியஙகி யினைப்பொனபசொலு
மாதிநூலென் றறைநதனளகத்துரு. (௬௭)

அலலவாஙகுழ லாளுரைகண்வழிச
செலலவோாந்த வுரகஙகளசெப்புறு
மலலலசாரு மனத்தெனனினைததனை
நலலதோவிது நாடுியினன்னையே. (௬௮)

பெரியதாயவள பெற்றவணிவினை
யிரியவெண்ணூறு நீவிரிருவரு
மரியக்ாசிபன் பன்னியராயிலயாந
தெரியவேற்றுமை யல்வழியேசெலவோம. (௬௯)

நன்றுநீசொலிற் செய்துநலமிலா
தொன்றுசொலலினுஞ் செயயலமுனனினு
மெனறுநலலண்முன ஞயெனநிசைத்தன
கன்றுசீற்றக்கடுவுடைய பாந்தள்கள். (௭௦)

வேறு.

இவவாறர வஙகளியமபியதற்
கொவ்வாமொழி யொண்செவியிற்புகவுஞ்
செவ்வாய்வினதைக் கிளையாள்சினவா
வெவவாயின்விளம்பின் ளின்னவையே. (௭௧)

மன்றுயுரை நீவிர்மறுத்தெதிரோ
மூன்றுயை நயந்துமொழிந்தமையா
லின்றுதிநு மெண்குலமன்னைகளே
கொன்றுவி குறைக்கநசித்திடுக. (௭௨)

அல்லாதுமையா ரெதிர்நோக்குறினும்
பொல்லாதுபுடைத்துவருத்திடுக
வல்லார்சொன் மனுத்தடையுண்டுழல்க
வொல்லாவரு ருற்றெனவைதனளே. (ருட)

ரர்க்கோட விடைக்கடையின் றியிரு
வார்க்கோடவை யென்னமதாத்தமுலே
நீர்க்கோடது நோகளநேரிழைதாள
கார்க்கோடகனுட் கனிவிற்றெழுதே. (ருச)

தாயுன்சரணரு சரணந்தமியேன்
வீயுந்திற மேவமுனிந்தருளே
லாயும்பரிவா லடருங்கருமை
யேயுமபரிசின னினியேபுரிவல. (ருரு)

வேறு.

வெண்மைகருமை யாமாறு செய்தலரிதோ மிககருணைத்
தண்மையுடையா யிவணுறைதி சற்றியானீ சொற்றபடி
யுண்மையியற்றி வருகுவலென் றேடிபபரிவா லுறக்கடித்துத
திண்மைவிடமூட் டுபுகருமை செய்துமீண்ட தபபாந்தள். (ருசு)

வந்தபாந்தள் வலிநோசகி மகிழ்ந்துநாளு மெனககடிமை
சந்தவினதை யாயினண்மற் றவள்சேயபிடரின் றலையிவாங்து
நந்தநெடுவான புவிமுழுது நடத்தித்திரிதி மதலாயென்
றந்தண்மொழிகள் பலபேசி யிருந்தாணின்ற வருமபழியாள். (ருஎ)

ஆயகாலை வினதையுமவந தடைந்தாளிளையா ளொடுமடைந்து
மாயனிறம்வண் பாற்கடலே மதியாமுன்னங கண்டவாகள்
பாயவிடந்தோன் றியபினனும பாாத்தாலென்னப் பரிநெடுவாற்
றாயவெண்மை கருமையாய்த் தோன்றக்கண்டா டியர்கண்டாள். ()

பந்தோபொன்னங் குடமோவென் றுரைக்கபபணைத்த படாமுலேயா,ளந்தோவிதியை யார்வெல்வா ராகெட்டேனென் றங்கைநெரித், திந்தோவெனுநன் னுதலிளையா யிகலவாதுரையேன் முன்னென்று, முந்தோதினாசொன் மறந்திதனே முடித்துக்கொண்டேன் முடிவறியேன். (ருகூ)

மாதேயென்சொன் முழுப்படிறே மற்றுன்மொழியே மெய்யிதற்குத், தீதேயிலேயான் முன்செய்வினைத் திறமிபபரியா யெதிர்வந்த,

நீதேமுறைமை யருஙகொடுஞ்சூ ளிசைத்தேனென் றுந் தவறேனிப்
போதேயடிமை நினக்கானேன் புரிகின்றேனின் பணியனைத்தும. ()

என்றவினதை வஞ்சிக்க விளையாளிளையாள் பணிபுரியா
நின்றவளவிற் கொடுஙகார்க்கோ டகனிள்கருடன் மிதேறிக்
குன்றுஙகானுங கடற்கரையுங குளிரவானகமும் பாதலமுஞ்
சென்றுதிரிய நடத்துமவா செல்லலசொலல வல்லரொவா. (சுக)

முன்னாளிவளென் றாளந்தமையாண் முடியும்பழியாய்ப பின்ன ரிதென, றுன்னாளபணிகொண் டுறுகளிதன் முலைபோலவீங்கி யெ ழுவுறைவாள, பின்னாளவள்சொல் பணியெல்லாம் பிழைபடாம லிய ற்றியற, மன்னுண்மேனி தனதிடைபோ லருகவருந்தற் றெழுகு வாள். (சுஉ)

தேன்றாழ்கமலப் பொகுட்டுறையுந் தேவன்மதலை பாற்றோன்றிச்
சான்றார்புகழுங காசிபமா முனிவனமனைவி யாய்த்தன்னை
யீன்றாளடையுந் துயாநோக்கி யிரங்கியேஙகி மெலிந்துயிர்பபுங்
கான்றாகுலமுற் றுடைந்தசிறைக் கருடன்சிறைதீரத் திடககருதி. ()

சிற்றாயடிகள் வணங்கியிரு சிறைகொளெளையீன் றெடுத்தவொரு
நற்றாய்சிறைவிட் டருளுதியென் றழுதுவேண்ட நயந்தென்பா
லுற்றாய்சுதையென் மககளுண்ண வுதவிலவிடுவ லென்றனளன்
பற்*றாய்புரிந்த கொடியாணமற் றதுகேட்டெழுந்தா னடற்கலுழன்.

தூயதிருபபாற் கடலடைந்தான் சுதைசூழ்தருநீச † சோவழியப்
பாயசிறைக்காற் றுற்புணரிப் பான்மேலெழுபபி யுள்புக்கான்
மேயபலகா வலருமவண் வெகுண்டாரொந்நொந்தா ரவாவலிமை
யோயவடாத்தா னுண்ணடுங்கி யோட்டட்டொருமாயனுக்குரைப்பார்

வேறு.

ஐயமாமேரு விருசிறைபடைத்தங கடைந்தெனவடைந்தன னொருவன், மெய்யவனெறுமெம் போலியரொடுத்து விளம்பரிதமிர் தினைச் சூழ்ந்த, செய்யசோவழலைச் சிறைவளிகொடுமேற் றெண்டி ரையெழுபபு நுதுத்தவ், வெய்யவனெம்மை யடர்த்தனன்பொருத மிடுக்கின் றிறன்புடை வந்தேம. (சுசு)

என்றலுஞ்சினமீக் கொண்டுநாற்படையு மெழுகவென் றைம்ப டையேந்தி, மன்றலஞ்சுவைதநே றொழுகுபைந்துளப மாலிகைதா ழ்தரு நீலக், குன்றநேர்புயத்து மாயவனெதிர்ந்தான் கொதிகொதி

* ஆய்-வருத்தம். † சோ-மதில்.

தெழுந்தவன் படைகள், வென்றசீர்ப்பறவை வேந்தனைவளைந்து மிக்கபோர்புரிந்தன மாதோ. (சுஎ)

படைபலசூழ்ந்து பொருவதுதெரிந்து பரிதிதோவலவனுக் கிளவன், மிடைதரவிருகா ணகங்களிற்கோத்து வீசியும்விரிந்தவெண் டிசைதோ, றடைதரவாயாற் கவ்விவிட்டெறிந்து மண்டமெல்லாநிலை குலையப்புடையிருசிறைக்காற் றெறிந்து ‡ துய்யென்னப போக்கியுந்தொலைத்தனன் மாதோ. (சுஅ)

மண்ணிடைக்கிடக்கும வாரியின்மிதகரும் வரையிடைவீழ்ந்துட லுடையும், விண்ணிடைபபதியுந திககிடைச்செறியும் வேலினுங்கூருகிர் பாய்ந்த, புண்ணிடைபபொழிநெய்த் தோரிடைமுழுகும புகலிடமெங்கெனச் சுழலும, கண்ணிடைபபுகுதற் கிடமறமிடைந்த கரியமால்படைபொரும புள்ளால, (சுகூ)

மாப்படையுடைந்த தன்மையுஙகலுழன் வன்மையுநோக்கிய மாயோன், சேபபடைவிழியிற் சிதர்தரப்புலிஙகஞ் சினந்துமாமேருவுங் குலுங்க, நாபபடைக்கடவு ளியற்றியவாறு நாலைசூழ்தருபெரும் புவியும், பாபபடையுலகு நடுஙகவூதினன்செம் பவளவாய வெள்வளைவைத்து. (எ0)

மாயவன்சங்க முழக்கொலிகேட்டு வாயொலியெழுப்பினான் கலுழ, னுயபல்வரையுஞ் சிதர்ந்தனவதிர்ந்த வமராதமபதமெலா முதிாந்த, காயவொள்ளுடுக்கள் விண்டதுபுவியுங கற்பத்தின்முடிவுகொலென்று, பாயபலவுயிரு மொடுஙகினவமமா பறவைவேநதெனுமையென் னுரைக்கேன், (எக)

கார்முகங்கோட்டிக் கடிதுநாண்பூட்டிக் கைவிரற்கோதையு மாட்டிப், பார்முகஙகிழியக் குணத்தொனியோட்டிய பற்பலவாகணை கூட்டிப, போாமுகமபொலியு நாரணனெய்தான பொருசிறகடித்தொலி யெழுபபிக், கூர்முகஙகொடுசாா வண்டெலாமறியக் கொடுஙகங்கொடுபிளந் தெறிந்தான். (எஉ)

வில்லினால்வேற லரிதெனநினைந்து வெண்ணகைக்கருங்குழற் செவ்வாய்க், கல்லினலொளிரும பொற்பணிசுமந்த கதிர்முலைததிருவுறை மார்பன், மல்லினலுயாந்த தண்டினைசசுழற்றி வானமுநடுஙகுற வெறிந்தா, னெலலினன்மிக்கான் கால்களிற்பற்றி யிறுத்தனன் கறித்தது தன்னை. (எங)

‡ துய்-பஞ்சின் நுனி.

நன்றிவன்வலிமை யென்றுளத்துணர்ந்து நாரணன்கூரணிவி
யவா, டன்றிருத்தடங்கை பற்றினன்வீசத் தாய்ப்பறந்தொலித்து
வான்பறவை, வன்றிறல்வேந்தன் றுள்ளிமேலெழுந்த வான்கயல்வ
வ்வுதல்போல, வென்றிகொள்வாளைக் கால்களின்வவ்வி விண்ணவர்
வெருவுற வெறிந்தான். (௭௪)

திருமகண்முலைக்கோ டுழுதுழுதுழக்கத் தேம்பொழிதிருத்து
ழாய்மார்பன், றிருகுவெஞ்சிற்றந் தலைகொளவலைக்குந் திகிரியைச்
சுழற்றுபுவிட்டான். கருகிருட்பகையைச் செந்நிறப்பாந்தள் கவ்விய
தெனவலியசுரர், கருதுதோறஞ்சத் திகிரியைவாயிற் கவ்வினன்மத
னுடைக் கலுழன். (௭௫)

பன்னகவணைமேற் பங்கயம்பூத்த பச்சைமால்வரையெனக் கிட
ந்து, கன்னலங்குதலைத் திருமகளிருகை கழல்கடைவரவிழிவளர்
வோன்,பொன்னகுவரைநேர் மேனிகொளிவனைப் பொருதுவெல்லு
தலரிதென்று, முன்னும்வஞ்சனையால் வெல்வதற்கெண்ணி மொழிந்
தனன்பவளவாய் மலர்ந்து. (௭௬)

நின்பெருவன்மை நோக்கினமகிழ்ந்தே நீயெனினக்குவே
ண்டியதெ, னன்பொடுதருது முரைத்தியென்றுரைத்தா னரவணை
மேற்றுயிலண்ணன், மன்பெருந்தவத்துக் காசிபமுனிவன் மைந்த
னென்றூழுடைவலவன், றன்பெருந்தம்பி யெனவுடைப்பெயருஞ்
சாற்றுவர்கருடனென் றியாரும். (௭௭)

படைபலசுமந்தென் னெடுநனிபொருது பண்ணவரறிதரும் ப
டிதோற், றுடையநின்னிடையான் பெறத்தகுங்கருமமொன்றுமின்
றுணர்திநீயாவ, னடைதரவுனக்கென் வேண்டுவதுரைத்தி யருளு
வனென்றனனகருடன், மிடைமதுகரங்க ளடைகிடந்துறநறு மெ
ன்றுழாயவனமகிழ்ந் துரைப்பான். (௭௮)

மலைமகள்பாகங் கொண்டமாதேவன் மன்னருளாலுலகனை
த்து, நிலைபெறப்புரக்குங் கடவுள்யானுணர்தி நின்னுரைவாய்மையே
யென்னி, லலைவறவிவர்ந்தியா னடைவுதற்கென்று மமைதருமூர்தி
யாகென்றான், முலைசுமந்திளைக்கு மிடையுடைக்கமல முற்றிழையு
றைதருமார்பன். (௭௯)

ககவிறைகேட்டுக் கலங்கிமூர்ச்சித்துக் கருத்தினுளொருவகை
தெளிந்து, தகவுரைத்திலைநீ வஞ்சிக்கும்விதத்தென் றுய்க்கிளையவ

ளினுஞ்சிறந்தாய,சகாகவுரைத்த மொழிதவருக்கிச் சாற்றருங்கொடு
நரகமுந்தே, னகமகிழ்தரநீ யுரைத்தவாறேயா னுயினனென்றனன்
மாதோ. (அ0)

தாரியனறிய தண்டுழாய்மார்பன் ருர்க்கியன்றுதுகுதை வந்து [த
போரியல்வீர நின்னையொப்பவர்யார் பொன்மலையென்னவீங கடைந்
காரியமுரைத்தி யென்றலுங்கொடிய கத்துருவென்பவள்செய்த
சிரியவல்லாத் தொழிலெலாமுரைத்தான் றிருமறுமார்பனுங கேட்டு.

அன்னதேற்கலுழ வமுதகுமபங்கொண் டவண்மரீஇத்தருப்
பையில்வைத்தி, பன்னருமபுகழ்த்தாய் சிறையினைமீட்டி பன்னகம்ப
டர்செயாவாறு, முன்னருமவளஞ்சா லுறந்தைமூக்கீச முதல்வனை
யடைந்துபூசித்தி. மன்னுநல்வரமுங கோடிபின்பென்பால் வருதி
யென்றுரைத்தனன்மாயோன். (அ௨)

சிறைவலிக்கருடன் வாயினலமுதச் செழுங்குடங்கவ்விமேற்
பறந்தா, னறைமலர்க்கூந்தற் கொடியசிற்றன்னை யைந்துறைதருமிட
ம்புக்கான், மறையவோரிடம்வை யென்றவளுரைபப வனபபெருந்
தருப்பைமேலவைத்தான: முறைமையினவள்சொற் படிநிறைகுண
த்துமோய்படாச் சிறையினைமீட்டான். (அ௩)

மறைபுகழுறந்தை மாநகரடைந்து வளவியசிவதடம் படிந்து, நி
றைதருமன்பிற் டஞ்சவர்னேச நிமலனையவனிடம பிரியா, துறைத
ருகாந்தி மதிப்பராபரையை யுவந்துபூசித்தனன் வேண்டக், கறைமி
டற்றண்ண லவனெதிர்தோன்றிக் கருதியதெவனென வினவி. ()

கருடநின்னொலிகேட் டினுநினதுருவங் காணினுநின்னுடை
நாமம், தெருடருமொருவா சொல்லினும்பாந்தள் சிதைதருமெனச்
சொலி மறைந்தா,னருடருமவள்ள லாயிடைநின்று மன்னைபாற்ருர்க்
கிய னடைந்தான், மருடருமனத்துக் கத்துருவென்பாண மகவெலா
நகூயிஃ துரைக்கும். (அ௫)

சுவைபடுசுதைபைந் தருப்பைமேல்வைத்தான் றெருகுவலியுறை
சிறைக்கலுழ, னவையறநீவி ருண்மினெனறுரைத்தா னன்றென
வரவெலா மாங்குச், செவையுறபபடரா முனஙகவர்ந்தெடுத்துத் தி
ருமறுமார்பன்வெண் டாளக், குவைகொள்பாற்புணரி வைத்தனன்
முன்போற் கோட்டைமுற்காவலு மமைத்தான். (அ௬)

சென்றராவனைத்துந் தருப்பையுண்டித் தெள்ளமுதிலாமையா
ன் வெள்கி, யொன்றவத்தருப்பைப் புல்லினைநக்கி யொல்லைநாவிருபி

ளப் புற்று, வென்றசீர்க்கருடன் வஞ்சமென்றவன்மேல் வெகுண்டெழுந்தவனுரு நோக்கி, மன்றவுள்ளச்சங் கொண்டுமீண்டோடி மறைந்தனனிறைந்ததுன படைந்தே. (அஎ)

குணமிகுவினதை காசிபமுனியைக் கூடிவாழ்ந்திருந்தனண் முன்போன், மணமலிபுகழும் முனிவனுங்கலுழ னைமந்தனைத்தழுவியுள்ளுவந்தா, னிணமிருந்தொழுக நிலவுவேலனுக்கு நெடியகட்கத்துரு வென்பாள், பணவரவுறுதுன புணர்ந்தழுககாறு பறவைவேந்திடைக்கொளீஇ யிருந்தாள். (அஅ)

கொடியவண்மேனி யாகியதடியிற் கொதிகொதித்தெழுமன வஞ்சம், படிதரவமைதத ஞான்றுவெங்குருநோய்ப படாகொடியாயதங் குரித்து, நெடியவாமபரியின் வாலகறுபபென்று நிகழ்த்தியஞான்றுறப் படாந்து, கடியவாளரவின் விடங்கொடுகருமை கற்பித்தஞான்றினி தருமபி. (அகூ)

நலமிகுவினதை பணிசெயபபெற்ற ஞான்றுபோதாகியவ் வினதை, குலமகன்வன்மை தெரிநதழுக்காறு நொண்டஞான்றேமலர்ந்தலைதம, மலாவழிமதுபபோ லிரத்தமுஞ்சியும வழிந்தனநுகரமொய் வண்டிற், பலவுமீமொய்த்த வெறுபபநாறியதப பாவைதன்றுயாக்கள வின்றே. (கூ0)

வேறு.

முற்றுமுலேக்கத் துருமடந்தை மூநுக்குங்குருநோய்க் கோட்படலு, மூற்றூவெறுத்தா நட்பினரு ளொருவரோனு மாஙகடையார், சற்றுகிலுமைங் தாகஞேக்கா சலித்தாரதோழி யருந்தவத்தாற், பெற்றூர்களுமெண் ணுதலொழிந்தார் பிரியமான்றூன் காசிபனும், ()

காம்பாரபசுந்தோட் பாங்கியர்கள் கைவிஞெளிரபொற் கலமேந்தி
யோம்பாதொழித லறமன்றென் ஞெளிரவான்மூர லிணிதிட்டுத்
தீம்பானிறைய வாரத்தயிருஞ செறித்துத்திரட்டி யெடுத்துநெடும்
பாம்பாயுண்க மாவென்று பரிந்தூட்டினுமுள் வெறுத்தழுவாள். ()

பூவைமுனிந்தாள் குழற்கணியும் பூவைமுனிந்தாள் வெண்டாளக், கோவைமுனிந்தாண் மையெழுதுங் கோலைமுனிந்தாள் விளையாடுங், காவைமுனிந்தாள் பாலடிசிற் கலத்தைமுனிந்தா ளினிதுளைப்பார், நாவைமுனிந்தா ணல்லொழுக்க நாளுமுனியான் மனையாட்டி. (கூக)

வினையோகொடிது கொடிதென்னும் வினைக்கேயோ கடிதென்னு, மனையோவெறுப்புற் றுளென்னு மாசொன்றுகம்பார்ப் பாரென்னு,மெனையோவருத்து மிதுவென்னு மென்னேனுவுயிர்தீர்ந் திலதென்னு, நனையோடலர்சேர் குழல்வினதை நகைப்பணைகைப்பனேயென்னும். (கூச)

இன்னுடன்மையிதுவாக விரக்கமொழிகார்க் கோடகனு
மூன்றுதேபெற் றவண்மொழிகேட் டுயர்தாய்க்கிழைத்த தீமையினு
மூன்னுகாரஞ்செல்லாது மூரிவலியு மொழிந்துபிணி [ன்
துன்றுநின்ற னிருவிழியுந் தொலைந்தான்போ லந்தகனுன்.(கூரு)

தூயருரைத்த படியொழுகிற் சுகமும்புகழு நனிமருவுந்
தீயருரைத்த படியொழுகிற் செறியுந்துயரும் பிணியுமுறும்
பாயவுலகி லெனபபெரியோர் பகர்தல்பொய்யோ பாரக்குங்காற்
றூயருரைகேட் டியற்றிடினுந் தக்கோர்பபிழைத்தல் வீண்படுமோ.()

ஆவாநின்சொற் படியொழுகு மடியேற் குற்றதிதுவென்று
தாவாவலிக்கார்க் கோடகன்மெய் தளாந்துநடுங்கி யொடுங்கியெனைக்
காவாயிதற்குத் தக்கதொரு கருமம்புரிந்தென் றுயடியின்
மேவாவிழுந்துபுரண் டழுதா னவளுநோக்கி வெய்துயிர்த்தாள்.(கூஎ)

மழைத்தண்கூந்தற் பாங்கியர்தம் வதனநோக்கி முனிவனையீங்
கழைத்துவாருமென்றேவ வவரும்விரைந்து போய்த்தொழுது
தழைத்தகருணையாயரவின் றுயகூவினணீ யெழுந்தருளென்
றிழைத்தவினிமை மொழிபேசி யிரப்பவவனு முடன்வந்தான்.(கூஅ)

வந்தமுனிகா சிபனடித்தா மரைமேல்விழுந்து மடமாது
கந்தமலர்மேல்வீற் றிருக்குங் கடவுளினுமேம் பாடுடையாய்
சந்தமகவைப் பாரெனது தன்மைபார்நின் னருட்கண்ணு
லிந்தவினைவந் தடைந்ததினி யென்செய்கேனென் றினைந்தழுதாள்.

மனைவிதுயரு மகன்றுயரு மருவுவிழிவெப் புறநோக்கிப
புனையிழாயிக்கொடியபிணி புகுதற் கேதுவாகியதீ
வினையென்னுரைத்தி யென்றறியான் போன்றுவினவ வினதைக்கு
நினையுந்தனக்கு நடந்தவெலா நிரம்பவுரைத்தா ணிசழ்கொடியாள். ()

கொடியாளுரைத்த மொழிசெவியிற் கொடியவேலிற் புகுதுதலு
முடியாநெடிய தவச்சிர்த்தி முனிவன்பாவி யென்செய்தாய்
மடியாவொழுக்க முடையாளை வஞ்சம்புரிந்து பன்னுளு
மடியாளாக்கி னுய்கெடுத்தா யந்தோவீன்ற மகவையுமே. (ககO)

வாமிக்குடைய பெருங்குணத்து வனசத்தலைவன் வாழ்ந்தவர்யார்
பரமற்கிழைத்த பிழையாம் பரவத்தகுவாக் கிழைத்தபிழை
கிரமத்தொழினீத் தவனிக்குக் கேடுநீயே சூழ்ந்தத்தனாற்
சாமப்படுவா யான்செய்யத் தகுவதென்னென் றான்முனிவன்.(௧௦௨)

முனிவிற்கடிந்து முனியுரைத்த மொழிகேட்டயர்ந்து மூச்செறியா
வினிமறவிதற்கென் செயகுவலென் றேங்கி யேங்கியழு திரங்கிக்
கனிவிற்சிறந்த குணக்குன்றே கருணைக்கடலே கற்பகமே [ல்.
புனிதத்தொடாபி லேன்புரிந்த பொல்லாங்கனைத்து மூளங்கொள்ளே

புன்மைச்சிறியோர் செய்தபிழை பொறுத்தல் பெரியோர்கடனன்றே
நன்மைத்தவத்தாய் நீயுமவெருண டிடருற்றேயற்கு நற்றுணையா
வன்மைத்திறங்குன் றியமதலை முகம்பாராதேனும வந்தயாத்
தன்மைத்திறந்தீர விடவருளாய சாமீ யெனறடி பணிந்தாள்.()

அடியிற்பணிந்த கொடியாளுக் கன்புகூர்ந்திக் கடியவினை
படியிற்சிறந்த தலஞ்சார்ந்து பரனைப்போற்றி யிறுமெனவெண் [க்
பொடியிற்பொலிந்த திருமேனிப் புங்கவசான்முனிவ னுளத்தெண்ணி
கொடியிற்றுவள்வாண் முகநோக்கி யிதுகேளென்று கூறுவான். ()

துன்றுநின்றகொடுவினைபோந் தூயதலமொன் றடைந்தமர
ருன்றுநின்றபெருமானைப் போற்றியினைவுண் மகிழ்ந்தேத்தி
மன்றுநிலத்துச் சிறந்ததல மிதுவென்றுரைப்பாய் மாக்கருணை[யான்
யென்றுயகனே யெனச்சிறுபோ தென்னைமுனிவன் றெளிந்துரைப

தடியிற்பசுநெற் கதிர்மேய்ந்து தண்ணங்கமலப் பூக்குதட்டி [ர்ச்
யடியிற்கருப்பங் காடுழக்கி யரம்பைக்குலமுங் குமைத்தெழுகா
செடியிற்பொலியு முதுமேதி தேமாநிழற்கண் றுெடுமுறங்கும்
படியிற்பொலியுஞ் சீர்நாடு பலரும்புகழு நீர்நாடு. (௧௦௭)

அந்நாட்டிற் சீருறையூர் யார்க்குமுளத்து நாருறையூர்
கந்தமலர்வேள் போருறையூர் கண்ணிற்கடங்கா வேருறையூர்
சந்தமனைமேற் காருறையூர் தடங்கடொறுநன் னீருறையூர்
பந்தமகல்சான் றோருறையூர் பலரும்புகழும் பேருறையூர். ()

அம்மாநகரிற் காந்திமதி யம்மையிடப்பால் வீற்றிருக்கும், பெம்மானொருமா னேந்தியகைப் பெருமான்றண்ணம் பிறையொடுவெம், பைம்மாசுணமுஞ் செறித்தசடைப் பரமன்பஞ்சவர்னேச, னெம்மாவுலகுந் தொழுதெழவீற் றிருக்குமெழின் * மாலூரநிழல். (௧௦௯)

* மாலூரம்-வில்வம்.

மாதேயனைய தலமடைந்து மதலைகார்க்கோ டகனெடுநீ
போதேய்சிவதீர்த் தம்படிந்து புகழ்மாலூரத் தருநிழல்வாழ்
தாதேய்கொன்றைச் சடையானைத் தாழ்ந்துபூசித் திடின்வினை
மீதேபிணிக்கு மருந்துபெறற் கரியகதியு மெய்துமால். [போ

வணிகனொருவ னீற்றையிகழ் மதத்தாற்பன்றி யுருவெடுத்துப்
பிணியுற்றுழன்றத் தலஞ்சூழ்ந்து பிறங்குசிவதீர்த் தம்படிந்து
தணிவில்வினைதீர்ந் துயர்கயிலை சார்ந்தான்விசுவா மித்திரனுந்
துணிவிற்போற்றி வசிட்டனிடா தொலைத்துவாழ்ந்தா னின்னுங்கேள்.

வார்ந்தசடைச்சீ ருதங்கமுனி மறைதேர்தருமத் தலத்தெல்லை
சார்ந்தபொழுதே பொலிவடைந்து தம்பிரானைப் பூசிக்க
நேர்ந்தபொழுதப் பெருமானு நிரம்புகால மைந்தினுமைந்
தார்ந்தவுருவங் கொடுநின்று னன்பிற்போற்றி யடிபணிந்தான்.

காலமைந்து மைந்துருவங் கொண்டகருத்தை விரித்துரைக்கிற்
சாலவியப்பா மம்முனியத் தலத்தேபூசித் திருக்கின்றான்
சீலமில்லா நின்மக்கள் செய்யுந்துயர நீங்கநெடு
மாலதுரையாற் கருடனுமத் தலத்தேயடைந்து வரம்பெற்றான்.

அன்னதலத்தை யடைந்தரனை யன்பிற்பூசி யென்றுமுனி
பன்னச்சிறிது பிணிவருத்தம் பாறப்பரன்பா னேசமிக
நன்னருரைக்கின் வியப்பாமென் றுரைத்தகாதை நற்றவத்தோர்
மன்னவிரித்து நின்றிருவாய் மலர்கவென்றாண் மனையாட்டி. ()

மனையாளுரைத்த மொழிகேட்டு வருத்தஞ்சிறிது தவிர்ந் தாளித், தனையாம்புகல வவள்கேட்ட கதையும்விரும்பிச் சாற் றுவமேல், வினையாவையுந்தீர்ந் துயர்வாளென் றெண்ணிமுனி வன் வேற்றடங்கட், புனையாயிழைகே ளெனமொழிவா னென் றுமொழிந்தான் புகழ்ச்சூதன். (கக௫)

கத்துருப்படல முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-எகூ௫.

---

## சூரவாதித்தப்படலம்.

நீண்டவனயனுந்தேட நின்றவன்மன்றுளாடுந்
தாண்டவன்செங்கணேற்றுச் சங்கரன்வெங்கணாகம்
பூண்டவனருளால்வானம் போர்த்தமண்ணொருகோலோச்சி
யாண்டவன்மேல்வேற்சூர வாதித்தன்காதைசொல்வாம். (க)

முலைசுமந்தொசிமருங்குன் முருக்கிதழ்முத்தமூரற்
கலைவளர்தருபேரல்குற் கத்துருமடந்தாய்நாளுந்
தலைமைசாலுறந்தைமேன்மை தன்னம்யாங்கூறசசற்றே
யலைசெயும்பிணியினீங்கி யாகுலவொழிவுமுற்றாய். (௨)

குணமதுகைவிடேலென் றுரைத்திடுகோளுட்கொண்டு
பணவரவணியுறந்தைப் பஞ்சவானேசனுடை
னுணர்தரநீவிழைந்த துரைப்பன்யானுறுதிபூண்டு
தணவறுமன்பிற்கேட்டி சன்மவெம்பிணியுந்தீரும். (௩)

பரசிவனுறந்தைமேய பஞ்சவர்னேசனுடல்
வரமிகுமன்பிற்கேடபோர நோக்குதிககிடத்தும்வந்து
விரவுறுபிணிமுன்னாய வனுமொனின்மெய்மையேயப்
புரவுசேர்தெய்வவாடல் போல்வதொன்றுண்டுகொல்லோ. (௪)

திருவுறுகருத்தர்கேடபர் சிவகதைதிருமுன்யாவு
மொருவுறுகருத்தர்கேளா ரிடித்திடிததுரைத்தபோது
மருவுமுற்றவமிலாமேல் வஞ்சனையின்றேயென்று
பொருவில்காசிபனென்றோதும புகழ்முனியுரைக்குமாலோ. ()

காமரம்வண்டுந்தேனுங் கள்ளுண்டுகளிததுபபாடும்
பூமரமிடைந்தசோலை புடைவளையுறையூர்மன்னன்
பாமரமுடையார்நெஞ்சப் படியெனககறுத்தகூந்தற்
றுமரம்பொருவைவேற்கட் டையலர்க்கனங்கனன்னான். (௬)

நிலவுமுன்னுள்ளவேந்தர் நடத்தியநீதியாவுங்
குலவவோருருக்கொண்டன்ன கொளகையான்குணத்தின்மிக்கா
கலவமாமயிலஞ்சாயற் கடிமணமடவாரல்லா [ன்
ரிலவவாயூறலசார்தற் கிடங்கொடாவெழிற்செவ்வாயான். (௭)

மருவலருடலம்போழ்ந்து வழுக்குவாயிடைப்பெய்தீரு
டுருவுபுகவர்ந்துமென்று சுவைக்கருந்தடிகுதட்டிப்
பெருகுநெய்த்தோருமாந்திப் பெரும்பசியடங்குறும
விருகடைவாயுநக்கு மிலங்கிலையலங்கல்வேலான். (௮)

நாரவாமுளத்தன்கேள்வி நன்றவாஞ்செவியனென்னார்
போரவாம்புயத்தனேற்போர் புகலவாங்கரத்தன்மிக்க
சீரவர்ந்தொழிலன்றெய்வச் செங்கதிர்மரபின்வந்தோன்
வீரவாதித்தனென்னு மியற்பெயர்பூண்டவேந்தன். (௯)

வளவர்தங்குலவிசேட மணியெனவிளங்குமன்று
னளவறுமுயிர்கள்யாவு மகங்களிப்பப்பவானத்
துளவமரருங்கொண்டாட வுலகெலாமொருகோலோச்சிப்
பளகிலவெண்குடைநிழற்றிப் பண்பரசளிக்குநாளில். (௧௦)

பல்லியமுகிலினார்ப்பப் பார்த்திபர்பலரும்போர்ப்ப
வ லிநுண்ணிடையாராட வந்தியர்புகழ்ந்துபாடக்
கொல்லியலெழுந்தகூற்றிற் குஞ்சரமாதிமொய்ப்பச்
சில்லியந்தடந்தேரூர்ந்து திருவுலாப்போந்தானோர்நாள். (௧௧)

திருவுலாப்புறம்போகின்ற சென்னியர்சிகாமணிக்கு
மருவுலாநுண்பூவில்வ வனத்தமர்முக்கண்மூர்த்தி
தருவுலாமலையதானத் தவாவலியுணர்த்தவெண்ணிக்
குருவுலாஞ்சூட்டுமுட்டாட் கோழிமேற்கடைக்கண்வைத்தான்.

மலர்மகனாதியோரும் பெறுவதற்கரியவள்ள
லலருட்கடைக்கணோக்க மடிப்படைப்புண்மேற்செல்லக்
குலவுமெய்வலிபெற்றம்மா குளிர்விசும்புடையக்கூவிக்
கலவுமொய்ச்சிறகடித்துக் கடுந்துமேற்பறந்ததன்றே. (௧௩)

கவிரலர்ச்சூட்டுமுட்டாட் குக்குடச்சிறைவன்காற்றூற்
புவிமிடைதருவின்கோடும் புலவர்கணொருங்கும்வானத்
தவிருமைந்தருவின்கோடு முறிந்தனமலைந்தமுத்தங்
குவிதடங்கடல்கள்பற்ப லுயிரொலாங்குலைந்துவீழ்ந்த. (௧௪)

இக்கொருசிலையாற்காய்ந்தா னிளையசேய்வேலிற்போழ்ந்த
கொக்கொருகூறேயாய கோழிகொல்லோவிதென்று
திக்கொருங்குந்திகைத்த தேவருமருண்டாரச்ச
மிக்கொருமன்னன்சேனை வெள்ளமுங்கலங்கிற்றம்மா. (௧௫)

சிறையடித்தெழுந்தகோழிச் சேவல்செம்பியர்தங்கோமா
னிறைமதக்கலுழிச்செங்க ணிமிரும்வெஞ்சினமால்யானைப்
பிறைசெறித்தனையகோடு பிளவுறமுகமுள்ளூன்றுங்
கறையெழமத்தகத்திற் கால்வசிமுள்ளாற்கீறும். (௧௬)

முறம்புரைசெவியைக்கூர்வாய் முள்ளினாற்பற்றிவெந்தீ
மறம்படுகளிநல்யானை வாய்திறந்தரற்றவீர்த்துப்
பறந்திடுந்திக்கைகீளப் பருவலிக்காலாலெற்றுஞ்
சிறந்தவாளரிமேற்பாய்ந்த சரபம்போற்சினந்துபாயும். (௧௭)

சூட்டுவாரணமிவ்வாறு போர்செயத்துணுக்குற்றஞ்சிக்
கோட்டுவாரணம்வாய்விட்டுக் குளிறியோடியதுமீன
நாட்டுவாரணஞ்சூழ்வைய நடுங்கியதொடுங்கிக்கூனல்
காட்டுவாரணங்கையேந்துங் கடவுணோர்வளவன்கண்டான். ()

என்னவற்புதமிகோழி யெறுழெனவெண்ணுங்காலை
மன்னவர்மன்னகேணின் மாநகரொருசாருள்ள
பன்னரும்புகழ்சால்வில்வ வனத்துறைபரமனிந்தத்
தொன்னகர்மேன்மைதோன்றத் தோற்றியவாடலீதால். (க௯)

குலவுமிந்நகரின்றூதி கோழிமாநகரமென்றேர்
நிலவுபேர்புனைகளீயு நெடியமாலூரகானத
திலகுமாதேவற்போற்றித் திருவருளெய்திவாழ்தி
யுலகுகொண்டாடவென்றூங் குதித்ததாகாயவாக்கு. (உ0)

காயவாகுணர்ந்துசென்னி சென்னிமேற்கரங்கள்கூப்பிப்
பாயசீர்வில்வகான மெங்கெனப்பரிந்துதேடித்
தூயமற்றதனைக்கண்டான் சுடர்மணிமுடிமண்டோய
நேயமாரன்பிற்றாழ்ந்து நிறைமகிழ்பூத்தெழுந்தான். (உக)

வல்லியமுயர்த்தகோனவ் வளவனமபுகுந்துபார்த்தா
னல்லியங்கோதைபாக னருட்குறியாங்குககாணு
னெல்லியன்மோலிததேவ ரிறைஞ்சியேத்தெடுகுமார்ப்பு
நல்லியன்மறைகளவாழ்த்து முழக்குநன்செவியிறகேட்டான். ()

மறைமுதலமரரோத்தும் வாழ்த்தொலிசெவியிற்கேட்டு
நிறையருட்குறிகாணுத கவலையானெஞ்சமுங்கி
நறையொழுகார்த்தார்வேந்த னவணின்றுநாளுந்தானன்
குறைதருகோயிலபுக்கா னுறுசுவையுணவுநீந்தான். (உ௩)

தரைமிசைத்தனிகிடந்தான சிறுதுயில்சற்றுமேவ
விரைகமழ்கொன்றைமாலை மிலைந்தசெவ்வேணியையர்
புரையறுமறையோர்கோலப் பொலிவொடுகனவிற்றோன்றிக்
குரைகடல்வையமாளுங் கோமகன்முன்னாநின்று. (உச)

மன்னவர்மன்னகேட்டி வளமலிவில்வகானத்
துன்னரும்பற்பல்கால முறைகின்றமுருத்தோற்றம
னன்னர்வானவர்கண்மட்டு நாளுநகண்டேத்தியுய்வார்
பின்னர்யாவருங்கண்டேத்தப் பேரருட்குறியின்வாழ்வேம். ()

அத்தகுகாலத்தாகு மாலயமுதலியாவுஞ்
சித்தமாழாந்துசோரோ லெனத்திருவாய்மலர்ந்து
சுத்தமெய்யுருக்கரந்தார் துணுக்கெனவிழித்துணர்ந்தான்
வித்தகராருளிச்செய்த மந்தணம்வியந்துவேந்தன். (உசு)

ஒருசிறுதுரும்பான்மாயோ ளெண்மலர்த்தவிசின்மேலோன்
மருவுடல்விழியாளுதி வானவர்வலிமைமாற்றும்
பொருவிலிகோழியொன்றுற் புகர்முகபபுழைக்கையானை
யுருவலிமாற்றலம்மா வொருவியப்போவென்றுள்வான். (உஎ)

அற்றைநாண்முதலாவேந்த னமரர்கண்டிறைஞ்சியேத்தக்
கற்றைவார்சடையான்வைகுங் கமழ்மலர்வில்வகானப்
பற்றையார்தரக்கொண்டாங்குப் படர்ந்துநாடோறும்போற்றி
யொற்றைமாக்கவிகைநீழ லுலகெலாம்வைகவாழ்நாள். (உஅ)

ஒளிதிகழ்வில்வகானத் துறைபிரானருளினாலே
யளிதிகழ்மனத்துவீர வாதித்தன்மனைவியாய
விளிதிகழ்மழலைத்தீஞ்சொ லின்னகைத்துவர்வாய்நங்கை
களிதிகழ்ந்துலகமேத்துங் காமருமகவொனறீன்றாள். (உகூ)

திரைசெய்பாற்கடற்பிறந்த திங்களங்குழவிபோல
வுரைசெய்மாமனைவியார்மாட் டொருமகவுதித்தலாலே
வரைசெயாநிதியம்வாரி மறையவர்வெறுப்பவீசிக்
கரைசெயாவுவகைவெள்ளக் கடலிடைப்படிந்தான்மன்னன். ()

சோதிடக்கலையுணர்ந்த தூயர்நாளோரையாதி
மாதிடமுறவுளோர்ந்து மறுவில்பொன்னேட்டிற்றீட்டி
யோதிடவுவகைபூத்தா னுற்பவக்கிரியையாவு
மாதிடங்கொண்டவள்ளல் வாயுளைப்படியேசெய்தான். (௩க)

சூரவாதித்தனென்னத் துலங்குமோர்நாமம்பூண்டு
பாரவாஞ்செம்பொற்றண்டை சதங்கையைம்படையும்பூண்டு
நாரவாமுளத்துசான்றோர் நட்பினையொப்பநாளும்
வீரவாதித்தன்மைந்தன் விளங்குறவளராநின்றான். (௩உ)

மழலைவாய்ச்சிறுபிணுக்கள் வகுத்தசிற்றிலையழித்து
மழகுறக்கடிப்புவாங்கிச் சிறுபறையடித்துமோடி
யுழன்மணிசசிறுதேராழி யுருட்டியும்வளர்ந்துமைந்தன்
மூகமதமர்ந்துபற்பல் கலைகளும்பயிலலுற்றான். (௩௩)

ஆரணம்புராணமங்க மாகமமாயுள்வேதஞ்
சீரணவியநியாயஞ் சிலைமறைமிருதிமற்றும்
வாரணம்புரவிவைய மூர்வதும்வயங்ககற்றுத்
தாரணவுறுபொற்றோளான் றத்துவப்பொருளுமோர்ந்தான். ( )

சூரவாதித்தன்மேன்மை தோன்றவுள்ளாய்ந்துவந்து
வீரவாதித்தனென்பான் வேந்தர்கள்பலருமொய்ப்பப்
பாரவாயேத்தநன்னாட் பைம்பொன்மாமகுடஞ்சூட்டி
யீரவான்மதியஞ்சூடி யிருசரணிருக்கையுற்றான். (௩௫)

தனியொருகோல்கைக்கொண்டு தண்மதிக்குடைநிழற்றி
நனியறமுவகைபூப்ப நானிலத்தெவரும்போற்றப்
பனிவிசும்பமரர்வாழ்த்தப் பகைவராதியரான்மேவுந்
துனிதவிர்த்தரசுசெய்தான் சூரவாதித்தன்மன்னோ. (௩௬)

பொருவறுகொடையினாலே பொழிமழைமுகிலைவென்றான்
மருவுறுபொறையினாலே வளவசுந்தரையைவென்றான்
பெருகுறுமறிவினாலே பெருஞ்சுரர்குருவைவென்றா
னொருவறுவலியினாலே யுதீசிமாமலையைவென்றான். (௩௭)

வரமிகுபோகத்தாலே மாகநாயகனைவென்றான்
றரமிகுபொருளினாலே தாழ்வில்பிங்கலனைவென்றான்
சுரர்புகழ்விளக்கத்தாலே தோற்றஞ்சால்கதிரைவென்றான்
பரசிவபத்தியாலே பைந்துழாய்மாலைவென்றான். (௩௮)

சூரவாதித்தன்றாளிற் றொழுதெழாவரசுமில்லை
சீரவாமவன்மேற்பாடல் செய்திடாக்கவியுமில்லை
பேரவாமவன்பாலொன்று பெற்றிடாதவருமில்லை
யாரவாவியதோளன்னா னாற்றுறாமகமுமில்லை. (௩௯)

எதிர்பொருதுடைந்தமன்ன ரிடுதிறைபெருகநாளு
மதிர்பொலங்கழற்காற்சூர வாதித்தனாணையென்றாழ்க்
கதிர்விரவுலகமெல்லாங் கரிசறச்செலுத்திவாழ்நாண்
முதிர்வலிவனமாவேட்ட னாடுறமுன்னினானே. (௪௦)

வேறு.

அரைக்கிசையவட்டுடை யணிந்துவடிவாள்வைத்
துரைக்குமொருகச்சுற விசித்திகலினென்னார்
விரைக்கதிர்முடித்தொடை மிதித்திடுகழற்கட்
டரைக்கதிரெனப்பொலி மணிக்கழறரித்து. (௪௧)

கார்முகமெடுத்தொருகை பற்றியழல்காலும்
போர்முகநெடுங்கணைகொள் புட்டில்வெரிநிட்டுச்
சீர்முகமுறக்கதிர்செய் சாத்துமுடிசேர்த்துப்
பார்முகநடுங்கவரு பாய்பரியிவர்ந்தான். (௪௨)

மந்திரருமன்னவரு மன்னுகிளையோருந்
தந்திரமுமப்படை யுடைத்தலைமையோரும்
வெந்திறல்கொள்வீரர்பல ருந்தவமிடைந்து
முந்தினர்நடப்பவொரு மொய்ப்பரிவிடுத்தான். (௪௩)

இரைத்திடுமியம்பல வியம்பொலியுஞாளி
குரைத்திடொலியுங்குளிறு கொண்டலொலிமாற்றத்
தரைத்தலையெழுந்ததுகள் வானுலகுதைப்ப
நிரைத்தபடைசுற்றுபு நெருங்கினநடப்ப. (௪௪)

காவிரிகடந்துபல காவதமகன்று
தாவிரியமேவிவளர் தண்டகவனத்திற்
பாவிரியமெய்ப்புகழ் படைத்தவுயர்தோளார்ப்
பூவிரியலங்கலர சன்புகுதலோடும். (௪௫)

வேறு.

அடிபணிந்துமானவேட ரார்த்தெழுந்துகானகத்
தொடியெறிந்துவலையொழுக்கி யுட்புகுந்துபெட்புறச்
செடிநெருங்கிடந்தொறுந் தொடர்ந்துசென்றுதிண்கையிற்
கடியமைந்ததுடியெறிந்து கடுகிமாக்கலைத்தனர். (௪௬)

சிங்கம்யாளிசல்லியஞ் சினந்துபாயும்வல்லியம்
வெங்கண்யானைபொங்குகேழல் வெய்யவெங்குடாவடி
துங்கமானமாவெழுந்து துள்ளுபுள்ளிமான்முய
லெங்கணுங்கலைந்துளங் கொதித்தெழுந்தவென்பவே. (௪௭)

ஓடுமீளும்வலைகடக்க வொண்ணுறாது துண்ணெனு
நீடுபார்வைகடிதுநோக்கு நெடிதுவந்துமொய்த்திடுங்
கூடும்வெஞ்சினம்படக் கொதித்துமேலதிர்த்தெழும்
வாடும்வாய்முழக்கெழுப்பும் வனமிடைந்தமாக்களே. (௪௮)

சொல்வளைத்தமல்வளைத்த தோளின்மள்ளர்துள்ளியே
வில்வளைத்துநாணெறித்து வெஞ்சரங்களெய்நரு
மெல்வளைத்தமாலைவே லெடுத்ததிர்த்தெறிநரு
மல்வளைத்தகானெலா மளாவுவாருமாயினர். (௪௯)

காலிழந்துகையிழந்து கண்டமற்றிழந்துநீள்
வாலிழந்துவாயிழந்து வாயினுட்பொருந்திய
நாலிழந்துவிழியிழந்து தலையிழந்துகுலையமெய்த்
தோலிழந்துகோடிழந்து துயருமாக்கடொகையில. (ரு0)

வேறு.

கோழியர்கோமகன் வெஞ்சிலையுந்து கொடும்பாணஞ்
சூழிகொண்மாமத யானையுடம்பு துளைத்தேகி
வாழியமாபுலி யாருயிர்தின்றெதிர் மாநாடிப்
பூழிகொள்கானக மெங்குமுலாவுவ போய்ப்போயே. (ருக)

நேரியர்கோமகன் வெஞ்சிலைகாலு நெடுங்கோலாற்
போரியல்வாலிரு கோடுமிழந்து புறம்போகுங்
காரியன்மாமத யானைகண்மேவு கமஞ்சூல்கொண்
மாரிகள்வார்விலி லாதொருசாருறு மாபோலும். (ருஉ)

அதிர்கழன்மன்னவ ரோறனையானெதி ரமராடு
முதிர்சினமேவொரு கேழன்மருப்பு முறித்திட்டான்
வெதிரிசைவாயொரு வன்றிமருப்பகை விறன்மிக்க
கதிர்வடிவேல்கர மேந்தியவண்ணல் கடித்தானல். (ருங)

வேறு.

மூண்மாறுமைகுவ வுரனேரடியிடி முரண்வெங்குரலமு மூல்கின்ற, கண்மாறுமைகுவ வெருவுங்கொடுவரி காயத்துடைமுடை வாயிற்செம், புண்மாறுமைகுவ வளவன்விடுகணை பொய்யன்பணுகுத லிலராய, வெண்மாணவரறி வாசானுதவுறு மெந்நூலினுறுமை வதுமான. (ருச)

வேறு.

மாவிருகூறு படுத்தியவேல்கொள் வலத்தாலு
மேவியநன்மையின் மீதுவிளங்கும் வியப்பாலுங்
கூவியல்கோழி யுடைத்திறனுலுமெய் குன்றுத
தேவியனேரிய னொத்தனன்மாதோ செவ்வேளை. (ருரு)

வேறு.

ஏட்டையெவ்வுயிருநீங்க வின்னருள்சுரக்கும்பொன்னி
நாட்டையிவ்வாறுகான நண்ணியகொடியபன்மா
வேட்டையாடுறுங்காலேரர்மான் விரைந்துசூழ்வலையதென்னுங்
கோட்டைகீழுறமேற்றுள்ளிக் குப்புற்றதோடிற்றன்றே. (ருசு)

ஓடுறுமானைநோக்கி யொன்னலர்நடுங்கும்மம்புக்
கூடுறுவெரிநனுசென்னி குனிசிலைதுணையாகக்கொண்டு
நீடுறுகதியிற்போமந் நெடியமான்பின்புவல்லே
காடுறுநெறியும்யாறுங் கடந்தனன்றொடர்ந்துசெல்வான். (௫எ)

விரைதரத்தொடர்ந்தமன்னன் விரிபெரும்பொன்னியாற்றங்
கரையருகொருகோலைவிக கதியுறுமானைவீழ்தத்துத்
தரைமகண்மோலியாய தவாவளதடொருவான்யாறுறுத்
திரைதவழ்சிகரதெய்வத் திரிசிராமலைகண்ணுற்றான். (௫அ)

முடிவறுமின்பநலகு முதலவனுறினிதுமேய
கடிவருவிலங்கலகாணுங கழிநசையுடைமையானு
மொடிவறுவனமாவேட்டத் துறுசிறுவருத்தத்தானும்
படிவருவளவர்கோமான் பலையுறையிடம்புகானுய. (௫௬)

காவிரிகுலைப்பேரோதைக காவிரியாறுநீந்தி
மாவிரிமலர்ப்பூம்பொயகை மருவுநெடும்பாங்கரோகித்
தேவிரிவிளககஞசான்ற சிராமலைவடமேற்கூற்றன
பாவிரிதருசீர்சாலம் மலைவளமபகரவாருசிலல (௬0)

பாயவெண்பளிககுவட்டப் பாறையுமதனைசசூழ
வாயவேய்கான்றமுத்து மவிாவனவுவவுகதனமை
மேயவொணமதியுருகுழந்த வெவாளுடுகணமுந்தெயவ
நாயகனருள்கொளபாககு நண்ணியாஙகுறைதன்மானும். (௬௧)

இனியசெங்கமலராக வறைவட்டந்திபககோடொன்று
தனியுறப்பூத்ததோன்றி சாய்ந்துமேனமறைபபநோககிக்
கனியறத்தலையுவாசசெங கதிரகிரகணஙகொலென்று
முனிவரருவகைவெள்ளக கடலிடைமூழ்குவாரால். (௬௨)

விடரகமுழைத்ததோன்றி மென்மலரளையுணின்று
சுடர்பணம்பைத்தவோர்மா சுணங்கர்வியபபிற்றோர்பாற்
படர்முழுநீலப்பாறை யிதுவென்றும்படாந்துதுஞ்சு
மடர்முகிலிதுவென்றும்பாத் தறிதராவியபபிற்றோர்பால். (௬௩)

பரவுவெள்ளருவிபோர்த்த பண்பினுற்பகலெல்லாமிக்
குரவுசேர்கயிலையென்றுஞ் சோதியந்தருக்களோங்கி
விரவலினிரவெலாமால் விரிஞ்சனெக்கமுத்தமாய்த்த
புரவழன்மலைகொலென்றும் புலவருள்ளயிர்ப்பமேவும். (௬௪)

வம்புடையலங்குகாந்தட் குலைநடுவண்டுவீழ
வெம்புடையழலினந்தோ வீழ்ந்தனவென்றுமந்தி
நம்புடையருவிநீர்தூ யளிக்குநன்னலஞ்சார்சாரற்
கொம்புடைவேங்கைநீழற் கொம்பிலாவேங்கைதுஞ்சும். (சுரு)

மாலுறுகளிநல்யானை மண்டுமூழ்ந்துதிக்கைபற்றி
யேலுறவளைத்துவிட்ட மூங்கின்மேலெழுதனோக்கிக்
கோலுறுகொலையவாவு கொடியவன்றூண்டிலென்று
மேலுறுவானயாற்று மீனெலாமொளிக்குமாதோ. (சுசு)

பறவைமேற்பறவாவண்ணம் பைந்தினைப்புனங்காக்கின்ற
விறவுளர்மகளிர்செங்கைக் கவணில்வைத்தெறியாநின்ற
பெறலரும்வயிரமீப்போய் வீழுமப்பெற்றியோரா
குறவுமண்ணுலகர்வானின் றுடுக்கள்வீழ்ந்தனவென்பாரால். ()

விருத்தவொள்வயிரப்பாறை மீமிசையானைக்கன்று
பொருத்தமுற்றுறங்கநஞ்சு பொழியெயிற்றிராகுநீண்டி
வருத்தமுள்ளுறக்களங்க மதியன்மையுணர்ந்துநாளுங்
கருத்தழிவுறுதுகொலலோ கருதுறுதொன்றுசெய்யின். (சுஅ)

கட்புறந்துளிக்குங்கோதைக குறந்தியர்கவின்செஞ்சாந்து
நட்புறக்கொண்டகொங்கை யிணைந்தநற்செம்மைவாய்ந்த
விட்புறசிகரமென்று தவழும்வெண்பிறையைநோக்கிப்
பெட்புறமகிழ்நரிந்தப் பிறைவடமழகிற்றென்பார். (சுகூ)

ஒருவரைநிலனுண்மாய வொருகைவைத்தழுத்தினேனும்
பெருவரைசிறையிழப்பப் பெரிதடர்த்தவனுமினயங்
தருவரையென்றுநாளுந் தலைமிசைக்கரங்கள்கூப்புந்
திருவரைவளமையெம்மாற் செப்புதற்கடங்குங்கொல்லோ. (எ0)

முத்தலையுடையானுமக் கிரிவளமுகப்பக்கண்க
ளத்தலைநின்றசூர வாதித்தனணித்தேகண்டான்
கைத்தலைமழுமானேந்துங் கடவுடன்குறியுந்துத்திப்
பைத்தலைநாகதீர்த்த மென்னும்பைந்தடமுமாலோ. (எக)

அம்புயஞ்செற்றபொற்ற வத்தடத்துதித்துலாவும்
பம்புசங்கங்கள்கண்டோர் பைந்துழாய்மால்கைச்சங்க
நம்புறுமிவற்றுளொன்று தானென்றுநவில்வர்காணூர்
வம்புறுவேறுசொல்வர் வஞ்சமற்றவர்மேலுண்டோ. (எஉ)

பரவுமார்கலிபோய்க்காணும் பற்றினரினிதுசென்றவ்
வுரவுநீர்த்தடங்கணுற்றவ் வாசைதீர்ந்துவகைபூப்பார்
புரவுசேர்கல்விசெல்வம் புணர்க்குமாதனைககாண்போரக்
கரவுதீர்தடத்துவெண்செங் கமலத்துக்கண்டுவப்பார். (எங)

மாசிலத்தடச்செஞ்சூட்டு மராளமொண்பதுமங்கண்டோ
ராசிறுன்முகத்தேவூர்தி யாதனங்காணவேண்டார்
மூசியமீனங்கூர்மங் கண்டவர்முராரியென்று
பேசியமீனங்கூர்ம மிலவெனும்பெற்றிகொள்ளார். (எச)

அத்தகுநாகதீர்த்தத் தரவிறைமகளிரைவர்
நித்தலுமடைந்திலிங்க பூசனைநெறியிறுற்றி
யுத்தமநாகநாதப் பெயரினங்கொளிரிலிங்க
வித்தகன்றனையும்போற்றி மீண்டுதம்மூர்க்குப்போவார். (எரு)

அன்றுமத்தடத்தம்மாத ரைவரும்புகுந்துதூய்மை
துன்றுமாதீர்த்தமாடித் துலங்குவெண்ணீறுபூசி
நன்றுசெயெழுத்தைந்தெண்ணி நறுமலராதிநேடிப்
பொன்றுதலில்லாவன்பிற் பூசனைபுரிகின்றால். (எசு)

ஆய்வளைச்சுமுகியென்பா ளரதநவிலிங்கங்கொண்டு
பாய்புகழ்வாமதேவப் பரனெனுநாமஞ்சாத்திக்
காய்கதிர்விளக்கஞ்சான்ற கணவனைப்பெறுவானெண்ணித்
தோய்தருமன்புபொங்கத் துதிபெறுபூசைசெய்தாள். (எஎ)

மற்றவட்கிளையதேச ராசியென்றுரைக்குமாது
பொற்றவெண்படிகலிங்கம் பொருளெனக்கைக்கொண்டன்பு
பற்றவீசானதேவ னெனப்பகர்நாமஞ்சாத்திக்
குற்றமில்பூசைசெய்தாள் குணமிகுகொழுநன்வேண்டி. (எஅ)

களையுமற்றவள்பின்வந்த கமலமாமுகியென்பாண்மற்
றுளைசெறிசுவணலிங்க மொளிர்தரவுவப்பிற்கொண்டு
புளையிறற்புருடநாமம் புனைந்துபூசனைபுரிந்தாள்
வளையறுகல்விசான்ற மகிழ்நனைப்பெறுவானெண்ணி. (எகூ)

அன்னவட்கிளையளாய சுலக்கணையெனுமணங்கு
தன்னிகர்வயிரலிங்கங் கொண்டுசத்தியோசாதப்பேர்
மன்னுறச்சாத்தியன்பின் வழாவகைபூசைசெய்தாள்
புன்னருமொழுக்கங்குன்றுப் பண்புசால்கொழுநன்வேண்டி. ()

பரவுசீரிளையகாந்தி மதியெனும்பாவைநல்லா
ளுரவுவிண்ணுளிநீல விலிங்கமாங்கொளிரக்கொண்டு
புரவுசாலகோரநாமம் புனைந்தன்பிற்பூசைசெய்தாள்
கரவுதீர்புகழ்சால்சைவக கணவனைபபெறுவானெண்ணி (அக)

உத்தமமணியிற்சீர்சா லொருமணியறிவினுடி
யுத்தமர்கொளலபோற்சூர வாதித்தனொருசார்நின்றவ்
வுத்தமமடவார்தம்முட் சிறந்தவளொருத்தியேயென்
றுத்தமகுணத்துககாந்தி மதிதனையுள்ளஙகொண்டான். (அ௨)

வேறு

குலவியன்மணங்கான் றறவுநீளாது குறுகுறுதுறுகடைப்பிளவா, திலகுமென்மையதாய மாண்மயங்கடனமே லியைதரப் படர்ந்த சைவலமொத், துலகிடைநோககு நோக்கமுநோககாமுகிலுமுற் றிருளவாய்வேண்டி, னலகறவள்ளிக கொள்ளலாங் கருமை யமைந்தவொண் கூந்தலின்வனபபும். (அங)

கறைமிடற்றிறைவன் செஞ்சடைமுடியிற் கங்கையிற்றுளைந்து வீற்றிருககும், பிறையெனப்பொலியும் வாணுதல்வனப்பும் பெய்மதுக் கணையுடை மதவே, ணிறைவலிததடககைச சிலையொடுசேமச சிலையை யுநெடுமபுகழனையா,ணறைதருதெய்வ மங்கலககயனமே லமைத்தன புருவததின்வனப்புமட (அச)

முகமெனுந்தடத்தி னழகெனும்புனலுண் முழுகியகண்ணெனுங் கயல்க, ளிகலுறவிருபா லொதுங்கியவள்ளை யெனுமணிக் குழைச்செவி வனப்பு, மகனமர்ந்திரதி யொடுமதனனுக்கு மன்பின ரமைத்திடப்பட்ட, புகழுமங்கலக்கண் ணுடிகளென்னப் பொலிதருகபோலத்தின் வனப்பும். (அரு)

மரகதநிறத்து மாலயன்முதலாம் வானவா நஞ்சமென்றஞ்சிக், கரதலங்குவித்துக் கயிலையையடைவான் கால்விசைத் தோடவுமீண்டு, பரவமுதென்றுள் ளுவந்தணைதரவும் பரவியமருளருட்பார்வை, விரவுறத்தாங்கி யிருங்கடற்பரப்பின் விளங்குறுமதர்விழி வனப்பும். (அ௬)

பொற்பெனுஙகானு ளொருகுமிழ்மலர்ந்தாற் போற்பொலிநாசியின் வனபபும், விற்படுமுல்லை நிரையரும்பினபோல் விளங்குறுவெண்ணகை வனப்பும், பற்பல்வெண்மணியீங் கடைந்த

தென்னென்று பற்களைநோக்கியம் பவள, முற்பவகட்பா லாங்க டைந்தென்ன வொளிர்தரு செய்யவாய் வனப்பும். (அஎ)

காமவேள்செங்கைக் கரும்பினின்சாறே கடவுளரான்பொ ழிபாலோ, நாமவாள்வேடர் காளதநியிறைகரு ரனகினிதெடுத் தகோற்றேனோ, தாமவாரகூந்தன் மலைமகளங்கைத் தாமரைதா ங்கிய கிளியோ வேமமார்தமிழோ வெனப்புலமையினு ரிரங்குற மிழற்றுசொல் வனப்பும. (அஅ)

மதியினையெடுத்து மறுவினைக்கெடுத்து வைத்தெனப் பொ லிமுகவனப்பும,புதியநல்லழகு பொழிதருவதனப் பொலிவினை நோக்குபு பதும, நிதியெனவுணர்ந்து நுதிபெறுசங்க நிதியுமாங் குற்றினி திருந்தாங, எதிமதியுடையார புகழ்தரவிளங்கு மணி கெழு கந்தரவனப்பும். (அகூ)

முலையினைநோக்கி மலையெனநினைந்து முருகிளவேயடைந் தாங்குக,கலையுடைப்புலவர் புகழ்தரதிரண்டு கவின்குடிகொ ண்டதோள் வனப்பும், நிலையுடைககாமற் கணிதரக்காந்தள் செ றித்தியற் றியதிரண்மாலை, யுலைவறநாற்றி விடடெனவிளங்கி யுளங்கொளப படுகரவனப்பும். (கூ0)

அடிபரந்தெழுந்து கசசறவிங்கி யானைமத்தகஞ்சமழ்ப் ப டைய ,, படிகெழுதெனனங் குருமபையைசசவடடிப் பந்தினைம ருட்டிவெண் ணீற்றுப, பொடியணிபெருமான் புகலியர்கோவுக் குதவுபொற் றுளமோரிரண்டும், வடிவுறவாஙகிப் பதித்தெனக் கதிர்த்து மதாததவொண் பூண்முலைவனப்பும். (கூக)

செங்கழைகுழைாகு மாரவேள்காமத் தீக்கைசெய்வதற்கி னிதமைத்த, பஙகமிலகுண்ட மேயிதுவெனனப் பகர்தரு முந்தி யின்வனப்பு; மங்கதிற்காமத் தழலெழா ரனமேல் வாய்விளைந் தெழுசிறு தூமத், துங்கவாலகொடியே போன்மெனப்பொலிந் து சுடர்மயி ரொழுஙகுடைவனப்பும். (கூஉ)

கடிதடநோக்கி யாசிலையென்று காமரா விலையுமேலுறைந் தாங், கொடிவறுவயிற்றின வனப்புநீர்த்திரையை யொத்தொளி ர் மடிப்புடைவனப்பும், வடிமலர்க்கூந்தற் பாங்கியர்வனைய வந் தனரென்றிடு போதத், திடியொலிகேட்ட வ்ரவெனக்கலஙகி யி ரங்குறுண் மருங்குலின்வனப்பும். (கூ௩)

எலிமயிர்பொருவ மெனமயிர்பொருந்தி யாமையினெழிற்பு
றமருட்டி, வலிகெழுசேடன் படங்களுடசிறந்த வான்படமொ
ன்றினைவாங்கி, யொலிபுகழ்ப்பிரம னண்டமதனெனவிளங்கி யொ
ண்கலை மேகலைதாங்கிப, பொலிதருமினப மூற்றிருந்தொழுகப்
பொங்குபே ரலகுலினவனப்பும். (௯௪)

மீனவண்கொடியோன் வீற்றினிதிருக்கும் விளங்குபொன்
மீண்டபததியாதத, வூனமில்கதலித துணையெனவிளரிய வூறுடை
க்கவான்றிரு வனபபுங, கானமர்தெயவக கற்பகநிழற் காமதேனு
வினெழின் மூககோ, வீனமிலபரம னருளுடைமெருண்டோ வெ
னுமுழந்தாளுற வனப்பும. (௯௫)

சித்தசனுலக மயகருததறயிரதச செழுஙகணைசெறிததிடுமா
வ, மொத்தநற்கணைக்கால் வனப்புமறறணையா ரேங்குபுரிாகமம்
பொறித்த, புததகங்காதத புறவிற வனபபும பூபபொலியுளளடி
வனப்பு, முத்தலம்புகழு மாடிதனிமருட்டு மொயயொளிமேனி
யின் வனப்பும். (௯௬)

வேறு.

தனித்தனிநோக்குங்காலைச சம்பராரியுங்கருமபு
குனித்தனிகாரிபூட்டிக கோலசிலவிடுதநாளுக
மனித்தரோறணையாலகாம மனைடிமேலெழவாறறுரு
யினித்தமென்மொழியாள்பாஙக ரொயநினுனுருகிமாதோ, (௯௭)

வளவர்கோனவருதனேகி மாதர்நாலவருமுள்ளஞ்சிப்
பளகறுசிவலிங்கத்தை யெடுத்திலர்பரிந்தோட்டந்தார்
தளரிடைப்பணைததோடகாந்தி மதிபபெணததனமைகண்டு
களமிறனிலிங்கததோடு மற்றைநானகையுஙகைககொண்டு. ()

தன்னகரடைவானேகு மேலவையிற்றருமமன்ன
மன்னவனெதிரேவந்து வண்கலைத்தோகைபற்றிக
கன்னலங்குதலைச்செவ்வாய்க் காமருமயிலனுசாய
லுன்னநின்றநதையாவ னும்மயாதறைதியெனறுன். (௯௯)

வரமடமகளுமந்த மனனவன் வடிவுநோக்கிப்
பரவுமால்பூண்டுபின்ன ரொருவகையடக்கிப்பைவா
யரவிறைமகள்யான்காந்தி மதியெனவறைவர்நாமம்
புரவுகோளிலிங்கபூசை புரிவதற்கிங்ஙனுற்றேன். (௪00)

அன்னதுநிற்கவேந்தே யவாங்கலைவிடுதியென்று
ளென்னவற்புதமிசைத்தா யேந்திழையல்குன்மாதே
யின்னருகணைகடாங்கி யேட்டமாடுதற்குற்றேன்மற்
றுன்னவாங்கலைகைப்பட்டால் விடுவலோவுரைத்தியென்றான். ()

தளிரியலரசரோறே தமியளென்னகர்க்குப்போது
விளியுமுனபோதல்வேண்டுங் கலிங்கத்தைவிடுதியென்று
ளளியுடைமன்னன்றேய மடங்கலுங் கொள்வானினறே
னொளிதுகைப்பகலிங்கம் விடுவலோவிசைத்தியென்றான். (க0உ)

மானேர்நோக்கமங்கை பாணித்துவரலெனனுரை
வேனையாதேகவேந்தா றனையைவிடுதியெனறாள்
யானேர்வளவனெனனே யரசனுயுலகங்காப்பேன்
றனையைவிடுவதுண்டோ தளிரியனமடந்தாயென்றான். (க0ங)

காளைவென்றறல்கடிந்த கருங்குழற்செவ்வாய்நங்கை
தேளையூர்மனனரோறே சீளைநீவிடுதியெனறாள்
போளையேயவாவிவெற்பும் பொடிபடப்பொருதிண்டோளான
பாளையாண்மனனர்சீளை விடிற்பழுதுறுதோவெனறான. (க0ச)

பஞ்சின்மெல்லடியாள்வேந்தே பாதலத்துறையெமர்க்கு
வெஞ்சினமூளாமுன்ன மாடைநீவிடுதியெனறு
ணஞ்சினுங்கொடியவேலா னலந்தருமாடைவிட்டா
லஞ்சுவெம்படையெவ்வாறுந் துறவியோயான்சொல்லென்றான்.

பன்னருமெழில்சானங்கை பாணித்தவிதத்தாற்சீறிப்
பன்னகம்யாவுமீங்குப் படருவதுண்மையெனறாள்
பன்னலமுடையானமுன்னே சிறையறுபட்டுவீழ்ந்த
பன்னகமெங்ஙனிங்ஙன் வருமதுபகர்தியெனறான். (க0சு)

வருமுலைமங்கைமன்னு நீபுகல்வார்த்தையீங்கு
வருமரவங்கள்கேட்கின வருவதுதீங்கேயெனறாள்
வருபுகழ்வளவன்காலுஞ் செவியுமில்வாளராக்கள்
வருவதுங்கேட்பதுந்தா னுண்டுகொன்மடந்தாயென்றான். ()

வீரவேல்விழியாள்வேந்தே விளங்குமென்கலைதானின்பா
லாரவேயடைதற்கேது வென்னைகொலறைதியென்றாண்
மாரவேளனையான்காந்தி மதிகலையடைதனுளுஞ்
சூரவாதித்தன்பாலென் றுணர்ந்திலைதோகாயென்றான். (க0அ)

கூதுநேர்முலையாளாடை பற்றிநீதொடர்ந்துநின்றாய்
காதுவேன்மன்னரோறே கருதியதென்னையென்றாள்
போதுசோமார்பன்பன்னாட் போந்திவண்பூசைசெய்வா
யாதுநீகருதியுண்மை யியம்புதியேழாயென்றான். (க0கூ)

தந்தைதாயுடன்பாடின்றித் தடமுலைத்தையலாருண்
மைந்தரைமணப்பார்யாவ ரென்றனண்மங்கைநல்லாள்
கந்தையேயிகல்கைமாவான் காமர்காந்திருவமன்னன் [ன்றான்.
முந்தையோர்மொழிந்தியார்க்கோ மொய்குழான்மொழிதியெ

இருவருமினையபேசி நிற்புழியீதுகண்ட
லொருவருஞ்சூழ்கிமுனனு நாலவருமபொருககென்றேகி
யொருவருநதாதைபாதம வணங்கினருரைககலுற்றா
மருவருநாகநீாதத மருங்கியாமெனறுமபோால. (ககக)

இன்றுஞெசென்றிலிங்கபூசை யாறறினேமிருநதேமாக
வனறிறற்கழற்கான்மனன றயிடையொருவன்வநதான
றன்றவலவரவுகண்டு துணுககமுறறிரிநதுளேமயா
மன்றலஙகூந்தறகாந்த மஙசற்றேவிரையாளாளுள். (ககஉ)

அன்னவடன்னைமன்ன னெதிாமறிததையசேலை
தன்னையங்கையிற்பற்ற நின்றன டமியளாகி
யின்னதுநடந்ததெனன வெரிவிழித்தரவவேநதன்
பன்னருஞ்சீற்றஙகொணடு பன்னகநடபபாலுற்றான. (ககங)

புதலவிதனசேலையங்கை பற்றுபுபொலிநதுநிற்கு
முதலவனைவளவாகோனைக் கண்டனன்முறுகுகோபஞ்
சிதாதரவுவகைவெள்ளந தேககிடமகளைநோககிக
குதலையஙகொவவைசசெவவாயக கொடியிடையஞ்சேலென்றான். ()

அரவிறைவரவுநண்ட வலஙகலஞ்சூழிலங்குவேலான
குரவலாநறியகோதைக் கோறறொடியாடைபற்றுங்
கரதலநெகிழத்துநாணங கறிதெழககடைக்கணித்து
விரவுவெண்முறுவல்சறறு மேவவோாபுறததுநின்றான். (ககரு)

நின்றமாநேரிவேந்த னோசெனறுநாகாவேந்தன்
குன்றநேர்குவவுததோளாய் குறிததொருதூதுவிட்டான்
மன்றயான்மறுபபேனகொலலோ மற்றிதுசெயகைநன்றே
வென்றவாண்மன்னாககேற்ற செயகையேவிரைந்துநின்றாய். (ககசு)

நின்னுடைக்கருத்துமுற்ற நெரிசுரிகுழற்பூங்கொம்பை
மன்னுடையுலகங்காண மாமணஞ்செய்துகோடி
யென்னுடைமனமுவப்ப வினிதுனக்களிததேனென்றான்
பொன்னுடைக்கழற்கால்வேந்தன் பொருவிலாவுவகைபூத்தான். ()

ஆயதோரமைதியினச ணடாபெருஙகாட்டுணின்ற
பாயவெம்படைகண்மன்னன் பதசசுவடொற்றிவந்து
மேயினவாஙகுநாகா வேநதனுமவிடைபெற்றன்பிற்
போயினனுவகைபூபபப பொருவிறன்னகாக்குமாதோ. (ககஅ)

மனனவாமன்னன்காந்தி மதியையோரசிவிகையேற்றி
நன்னலமுதவுநாக நாதனைதறொழுதுபோற்றி
யுன்னுவார்பிறவிதீாககு மொருமுதலுறையுமிக்க
தென்னுலாமபுகழ்சாறெயவச சிராமலேபுகழ்ந்துபோற்றி. (ககக)

பல்லியமுழங்கியாாபபப பாய்கடறபடைசூழ்போத
வல்லியங்கோதைமாத ரணிகெழுகவரிவீச
நலலியற்பரிமேற்கொண்டு நானிலமபுகழ்ந்துபோற்ற
வல்லியமுயர்த்தவேந்தன் மாபபுகழுறையூசாாந்தான். (க௨0)

ஆம்பலஙகுதலேவாயா ரஙகைமஙகலஙகளேந்த
வாம்பரியிழிந்துமன்னன் மாமணிக்கோயிலபுக்கான்
பாமபுபைத்தனனவலகுற் படாமுலேபபாவைமாதுந
தேம்புசிற்றிடையாாசூழத் திகழொருமாடஞசோநதாள். (க௨க)

தந்திரத்தலைமையோரும் தவாக்கிளேமுதுமையோரு
மந்திரபபெருமையோரு மற்றுளநட்பினோரு
முந்தியற்போடுகூடி முழுதுணாகணிதாசகூவி
நந்திறற்குரிசின்மனற ளுளினிதாயகவென்றா. (க௨௨)

துரிசறவினிதிறுய்நது சோதிடக்கலேநூல்வலலா
ராியநல்லொழுககமிககி ரமபலேததயிலனுககிக்
கரிகுழைத்தெழுதவாயந்த கட்குயிலினேநநதோன்றல்
புரிவுறுவதுவையாற்றப பொருந்துநாணேயென்றா. (க௨ச)

என்றலுமுவகைபூபப வுலகெலாமெழினீாநாடன்
மன்றலுணேயென்று வரைமணமுடஙகலபோக்கி
யொன்றமாமணத்திற்கேற்ற வுபகரணங்கள்யாவு
நன்றவாய்வெறுபபவீட்டி நன்முரசறைகவென்றார். (க௨ரு)

இலகுறுகளிற் றின்மேல் லேற்றுரிமுரசமேற்றி
நலமிகுவளவர்கோமா னுகாகோனமகளை நாளை
குலமுறை மன்றலாற்றுங் கொள்கையானகரையின்னே
மலாதரவணிமினென்று வள்ளுவன்கூஉயறைந்தான். (௧௨௫)

முரசொலிசெவியிற்கேட்ட முழுபபுகழுறநகைவாணா
பரவுறுமுவகைபொஙகப் பழையனகழித்துபபோக்கி
யுரவுறுபுதியநேடி நிருளேயென றுணைக்குமநதப
புரமலங்கரிக்கலுண்டாா பொனனகாசமழ்பபமாதோ. (௧௨௬)

வானளாம்பநதரிட்டு மாலைசனுற்றுவாருங்
ஞானளாமபனிகொடுநீா கரகமொண்டுற்றுவாருங
கூனளாமதியமபோழுந கொடிமாமேற்றுவாரு
மீனளாமபரவைமுத்த வெண்சுதைதீற்றுவாரும். (௧௨௭)

கன்னலைபைஙகதலிகநதி காலுறபபொருத்துவாரு
நன்னலமறையோாத்தேடி நயநதமுநருததுவாரும
பன்னருமவினைகளகூட்டிப பாகடைநிருததுவாரு
மின்னலின்முகவந்தோரக கிதமுணைத்திருந்துவாரும. (௧௨௮)

காமருபநதர்தோறுங கண்ணடிமாட்டுவாரும
பூமருவோதியாாக்குப் பொன்னணிசூட்டுவாருந்
தேமருவிசைநறுநதேன் செறுசெவிககூட்டுவாரும
பாமருவொண்பொற்றேரிற் பாயபரிபூட்டுவாரும. (௧௨௯)

வரியளியிமைதழூச மலர்பலதொடுககின்றாருந்
தெரிவையாநடனநோககிச செமபொருள்கொடுககின்றாருங
கரிபரியிரதமேறிக காற்றெனவிடுககின்றாரும
பரிபழவுடையகற்றிப புததுடையுடுககின்றாரும். (௧௩0)

தையலர்முலைமேல்வாசச சந்தனமபூசுவாரு
நையலாவறிஞரோற்ப நன்பொருளவீசுவாரு
மையலாமதவேளென்ன வழகனென்றேசுவாரும்
பையலரல்குலாசிா பாாத்துக்கண்கூசுவாரும. (௧௩௧)

குளிர்முளைபபாலிகும்பங் கொழுஞ்சுடர்வைக்கின்றாரு
மொளிர்கலன்றுஙகலாற்று தொசிநுசுபபெய்க்கின்றாரு
நளிமருவழகுநோக்க நயந்தனர்மொய்க்கின்றாருங்
களிமிகுசுவையுணக்கள் கலந்தனர்துய்க்கின்றாரும். (௧௩௨)

திணிகொள்பொற்றகடுவெண்பித் திகைப்புறத்தொட்டுவாருங்
கணிதமிலகுலைக்காயத்தெங்கு காழுறுங்கட்டுவாரு
மணிதகாத்தமைத்தசுண்ணம் வாருபுகொட்டுவாரு
மணிதலங்கண்டேகிமாத ரடாமுலைமூட்டுவாரும். (கஙங)

கடிகையெத்துணையுண்டென்று கனனலிறமெறிகினாருரு
நெடியதிப்பகருனென்று நெஞ்சுறப்பரிகினாருரும்
கொடியமாலயானைமேவக குயூமுடைநிரிகின்றுரும்
படியெலாமுவகைபொங்கப பலலறம்புரிகினாருரும். (கஙச)

பாடலுஞ்செருந்திபுன்னை பனமலாகொய்கினாருருந்
தோடலாந்துமபூவாவி துளைந்தாடலசெய்கினாருரும
வாடலாநறவமவாங்கி வாயிடைபபெய்கினாருரு
மாடலர்கொன்றையானை வாழ்த்தினருயகினாருரும். (கஙரு)

விடுசுடாமணிசகலனகள் விளங்குறமண்ணுவாரும
வடுவறுமகுடவேந்தா வரவரவெண்ணுவாருந்
தொடுகடற்புவிகருவாரோ துணையெனககண்ணுவாரு
மடுகரிபண்ணுவாரு மாயினாமைந்தாமா-தா. (கஙசா)

பாயசிருறந்தைமுனனைப பழுவணிக்கமராவேந்தற்
காயமாமகுடஞ்சூடட வலைந்தவானணியுந்தோறறுப
போயதவவுறந்தையிற்றைப புததணிபபொலிவிற்கமமா
வேயதோருவமைகூற வெண்ணுதனமடமைபபாறறே. (கஙஎ)

சிறுபொருளுடையாாமாட வாயிலிறசெறியநாறறு
முறுசுடாமுத்தமாலை யொண்பொருளரசன்காதன
மறுவறுவனபபுவாயந்த மனைமுலைமுகட்டிமிலலை
பெறுபொருட்பெரியாமாடப பேரணிகருவமையாதோ. (கஙஅ)

நகரணிசிறித்துகூற நானமுகனனந்தனுகி
நிகராறுகேள்வியோாக்கு நிரமபுறுதெனணிலென்னைச்
சிகரமவின்டோயகினற செழுங்கடிமணடபததின்
புகாறுவளஞ்சொலலாது போயினுனெனபாாயாரே. (கஙகூ)

திருவளருறையூாசசென்னி திருமணமண்டபததின
பெருவளஞ்சிறிதுகேட்டுப பெருகுமோரிறுமபூதுற்று
மருவுபலவாைமுற்பார வசுந்தாைசுமக்குஞ்சேட
னொருவனலலாதபேருட டலையசையாதாருண்டோ. (கச0)

இனையனநிகழும்வேலை யெழின்மணநகாணயாருந்
தனையறவனைந்துசார்த னுக்குபுதானுநுட்ப
வினையுறவனைந்துமேவ வெண்ணினுன்போலமேலைக்
கனைகடல்குளித்தானென்ப காய்கதிர்க்கடவுண்மாதோ. (கசக)

ஆய்புகழ்ச்சென்னிமன்றற் குறந்தையாரணிந்தவெண்ணில
பாய்கதிர்ப்பதுமராகப பணியொளிநனிபரத்த
லேய்தரநோககிநாணி மறைந்தனோத்திருந்ததம்மா
காய்கதிர்க்கடவுளென்பான் கரந்துகருதுங்காலே. (கசஉ)

வேறு

காலக்குரவன்மேற்றிசையாழ் கடறகுண்டத்தென் றாழ்த்தழலைச்
சாலபடாபல்கதிரசமிதை யொடுபெயதுயரந்தணரங்கைக்
கோலச்சிருககுவழிநீரெய விடத்திககொழுந்துமேலெழுந்தாற்
போலபபரந்துபொலிந்ததாற் பொங்கியெழுந்தசெவ்வானம். (கசஙு)

பொருவிலகாலமாதேவன் பரிதியெனும்பூந்துழாய்க்கணையின்
மருவுகிரணக்கொழுந்தியும வாமான்றோக்கொண்டலுஙகூட்டி
யொருவிலுதையகிரிசசிலைவைத் துந்தமேலைக்கிரிபுரத்து
வெருவவிழமேலெழுநெருபபு மானுமிடைந்தசெவ்வானம. (கசச)

ஆயபோன்புடையர்விளாந் தமமானமராலையம்புகல்போற்
றாயவான்களவிளைந்திளஙகன றமாமாளிகைகடொறுமபுகுதப
பாயமழைபெய்தோய்ந்ததுபோற் பள்ளிக்கணக்கொலியோய
வேயகருவிவினையாள ரொடுககவெழுந்ததிருஞ்செவ்வான். (கசரு)

தணந்தார்புலமபுற்றநேரடையத் தழுவுபேடையொடுபோகின்
மணந்தார்குடமபையடையவன மாககள்சேக்கையடையமதன்
பணந்தாழல்குன்மடந்தையாசிர் பரபபுமைந்தாபாலடையக்
குணந்தாழ்கலவியிலருளமபோற் கொடியகஙகுலடைந்ததே. (கசசு)

முத்தநகைமெல்லியனமதிய முடித்தான்றிருக்கண்புதைப்பவெழு
நத்தநிகர்த்ததன் றுலகை வளைந்தவிருளந்நாளமலன்
சித்தமிரஙகிநெற்றிவிழி திறபபவெழுந்தசெழுஞசுடரோ
யொத்தமனைகடொறுந்தகளி நெய்யுண்டெழுந்தவொண்சுடர்கள். ()

அந்திவண்ணன்போர்வைகளைந் தடியில்வீழ்த்திநிற்பதென
வந்ததிமிரஙகளைந்தடியில் வீழ்த்திநிற்குமலிசுடரா
யிந்துதவழுமனைகடொறு மெயிறுதோன்றுவிளங்குழவி
மூந்திநோக்கிக்கிடக்குமான் முதிரன்பாய்மார்களிப்புறவே. (கசஅ)

வையமன்னர்மகுடந்தோள் வலயம்வீசுங்கதிரானுந்
தையலார்மெய்யொளியானுந் தரிக்கும்பணிச்செம்மணியானு
மையனடியார்திருமேனி யணிவெண்ணீற்றினொளியானு
நெய்யதகளிச்சுடரானு நிலவுமுறந்தைக்கிருளின்றே. (கசகூ)

பொறியவொருநம்பெயர்பூண்டு பொஙகுவனப்புநனிவாய்ந்த
நறியமலரஞ்சிலைலோதி நஙகைபணைத்தகொங்கையிணை
செறியநின்றுன்சிறந்தானே சிறவானேவென்றுறநோக்கி
யறியவருவானபோலவானத் தாலேர்னுதயஞ்செய்தனனே. (கரு0)

பொன்னிநாடன்முதுக்குறைவும பொருவிலறமும்பெருங்கொடையு
துன்னிநின்றமாவிறலுந தொலையாபபுகழுமுணர்ந்துறுபபுட்
சென்னியெனபபலலோருளுமிச் சென்னிசிறந்தானென்றுவகை
மன்னியுடல்பூரித்தான்போற் கலைகள்விரித்தான்மதியென்பான். ()

வானமுயர்ந்தகாவணமா வயங்கப்பரந்தமதிக்கிரண
மூனமறுமேற்கட்டியா வுடுக்கள்வெண்பொனுண்டையாத்
தூநன்மதியநடுவமைத்த துலஙகுகவரிபபெருநகுஞ்ச
மானதடியினமைத்தசூடா நிகருமலாந்தவரக்காம்பல. (கருஉ)

வாதலூர்தில்லைநகா மருவிபபிடகாவாய்மூடக்
காதலொருபெண்வாய்திறபபக் கடவுளருளாற்செய்ததெனச்
சீதமதியமவான்மருவிச் செழுந்தாமரைகள்வாய்மூடத்
தாதவாம்பல்வாய்திறபபத் தண்ணஙகதிராற்செய்ததே. (கருங)

காழிமுளைத்துமணிச்சிவிகை யூர்ந்துமதுரைசலந்தமணர்
பாழிதொலைத்துச்சமபந்தா பரபபபரந்தநீற்றொளிபோ
லாழிமுளைத்துவிமானமூர்ந் தகலவான்கலந்துகருள்வீக்கம்
வாழிதொலைத்துமதிபரப்பப் பரந்ததம்மாவானிலவே. (கருச)

தண்ணங்கதிர்மீத்தழையவெழும் வெய்யகாமந்தழைதரலான்
வண்ணம்பொலிமேன்மாடத்தும் வளம்பல்பொலிபொன்னரமியத்து
மெண்ணங்கவர்பைம்பொழிலிடத்து மெஙகுமணிமேகலையொலியுஞ்
செண்ணந்திகழஞ்சிலம்பொலியு மெழுந்ததிசையுஞ்செவிடுபட. ()

பொன்செய்மாடத்தரமியத்துப பொற்காற்பரியஙகத்தமைத்த
கொன்செயமளிமிசைத்தனியே யமருமவளவாகுலோத்துங்கன்
மின்செய்மருங்குற்காந்திமதி வேட்கைபெருகவிழியுறங்கா
னென்செய்வாமென்றினைந்துயிர்ப்பா னினையபுகல்வானுயினன். ()

வெண்டாமரைவான்றடமலர்ந்த தென்னவிளங்கும்வெண்மதியே
பண்டாகலியிற்பிறந்தவிட முழுதுங்களத்துட்பதித்துவந்த
வண்டாதிபனின்கலைசிறிதே யணிந்தான்கங்கைச்சடையிடையுட்
கொண்டானலனவ்விடத்தினுமேற் படுநின்கொடுமைகுறித்தன்றே.

படவாளரவமணிந்தபிரான் பகர்தற்கரியபெருவீடு
மடவாராசையொழிந்தாரகே தருவாமென்றுமறைபுகன்றுந்
திடமாமதனைப்பொடிசெய்துந் தேவியொடுமொற்றிததிருந்தான்
விடவாண்மதியேநீயிற்றும வெப்பமாற்றுமையினன்றே. (கருஅ)

மூட்டுதுயரப்பெருங்களங்க முண்மைநோக்கிமுசஞ்சாம்பி
நாட்டுகலைகடேய்ந்துமாய்ந் தொழிவாய்நனிமற்றதுமறந்து
மீட்டுமுளைப்பாய்நாணின்றி வெள்ளைமதித்தேவென்பதே
காட்டுகின்றாயெனைவருத்தி யென்னேபெறுவாய்கலைமதியே.(கருகூ)

கறைபோமெனினுங்கரும்பாம்பு கௌவாதொழிந்துபோமெனினு
நறைவார்கூந்தற்குருமனையை நச்சுபாவமபோமெனினுங்
குறைபோமெனினுமெனைவருத்தும் புரிதிமதியேகுணமிதெனின்
முறையோர்புள்ளுக்குடலரிந்தான்குலத்துமுளைத்தேன்முனிவேனே

ஒருபாதலத்துவந்தவெழிற் காந்திமதியென்னுள்புகுந்து
பொருபான்மையரின்வருத்துமது போதாதென்றுமீதலத்து
வருபானிறத்தசெழுங்காந்தி மதியேவெளிநீவருத்துவையா
லிருபாலருமாலுள்ளுறவும வெளியேகவுமென்னுயிரஞ்சும். (கசுக)

தனியாயினையென்ஞான்றுஞ் சற்றாயினுங்கணில்லாது
முனியாநின்றுவருத்துதலான் மூண்டபழிநின்னடுவுடலை
நணியாதரித்தேறியதறியார் களங்கமென்பாரநகைமதியே
யினியாவருமெள்ளுறவுடல முழுதுமேறுமென்செய்வாய். (கசுஉ)

மீனக்கொடியாய்மிகக்கொடியாய் வெளிநின்றெய்யாதொளிநின்று
கூனற்கருப்பஞ்சிலைச்சுருப்புக் குணத்துமணத்தகணைபூட்டிப
பானற்றடங்கணொருத்திவலி யெல்லாங்கவரப்படர்துயர
மானக்கட்லிற்கிடப்பேனை யெய்வாயிதுவோமாவிறலே. (கசுங)

வில்லாலடித்துங்காற்செருப்பு விதிகாணரியமுடிவைத்துங்
கல்லாலெறிந்துநின்றானைப் புகழ்ந்துபுரந்தகாபாலி
நல்லாய்மலரோன்றிட்டவுனை நகைவெண்மதியக்கவிகையாய்
பொல்லானென்பதுணர்ந்தன்றே பொங்கேர்மேனிபொடிபடுத்தான்

தேனூர்போதுக்கணைதொடுக்கும் போதுசெறிகைவிரல்வழுக்கி
மானூர்மைந்தாமேலழுந்தா வாறுமவ்வாறுகாம
னூனுருடல்பாய்தராரி சேர்க்குமபொழுதேயுண்டிடுந்தேன்
மீனூர்கொடியாயுனக்கின்னா ணளித்துளோருமேலோரே. (கசுரு)

வாலிவலிமையுணர்ந்தெதிரான் வாலிதெரிந்துமறைந்தடுவிற்
கோலியெய்தானின்றந்தை நீயுமறைந்துகொடுஞ்சிலைகொண்
டாலியனையகணைபெய்வா யமாகருநரையராற்றுமற
வேலியழித்தாயபுட்குணத்தாய விதத்துமுளையுமவேறுமோ. (கசுசு)

ஈன்றதிருமால்பிருந்தைதனை யிசசித்துமலக்கணைதொடுத்தாய்
தோன்றவனையாளசெநதழலவீழ்ந தாவிதொலைந்தபின்னருநீ
யான்றகணைகடொடுத்தனையா னவண்மாய்நடலைபொடிமூழ்கி
மான்றவுளத்தனுயர்சுழலச செய்தாய்பிறரைவருத்தாயோ. (கசுஎ)

உரவுமதநீயெய்யுமலா குளிராவெபபமுறுத்துதலாற்
பரவைவடவையார்கலிநீ ரொன்றிபபருகுமுகிலவயிற்றுற்
றரவுமுடிகளொள்புவிபபொழிநீா வழிவந்தாஙகுத்தருகவொடிவோ
விரவுகொண்டுமேற்போய்மென் மலருட்காந்துமேவியதோ. (கசுஅ)

சம்புமலர்த்தாளருசசிக்குந் தக்கோாபுலரிநந்தனத்து
நம்புமலர்காணுநிரஙகப பறிதநேதனுரநாட்டுதலெலலாங்
கொம்புநிகர்சிற்றிடைக்காநதி மகிழையக்கூடற்கதனாலே
வெம்புமெனக்கேயின்பநினைக கெவன்வேள்வீணின்முயலகின்றாய். ()

தொடியாய்மலர்க்கையுமைபாக னுதற்றீமூழ்கித்துசள்பட்டு
முடியாய்தனியருயிரகவாவான் மூண்டுநின்றாயமுனிதொழிலைக்
கடியாய்நெடியகொடுவேழங கையிற்பிடித்தாயகடன்மீனக்
கொடியாயுலகினினைபபோலுங கொடியாருளரோகூறாயே. (கஎ0)

உறையுமேகம்படமாக வொதுஙகுமேகமுரியாக
வறையும்பிறைவாளெயிறாக வாழ்ந்தமுழையேவாயாக
நிறையுநெடியமலயமெனும பாந்தளுயிாத்தநெட்டுயிர்பபே
குறையுந்தமியேனுயிர்கவாவான் றென்றலெனபபேர்கொண்டாயே.

வட்வாமுக்முமுகநாணும் வெய்யமந்தமாருதமே
குடவானிரவிபுகவயிரங் கொடுவெந்துடற்றுவாயெனக்குப்
படவாளரவத்திறையவன்மா துலன்மற்றவன்வாய்பலவுளுமோா
விடவாய்திறக்கிற்றேற்றநீ வீதலதனையுணர்ந்திலையே. (கஎஉ)

கடியதழன்மொண்டிறைக்குமிளங் காற்றேனைதுதிசையொருவி
நெடியகொடுந்தீவலப்பாலு நிருதியென்பானிடப்பாலுந்
தடியமுடியாவலியினுறத் தண்டதரன்வாழ்திசையுற்றுய்
மடியவெனைச்செய்திடுதற்கோ மானமின்றாலுன்செயற்கே. (களங)

விருப்பந்தருதீஞ்செந்தமிழு மேவுதண்மைக்குறுமுனியு
முருப்பந்தவிருநறுஞ்சந்து முற்றமலயபெருவரைவா
யருப்பங்குழவிமாருதமே குளிராவெப்பேயாயினையாற்
கருபங்கழனிமுளைத்தாலும வேம்புசையாதொழியுமோ. (களச)

இயற்கைநினக்குவெபபமே யெனினுமந்தமாருதமே
புயற்கையாதபழனத்தண் பூக்கடோறும்பயின்றுவரு
செயற்கையாலாவதுதண்மை சிறிதுமடைந்தாயலையுகளுங்
கயற்கையாவார்கலியுறையும் வடவைகனலாமையுமுண்டோ. (களரு)

வேறு.

இனையனபன்னிமன்ன னினையநங்குலத்துட்டோன் றிப்
புனையுநம்பெயரும்பூண்ட புரவலன்றனைவருத்துந்
தனையறுமிருளையின்னே தடிவனென்றெழுவான்போலக்
கனைகடன்முகட்டெழுந்தான் காய்கதிர்க்கடவுண்மாதோ. (களசா)

விலங்கலந்தடந்தோட்சென்னி திருமணவிழவுகாண்பா
னிலங்குறுமுலகத்துள்ளா ரொழுவதுநோக்கித்தானுந்
துலங்குபொன்னுடையானுஞ் சுடர்த்தசெம்மணிப்பூணு
மலங்கரித்தெழுந்ததேய்க்கு மலரிசேர்ந்தெழுந்ததம்மா. (களள)

ஏறுடையமலன்றேற்ற மென்னவாளிரவிதோன்ற
வீறுடைமலம்போமாபோல் வீந்ததாலிருளின்பொம்ம
லூறுடைச்சிறுதெய்வம்போ லொழிந்ததுமதியுமோடி
மாறுடையானைக்காணின் மாசுடையார்நிற்பாரோ. (களஅ)

உரவுறுதயவெற்பென்னுங் குலையின்மேலொளியோனென்னும்
பரவன்வெங்கிரணமென்னும் படாவலைகொண்டுதோன்றக்
கரவறநோக்கிவான மென்னுங்கண்ணகன்ற * பட்டம
விரவியவுடுக்களென்னு மீனெலாமொளித்தமாதோ. (களகூ)

இருளெனுமிடியைநீக்கி யிரவியென்றுரைக்கும்வள்ள
றெருளுறத்தோன்றலோடுஞ் செய்யபங்கயங்களென்னும்
பொருவறுவிறலிமார்மென் பூவெனும்வாய்மலர்ந்து
மருவளியென்னுநாவாற் பாடிசைமலிந்தவெங்கும். (கஅ0)

---

* பட்டம்-குளம்.

ஓலிகெழுபரித்தேர்வெய்யோ னுணர்ச்சிசால்புலவனொத்தான்
மலியவன்கரங்கடாமப் புலவன்மாண்செய்யுளொத்த
நலிவறுகமலப்பூக்கள் பொருளமைநண்ணூர்வாயொத்த
பொலிவில்லைங்குமுதப்பூக்கள் பொருளமைநண்ணினர்வாயொத்த. ()

வாடுதலடைந்துதாழ்ந்த குமுதமாமலரினின்று
நீடுறச்செழித்துயர்ந்த திருமலர்கிளைந்துசேரும்
பாடுநல்லிசையவண்டுந் தும்பியும்விரைவுபற்றி
யோடுபுதுலாமிதிக்குந் தன்மையரொத்தமாதோ. (கஅஉ)

இரவுறுதுயரநீங்கி யிர்ம்புனற்பொன்னிநாடன்
பரவுறுபுலரிக்காலைக் கடன்செயப்பரிந்தெழுந்தா
னரவுறுமருங்குற்காந்தி மதியுமாழ்துயரநீங்கி
விரவுறுதோழிமாரோ டெழுந்தனளுவகைவீங்க. (கஅ௩)

திருமணமுடங்கலேற்றுத் தெருளுறுநாகாவேந்தன்
பெருகியசுற்றத்தோடும் பேசருமுவகையோடுங்
குருமணிக்கலன்களோடுங் கொண்டல்கண்படுக்குமாடப
பொருவறுமுறந்தைமேவிப புரவலன்கோயில்புக்கான். (கஅ௪)

பரியின்மேல்வருகின்றாரும் படர்பிறைக்கோட்டுநால்வாய்க்
கரியின்மேல்வருகின்றாருங் கதிர்நெடுமணித்தேரொன்னுங்
கிரியின்மேல்வருகின்றாரும் யானமேற்கிளரும் பொன்னாட்
டரியின்மேல்வருகின்றாரு மாயினர்தேயமன்னர். (கஅ௫)

எங்கணுங்கவிகையீட்ட மெங்கணுஞ்சிவிகையீட்ட
மெங்கணுங்கவரியீட்ட மெங்கணுமொலியலீட்ட
மெங்கணுங்கரிகளீட்ட மெங்கணும்பரிகளீட்ட
மெங்கணுமைந்தரீட்ட மெங்கணுமாதரீட்டம். (கஅ௬)

பல்லியமுழக்கமெங்கும் படுமதகரியார்பபெங்கு
நல்லியன்மகரவீணை நரம்புளரோதையெங்கும்
வில்லியறடந்தோண்மைந்தர் கழலொலிவீக்கமெங்கு
மல்லியங்கோதைமாத ரணிகலத்தமரமெங்கும். (கஅ௭)

தலையொடுதலைகண்மோதுந் தாளொடுதாள்கண்மோதுஞ்
சிலையொடுசிலைகண்மோதுந் தேரொடுதேர்கண்மோதுங்
கலையொடுகாஞ்சிதாங்கு மல்குலார்கவின்செய்கொம்மை
முலையொடுமைந்தர்தோளு மோதுநீண்மறுகின்மாதோ (கஅஅ)

தோடுமொண்குழையுநெற் றிச் சூட்டும்வெண்முத்தமாலைக்
காடுமொண்கரியகூந்தற் கமழலந்தாருமாத
ரோடும்வந்தனைசெய்பாத கலன்களுமிடைகொள்பூணுங்
கூடுமாநெருக்கிற்சிந்திக் குப்பையாய்க்கிடப்பவீதி. (கஅகூ)

அணிகெழுமுறையூர்ச்சென்னி கிளைஞருமமைந்தகேள்வித்
தணிவறுமமைச்சின்மேய தலைவரும்பிறருங்கூடிப்
பணியிறையாதியோர்க்கும படர்திரைசின்றுமபோந்த
மணிமுடிவேந்தர்யார்க்கும் வான்சிறப்பியற்றினூரோ. (ககூ0)

வேறு.

கடிமணவினைசெயுங் காலம்வந்ததென்
றொடிவறுமுணர்ச்சியோ ருறைப்பவோகையோ
டடிபரந்துயர்ந்தகல் யாணமண்டப
முடிமணியரவிறை முறையினெய்தினான். (ககூக)

மின்னகுமுடிகளுங் குழையும்வில்லிடப்
பன்னருமகதிரவா பலரமொய்த்தாலென
வின்னகைமாதர்சா மரையிரட்டுற
மன்னவர்பலருமாங் குற்றுவைகினா. (ககூஉ)

குறைதவிர்கலைமுதுக் குறைவமைச்சரு
மறைபெருந்தந்திரத் தலைமையாளரு
நிறைபெருங்கிளைஞரு நேயமாந்தரு
மறையுணாபுலவரும் வந்துமொய்த்தனர். (ககூங)

முப்புரிநூலினர் முளரியாளியு
மொப்பருமுணர்வின ருவப்பின்மிக்கவா
செப்புறுசமிதைபைந் தருப்பைச்சீரொடு
தப்பறுபுரோகிதா பலருஞ்சார்ந்தனர். (ககூச)

மணவணியணிந்துாம் வளவர்கோனிவ
ணணவுதற்கேற்றதிவ் வோரையாமெனக்
குணமிகுகணிதநூ லுணர்ந்தகொள்கையர்
புணர்வினையாளர்பா லுரைத்துப்போக்கினார். (ககூரு)

நேயமாமரசரு மணியுநீர்மையிற்
றாயரும்பிறரும்வான் சோழறோற்றினை
யேயபொன்னுதனத் தேற்றிமங்கலத்
தாயதண்கங்கைநீ ராட்டினரோ. (ககூசு)

புனைதுகிலொற்றிமெய் யீரம்போக்குபு
வனைமலர்ச்சிகழிகை வயங்கச்செய்துபின்
றனைநிகர்மதிக்கலை தழுவிநிற்பதே
யனையவெண்பட்டிடை யகமுடுத்தியே. (௧௯௭)

விலைவரம்புணர்வதற் கரியமெல்லிழைத்
தலைமையின்விளங்குமுத் தரியஞ்சாத்துபு
கலைமறைமுடியுமென் னுளமுங்காணிகொ
ணிலையுடைபபுகழ்த்திரு நீறுசாத்தியே. (௧௯௮)

திகழ்தருதங்குல தெய்வமாகியே
நிகழ்தருகூவிள கானநேசனைப்
புகழ்தருவார்கதி புகுதப்பூண்வினை
யகழ்தருபரமனைப போற்றிப்போற்றியே. (௧௯௯)

மணிமுடிகுண்டலம் வயங்குதோள்வளை
யணிகெழுபதக்கமுத் தாரமாழிக
டணிசுடர்க்கடகநாண் கழன்முற்செப்புபல்
பணியுமாங்காங்குறப பண்பினுற்றியே. (௨௦௦)

காவதநாறுதண் களபம்பூசிய
மாவலர்மாபிடை வண்டுகிண்டுபல்
பூவலர்மாலையும் பொலியுமாத்தியங்
கோவலர்மாலையுங் குளிரச்சூட்டியே. (௨௦௧)

வல்லியமுயர்த்தசீர் வளவாசிங்கமே
கல்லியறடமபுயக் கற்பதாருவே
பல்லியமுழக்கொடு பலரும்போற்றுற
வெல்லியன்மணவனைக் கெழுகவென்றனர். (௨௦௨)

அந்தணர்பற்பல ராசிகூறிட
வந்தியர்மங்கல வாழ்த்தெடுத்திடச்
சந்திரனிகர்குடை நிழறயங்குறச்
சுந்தரக்கவரிதோ கையரிரட்டவே. (௨௦௩)

புரவலர்கைகுவித் தேத்திப்போதரச்
சுரர்புகழ்மிகுதிறற் சூரவாதித்தன்
வரமணமண்டப மடைந்துமன்னிய
வரதனபீடமே லமர்ந்திருந்தனன். (௨௦௪)

இளங்கதிருதயமொத் திருந்தநம்பியை
யுளங்கனியன்பொடு முற்றுநோக்கினர்
விளங்குசீர் மண்டப மேயயாவருங்
களங்கமிலுவகையங் கடலுண்மூழ்கினர். (உ0ரு)

ஆரியனுகர்கோ னருகடைந்துநின்
வாரியன்முலையினை வருவியீங்கெனப
பேரியலவன்மட வாரிற்பேசவச்
சீரியமாதர்த் திருவைச்சார்ந்தனர். (உ0சா)

எழுதருமங்கையைப் பீடத்தேற்றியே
செழுவிரைதுவர்நனி திமிர்ந்துதெய்வதங்
தொழுதுதண்கங்கையந் தூயநீர்கொடு
வழுவறவாட்டினர் மகிழ்ந்துமாதரோ. (உ0எ)

பொலிகலையொற்றிமெய் யீரம்போக்கினா
மலிகுழற்ககிற்புகை வாசமூட்டினர்
வலிமுலைச்சந்தொடு வாருமேற்றினர்
மெலியிடைக்கோசிகம் விரித்துடுத்தினர். (உ0அ)

வடிவிழிக்கஞ்சன மெழுதிவான்பிறை
படிநுதற்றிலகமூந் தீட்டிபபன்மலர்க்
கடிநறுமாலையொண் கதுப்பிற்சூழ்ந்துநுண்
டுடியிடையலமரக் கற்புஞ்சூட்டினர். (உ0கூ)

வடிவிழிமடந்தையோர் மறைபடதோர்கில
னொடிவறுகதிர்கள்கோ ளுடுக்கணுறக்
கடிகெழுபன்மணிக் கலனெலாமெடுத்
தடிமுதன்முடிவரை யணிதல்செய்தனர். (உச0)

கடிப்பகைசிதறினர் கவின்றமூரல்சால்
கொடிச்சுடாசூழ்ந்துகண் ணெச்சில்கொன்றனர்
தொடிக்கரநுவித்தனர் தோகையந்நலா.
யடிச்சிறுதளிர்பெயர்த் தருள்கவென்றனர். (உகக)

நங்கையும்பைப்பய நடந்துவான்றெடு
மங்கடிமண்டப மணைந்துதாதையைத்
துங்கமாரன்புறத் தொழுதுபோற்றிபபோய்ப்
பொங்குசீர்மன்னவன் புடையிருந்தனள். (உகஉ)

வேறு.

நலமுறந்தணர் நாகர்மன்முன்செலீஇ
யிலகுநீர்நல்கு மோரையிதென்றவு
மலகிலாவுவப போடெழுந்தாத்தியொண்
மலர்கொண்மன்னவன் முன்னாவந்தானரோ. (உகங)

காரவாஙகுழற் காந்திமதிதனைப்
பாரவாநினக் கீந்தனன்பற்றெனச்
சூரவாதித்தன் கைச்சுடாநர்கர்கோ
னீரவாவி நிறையவொழுக்கினன். (உகச)

வியங்கொள்பல்லிய மேகத்தினார்த்திட
மயஙகொள்காந்தி மதிதிருக்கந்தாத்
தியங்கொள்வேலவ னேந்தெழிற்கையினு
னயந்கொண்மங்கல நாண்புனைந்தானரோ. (உகரு)

வடிவமங்கையா வாழ்த்தொலிமலகின
நெடியவாசி நிரபபினரந்தணா
படியுமவானும் பிலமுமபரந்தெழு
முடிவில்பேரு வகைக்கடன்மூழ்கின. (உகசு)

மறையுணர்ந்தவர் யாருமருஙகுமொய்த்
துறையுமானெய் சொரிக்கினொழுக்கிட
நிறையவுண்டு நிலவுற்றெழுநதது
குறைவிலாதசெந் தீவலஙகொண்டரோ. (உகஎ)

பொன்னிநாடன் புணர்முலைநுண்ணிடைப
பன்னிதாமரைச செஙகரமபற்றியே
துன்னிமேலெழு தீவலஞ்சூழ்ந்தன.
னின்னியம்பல வெங்குமுழஙகவே. (உகஅ)

மங்கைமாரர சாயமணிக்குடக்
கொங்கைவாட்கட் கருங்குழற்கோற்றொடிச்
செங்கைநங்கைதன் சீறடிமென்றளி
ரஙகையாலெடுத் தம்மியிலேற்றினான். (உகக)

கற்புவாய்த்த கனங்குழையார்தொழும்
பொற்புவாய்த்த புணர்முலைகாணுற
வற்புவாய்த்த வருந்ததிகாட்டினன்
வெற்புவாய்த்த திரள்புயவேந்தனே. (உஉ0)

மற்றுஞ்செய்யுஞ் சடங்குவழாவகை
முற்றுஞ்செய்து முகிலுஞ்சமழ்ப்புறப
பற்றுமபொன்மணி யாதிபனவாக்கு
விற்றுஙகபபெரு மானனிவீசினான். (உஉக)

மருவுறுது துணாஙகறன்மாய்ந்திடப
பொருவிலாதவா பற்பலாபோந்தெனக்
குருவுலாஞுசெம் மணிகளகொடுத்தன
னுருவுலாமுரா கேசன்வரிசையே. (உஉஉ)

துபபுமுற்பல கொடையுந்துகளறச
செபபியார்க்குநல ஙித்திருநேரிய
னபபுராந்த முலையொடுமமபொன்செ
யொபபுநீஙகு முவளகத்துற்றனன். (உஉங)

மஞ்சடுத்த மணிப்பொற்பரியஙகத்
தஞ்சடுத்த வமளியின்மீமிசைப
பஞ்சடுத்த பதுந்திருமாதொடும
விஞ்சடுத்தமெயக் கொத்தியன்மேவினான். (உஉச)

பாயநாணம் பளிதநறுவிரைத்
தோயஞ்சாந்த மிலைதுவாக்காயிசை
நேயயாழ்முதல யாவுநிரமபுற
வாயமாதர்க ளாங்குவைத்தேகினார். (உஉரு)

இரதியுஞ்சிலைக் காமனுமென்னநற்
சுரதவிஞ்சை தொடஙகத்துணிந்துதன்
கரதலங்களிற் காரிகைமென்கலை
விரதமன்ன னெகிழ்த்தனனமெல்லவே. (உஉசா)

கணைத்தடஙகட் கருஙகுழற்காரிகை
பணைத்தகொஙகைதன் மாபம்பதிதர
வணைத்துமோந்துமொன் றுவிருமெய்களு
மிணைத்ததொப்ப விறுகத்தழுவினான். (உஉஎ)

தழையுமல்குற் றளையவிழ்த்தாஙகது
குழையமேகலை யோலிடக்கொஙகைமேல
விழையுங்கூருகிர் பாயவிளங்குகா
மழையனான்றுவர் வாயமுதுண்டனன். (உஉஅ)

மாதுபூநகொடி மாமணியல்குன்மென்
போதுமற்றதிற பொாநகுஞ்சுவைநல
மோதுதேனஃ துண்ணுமவணடாயினன்
கோதுதீாநத குலோததுஙகசோழனே. (உஉகூ)

நாணமாதி புறத்துநடந்திட
வேணவாவினம மெலலியனங்கையும
பேணவாகுநல லின்பமபெருககெழுச
சேணவாமபுகழச சென்னியோடாடினுள். (உகூ0)

இனையவாறின்ப மெயதியவேந்தல்பால
வினையுமாமுடி மன்னவாயாவரு
நினையுநலவிடை பெற்றனாநீஙகினா
புனையுந்ததம தேயமபுகுநதனா. (உகூக)

கரியவாநகுழற் காந்திமதியெனபா
ளரியநாயகன் பாலொன்றறைவணின
னுரியமாதுலன் பாலென்றுமுளளதோா
பிரியமேவு பெருஞ்சிவலிங்கமே. (உகூஉ)

அனனதனகை யகபபடிறறேவரு
நினனினமிககவ ரலலாநிருபனே
யென்னவுளளத் திருவியிருந்தனன
மனனாமன்னன வளவாசிகாமணி (உகூகூ)

அனையகாலே யரவிறைசென்னிசாா
மனையடைநதனன் கண்டுமருகனு
நினையுமவானசிறப பனபினிரபபினன்
புனையுஞ்சேட னிருநதுபுகலுவான. (உகூச)

அடையலாாநடுங காளரிகேணமதி
படையினேடுவெண பாதலமேவயான
விடையுநலகுதி வேண்டியதுமபுக
றடையிலாதளிப பேனென்றுசாற்றினன. (உகூரு)

மறறவவாாத்தை செவியிற்புகமகிழ்ந்
தற்றநின்பா லுறைசிவலிஙகத்தை
யிற்றைநாளெனக் கீகுதியென்றனன
கற்றசேடன் கலங்கினனுள்ளமே. (உகூகா)

ஒன்றும்வார்த்தை யுரைத்திலனவ்விட
நின்றும்போய்த்தன் னெடுமனைபுக்கனன்
பொன்றும்போதத் துறுதுயர்பூண்டன
னென்றுமித்துய ரெய்தியதிந்திலான். (உ௩எ)

மருளின்மூழ்குபு மண்ணிற்கிடந்தனன்
கருளின்வந்த கடுவிடநுங்கியே
பொருளின்வானம் புரந்தபுராதன
னருளின்மேவிய தம்மசிறுதுயில. (உ௩அ)

துன்றுமன்பன் கனவிடைத்தோன்றியே
நன்றிலிங்க மிரண்டுபடுநயந்
தொன்றுநீகொண் மற்றொன்றவற்கீகுதி
யென்றுகூறி மறைந்தனனெம்பிரான். (உ௩கூ)

பொருந்துமன்பன் விழித்துபபொருக்கென
வருந்துமுள்ள மொருவினன்மன்னுதன்
றிருந்திலிங்கந் திகழ்ந்திருபாதியா
யிருந்ததுங்கண் டளவிலின்பெய்தினன். (உ௪0)

ஆதிநாத னருளேவியந்தொரு
பாதிசென்னிக் களித்தொருபாதியைப
போதுகொண்டுமுன் போலருச்சித்தனன
கோதுநீர்ந்த குணபபுகழ்ச்சேடனே. (உ௪க)

அன்னபாதி யருட்குறிவாநகிய
மன்னர்மன்னன் மனைவிக்குக்காட்டினன்
கன்னலஞ்சொலக் காரிகைமாதுமந்
நன்னர்நண்பனுக் கிதுநவிலுவாள் (உ௪உ)

வேறு.

தன்னையேநிகர் கயிலையென்றுமுனஞ் சார்ந்து
பொன்னையேய்சடைப் புராணநாயகனிடத் தமரு
மன்னைதாள்பணிந் தேத்தினண் மகிழ்ந்தனை யாணிற்
கென்னைவேண்டுவ துரைத்தியென்றருளமற் றென்றாய். (உ௪௩)

ஆண்டநாயகி நின்னடிக்கிடையறா வன்பும்
பூண்டவன்பினின் றிருவடியருச்சனை புரியத்
தூண்டுசோதியிற் பொலிசுடர்த்திருவுரு வொன்றும்
வேண்டுநல்குறி னடிச்சியுய்வேனென விண்டாள். (உ௪௪)

அந்தவாசகங் கேட்டலுமென்னையா ளுடையாள்
சந்தமாருள மகிழ்ந்துபேரன்புமுன் றந்து
பந்தமோவுதன் றிருவுருபபாங்கினென் றியற்றிக்
கந்தவோதியென் றுய்கையிற்கொடுத்திது கரையும். (உசரு)

கதியளிக்குமிவ் விக்கிரகத்தைநீ காந்தி
மதியெனபபெயர் புனைந்துமாமறைவிதி வழியே
பதியுமன்பினற் பூசனையியற்றுதி பாவாய்
விதியுமாலுமற் றெய்தருமபேறெலா மேவும். (உசசு)

இனையபேரரு ளுருவிலயாமென்று நீஙகாது
நினையமேவுவ மிதுதரிசித்தவர் நினைநதோர
புனையுமாமல ரருச்சனைபுரிநதவ ராரும்
வினையினீஙகுவ ரெண்ணியயாவுமே வுவரால. (உசஎ)

என்றுவாய்மலர்ந் தருளினள்விடைமகிழ்ந் தெனறுய
நன்றுபோற்றினள் பாதலநண்ணின ளுடையா
ளன்றுகூறிய பெயரபுனைந்தருச்சிககு நாளின்
மன்றலார்த்தொடை யாயெனைவயிறுவாய்த் தனளே. (உசஅ)

எனக்குமபபெய ரிட்டனளன்பினிவ் விலிஙகந்
தனக்குமன்றவப பணையுருத்தகுதியாங கிடைபபின்
மனக்குநோந்தவோ ரிடத்துறத்தாபித்து வணஙகிக்
கனக்குநற்கதி யடையலாமென்றுகட் டுரைததாள. (உசகூ)

வருமுலைக்கொடி வார்த்தைகேட்டுளநனி மகிழ்ந்து
மருமலர்க்குழா லன்னதுபெறத்தகும் வழிநீ
கருதிவாஙகுறி னுண்டெனக்கரைந்தனன் காரோ
நிருபனஙஙனஞ் செய்வதற்கணங்குநேர்ந்தனளே. (உரு0)

அன்னைபாலணைந் தடிபணிந்தனளெடுத் தணைத்தா
ளென்னைவேண்டுவ துனக்கினிதிசைத்திடு கென்றாள்
பின்னையானென்றும் வேண்டிலன்பேரரு ளன்னுய
தன்னைநேர்பணை யுருவினைத்தருதிநீ யென்றாள். (உருக)

சிறிதுபோதுளத் தெண்ணினடேமொழி மடந்தை
பிறிதுவேண்டிலாப் பேரறிவினுக்குள மகிழ்நதா
ணறியபூஙகுழா ளயந்தனைகோடியா லென்றே
யறிவினுடரும் பணைதிருவுருவெடுத் தளித்தாள். (உருஉ)

வாங்கிககண்ணுற வொற்றினள்சென்னியின் வைத்தா
ணீங்கிக்காதலன் றிருககையிற்பறையுரு நீட்ட
வோங்கிபபொஙகுபே ரன்பினுன்வாஙகியுள் ளுவநதா
னேங்கிச்சாமபுநண் ணிடையினுள்பின்னுமீ நியற்றும. (உருங)

தெருளின்மேவிய நாயகன்செங்கையிற் றன்பா
லருளின்மேவிய வாய்மணியிலிங்கமோ ரைந்தும
பொருளின்மேவிய பெருமையவெனபபுகன றளித்தாள்
கருளின்மேவிய கனங்குழன்மடந்தையக காலே. (உருச)

அரவநாயகன் வளவர்கோனருளவிடை பெற்றுன்
பரவுகேளொடு பாதலமபுகுந்தன னிருநதா
னிரவுநோகுழன் மாதொடுமின்பமுற் றிருக்கு
முரவுசாலபுயத் தாருடையனையன்மற் றெருநாள். (உருரு)

வேறு.

தன்பாலிருக்குஞசிவலிஙக மாறுமனேவிதனையினற
மின்பானின்றுமவந்தபரா பரைதன்விளஙகுதிருவுருவு
மின்பாலயஞ்செயததிற்றுபித தென்றுமவணஙகியேததெடுபப
வன்பாலுள்ளத்தெண்ணினு னரசனற்றைநாளிரவில. (உருசா)

தூயவிலிஙகமோராறு மொனறேயாகிசசுருமபிசைககும
பாயமலர்விலவாரணியம் படாநதோாவிலவமுதன்முனைத்து
நேயமிகமேலெழுந்தாறபோ லிருந்தநிலவுபரையுருவு
மாயவொருபாலுறைந்ததுவின் றுஙியுலாமதிரயிபப. (உருஎ)

வழிநாள்வளவன்பரையுருவோ டிலிங்கமவைத்தவறைதிறந்து
கழியாதரவினேக்கினுன் கண்டானலலன்கலஙகினுன்
விழியாருவிபொழிதரநெட் டுயிாபபுவீழகவிமமுவா
னெழியாதெழுந்தவறாககடறகோா புனைாணுமலுயஙகுவான். ()

னென்னற்பொறிததவிலசினையுந சிதையாதிருககநெடியகொடும
பன்னறகரியவககாட்டும புறமாாகாபபுமபடாந்திருகக
வென்னறகருணைக்குறிகளகவாந தேருவாருமுளாகொல்லோ [ன்.
வின்னற்றமியேன்பிழையுணாநதேயிரிந்தவாமென்றுளஙகொண்டா

மன்றுளாடுமாமணியே வானத்தவாகள்போரேறே
நன்றுள்வார்தமகத்தொளியே நாளுந்தழையுங்கற்பகமே
மின்றுள்வானீர்மழைபெயல்போற் கருணைமழைபெய்மேகமே
யின்றுளறியபபிழைத்திலே னெஙகுற்றுயோவிரஙகாயே. (உசுப

பொன்னேயென்னுந்திருமேனித் தேவேபுலவர்சிங்கமே
மின்னேயென்னுஞ்செஞ்சடையாய் வேயார்தோளியொருபாகா
முன்னேதொழியும்பின்னோர்த முள்ளத்தொளியாமுழுமுதலே
யென்னேசிறியேன்பிழைத்துளே னெங்குற்றுயோவிரங்காயே.

நந்தாவொளியேசுவைத்தேனே நாடற்கரியாய்திருமாலும்
பந்தார்முலையாளொருபாகா பைவாளரவப்பணியானே
வந்தாயருளுற்றடியேன்பான் மறைந்தாயிதுவுமெனமாய
மெந்தாய்சிறியேனென்பிழைத்தே னெங்குற்றுயோவிரங்காயே.

பாறுர்சூலப்படையாய்வான் பரவுங்கங்கைச்சடையாய்வெண்
ணீறுர்மேனிப்பெருந்தகையே நெடியோனறியாநின்மலனே
மாறுரசுரர்புரம்பொடித்தாய் வானம்புரந்தமணிகண்டா
வேறுர்கொடியாயென்பிழைத்தே னெங்குற்றுயோவிரங்காயே.

விடையாய்ச்சுமக்கவல்லானே விழிசூன்றடியினிடுவானே
புடையாயுமையென்றுறைவானேபுரங்கொல்வதற்கம்பாவானே
கடையானிவனென்றெனைநினைந்தோ கைவிட்டனைகட்செவிசூழ்
விடையாய்சிறியேனுனுலு மிரங்கவேண்டுமினித்தானே. [ந்த

மறையின்முடியோபேரன்பர் மனமோமேலைச்சிவபுரமோ
நிறையுங்கருணைப்பிராட்டியொடுமெங்குற்றாய்நின்மலனேயென்
றறையுமரற்றுமேங்கும்வீழ்ந் தயருமுயிர்கருமொருமிடியன்
குறைவினிதியம்பெற்றிழப்பி னுறுவதுற்றான்கொற்றவனே. ()

இன்னவுரைத்துநனிபுலம்பு மளவிற்காந்திமதியென்பாண்
மன்னர்மன்னன்பாலடைந்தா ளுறறதுணர்ந்துமயங்கினு
ளன்னகாலையமைச்சர்முத லாயபலருமாங்குற்று
ரின்னல்வேலைமூழ்கினு ரவனைநோக்கியிறையிசைக்கும். (உசுசு)

கண்ணுமுயிருமெனக்கானீர் கருணைப்பெருமான்குறிகளோ
டண்ணுமமலைதிருவுருவு மறைந்தமாயமறிந்திலே
னுண்ணும்படிசெந்தழலுடலை யுதவிலேன்வாளகொடுபோழே
னெண்ணும்படியாண்டரசுசெயவிச்சைபூண்டேனிருக்கின்றேன்

நெறியையிழந்துங்குலமிழந்து நீதியிழந்துமரசிழந்தும்
பறியையிழந்துந்திருவிழந்தும் பார்வையிழந்தும்பண்பிழந்தும்
பொறியையிழந்தும்வாழ்தலுமாம் போற்றுங்கருணைப்பரமனரு
குறியையிழந்துவாழ்வாரு முளரோவுலகிற்கூறீரோ.

நல்லார்யாருமடியார்போ னடிக்குங்கள்வனிவனென்று
சொல்லாநிற்பர்நீதிவழீஇ நின்றானதனுற்சுடர்க்குறிக
ளெல்லாமகன்றுபோயினவா லென்றுமிசைப்பலென்செய்கேன்
கல்லாமனத்துக்கடையனே னடைந்தபேறுகண்டீரோ. (உசுசு)

பழியுமுடலுமொருங்கியான் பரிக்கமாட்டேன்மாட்டேனென்
றழியுமிறைவன்றுணிவையுணர்ந் தயர்ந்தார்யாருமப்பொழுது
வழியுநறவமலர்வில்வ வனத்துவாழும்பெருமானார்
பொழியுமருளாலெதிரேநின் றிருத்தோற்றமற்புகலுவார். ()

வாராய்புகழ்சால்வளவர்குல மணியேதணியாப்பேரன்பி
னீராய்நின்னையகன்றியா நீங்கேநீங்கேமெஞ்ஞான்றும்
பாராய்தருசீர்வில்வவனப் பளகில்பெருமையுணர்ந்திலா [ய்.
யாராய்தருவேறிடங்கோயி லமைத்துப்பதிட்டைசெயநினைந்தா

உள்ளத்ததனையுணர்ந்துபுக ழோங்கும்வில்வவனம்புகுந்தே
யெள்ளற்கரியவாறுருவா யிருந்தநாமோருருவாகித்
தள்ளற்கரியமாலூரத் தருவின்மிழலையிருக்கின்றாம்
விள்ளற்கரியவத்தான நாளுமெமக்குமிகுவிருப்பாம். (உஎஉ)

முன்னரிருந்தபடியெல்லா முரியுலகமுணர்ந்துய்யப்
பன்னற்கருஞ்சீர்நிறமைந்தும் பாதியுருவுங்கொண்டிருந்தாங்
கன்னற்குதலையந்தீஞ்சொற் காந்திமதியுங்குடைந்தோர்த
மின்னற்பகையாஞ்சிவதீர்த்தத் தெதிரேவிளங்கியிருக்கின்றாள்.

இன்னுங்கேட்டிநின்போலன் புடையார்காணவெஞ்ஞான்று
மன்னும்புலரியரதநமாய் வயங்கும்பகலிற்படிகமாய்
முன்னுமாலேக்கனகமாய் முதல்யாமத்துவயிரமாய்த்
துன்னுநடுயாமத்தெல்லா நிறமுமாகித்துலங்குறுவேம். (உஎச)

கற்பிற்பொலிநின்மனைவியொடும் வந்துகாண்டிகருதியவா
றற்பிற்பொலியாலயமாதி யாவுமமைத்தியென்றையர் [தான்
பொற்பிற்பொலிவாய்மலர்ந்தருளக் கேட்டான்றொழுதான்பூரித்
வெற்பிற்பொலிதோணீர்நாடன் வேறுளாருமனமகிழ்ந்தார். ()

மனையாள்சிவிகையூர்ந்துவர மற்றையோர்பின்றொடர்ந்துவர
நனையாரலங்கலிறையவணின் றெழுந்துநடந்துவிரைந்தேகிச்
சினையார்வில்வவனம்புகுந்தான் றேடியயன்மால்காணுதான்
றனையாதரவிற்கண்ணுற்றான்றடங்கைகூப்பித்தாழ்ந்தெழுந்தான்

உற்றூர்பிரிதற்கரியானை யொளிரைவண்ணப்பெரியானைக்
கற்றூர்கலங்கத்தரியானை நோக்கிநோக்கிக்களிசிறந்தான்
பொற்றூரணிந்தபுயவளவன் பூவையானுமென்பதியு [ள்.
நற்றூரணியுய்ந்தனமென்றுநவின்றுள்ளுருகித்தொழுதெழுந்தா

பொலியுங்காந்திமதியுமைபாற் போந்துளுருகிப்பணிந்தெழுந்து
மலியுங்கருணையன்னாயெம் பெருமானுடனவந்தனைநீயு
மெலியுமெங்கண்முகம்பாரா விதந்தானெனென்னென்றன்புடனோர்
கலியும்பொருவாவருள்வேந்துங் காந்திமதியுந்துதித்தனரால். ()

பெருகுமன்பிற்பணிந்தெழுந்தான் பிரியாவிடைபெற்றங்ககன்று
கருகுங்கூந்தற்றேவியுநூல் கற்றவமைச்சர்முதலோரு
மருகுசூழநடந்தேகி யரசன்றிருமாளிகைபுகுந்தான்
குருகுபுனைவாயுணரொன்றன் கோதிறவத்துககாசிபனே. (௨௭௯)

அன்றுசூரவாதித்தன் கதையினீவிரறியலா
நன்றுநிறமைந்தெம்பெருமான் முனிக்குத்தெரித்தநலமென்று
மின்றுதேர்மின்முனிவாகா ளினையகாதைகறறுணாந்தோர்
முன்றுணிறைந்தானருள்பெறுவ ரொன்றுநவின்றன்வளர்சூதன்.

சூரவாதித்தப்படல முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் ௧௦௧௫

---

## திருவிழாப்படலம்.

யாவர்தநாம மிசைத்திடவல்ல
நாவரனுரு ணயந்துறையையா
மூவர்பராவ முதாயவைவண்ணத்
தேவர்விழாவுறு சீர்மைதெரிப்பாம். (௧)

விதுமுகவாள்விழி வேய்புரைமென்றோண்
மதுமலரோதியங் கத்துருமங்கை
சதுமுகனோவரு மாமுனிதாண்மென்
பதுமமலர்த்துணை பற்றிவணங்கா. (௨)

திருவுறையூரமர் செம்மலுதங்கற்
கருமைசெய்காலமோ ரைந்தினுமைந்து
மருவுநிறங்க டெரித்தருண்மாண்பிற்
கொருவருமேது வுணர்த்தினைமாதோ. (௩)

இக்கதைகேட்ப விகற்பிணிவாதை
யுக்கதுபண்டை விளக்கமதுற்றேன்
செக்கர்கொள்வான்பிறை செஞ்சடைவைத்த
வக்கரவப்பணி யாரருள்பெற்றேன். (௪)

நன்னர்மனைக்க ணடைந்தநரோந்திரன்
பின்னரியற்றிய தியாதுபிறங்க
வின்னருளுற்ற திசைத்திடுகென்றாள்
பன்னருமெய்ப்புகழ் மாமுனிபன்னுவா. (௫)

வேறு.

நன்செய்சூழ்புன னாட்டிறை
கொன்செயமந்திரரை கூவியே
மின்செய்வேணி விமலருக்
கின்செய்கோயி லியற்றிட. (௬)

அறைதிறந்துநம் மருநிதி
குறைவில்கம்மியர்க் கூவியே
நிறையவீசுமி னீள்வினை
யிறைமற்றோருக்கு மீயுமின். (௭)

ஏற்றயானையு மீட்டுமின்
போற்றுகானமும் போக்குவித்
தாற்றவலவிரைந் தாக்குமின்
சீற்றமோவிய செய்கையீர். (௮)

என்றுசென்னி யியம்பலு
நன்றுநன்றென் றிறைஞ்சிநா
லொன்றுகேள்வி யுணர்ச்சியோ
ரன்றுமூண்டன ரத்தொழில். (௯)

ஆய்ந்தசெய்வினை யாளர்பால்
வாய்ந்தசெம்பொன் வழங்கினா
ரேய்ந்தமற்றவ ரேகிவான்
றோய்ந்தகானந் தொலைத்தனர். (௧௦)

வேறு.

நிலந்திருத்தினர் மதின்முதற்பலவடி நிலையும்
வலந்தரப்புவி போழ்ந்துநுண் மணலறல்பெய்து
குலந்தழைத்ததோற் கானிகர்குற்றிகொண் டிடித்துக்
கலந்தவன்கணார் மனநிகர்த்திறுகுறக் கண்டார். (௧௧)

கல்லடித்துமே லடுக்குநரோர்சிலர் கருப்பி
னல்லகட்டிநீர் கரைக்குநரோர்சிலர் நையச
சொல்லருஞ்சுதை யரைக்குநரோர்சிலர் துணிந்து
வல்லவிட்டிகை யியற்றுநரோர்சிலர் மாதோ. (௧௨)

தூணமுத்திரம் போதிகைகொடுங்கைநுண் டொழிலின்
மாணவாக்குந ரோர்சிலர்வரைபல தகர்த்துக்
காணமீமிசைப் பரப்புகலொடுவரிக் கல்லும்
பூணவாக்குந ரோர்சிலர்தொழில்புரி வாருள். (௧௩)

பண்டியேற்றினர் கொடுவருவார்சிலர் பற்றி
மண்டிமற்றவை யிறககிடுவார்சிலர் வன்மைத்
தண்டின்மேலெழ வெழுபபிடுவார்சிலர் தாங்கிக்
கொண்டியற்பட நிறுததிடுவார்சிலர் குறிகல். (௧௪)

தேக்குமுற்றரு வறுப்பவரோர்சிலர் தீங்கு
போக்குதிண்கத வாக்குநரோர்சிலர் புலிங்கந்
தாக்குவல்லிரும் படிப்பவரோர்சிலர் தடங்கை
யூக்குகூரல்கொண் டச்சுறவுரப்புவார் சிலரே. (௧௫)

அண்டர்கைதொழு விமானமாமண்டப மத்த
மண்டபம்புனை நிருத்தமண்டபமகச் சாலை
கொண்டல்கண்படு திருவிழாமண்டபங் குலவு
பண்டமேவலங் காரமண்டபமடைப் பள்ளி. (௧௬)

கண்ணளாவிய காந்திசேர்மதிப்பெயர்க் கௌரிப்
பெண்ணளாவிய கருணையினுறைபெருங் கோயில்
விண்ணளாவிய கோபுரம்வெளிமதில் விளங்கு
மண்ணளாவிய வுண்மதிலடுக்குமண் டபங்கள். (௧௭)

ஏர்கொளோங்கர ளுதிதண்டீசனே யிருச்
சீர்கொள்சூழுறை தேவராலயஞ்செழும் பொற்பூண்
பேர்கொள்பன்மணிப் பூணமைத்திடுபிறங் கறைகள்
வார்கொள்வாகன மண்டபமற்றும்பல் லறைகள். (௧௮)

மேவுமாயிரக் காலுடைமண்டபம் விண்டோய்
பாவுநூற்றுக்கால் மண்டபமாதியாப் பகரும்
யாவும்யாவரு மதிசயித்துறுகளி யுறவா
சோவுசிற்பநூல் வழியமைத்தாருழு தொழிலோர். (௧௯)

வந்துசூரவா தித்தனுமதிசய மருவ
நந்துமோகையிற் றிருப்பணிநலமெலா நோக்கி
முந்துபொன்மணி யாடையாதிகள்பல முகந்தாங்
குந்துமன்பின்வீ சினன்றபதியாமுத லோர்க்கு. (உ0)

சுந்தரந்திக ழைங்கரன்குமரவேள் சோமாக்
கந்தர்சந்திர சேகரர்நடனவில் கழலார்
சந்தமென்முலை யம்மைதண்டீசர்முற சாற்று
மந்தமில்லவர் யாவருந்திருவுரு வமைந்தார். (உக)

சொலலரும்புகழ்ச சூரவாதவனெனுஞ் சோழ
னல்லதூபககா றீபக்கானகுமணி விளக்கம்
புல்லுதண்டுபொற குடநகரகம்பொலி கலச
மொல்லும்வட்டகை மற்றவுமுனுற்றுவித் தனனே. (உஉ)

ஆதிசைவரை மற்றகம்படித்தொழி லாரை
நீதியாலழைத் தளவறுதிருவொடு நிறுவிக்
கோதிலாமறை யாகமவிதிப்படி குலவத்
தீதில்கும்பநீ ராட்டுவித்தனன்றிகழ் நாளில். (உங)

பொருவில்பாடலு மாடலும்வழாவகை பொலியப்
பெருகுகாதலி னுலகுதாழ்ந்துறுகளி பெருக
வருள்விராவுறு மூன்றுறுப்புங்குறை யாமன்
மருவுபூசனை நடத்துவித்தனன்கதிர் மருமான். (உச)

கதிருழக்குநெற் கதிகமாவிளைகழ னிகளு
முதிர்சுவைப்பல கனியுடைசசோலையு முழுவா
னதிர்தரக்குளி றுங்களிற்றியானையு மாடற்
கெதிரில்வாசியும் பசுக்களுமெண்ணற வளித்தான். (உரு)

தவவிளங்குமா மணிமுடிகுண்டலந் தவாவா
குவலயம்பதக் கங்கபாய்கநகணங் குலவு
பவளநித்தில மாணிககமாலைமுற் பலவுஞ்
சிவபிரானுக்கு மம்மைக்குஞ்செய்வித்துச் சேர்த்தான். (உசா)

தெய்வமால்விடை வாம்பரிகுஞ்சரஞ் சிவிகை
மைவிராவுமூ டிகமனஞ்சுகம்பெரு வையம்
பைவிராவுவாய் மயின்முதலூர்திகள் பலவுங்
கைவலாளாக்கொண் டமைத்தனன்கதிர்க்குலக் காளை. (உஎ)

ஆலவட்டமு மலங்குசாந்தாற்றியு மம்பொற்
கோலவட்டவொண் கவிகையுங்குலவுசா மரையு
ஞாலவட்டமேத் தெடுக்குமற்றுள்ளவு நயந்து
சாலவட்டமூர்த் திக்கினிதியற்றுவித் தனனே. (௨௮)

எம்மையாளுடை யிறையவனிலங்குசந் நிதியும்
வெம்மைதீர்த்தருள் பராபரைமேவுசந் நிதியு
மும்மையாமுல கத்துளார்முறைவந்து மொய்ப்பச்
செம்மைவாய்ந்துமெய்ச் செல்வத்திற்பொலிந்தன சிறந்தே. ()

மருவுபத்தியே யுருவமாகியகதிர் மருமான்
பொருவில்பஞ்சவர் னேசர்க்கும்பொய்யிலே னுளத்து
மொருவுறுததாட் காந்திசேர்மதிப்பெய ருமைக்குந்
திருவிழாச்செய வெண்ணினன்சிந்தையுண் மாதோ. (௩0)

சிவபிரானுறை யூரமர்தெய்வநா யகனுக்
குவமையில்லதோர் திப்பியமகோற்சவத் திருநா
ளிவருமாசையிற் சேவிக்கவம்மின்க ளென்று
புவனமன்னவர் யாவர்க்குந்திருமுகம் போக்கி. (௩௧)

கொடியமாடவீ திகடொறுந்தோரணங் குலவ
நெடியவாழையுங் கன்னலுங்கந்தியு நிரம்பப்
படியயாத்திடு மின்சுடர்பலவமைத் திடுமின்
முடியவிக்கணத் தெனநகர்மாந்தர்க்கு மொழிந்து. (௩௨)

புனிதநாயகன் றிருவிழாச்சிறப்பிற்குப் புகலு
மினியவாமுப கரணங்கள்யாவையு மீட்டிக்
கனிவின்வைகுநாள் வானவர்முனிவரர் கணங்க
ளனிகமன்னவர் யாவருமாங்கடைந் தனரே. (௩௩)

யாருமெய்திட் மகிழ்ந்திறையாலய மடைந்து
பாரும்விண்ணுமேத் தைவண்ணப்பிரானடி பணிந்து
தேருநாயகர்க் கினிதபிடேகமுஞ் செய்வித்
தேருலாமர தநவணியெடுத்தணி வித்து. (௩௪)

இன்பநல்கிவ ரரதநாயக ரேயென்
முன்புமல்கவோர் மனுவெனுந்திருப்பெய ரறைந்து
நன்புகழ்ச்சிசால் விடையெழுதாடையை நயந்து
துன்பறத்திரு நகர்வலஞ்செய்வித்தான் சோழன் (௩௫)

பாயுமால்விடைத் திங்களின்மதிவளர் பக்கத்
தேயும்வான்றிதி யாதிஞெண்பல்லிய மியம்பக்
காயுந்தீவினைத் தொண்டர்கள்களிசிறந் தார்ப்ப
வாயுமன்னன்வெள் விடைக்கொடியேற்றுவித் தனனால். (௩௬)

திருந்துபல்சுவைக் கறியமுதொடுதிரு வமுது
மருந்துகோர்கலா தென்றிருவிலாப்புடை வயங்க
வருந்துமாறுபல் லந்தணர்முதலியோர்க் களித்துப்
பருந்துசூழ்புலால் வேலினுவபாகடை நல்கி. (௩௭)

கதிசெய்மங்கலப் பிள்ளையுமிளவலுங் காந்தி
மதியுமாபுகழ் வாய்ந்ததண்டீசனும் வானப்
பதியர்போற்றிடு சிறப்பொடுமுடன்வரப் பரவு
சதிரருட்டிரு வரதநாயகர் தம்மை. (௩௮)

மறைமுழங்கவல் வாழ்த்தொலிமல்கமா லயனுக்
கிறைவனவந்தன னெனத்திருச்சின்னநன் கியம்ப
வறைகடற்புவி யடங்கலுமரகர வென்ன
நிறையுமாப்புகழ் நகர்வலஞ்செய்வித்தா னிருபன். (௩௯)

மன்னுசத்தமி யிற்பொலிகற்பக மருவிப்
பன்னுநாயக ரம்மைமுன்னுல்வரும் படரத்
துன்னுமாநகர் மணிமறுகிடைவலஞ் சூழ்ந்தார்
பொன்னுமாமணி யுங்கதிர்க்குலமகன் பொழிய. (௪0)

ஓதநஞ்சமுண் டும்பனைப்புரந்தவ ருடனே
மாதர்மைந்தர்க டமக்கியையூர்திமேல் வரவான்
சீதமாமலர் பொழியவட்டமித்தினங் குறுத்தாட்
பூதமேறிவந் தளித்தனர்காட்சிவான் புவிக்கு. (௪௧)

மயிலைநேரியன் மங்கையுமாமுகத் தேவு
மயிலையேந்துகைச் சாமியுஞ்சேய்ஞலூ ரரசு
மெயிலைவீதியூர் தியின்வரவெங்கணு யகர்வான்
கயிலையேறிவந் தளித்தனர்நவமியிற் காட்சி. (௪௨)

உடைதிரைக்கட லொத்தியமொலிப்பவூர் திகளூர்
விடைமலைக்கொடி மைந்தர்களுகைத்தினி தெய்தச்
சடைமுடித்தநம் மரதநநாயகர் தடாவெள்
விடையுகைத்தனர் தசமியில்யாவரும் விரும்ப (௪௩)

ஏலவார்குழ லம்மைபொற்சிவிகைமே லெய்த
ஞாலமேத்துதம் மூர்திமும்மைந்தரு நடாத்தக்
காலகாலர்குஞ் சரமுகைத்தனர்கவி யாணக்
கோலமேவியே காதசித்தினநலங் குலவ. (சுச)

தந்தியாளிமுன் வானவர்யாவருந் தாழப்
புந்திமேவுமை முதலியோர்களுமுடன் போத
வந்திவான்மதி மிலேச்சியசெழுசடை யழகர்
நந்திமீதிவர்ந் துலவினர்துவாதசி நாளில். (சுரு)

புங்கவூர்திமே லுமைமுதனல்வரும் போதப்
பங்கமோவிய மறுகிடைப்பாய்பரி யுகைத்தா
ரங்கண்ஞாலமும் வானமுமகங்களி தூம்பத்
திங்கள்வேணியர் செழுந்திரையோதசித் தினத்தில். (சுசு)

அன்றுவைகறை நறுந்திருமஞ்சன மாட்டித்
துன்றுபொற்கலை யுடுத்தியொண்சுடர்மணி யணிக
ணன்றுபல்லவு மணிந்துநாயகர்முத லோரை
யொன்றுபீடத் தேற்றினர்சதுர்த்தசித்தின வுதயம். (சுஎ)

வேறு.

மாயவன்பிரமன்வான மன்னவனுதியெண்மர்
பாயசீர்வசுக்கள்செங்கேழ்ப் பரிதிவான்மதியியக்கர்
தூயகந்திருவர்வித்தி யாதரர்சுரரொண்சித்தர்
நேயமாதவர்கள்பூத ராதியர்நெருங்கிமொய்ப்ப. (சுஅ)

அணிமுலையரம்பைமாத ரழகொழுகுரகமாதர்
மணிநகைவயங்கேழ்மாதர் மானிடமாதராதிப்
பணிபுனைமாதர்பல்லோர் படரொளிமண்டபத்துந்
திணிசுடர்மறுகிடத்து நின்றுதஞ்செங்கைகூப்ப. (சுகூ)

குடமுழாமுழவந்தாளங் கொக்கரைதடாரிமொந்தை
படகமொண்சங்கந்தக்கை பகர்தருதகுணிபேரி
தடமலிமுருடுவீணை சல்லரிகுழல்யாழின்ன
கடலொடுமுகிலுநாணங் கைக்கொளமுழக்கஞ்செய்ய. (ருO)

வேயுமாமதியோன்வந்தான் வில்லவனேசன்வந்தான்
பாயுமால்விடையோன்வந்தான் பஞ்சவர்னேசன்வந்தா
னுயுமாபுகழ்சால்காந்தி மதிபுணரழகன்வந்தா
னேயுமாதேவன்வந்தா னென்றுசின்னங்களூத. (ருக)

மருவியபாடற்பண்பு மரைமலர்க்கையிற்காட்டிப்
பொருவறுவதனபபோதிற் பொருவிழிக்கயலுலாவ
வொருவறுசதியினேர வொளிரடிபெயர்த்துவைத்துக்
குருமலர்நிறையப்பூத்த கொம்பனார்நடனஞ்செய்ய. (ருஉ)

பிறைமருப்பொருத்தல்வாவும் பரிகண்முன்பெயர்ந்துசெல்ல
நிறைமதியனையநீர்மை நித்திலகுடைநிழற்றக்
கறையில்பொற்கவரிவீசக் கச்சமிறீபமொய்ப்ப
விறைவராதியரைத்தாங்கி யேகினார்மறைவல்லோர்கள். (ருங)

ஆயபொன்மலைநேர்வைய மைந்தினுமருள்சாறெய்வ
நாயகர்முதலியோரை யேற்றினாநயந்துமுந்தித்
தேயமன்னவர்முன்யாருஞ் செங்கையின்வடந்தொட்டார்கண்
மேயதேரைந்துமெல்ல நடந்தனவீதியூடே. (ருச)

திருமணித்தேரிற்றோன்றுந் தெய்வநாயகரைநோக்கிக்
குருமணிப்பணிபூண்கொங்கைக் கொவ்வைவாய்ச்செவ்விமாத
ருருமணிச்செங்கைகூப்பி யளவறுகாதல்கொண்டாங்
குருமணிகுயிற்றிச்செய்த வோவியமொப்பநின்றார். (ருரு)

துணைமுலைசுமக்கலாற்றாச் சுருங்குநுண்ணுசுப்போர்மங்கை
பணைமருள்பசுந்தோட்டோழி பங்கயவதனநோக்கி
யணையுமற்றிவர்தோண்மாலை யளிப்பரோவென்றாளன்னா
ளிணையிலீன்றனைநீயுங் கொன்றிடிலீவரென்றாள். (ருசா)

மலங்குபூங்கொம்புபோல்வா ளொருத்தியோர்மாதைநோக்கி
யலங்குபொற்றேரிற்றோன்று மாண்டநாயகரைக்கண்டேன்
றுலங்குமற்றவரைவண்ணத் தொன்றெனச்சொல்லுஞ்செம்பொ
னலங்கிளர்வண்ணம்பெற்றே னென்னிதுநவிறியென்றாள். (ருஎ)

மாலுடையொருத்திமற்றோர் மடந்தையைநோக்கியும்மு
பாலுடையொருத்திதீராப் பசப்பினளென்னில்விண்டுக்
கோலுடையிவரைக்கண்ட நமக்கெவன்கூடுமென்றாள்
சேலுடைவிழியன்னாளு முள்ளதேதெரித்தாயென்றாள். (ருஅ)

மடத்தகையணங்கோர்மாது மற்றொருமாதைநோக்கி
யிடத்தொருபெண்ணிலாரோ லெண்ணியதெளிதாமென்றாள்
குடத்தனவவளுமைய ரிடத்துமின்கொண்டிலாரோற்
கடற்கருவிழியார்க்குங் காமமுமின்றேயென்றாள். (ருகூ)

நண்ணியவழகரோயுண் ணயந்திடுமடியாரானு
ரொண்ணியவெண்ணியாங்கே யளிப்பவரொன்றுநும்மைப் [ங்
புண்ணியருரைத்தலெல்லாம் பொய்ம்மையோபொருந்தெனுள்ள
கண்ணியதளித்தச்சொல்லைப் புதுக்குமென்றனளோர்கன்னி.()

தோழியைநோக்கிவேற்கட் டுடியிடையோர்மடந்தை
யாழியிவ்வையநசசு மழகரொனல்குல்வையம்
வாழிநச்சுவரோவென்று ளவளுநினல்குல்வையம்
வீழிவாய்மடந்தாய்மெய்யே நச்சுதன்மெய்யேயென்றாள். (சுக)

பணக்கோலவல்குலாளோர் பாவைதோழியைப்பார்த்தென்னை
மணக்கோலஞ்செய்வரோமற் றிவளொன்றாளவளுமாதே
யணக்கோலமறைக்குமெட்டா ராற்றுவார்கொல்லோவண்டுக்
குணக்கோலமாரவேளே யதுசெயுங்குறிக்கொளென்றாள்.(சுஉ)

மடக்கொடியொருத்திமற்றோர் மங்கையைநோக்கியென்னிப்
படக்கலமுடையானென்னை வலக்கணானேக்கப்பார்த்தே
னடக்கரும்வெப்பமேனி யாயினதென்றாளன்னா
ளிடக்கணானேக்கின்முற்றுங் குளிருமாமின்பமென்றாள். (சுங)

யாருமேத்துறந்தைமேய வழகரேசடைமேற்கங்கை
நீரும்வான்மதியுஞ்சூடு நிமலரோநெடியபொற்றே
ரூருநாயகரேயென்னி னும்மைவந்தடைந்துமாலைச்
சேருதன்முறையோவென்றாள் சிறுநுசுப்பொருபூங்கோதை. ()

கையமராழிதம்பி னென்றுகண்ணீர்பெயர்த்து
மையர்நம்முறந்தைவாணர் தந்திலராயுந்தோழி
செய்வதென்னென்றாளாங்கோர் திருவனாளவணீர்மட்டோ
மைவருகண்ணும்பேர்க்கிற் றருகுவர்மறையாரென்றாள். (சுரு)

தோன்றமேலெழுகுயத்தோர் தோகையோர்மாதைநோக்கிச்
சான்றவர்புகழுமிந்தத் தனிமுதற்பிரானுமொன்னை
யான்றநன்மணஞ்செய்வாரோ வென்றனளவளுமுன்னை
யீன்றவன்வரைக்குவேந்தோ வழுதியோவியம்பாயென்றாள். ()

வையமேற்பொலியுநெடுங்கண் மாதேவர்முன்புசென்றோர்
தையல்கைகுவித்துநின்று சாமிநீகருணையால்வந்
துய்யவெற்புணரினஃதே போதுமற்றொருவர்போலுன்
மெய்யினிற்பாதிவேண்டேன் விதுவென்விண்ணப்பமென்றாள்.()

கள்ளுலாமலங்கலோதிக் காரிகையொருத்திபொற்றே
ருள்ளுலாமழகியார்முன் சென்றனளுரைக்கலுற்றாள்
வள்ளுலாமழுவீர்காந்தி மதியெனும்பெயரோவைத்துக்
கொள்ளுவேன்பசப்புமுள்ளேன் கூடுறத்தடையென்னென்றாள்

பாலறிகுதலையாளோர் பாவையோர்கொடியைநோக்கிச
சேலறிவிழியாய்காமத் திறமொழியேற்றிலாரிவ்
வாலறிவுடையரொன்னே யென்றனண்மற்றங்காரு
மாலறியாருக்கிந்த வார்த்தையேற்றிடுமோவென்றாள். (சுகூ)

சந்துவாழ்முலையினாளோர் தாழ்குழற்றையலைய
ருந்துதேர்முன்னர்சசென்றாங்குரைப்பண்மற்றெனக்கெங்கேனு
பந்துநேர்முலையினருட் பகையுளாரில்லையென்பால் [ம்
வந்துநீர்மருவிற்காந்தி மதிகலெவருரைப்பாரொன்றாள். (எ0)

நிறையெழிலுடையவையர் நெற்றிநீற்றெழில்பாரீர்வெண்
பிறையெழில்பாரீர்திண்டோட பேரொழில்பாரீாகண்டக்
கறையெழில்பாரீர்வீரக கழலெழில்பாரீர்கொன்றை
நறையொழுகலங்கன்மார்பி னலலெழில்பாரீரொன்பார். (எக)

நாவலந்தீவமொன்றே நற்றவமுடையதென்பார்
மேவருநீர்நாடொன்றே விண்ணினுஞ்சிறந்ததென்பார்
தாவருமுறையூரொன்றே தனக்கிணையிலாததென்பார்
யாவரோபுகழாதாரித் திருவிழாவணியையென்பார். (எஉ)

மருமலர்க்கூந்தற்காந்தி மதிமணவாளற்போற்றார்
பொருவறுசென்னிசெய்த வாலயம்புக்குச்சூழார்
கருதுறுசிவப்போர்த்தீர்த்தங் குடைந்திடார்கனிவின்வந்திப்
பெருவிழாச்சேவைசெய்யார் பிறப்பென்னபிறப்போவென்பார்

இன்னனவுரைத்துமாதர் மொய்த்திடயாருமேத்த
மன்னவன்சூரபானு மகிழ்ந்துகைதலைமேற்கூப்ப
நன்னலமளிக்குமையர் நயந்துறைதருபொற்றிண்டே
ந்தன்னிலைவந்துநின்ற தரவேர்விதழைத்ததெங்கும். (எச)

மற்றுளவிரதநான்கும் வந்துதந்நிலையினின்ற
கொற்றவன்முதலியோர்க டரிசித்தாரோகைகொண்டார்
பொற்றநாயகர்முன்னோர் பொங்குபுல்லியங்களார்ப்ப
வுற்றதேர்நின்றாங்கோயிற் கெழுந்தருளினரொருங்கே. (எரு)

திடமிகமறுநாட்பௌவத் தினவுதயத்தானந்த
நடனவில்பவர்முன்னோரை நன்னகர்வலஞ்சூழ்வித்துத்
தடவெயிற்பரிதியுச்சி சார்தரத்தாவாமேன்மை
யடர்சிவதடத்துநீரத் திரதேவர்காட்டுவித்து. (எசு)

தாவருஞ்சிவதீர்த்தத்திற் சங்கற்பமோதிமூழ்கி
மாவருமார்த்தார்மார்பன் மகிழ்ந்தினிதிருந்தான்வானத்
தேவருமுனிவர்தாமுஞ் சித்தருமற்றுமுள்ள
யாவருமூழ்கிமூழ்கி யின்பத்துட்டிளைத்தார்மாதோ. (எஎ)

அன்றிரவலங்குசேமே லையமைமற்றுள்ளோரை
நன்றியனகர்சூழ்வித்து நலந்தலைசிறப்பப்போற்றித்
துன்றியவலிசாலேற்றுத் துவசமுமிறக்குவித்தான்
பொன்றிணிகழற்காற்சூர வாதித்தனெனும்பூபாலன். (எஅ)

மருவுமித்திருநாடன்னின் மறையவராதியோர்க்குப்
பொருவறுமன்னதானம் பூதானஞ்சொன்னதான
மொருவரும்பயக்கோதான மாதியவுதவாநிற்குந்
திருவுடையவர்கொள்பேறு தெரிந்துரைத்திடவல்லார்யார். ()

மன்னர்முன்யாருந்தத்தம் வளம்பதிபுகச்செலுத்தி
நன்னர்மாமதியந்தோறும் புரிவிழாநடத்துவித்துப்
பன்னருமன்பிற்காலந் தொறும்பணிந்தேத்திவந்தான்
கன்னலஞ்சிலைவேள்போற்றுங் கட்டழகுடையகானை. (அ0)

கண்மணிநீறுபஞ்சாக் கரம்பொருளாகக்கொண்டு
விண்மணியனையநேரி வேந்தரசளிக்குநாளிற்
பண்மலிமறைமாறுய பரசமயங்கண்மாய்ந்து
தண்மலியுலகமுற்றுஞ் சைவமாய்ப்பொலிந்ததாலோ. (அக)

இரும்புகழ்ச்சூரபானு விங்ஙனமொழுகுநாளி
லரும்புபல்லாண்டின்மேலா லணிகிளருறந்தைமேய
கரும்புறழ்மொழியாள்பாகக் கடவுடன்னருளான்மிக்க
வரும்புகழ்குணஞ்சால்காந்தி மதியொருமைந்தனீன்றாள். (அஉ)

மனுநெறிதவறுமன்னன் மதலையைவச்சிரார்க்க
னெனுமொருநாமஞ்சாத்தி யின்புறவளர்க்குநாளிற்
புனையுமம்மதலைதக்க பருவம்வந்துறவும்பொற்ப
நினையுநூலுணர்ந்துசைவ நேசமுமிரம்பக்கொண்டான். (அங)

அனையவன்றிறன்மையோர்ந்தே யமைச்சராதியர்கள்சூழப்
புனைமணிமகுடஞ்சூட்டிப் போற்றுசெங்கோலுநல்கி
வினையறுத்துயாவரெண்ணி விளங்குதன்றேவியோடுந்
துனையவைவண்ணாகோயிற் புகுந்தனன்சூரபானு. (அச)

வளர்சிவதடத்துண்மூழ்கி மங்கலக்களிற்றைத்தாழ்ந்து
தளிரிடைப்பணைத்தோட்காந்தி மதியுமைதிருமுன்சார்ந்து
கிளரடிவணங்கியேத்தி யருள்பெற்றுக்கொண்டிவண்ட
ருளார்நறுங்கடுக்கைமாலை யொருவர்முன்வந்துதாழ்ந்து. (அரு)

ஐயனேநீறுபூசு மழகனேமழுமானேந்துங்
கையனேகாலற்காய்ந்த காலனேகன்னிபாக
மெய்யனேயுறந்தைமேய விமலனேபஞ்சவானச்
செய்யனேசெய்யதேவா தேவனேபோற்றிபோற்றி. (அசு)

விடையனேகாமற்காய்ந்த விழியனேகங்கைதாங்குஞ்
சடையனேசமனுதைத்த தாளனேதரகினவன்றே
னுடையனேயண்டமியாவு முடையநாயகனேசூலப்
படையனேபஞ்சவானப் பரமனேபோற்றிபோற்றி. (அஎ)

வாமமேகலையொண்காந்தி மதிமணவாளபோற்றி
தாமரைச்செங்கண்மாற்குஞ் சதுமுகத்தாற்குமெட்டாக்
காமர்சேவடியாய்போற்றி கயிலையங்கிரியாய்போற்றி
யேமமாருறந்தைமேய விறைவனேபோற்றிபோற்றி. (அஅ)

தெளிமனத்தொளியேபோற்றி சிவபுரத்தரசேபோற்றி
யளியனுக்கமுதேபோற்றி யாருயிர்க்குயிரேபோற்றி
களியுடைக்கனியேபோற்றி கற்பகத்தருவேபோற்றி
வெளிநடத்தவனேபோற்றி வில்வவனேசபோற்றி. (அகூ)

என்றுநாத்தழும்பவேத்தி யிருகணீரருவிசோர
நின்றுமாகருணைவள்ள ணிறையருள்பெற்றுமுன்னை
நன்றுசாலுருவம்வாய்ந்து நற்றுணைத்தேவியோடுங்
குன்றுதலில்லாவெள்ளிக் குன்றமுற்றமர்ந்தானென்றான். (கூ0)

என்றகாசிபன்மலர்த்தா ளேந்திழைமடவாள்போற்றி
மன்றலாரலங்கற்சூர வாதித்தமன்னனென்பா
னென்றமுன்னுருவம்பெற்றுக் கயிலையுற்றிருந்தானென்றாய்
நன்றவன்வரலாறைய நவிலெனமுனிவன்கூறும். (கூக)

வேறு.

முன்னிமாலு மயனுமுழுமெயுந்
துன்னிநின்றகட் கோவுஞ்சுரர்களும்
பன்னிநாளும் பணிந்துபணிந்தெழ
மன்னிநிற்பது மாகயிலாயமே. (௬௨)

மானுந்தண்ணமும் வைத்தகையாரன்றித்
தானுநீறு தரித்தெனத்தோன்றுமா
றேனும்வண்டுஞ் செறிவளத்தானுமபூக்
கோனுந்தாழ வுயர்ந்தவகைகுன்றமே. (௬௩)

ஓங்குவானவ ரூரும்விமானமும்
வாங்குநான்மருப புய்பலும்வான்சிறை
தாங்குமோதி மமுந்தங்குவணமு
நீங்குறாத வடியதந்நீள்வரை. (௬௪)

காலந்தோறுங் களைந்தெறிமாலைகள்
சாலமீது கிடப்பன தமபிரான்
போலத்தானும் புயங்கமபலபுனை
கோலமொப்பக் குலவுமமமால்வரை. (௬௫)

எங்குநாரண ரெங்கும்பிரமாக
ளெங்குமிந்திர ரெங்குமமராக
ளெங்குமாதவ ரெஙகுநல்விஞ்சைய
ரெஙகுஞ்சித்தர்க ளெண்ணிலக்குன்றத்தே. (௬௬)

விரைமலர்த்தலை வேதன்பதவியுங்
குரைகடற்றுயில கொண்டல்பதவியும்
புரைசெய்மற்றவும் போயொழிநாளினு
முரைசெயபபொலிந் தோங்குவதம்மலை, (௬௭)

அந்தமால்வரை யாண்டகைகோயிலின்
சந்தவாயில் புரக்குந்தகைமையான்
சிந்தமாறு சினக்குந்திறலினன்
கந்தவார்குழற் கத்துருமங்கையே. (௬௮)

ஒருதினத்தி னுவளகத்தம்மையோ
டருளினட்டய ராண்டகையங்ஙனே
கருதுபொற்கடை காப்பவன்சோர்வினைத்
திருவுளத்திற் றெரிந்துகொண்டானரோ. (௬௯)

நலலகாவலி தெனறுநகைசெயா
மெலலவாவயின் மேவினனமேவவும
வலலநிதநிரை மேவிமதிறபுறம
புலலினருள பொருசெனறுணாந்தனன (க00)

ஆணடநாத னவனறகநோககிய
நீணடசெமபொ னெபெரநடைகாவலைப
பூணடநிதநிரை யாலறபபோனகினைய
மாணடநந்திரு வாணைமறநதீனோ (க0க)

பொஙகுமிவவப ராதபபுனாராயிறற
றெஙகுசூழபுனற செனனிநனறுடைதத
தஙகுமாவுறை யூரிறறரணித
னஙகுலததர சனமகனுகியே (க0உ)

அனையவூரினவில வாரணியநதெனமை
நினையுமபூசனை யாறறிலவுநம
புனையுநலலருள பெறறிவணபோநதி
வினையறுங்கமு வாயிதுமெய்யெனறுன. (க0ஈ)

எனறுநாத னியமபவிறைஞ்சிறு
னினறுநின *விளையாககலியானபிழைத்
தொனறுதீமை யுணாநதுபுவியிடைச
செனறுதிககத திருவுளமபறறினே. (க0ச)

மருவுநாயடி யேனிடமவைததநோா
கருணையேயிஃ தெனறுளஙகணணினேனை
பொருவிலாயகடல சூழந்தபுவிப்புடை
யுருவமானிட மாகியுழலுநாள. க0ரு)

நினனடிகக ணிரம றுபதஙமை
மனனவெற்கரு ளெனறுவணஙகினு
னனனதாகென றமலனருளினுன
பினனாவநது பிறநதனனமணணிடை. (க0சா)

கோழிமேய குழகனைபபோறறியே
யாழிசூழபுவி யாணடவனமுனபுபோல
வாழிமாகயி லாயமருவினுன்
பாழியஙகளை காபபதுபறறினுன. (க0எ)

* விளையாககலி - ஆணை.

என்றுரைத்தவற் போற்றியிக்காதையை
நன்றுகேட்ப மகனயனக்குரு
டொன்றுமெனபிணி யாவுமொழிந்தன
சென்றுபோற்றவு மெண்ணஞ்செய்தேனெனறுள். (கo அ)

நலலதேதினோ தாயமடநங்கைநீ
வலலினமக ஞேடுமமமாநக
ரலலறீர வடைநதுபிரானருள
புலலவேதத்தி வருந்தலபுரிகென்றுன. (கoகூ)

குலவுமன்பிறகாரக் கோடகனெனபவ
னிலவுதாயொடு நீரவளநாட்டிறசீ
ருலவுமேனமை யுறநதையுறறுனென்றுன
பலவுமோாநத பளகறுசூதனே. (கசo)

திருவிழாப்படல முற்றிற்று.
ஆகததிருவிருத்தம - கக௨டு

## கார்க்கோடகன் பூசைப்படலம்.

ஆடகனறட மாாபுபிளநதவோ ரணணலசூழ
மாடகன்பொழில சூழுறையூரமா வளளலே
யேடகன்ற கருஙகுழறறுயொடு மெயதுகாரக
கோடகன்புரி பூசைநலஞ்சில கூறுவாம. (க)

குலவுதாயொ டுறநதையடைநதகாரக கோடக
னிலவுகோயிற சிகரிமுனறுமுநது ஞெரோலென
வுலவுபோசசிவ தீாததமடைநதவ ஞேஙகுசீா
பலவுநோககினன சங்கறபமோதிப படிநதன ன. (௨)

தாவரும்புகழ்த தெயவவெணணீறு தரிததனன்
றாவருநதவக கணமணிமாலிகை சூடினன்
யாவருஙகரு தைநதெழுததுளள மழுததினன
ேைவருமபரன கோயிலுளாயொடு முறறனன. (௩)

பாயசீரவிடை முன்னரணைநது பணிநதனன
றூயபொனசெய் விமானததைமுமமுறை சூழ்நதன
ளுயகன்பினா நிற்குநறுநதுணா விலவத்தை
நேயமாரக்கண் டானதைபபூசிக்க நோநதனன். (௪)

வேறு

திருவளர்கூவிளபூசா விதியுரைப்பாஞ்சங்கற்பஞ் செய்துகொண்டு, பெருகுறவெண்டிக்கினுமா னெய்யினிதுண்டெழுவிளக்கம் பிறங்கவைத்து, மருவுபுனலாட்டியுடை புனைந்துசாந்தணிந்துமலர் மாலைசூட்டிப, பொருவறுநற்றூபமொடு பலவகைத்தீபமுமன்பு பொலியக்காட்டி. (௫)

தூயபாலன்னமுதற் பலவகையசுவையுணவு துலங்கவூட்டி
நேயமாராசமன முதலியநலவுபசார நிரம்பச்செய்து
பாயவருச்சனைசெயவக் கூவிளத்தின் றிருநாமம் பலவற்றுள்ளு
மேயமிகுசிறப்புற்று விளங்குதிருநாமங்க ளெண்ணவேண்டும். (௬)

அப்பெயர்பன்னிரண்டுவிதி முனியனுட்டுப்புச்சந்த மாகுந்தேவன்
மைப்படிகந்தரன்பரா பரைசத்திகீலகமும் வாமதேவன்
செப்புநலமருளிரு முதலோராறுமமங்கஞ் சோங்கியாசந்
தப்பில்கிருதத்திரமும் முறைபுரிகநியானவகை சாற்றக்கேண்மின்.

தகுமிறீம்பீசபுரு டாத்தசித்திசிவப்பிரியந் தானாய்வைகி, மிகு மலரின்வகையனைத்து மாய்சுகந்தந்திடுதீப வொளியாய்மேனாட், சகநவிலுங்கோமயத்தி லுற்பவமாய்த்தருமேன்மை தாமாய்நாமாய், நகமெனும்வில்வத்தையுணிற் சிற்பரானந்தமருணூதனுமால. (௮)

வில்வவிருக்கேசசி மானிறீம்பீசகோ மயத்தின்மேவுஞ்
செல்வசங்கரானந்த சுத்தபதுமப்பிரிய திகழ்வியாத
மல்வளர்புட்பாதிகேத் திரக்கியாதியமராபணி வரதாபீட்டஞ்
சொல்வகையீராறுபெயர் கூவிளத்தினமெனத் துதிக்கவேண்டும்.

ஈராறிப்பெயர்தினமுக் காலமுநற்சுசிமருவி யிசைக்கினன்கு
சீராரும்பூமகளு நாமகளுஞ்சேர்வர்பிணி சேராதென்று
நீராருஞ்சடிலனுரு ரேவுநந்திமுதற்றேவர் நேயமுண்டாம்
பாராளுந்திறமருவும் பரைபரனீங்காதமரும பண்புங்கூடும். (௧௦)

அலகைமிருகாதியரு கணுகாதுவினைவினரு மறைந்துளோருங், குலவுறும்பயனடைவர் மந்தணமீதிந்நாமங் கொண்டர்ச்சிப்போர், நிலவுறவெண்ணியவெல்லா மடைவரொனுமான்றிருவாய் நிறைசொலோர்மின், குலவுறுமிவ்விதிப்படியே பூசித்தன்புறுமனக்கார்க்கோடகன்றான். (௧௧)

வணங்கிமன மகிழ்ந்தேத்தி யஞ்சலிசெய்நியமமுடன் வலஞ்சூழ்போந்து, கணங்குலவுமங்கலகுஞ் சரத்திருதாண் மனங்கொண்டு கனிந்தர்ச்சித்து, மணங்கமழ்மோதகமாதி பல்லுணவுநிவேதித்து வாழ்த்திப்போற்றிப், பணங்கொளரவணிபஞ்ச வர்னேசன்றிருமுன்னரப் பரிவின்வந்து. (௧௨)

மவுனவிரதம்பூண்டு விதிமுறையேபலமலரு மலியச்சாத்தி
யுவமையகல்பாத்தியமா சமனமருக்கியமாதி யுதவியெண்ணெய்
நவையகனென்மாநெல்லி நறுமஞ்சள்கௌவியநல் லமுதமைந்து
தவறுழிபாறயிரநெய்தேன் கழைபலஞ்சந்தனந்தாரை சங்கங்கும்பம்

இம்முறைகொண்டாட்டியிடை யிடையிற்சுத்தோதகமு மினிதிருட்டி, விமழுமணங்கமழாடை தரித்துநறுஞ்சாந்தனமும் விளங்கச்சாத்தி, யம்முருகுமலர்மாலை சூட்டிநிவேதித்தினிய வன்னமாதி, மும்முனைவேலுடையபிராற் கருக்கியமாதியமுகமன் முன்போனல்கி

தீபவகைமுறைகோட்டி யேனையுபசாரமுற்றுஞ் சிறப்பச்செய்து, மாபரனையுமையொருபால் வள்ளலேயடியேற்கு மருவென்றுய்க்குந், தாபவகைதருங்கொடுநோ யொழியுமவகைபொழிகருணைத் தாணுவேநன், னீபமணிகுகற்றந்த நின்மலாவருடியென நெடிதுபோற்றி. (௧௫)

காந்திமதியம்மையையு மவ்வாறேமாபூசை கனிவிற்செயதா, னேந்தியபேரெழிலன்னாய் வினதையெனுமொருமுன்னாய்க் கிழைத்ததீங்கு, மாய்ந்தொழியக்கருணைபொழிந் தனையாலென்றடிபணிந்து மாறுவன்பி, னாய்ந்தமலராதிகொடு நந்திமுதற்றண்டியந்த மருச்சித்தானே. (௧௬)

இந்தவகைமீனமதி சுக்கிலபக்கந்தொடங்கி யிலகுநீரோ
டந்திமதிபுனைவானை யருச்சித்தைமூன்றுதின மாம்பௌவத்திற்
சுந்தரமண்டபங்கோயி றிருமுன்றில்பிரகாரஞ் சூழப்பூவாற்
பந்தரினிதமைத்துநறு நெய்விளக்கம்பூரணகும பங்கள்வைத்து. ()

ஆதியாலயநடுவி லலங்காரமண்டபத்தி னையரம்மை
தீதில்ஐமுகன்குகன்றண் டீசர்தமையெழுந்தருளச் செய்துநாறுன்
கோதில்குடப்பாலாதி முன்போலவபிடேகமு குலவுச்செய்து [ன்
சோதிவளர்நாகமணி யயுதங்கொண்டாட்டினன்கத் துருமின்மைந்த

சந்தநறுமலர்மாலை பொற்றுகில்வில்லரதநப்பூண் டயங்கக்கொண்டாங், கந்தவழுவைவளையு மலங்கரித்துத்தயிரன்ன மாதிலங்கி, மூன்றுசுடர்கோட்டிவிமா னங்கண்மிசையெம்பெருமான் முதன்மற்றோரும, வந்தணையுமபடியியற்றி மறைமொழிபலவியநடன மல்கியோங்க. (௧௯)

பெருந்தகையசுட *ரயுதம் பிறங்குமுடி மன்னவர்கள் பெட்பின் மொய்ப்பப், கருநகடலிற்கிளர்ந்தடியா களிததேத்தவானவர்கற் பக பபூச்சிந்தத், திருநதுகயன்மழியினிறை மயிரவினுறந்தைவலஞ் செய்வித்தன்பா, யிருந்தவர்கள்கொண்டாட •விசாகிருநாளினிறை வேற்றினனே. (௨௦)

கறைமருவுகந்தரத்தெம மைவண்ணப்பெருமானுங் களபக்கொங்கைப, பொறைமருவுபராபரையு மறமையருமாலயத்துட் பொலியப்புக்கு, நிறைமருவுமரியணைமே லிருபாலுகண்டானந்த நிரம்புநேயத், துறைமருவுதாயொடுகார்க் கோடகன்முன்பணிந்தெழுந்து துதிக்கலுற்றான். (௨௧)

வேறு.

மூவாமுதலே முடிவிலாபபெமமானே
பூவார்கணையாற் பொடிசெய்தபுண்ணியனே
கோவாமணியே குணாகடனஞ்சுண்டானே
தேவாதிதேவாநின செங்கமலத்தாள்போற்றி. (௨௨)

நஞ்சடைந்தகண்டா நலமடைந்தாருள்ளொளியே
யஞ்சடைந்தவண்ண வருளடைந்தமேனியனே
தஞ்சடைந்தாரேயற் கருளுந்தனிமுதலே
பஞ்சடைந்தசீறடியாள் பாகாநின்றாள்போற்றி. (௨௩)

விடையாய்வெண்ணீற்றாய் விளங்குநெடுஞ்சூலப்
படையாய்கயிலைப பருபபதத்தில்வாழ்வாய்
கடையாயுழல்வேன் கரிசறுத்தாய்கொன்றைச்
சடையாயுடையாய்நின் றமனைபபொற்றாள்போற்றி. (௨௪)

தாமரைமேல்வாழ்வான் படைக்கநறுந்தண்டுழாய்க்
காமர்நெடுமாயோன் காக்கபபெறுவுருவோய்
மாமருவும்வில்வ வனமருவுமபெம்மானே
பாமருவுசீர்த்தி பரமாநின்றாள்போற்றி. (௨௫)

* அயுதம் - பதினாயிரம்.

வேறு.

என்றுளமுருகித் துதியுரைத்தன்பி லிணையில்கார்க் கோடகனி ற்ப, நன்றுகத்துருவும் பற்பலதுதித்து நாயகன் றிருமுனர் நின்று, ளன்றுசிருறந்தை மேயவெமபெருமா னவாக்கெதிரதோன்றின னு ரைப்பான், குன்றுதலில்லா வன்பினீரியற்றுங் குறிகொள்பூ சனைக் குளமகிழ்ந்தேம். (உசு)

மீனமாமதியித் தினத்திலிவ்வாறிவ் விழாச்சிறபபெமக்கியற் றிடுவோ ருனமில்செல்வ ராகிவாழ்ந்தீற்றி லுறுவாரமபதவியீ துண்மை
மானமிலரவ முன்புபூசித்த வண்மையினுமித் தினத்தி
னைபூசனையி னுநாகேச னெனும்பெயரணிந்தனம் யாமே. (உஎ)

இத்திருநாட்கு மரதநத்திருநாளென்றுபேரோங்குக புவியி, ல த்திருவினதைக் கிழைத்ததீஙகானீ ரடைந்த*கொத்தையுஙகொடும் பிணியு, நத்திருமுனிவ னமபெருங்காதை நவின்றிடக்கேட்டபுண் ணியத்தா, லத்திருநாளே போக்கினஙகதியு மளிக்குதுமீற்றிரு வோ ர்க்கும. (உஅ)

என்றுதன் றிருவாய் மலர்ந்தனன்மறைந்தா னெங்கணுயகனவ ணின்ற, குன்றுநோகொங்கைக் கத்துருமாதுங் குலவுகார்க்கோடக னுஞ்சீ, ரொன்றுமக்கோயி றனைவலங்கொண்டா ரொபபிலான்றிருவ டி பணிந்து, நன்றுசால்காந்தி மதியுமைபதமு நலமுறப்பணிந்தனர் பின்னர். (உகூ)

புறவிடைகொண்டு காசிபமுனிபாற் போயினாமற்றவன் வினவ
வறவிடைப்பாக னுறந்தையையடைந்தாங் கருச்சனைபுரிந்ததுமன்பா
லுறவிடையீடி லின்பமுற்றதுவு முரைத்தினிதிருந்தன ரொன்று
னறவிடையருது பொழிமலர்மலிந்த நைமிசத்தவர்க்குயர் சூதன்.

கார்க்கோடகன் பூசைப்படல முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ககஙு

## உதங்கமுனி பூசைப்படலம்.

காமம்வெகுளி மயக்கமெனுங் களைகட்டருண னீர்பாய்ச்சி
யேமவுளச்செய் யிடைச்சைவ பத்தியென்னும் பயிர்வளர்க்கு
நாமவுதங்க முனியென்பா னலஞ்சாலுறந்தை வளர்கொன்றைத்
தாமமுதலைப்பூசித்த தன்மைசிறிது சாற்றுவாம். (க)

* கொத்தை - குருடு.

இறைவனோராயிரவருட வெல்லைகழியவின்பமா
புறையுமுத்தியருளுவலென் றுரைத்தவாய்மைகடைப்பிடித்துக்
குறைவில்காலமோரைந்துங் குளிர்நீராட்டிமலர்சூட்டி
நிறையின்சுவையோதனமூட்டி நிலவுமன்பிற்பூசிப்பான். (௨)

வரிமென்மலராலிலைதளிரால் வளர்சந்தனத்தாற்றண்டிலத்தாற்
புரிமுந்நூலான்மஞ்சரியாற் புகழ்தூபத்தாற்றீபத்தாற்
* சருவாற்றுகிலாற்பாததியவா சமனவருக்கியத்தானன்
கொருவாமனுப்பூவாற்குறைபா டொழியப்பூசித்தொழுகுநாள்.

செறிமென்மலர்ப்பைங்கூவிளத்தைச் சிவபாவனைசெய்தருச்சித்
தறியகொன்றைச்சடைமுதலை நகுமாமறைமத்தகந்துஞ்சுங் [து
குறிகொடுதிகளுணைத்திறைஞ்சிக் குலவியொழுகுமுதங்கமுனி
யறிவினுடியொருதிருநா ளமலற்கியற்றத்தொடங்கினுன். (௪)

மேடமதியின்வளர்மதியம் விளங்கிரோழாந்திதிநாளி
லுடலுவந்தாரம்பொற்றேர் நடந்தவாறுந்திதிநாளி
னீடுகொடியாரோகணஞ்செய் நார்திதிதமைவருமிவர்ந்து
தேடுமறையாதிகண்முழங்கத் திருமாநகர்சூழ்தரப்புரிந்து. (௫)

ஒன்பானுள்வைகறையினனே யொளிர்பொற்றேரோரைந்தினுந
கன்பாலைவரையுமேற்றி யலங்காரங்கள்பலமொய்ப்ப [ன்
முன்பாருளர்விண்ணுளர்வணங்க முடியாமகிழ்வினடத்தியபி
னென்பாலருள்வைப்பவன்முதலைவரும்பொற்கோயிலுறவியற்றி

பத்தாநாளாம்பௌவத்திற் பரமன்முதலைவருநறிய
கொத்தார்மலர்விமானமொரைந்தியற்றியதன்மேற்கூடச்செய்[ச்
தித்தாரணியோர்கொண்டாட வுறந்தைவலஞ்செய்வித்திறைஞ்சி
சித்தராதியருமாடுஞ் சிவதீர்த்தந்தோய்ந்துவந்தனனே. (எ)

மறையோர்திருநாள்சேவிக்க வந்தமறையோர்முதல்யார்க்குங்
குறையாமூரலுடையாதி கொடுத்துவருடந்தொறுமிவ்வா
றறையாடுறுசுக்கிலபக்கத் திருநாடவறுதாற்றினுன்
பொறையார்மேன்மைத்தவமுள்ளார்புந்திநினைவெய்திடலரிதோ

பரமன்கோயின்மறையவரிற் பத்தர்மடங்கள்பூவனங்கள்
காவிலீசற்குபகரணங் காட்டுந்தருக்கள்விளைநிலங்க
டருநீர்ப்பந்தானச்சரலை தரணிபுகழுமண்டபங்கண்
மருவுமிவைமுற்றிருப்பணிக ளனைத்துமியற்றிமகிழ்ந்தனனால். ()

* சரு - சோறு.

கல்லுங்கரையவுள்ளுருகிக் கண்ணீரருவிமழைபொழிய
வல்லும்பகலுமிடையரு வன்பிற்பொலிவுற்றம்மானைச்
சொல்லும்பொருளுமானானைத் துதிசெய்திவ்வாறொழுகினு
னெல்லும்வருடமாயிரமுங் கழிந்ததப்பாலுமொருநாள். (க0)

வேறு.

சிவதடப்புனலுண்மூழ்கித் தெய்வவெண்ணீறுபூசி
யவமறுகரநியாச மங்கநியாசஞ்செய்தே
புவமையிலுருத்திராக்க வொண்மணிமாலைபூண்டு
நவவடிவுடையநாத னயக்குமைந்தெழுத்துமெண்ணி. (கக)

மல்லிகைமுல்லையார்செவ் வந்திமந்தாரம்புன்னை
யல்லியங்கமலநீல மரகதிதழ்க்கழுநீர்கோங்கு
வில்லியல்சண்பகம்பா டலங்கரவீரங்கொன்றை
சொல்லியவிவைமுன்னன தூமலர்பலவுங்கொய்து. (கஉ)

மஞ்சனஞ்சாந்தமுன்னு வகுத்திடுபலவுஞ்சேர்த்துப்
பஞ்சவர்னேசப்பெம்மான் பரவுறுதிருமுன்மாப்பே
ரொஞ்சலின்மண்டபத்தாங் கிருவகைநியாசமாற்றிச்
செஞ்சுடர்ப்பரிதிபூசை செய்முறைபபடியேசெய்து. (கங)

மறைமுதலுள்ளத்துள்ளி யருக்கியம்வைத்துமாடோர்
பிறைமருப்பிறையைப்போறறிப பெருங்கடத்தறஞ்சால்கங்கை
நிறைதரவாவாகித்து நேயமார்சுத்திசெய்து
குறைவிலகௌவியமுங்கூட்டிக் கோதறுதபனம்வைத்து. (க௪)

தேசமர்பூதசுத்தி யந்தரியாகஞுசெய்தாங்
காசனமூர்த்திமூல மாச்சிவரூபம்பாவித்
தேசறுமங்கலபபே ரியானையையிறைஞ்சிவேண்டி
மாசறுதென்றுவார வழிமனமகிழ்ந்துசெனறு. (கரு)

உரைதருசீர்சால்வீம வுருத்திரன்பூசையாற்றித்
தரைபுகழ்தண்டிமுண்டி யாதியர்தம்மைப்போற்றிப்
புரையிலெம்பெருமான்முன்பு போந்துசங்கிதைவிசேடக
கரையருக்கியம்பூரித்துக் கங்கைதன்பூசையாற்றி. (கசு)

மன்னியபுகழ்சால்பஞ்சா வரணவான்வரைப்போற்றி
புன்னியாவாகனந்தா பனமுயர்சந்நிதானஞ்
சந்நிரோதனமுஞ்செய்து தாவில்பாத்தியமுன்னீந்து
துன்னியதூபதீப நிவேதனந்துலங்கச்செய்து. (கஎ)

பாயமாமறைநற்பாசு பதாத்திரத்தபிடேகஞ்செய்
தாயமாலியங்கணீக்கி யாய்மணத்தயிலமிக்க
தூயகௌவியமாநெல்லி திரவியஞ்சுவைத்தேன்கன்ன
னேயநல்லயிர்பாறேய்ந்த தயிர்நிறையமிர்தமைந்து. (கஅ)

தெங்கிளநீர்நெய்சந்தஞ் செப்பிவையொவ்வொன்றாகத்
தங்கிடையிடைபூச்சாத்தித் தன்கையான்முறைகொண்டாட்டி
யங்கியல்கருப்பூரத்தீ பஞ்செய்தாய்கனிநிவேதித்
திங்கிதமுனிவன்சுத்தோ தகமெடுத்தாட்டினானே. (கசு)

குறைவறுமூலமோதித் தபனமங்கையிற்கொண்டாட்டி
நிறைபதநவின்றுகாண்டா மிருகத்தினெடியகோட்டா
லறைசெய்சீயுருத்திரஞ்சொற் றாயிரந்தாரையாலு
மறைமுதலுரியகாயத் திரிசொலிவண்சங்காலும். (உ0)

அலங்கவாட்டுபுவிசேட வருக்கியப்புனலுமாட்டி
நலங்கொளொற்றாடையிட்டு நகைசெய்பொன்னுடைசாத்தித்
துலங்குநன்னீறுசந்தந் தூர்வையக்கதைமாலூர
மிலங்குபன்மாலைபொற்பூ ணியைதரவினிதுசாத்தி. (உக)

தருமலர்நிறையக்கொண்டு தத்துவத்திரையஞ்சாத்தி
யொருவில்சீர்த்தண்டபங்கி முண்டபங்கியுமுனுற்றி
மருவிலயாங்கம்போகாங் கமுமுறமதித்தர்ச்சித்துப்
பெருவினைத்தூபதீபம் பிறங்குறக்கோட்டிமாதோ. (உஉ)

இனியபாலனநிவேதித் தருக்கியமியையநல்கி
முனிவறவடுக்குதீப முதலியபலவுங்கோட்டிப்
புனிதவெண்குடைமுன்னுகப் புகலுபசாரஞ்செய்து
நனிமனத்தன்புபொங்கப் பாத்தியமாதிநல்கி. (உரு)

அவமகல்வில்வங்கொண்டு சிவாயமுற்கூறியர்ச்சித்
துவமையில்பளிததீப மொளிபெறக்கோட்டிப்போற்றித்
தவலரும்பலத்தைமுக்கட் டம்பிரான்கையினல்கிச்
சிவபரன்முன்னர்நின்று தோத்திரஞ்செய்யலுற்றான். (உச)

அன்புசாலடியருள்ளத் தவிரொளிப்பிழம்பேபோற்றி
யென்னெக்குருகநாயேற் கின்னருள்புரிந்தாய்போற்றி
நன்புகழுறந்தைமேய நாயகப்பிரானேபோற்றி
புன்புலால்யாக்கைவேண்டேன் பூரணபுராணபோற்றி. (உரு)

இருவினையொப்புவாய்ப்பி லிரும்பவக்கோடைமாயப்
பெருகருட்டெய்வமாரி பெய்யுமாமுகிலேபோற்றி
மருவுபேரின்பமேயாய் மன்னியவள்ளல்போற்றி
யருவருப்புடையயாக்கை யாற்றிலேனமலபோற்றி. (உ௬)

கலவுறும்மலமற்றுருட் கறிக்குமெய்க்கருணைபோற்றி
குலவுவெள்விடைமேற்காட்சி கொடுத்தருள்கோலம்போற்றி
நிலவுமம்பலத்துளாடு நின்மலக்கொழுந்துபோற்றி
புலவுநாறிழிந்தயாக்கை புகுகிறேன்புராணபோற்றி. (உ௭)

மணமலிகூந்தற்காந்தி மதிமணவாளபோற்றி
பணமலியரவம்பூண்ட பஞ்சவர்ணேசபோற்றி
குணமலியுறந்தைமேய குணப்பெருங்குன்றேபோற்றி
நிணமலிமுடைக்குப்பாய நேசியேனிமலபோற்றி (உ௮)

ஒன்றுறுகுறிப்புமேவ வுதங்கமாமுனிவனென்பா
னன்றுறித்துதிசெய்காலை நகைபருள்வழங்கியெம்மான்
வென்றுறுமொளியாய்த்தோன்ற மேவிமற்றதின்மூழ்குற்று
ன்றுறுகளியின்மூழ்கி யலர்மழைபொழிந்தார்வானோர். (உ௯)

உறுவிறன்முத்திசார்ந்த வுதங்கமாமுனிமாணுக்கர்
மறுவறுமுனிவர்மற்றோ ராவயின்வதிந்துபோற்றித்
தெறுமலபந்தஞ்சிந்திச சிவகதியடைந்தாரொன்றோன்
குறும்திமுடித்தவேணிக் குழகனுக்கினியசூதன். (௩0)

உதங்கமுனி பூசைப்படல முற்றிற்று.

ஆகததிருவிருததம் - ககஅரு

## வேடன் முத்தியடைந்தபடலம்.

புத்திவெங்கொலை யாதியிற்புகுத்துமோர் புளிஞன
பத்திநீள்வலைப் படுபவனுறந்தைவாழ் பரம
னத்தியீருரி போர்த்தவன்றிருவரு ளடைந்து
முத்தியெய்திய காதையையறிந்தவா மொழிவாம். (௧)

நறுமலர்த்தட நாகிளங்கவரிகள் பாய
வுறுவிறற்றகட் டகட்டிளவாளையாங் கொருவிக்
கறுவின்மாமழை கிழிதரப்பாய்தருங் கணிசூழ்
மறுவிலாதவான் மீகமென்றொருவளத் தேயம். (௨)

மருவுமப்பெருந் தேயத்தின்மறையவர் குலத்தி
லொருவில்பாதகம் யாவுமோருருக்கொண்ட தென்ன
வெருவயாவருந் தோன்றினனவன்பெயர் வினவிற்
கருமசன்மன்மற் றவன்கொடுந்தொழிலையார் களைவார். (௩)

தீயவாகிய வெண்ணமேயெண்ணுசிந் தையினான்
றீயவாகிய சொற்களேசெப்பிடுந் தீயோன்
றீயவாகிய தொழில்களேநாடொறுஞ் செய்வோன்
றீயவாகிய வெவற்றிற்குமுறையுளாய்த் திகழ்வான். (௪)

சந்திவந்தனை மறந்தனன்றக்கமா மறைநூல்
புந்தியோவுற விட்டனன்புண்ணிய மெனுஞ்சொ
லந்தியும்பக லுஞ்செவியுறுவகை யடர்ப்பான்
முந்திமாதர்தம் போகமேயின்பென முயல்வான். (௫)

குலமறந்தனன் கோத்திரமறந்தனன் குடிமை
நலமறந்தனன் செபிப்பதுமறந்தன னன்னூல
பல்மறந்தன னீறணிந்துமாபரற் பணியும்
வலமறந்தனன் மாதரின்பொன்றுமே மறவான். (௬)

கூடுவான்பிறர் கைப்பொருள்கவருவார் குழுவை
நாடுவானெவா தனிவழிநடப்பவ ரொன்று
வாடுவான்பிறர் மனைமுயக்கெண்ணிமங் கையர்பா
லோடுவானுல காயதப்பேய்ப்பிடித் துழல்வான். (௭)

திருகுசிந்தையா னருளெனல்கனவினுந் தேரான்
குருகுமுன்கையார் குவிமுலைக்கேமனங் குழைவான்
பெருகுதீவினை யாளனாய்ச்சிவநிந்தை பேசற்
கருகர்புத்தர்வை ணவரினுஞ்சிறந்தவ னானான். (௮)

அனையனோர்தின மணிமுலைப்பரத்தையை யவாவிப்
புனையுமெம்பிரான் கோயிலுட்புக்கன னாகத்
தனையொவ்வாதவற் போற்றவந்தானெனத் தன்னு
ணினையுஞ்சாதுவா மருச்சகனொருவனே ரணைந்து. (௯)

பாங்குமேவுவெண் ணீற்றினைக்கொள்கெனப் பணித்தான்
றேங்குதீவினை யாளனுஞ்செழுநிதி யெனக்கைத்
தாங்கிநின்றனை யானிந்தமடைப்பள்ளிச் சாம்பல்
வாங்கவோவிங்கு வந்தனன்போவென மறுத்தான். (௧௰)

சற்றுநல்லுணர் வில்லவன்கழிமடஞ் சார்ந்தோ
னுற்றதீவினை யாளனென்றுளத்துண ராமற்
பொற்றநீறெடுத் தளித்ததேபுகலருந் தோட
மற்றுநந்தமக் கெனவருசசகன்மதித தகன்றான். (கக)

தூயநீற்றினை யிகழ்ந்தமாபாவியுந் தொல்லை
நாயகன்றிருக் கோயிலையகன்றுவெண் ணகைசசெவ்
வாயரிக்கருங் கட்பரத்தையர்மனை தொறும்புக்
காயபோகமாங் கனுபவித்துழல்பவ னானான். (கஉ)

தீயனிங்ஙன முழிதருகாலையிற சிவநன்
னேயன்வேதமுற் றுணர்ந்தவனீதிநூல் வல்ல
னாயவாரிய னொருதினமவனுழை யடைந்து
பாயபேரரு ளாற்சிலநன்மொழி பகர்வான். (கங)

என்னகாரியஞ் செய்தனையேற்றமிக் கேற்ற
நன்னர்மாமறைக் குலத்தொழில்விட்டனை நகுநூல்
சொன்னநீதிகள் யாவையுந்தொலைத்தனை யிறந்த
பின்னரொன்கொடு கொடுநரகமுழ்ந்துதல் பிழைப்பாய். (கச)

நீறுபூசுத லொழித்தனைசெபித்தலு நீத்தா
யாறுசூடியை யவமதித்தொழுகினை யந்தோ
சீறுதக்கன்முன் போனபோக்குணர்ந்திலை தேவி
கூறுகொண்டவற் பிழைத்துயர்ந்தாரெவர் கூறாய். (கரு)

வேறு.

இருவகையியக்கநீக்குங் காலையெவ்வளவைத்தின்ப
மருவுமவ்வளவைத்தேயா மாதரைப்புணருமின்ப
மருவருப்புறுமிதற்கே யாயுள்காறும்பவ்வீவீழ்ந்
தொருவரும்வன்றியேபோ லுழலுவருணர்விலாதார். (கசு)

குடம்புரைகொங்கையென்றுங் கோல்புரைநயனமென்றும்
படம்புரையல்குலென்றும் பால்புரையின்சொலென்றும்
வடம்புரையுதரமென்று மலர்புரைசெவ்வாயென்றுந்
திடம்புரைபடுமினார்பான் மயங்குவர்தெளிவிலாரே. (கஎ)

குடருநெய்த்தோருமென்புங் கொழுவுமீருளும்வழும்புந்
தொடரும்வன்னரம்பும்போர்த்த தோலும்வெஞ்சுவேதநீரும்
படருங்கோழையுநுரைத்துப் பாயுமூத்திரமும்பவ்வீ
யடருந்தீயழுக்குமல்லா லரிவையரிடத்தென்னுண்டே. (கஅ)

ஆதலாலென்னல்காறு நடந்தனவகற்றியைய
காதலானினிமேலேனுங் காமர்வெண்ணீறுபூசி
வேதநூல்பற்றிமுக்கட் பரனருள்விழைதியென்றான்
போதகாசிரியன்கேட்ட புன்மையன்புகலலுற்றான். (௧௯)

மாதர்தம்போகமன்றி மற்றுமோரின்பமுண்டோ
காதனூல்பலவுமைய கற்றனைபிறருங்கொள்ள
வோதலுஞ்செய்வாய்சற்று முணர்ந்திலாய்கொல்லோகேட்டி
மேதகுமாதர்போகம் வெறுத்துயர்ந்தாரும்யாரோ. (௨௦)

கங்கையைச்சடையில்வைத்துங் காமருபொருப்பனீன்ற
மங்கையைப்பாகம்வைத்து மனங்களியுறப்புணர்ந்தும்
சங்கையேந்தியகைமான்மோ கினிதனைப்புணர்ந்துமனறே
செங்கைமான்மழுவும்வைத்த சிவபிரான்சிறந்தோனானான். (௨௧)

நிறமமர்திருவைசசேர்ந்து நிலமகட்புணர்ந்துமாமைப
புறநிகரல்குலீரெண் ணாயிரர்தமைப்புணர்ந்து
மறவயில்விழிப்பிருந்தை குவிமுலைமணந்துமன்றே
திறலமர்நேமியேந்துஞ் செங்கைமால்சிறந்தோனானான். (௨௨)

மழையுறழ்கரியகூந்தல் வாணிநாறுருவங்கொள்ளத்
தழைதரநோக்கிநோக்கித் தனித்தனிப்புல்லிப்புல்லி
விழைவுறமகிழ்ந்துஞ்செவ்வா யுருப்பசிபோகம்வேட்டும்
பழையநான்மறைசொனல்வாய்ப் பனவனுஞ்சிறந்தோனானான்.()

பன்னிருபுயத்துந்தெய்வ யானையார்பணைத்தகொங்கை
துன்னிடவொற்றியொற்றித் தோய்ந்தும்வண்புனத்திற்சென்று
மன்னியகரவிற்சீர்சால் வள்ளியார்ப்புணர்ந்துமன்றே
மின்னிடுவேலான்மான்முன் விண்ணவரிறைஞ்சப்பெற்றான். ()

அரசிலைபுரையுமல்கு லணங்கயிராணிதன்னைப்
பரசுபுகவான்மேல்வைத்துப் பவளவாயமிர்தமுண்டுங்
கரவினன்முனிவன்பன்னி யகலிகைமுலைகலந்தும்
புரவுசான்மகவான்றேவர் போற்றிடவுயர்ந்தோனானான். (௨௫)

வரையிறைமேனைகொங்கை மணந்திறைமாமனானு
னுரைமதனிரதியைச்சேர்ந் துலகமோகிக்கச்செய்வான்
புரைமதிபலரைக்கூடிப் புராரிசெஞ்சடைமேலுற்றான்
கரைகதிரிருவர்க்கூடிக் கருளறவிளக்கஞ்செய்வான். (௨௬)

அகத்தியமுனியுஞ்லோபா முத்திரையணங்கைச்சார்ந்து
சுகத்தினையுறலானன்றே தொல்வரையழுத்திவாரி
யகத்துறக்கொண்டுமாலை யரனருட்குறியாச்செய்து
சகத்தினைச்சமமுஞ்செய்து தாழ்வறுமேன்மைபெற்றான். (உஎ)

பன்னுகாசிபனென்பானே ரதிதிமுற்பலரைச்சேர்ந்து
மன்னுசீர்ப்பராசரன்றான் மச்சகந்தியைப்புணர்ந்துந்
துன்னுபேர்மரீசிசெவ்வாய்ச் சம்பூதிதோண்மணந்து
முன்னுமத்திரிகருங்க ணனசூயைபுணர்ச்சியுற்றும். (உஅ)

புலகனற்கமையையாய்ந்த புலத்தியனபிரீதிதனனை
நலமுறுகிருதுதான்சந் ததியைநாடங்கிராமென்
மலர்முகமிருதிதனனை வசிட்டனோர்வடமீனறன்னை
வலனுறப்புணர்ந்துமனறே மாதவத்துயர்ந்தோரானார். (உகூ)

கனசவுபரியென்பான்சீர்க் காம்பிலிதேயப்பொய்கை
வனமுறமூழ்கிப்பன்னீ ராண்டுமாதவஞ்செய்தாண்டோர்
தினமொருமீன்பெண்ணுதி யுடனுறநெரிந்தாங்கோவி
யனகமாந்தாதாவினற வைம்பதினமரைவேட்டானே, (கூO)

தருமன்முன்றனைவர் தம்புகழுணரார்யாரோ
மருமலர்க்கூந்தற்செவ்வாய் வானுதலொருத்திபோக
மருமுறையிழந்துதுய்த்தா ரடைந்ததுநரகோசொல்லாய்
பெருமையையவாவினேருட் பெண்டிரைநீத்தார்யாரோ. (கூக)

ஆடமைத்தோளினல்லா ரல்குலந்தடத்துண்மூழ்கிப
பாடமைகொங்கைபற்றிப் பவளவாயூறன்மாந்தி
நீடமையின்பமெய்தார் நிறைபெருந்தவமிலாதார்
காடமைவாழ்க்கைபூண்டு கழிப்பர்வாழ்நாளைவீணில். (கூஉ)

ஊடுமாமடவார்செம்பஞ் சூட்டுதாட்சுவடுமேனி
கூடுமாறேற்றபின்னர்க் குவிமுலைகுழையப்புல்லி
பாடுசாலல்குன்மூழ்கு மதுவொன்றேயின்பம்பாரி
னீடுயிரொவைக்கும்போதித் திடுதியிவ்வண்ணநீயும். (கூகூ)

விதுமுலைமாதரார்த மென்முலைசுவர்க்கமென்னு
மதுவுநீதெரிந்திலாய்கொ லையனேயென்றானன்னோன்
மதிமுகம்வாடியிந்த மாபாவிவார்த்தைகேட்க
விதிபுரிந்ததுவென்றென்றும் பேசிலன்மெலிந்துபோனன். ()

அனையவன்போயபின்ன ரறிவிலாக்கருமசன்ம
னனைமலர்க்கூந்தலார்தம் போகமேநாளுந்துய்த்து
நினைவருங்கொடுமைமேய தொழில்பலநிரப்பிப்பின்னாள்
வினையுறுபிணிக்கோட்பட்டு வெந்துயர்மூழ்கிமாண்டான். (கரு)

வெந்துயர்மூழ்கிமாண்ட வெய்யவெங்கருமசன்மன்
முந்திரவுரவமுன்னா முருக்குவெந்நரகமெல்லா
மந்திலாழ்ந்தாழ்ந்துபன்னா ளகன்றிடப்புவிமேற்பாவ
முந்தியமிருகம்புள்ளா யுற்பவித்துழன்றுமாய்ந்து. (கசு)

பின்னிழிசாதிமக்கட் பிறப்பிலந்தகனாய்த்துன்பந்
துன்னியபங்கனாய்ச்சீ சோரும்புண்மெய்யனாய்மற்
றுன்னுபல்பிணியனாய்ப்பல பவமெடுத்துழன்றுமாய்ந்தான்
மன்னுநீற்றைச்சிவத்தை யிகழ்ந்ததோம்வறிதுபோமோ. (கஎ)

படுபவம்பலவிவ்வாறு தழீஇப்பருவந்துபின்னர்
நடுநிலையொருவாத்தொண்டை நாட்டினோர்வனக்கண்வாழு
மடுதொழிலவேடர்க்கெல்லா மதிபனாய்ப்பிறந்தானஞ்சக்
கொடுவிழிமடவார்நல்கும போகமேபொருளாக்கொண்டான். (கஅ)

நிச்சலுமூனுங்கள்ளு நிரப்புறுவயிற்றனெஞ்சத்
தச்சமுமருளுமில்லா னடியெறியென்னுஞ்சொல்லான்
கச்சமில்வனமாக்கொன்றுங கடுகியாறலைத்தல்செய்து
மிச்சையாறொழுகிவாழு மிறவுளர்தலைவனோர்நாள். (ககூ)

படையுடைமறவர்சூழப் பாய்புலிப்போத்துப்போனன்
னடைபிறழாததொண்டை நாட்டினின்றெழுந்துவல்லை
விடையமர்நாடும்பொன்னி யின்புனனாடுநீந்தி
மடைதொறுஞ்சங்கமுத்தின் வழுதிநன்னாடுபுக்கான். (உ0)

வழுதியர்பெருமானாளு மாப்பெரும்புகழ்நன்னாட்டி
லெழுதரும்வனப்புவாய்ந்த விளமுலைக்கருங்கட்செவ்வாய்
முழுதுலகீன்றாள்பாக முதல்வனாரினிதுமேய
தொழுதகுமாலவாய்க்கு வடதிசைத்துவன்றோர்கானில். (உக)

ஆயர்கள்பல்லோராம்ப லாக்களோடுறைதலோர்ந்து
பாயநள்ளிருளிற்புக்கு மற்றவர்சோர்வுபார்த்துத்
தீயபாலர்க்கள்கண்ட மணியுள்வைசெருகிச்சேர
மாயவேடன்றிரட்டி வடதிசைச்செல்லவுய்த்தான். (உஉ)

கடுவிசைமருவவோட்டிக் காவதம்பலகடந்து
தொடுகடன்முகட்டுவெய்யோன் றோற்றஞ்சாலமையமாக
வொடுமுதற்றருக்களெண்ணி லோங்குமோர்கானத்துய்த்தான்
படுபயச்சுரபியாவும் படையுடைக்கிராதன்மாதோ. (சங)

வாழிவெங்கானப்பட்ட பகலெலாமருவிமேலை
யாழிவெங்கதிரோனாழ்ந்து வையமாரிருளினாழ்தல்
பாழிவில்லெயினனோர்ந்து பசுக்களைவிரையவோட்டிக்
கோழிகூவிடுமுன்வந்து கோழிமாநகரஞ்சார்ந்தான். (சச)

மொய்த்தபலசுரபியுள்ளு மூப்புடைக்குடஞ்சுட்டொன்று
பைத்தபுன்னிலத்திற்கொள்ளப் படாவகையெயிறுதேய்ந்த
துய்த்தலுக்கஞ்சிவந்த துதிர்ந்தமெய்ம்மயிரதம்மா
வைத்தகாலெடுக்கமாட்டா தாவயின்வருந்திற்றன்றே. (சரு)

மூப்புடைப்பசுவின்றன்மை முழுமையுமுரிமாண்பைப்
பாப்புடையமலனெங்கள் பஞ்சவானேசனமேய
சேப்புடைமணியிழைத்த தெய்வவாலயமுங்கண்ட
வேப்புடைவரிவில்வேட னினையனவெண்ணலுற்றான். (சசா)

பயனிலிப்பசுவொன்றாலே பாணித்துச்செலகைதாழ்ப்ப
தியலிதன்றன்மையாங்கே தோங்கிலமிருள்வீக்கத்தா
லுயலுறுசெலகைதாழ்ப்பி னெய்யெனநேடிமேவுங்
கயலமாகொட்டியானேவற் காவலாகடிவாகண்டு. (சஎ)

இருந்துமிக்கோயிலுள்ளே செலுத்தியாஞ்செல்வோமாகிற்
பொருந்துமாகுழம்புதோய்ந்த பூவமாசுவடுநோக்கி
வருந்தியிங்கணுகாநிற்கும் வையையந்துறைவனேவற்
பெருந்திறலாளரிந்தப் பெட்பினமூப்பானைக்காணப். (சஅ)

காண்டலுஞ்சினந்துமற்றைப் பசுக்களுங்காட்டுகென்றிவ்
வாண்டவன்கோயின்மேவு மந்தணராதியோரை
நீண்டவன்கயிற்றாற்கட்டி நெருக்குபுமறுக்கஞ்செய்வார்
பூண்டநம்மிருக்கைதேடிப் புகாரிதேசூழ்ச்சியாமால். (சகூ)

என்றுளத்தெண்ணிமூத்த சுரபியையிறைவன்கோயி
லொன்றுறச்செலுத்திமற்றைப் பசுக்களைவிரையவோட்டிக்
குன்றமுங்கானும்யாறுங் கொடுநெடுஞ்சுரமுநீந்திச்
சென்றுதன்னுறையுள்புக்கான் சிலையுடைத்தடக்கைவேடன். (ருo)

காலையிலெங்கள்காந்தி மதியொடுங்கமழுங்கொன்றை
மாலையைவண்ணத்தேவை வணங்கவாலயத்துட்புக்க
நாலையோர்முனிவராதி யாவருநோக்கினாக
ளாலவாயக்கருமபுபோன்மெய் யுடைந்துழுபபடைந்தவாவை. (௫௧)

அறிவிலந்தணர்கள்சில்லோ ரருந்தவனொருவற்கனாட்
செறிபழியாக்கமாயப புணாப்பினாற்செய்துவிட்ட
வெறிகளியுடையவான்போ லிருந்ததென் றியாருமெண்ணி
நறியபுல்லாதிநேடி யருந்திடநயந்தார்மாதோ. (௫௨)

அடர்மரகதபசுஞ்சோதி யனையதூாவையுநலவையும்
படர்வலிதருபிண்ணாககு முட்டையும்பருத்திவித்தும
தொடாதரவருததவுண்டுங் தூககழுநீர்குடித்து
மிடாதருமூபபுவாதை யிரிதரத்தழைந்ததன்றே. (௫௩)

அன்பாகளன்புபொங்க வருத்திடுமுணவினாலே
வன்பாதமுளத்துமேய வைவண்ணமேனியம்மான்
வன்பர்பாலடையாக்காந்தி மதியருள்வலத்தினாலே
வன்படாமூபபுநீங்கி யிளமையுமருவிற்றவவான். (௫௪)

தானடைவருத்தமூபபி னொடுதணந்துறத்தழைந்த
வூனடையுடம்பிற்றூகி யுரோமம்வெண்பூபபபெற்றிவ
வானடைகடியதென்ன நடந்ததாலதனைநோக்கிக
கானடையிமிலேறெல்லாங் காமமுற்றுழலாநிற்கும். (௫௫)

புல்வகையன்பரூட்ட மூபபொரீஇயிளமைபூண்ட
நல்வளச்சேதாவன்போா நங்கையின்னடிசிலூட்ட
மல்வராமூபபுநீங்கி மாணெழிலிளமைபூண்ட
செல்வநான்மாடக்கூடற் றேவதேவனைநோக்கும. (௫௬)

தில்லையிவ்வுறையூர்தெய்வத் தீர்த்தமிக்கோயின்மூழ்க.
வல்லைவந்தடைந்தநீல கண்டவேட்கோவர்மற்றிவ்
வெல்லையில்வளத்தசேதா வவாபெற்றவிளமையேயித்
தொல்லையானிளமையென்று சொல்லியுள்ளுவந்தாரன்பா. (௫௭)

குலவுமித்தகையசேதாக் கோதனமினிதொன்றீன்று
நலமுறப்பார்த்துமோந்து நக்கியும்விலகிற்கூயு
நிலவுபாலருத்திற்றாக மற்றதுநெடிதுநோக்கிக்
கலவுமெய்யன்பருள்ளங் களித்தனாசிறபபுச்செய்தா. (௫௮)

குடமருள்செருத்தற்சேதாக் குவிமுலைசுரந்தநீம்பால்
குடநிறைதரக்கறந்து கொண்டுமுக்கிசமேய
குடவளைக்கரத்தான்காணுக் குழகற்குமிடப்பான்மேவு
குடமுலையுமையாளுக்குங குளிர்தரவாட்டினூரால். (௫௯)

சிலபகலிவ்வாறுட்டத் திகழ்ந்தெழுபுண்ணியத்தா
லலகறுபாவவேட னகத்துநல்லறிவுதோன்ற
நலமிறீவினைகள்பல்ல நாடொறும்புரிந்தேனந்தோ
கலதியென்றுய்வேனென்று வாற்றினன்கருதுகின்றான். (௬0)

திருந்தியநீறுபூசேன் சிவாலயங்கண்டுபோற்றே
னருந்தவரோவல்செய்யே னரகரவென்றுசொல்லேன்
பொருந்துபஃறலத்துஞ்சென்று புண்ணியதீர்த்தமாடே
னிருந்துடலோம்பிவாழ்வே னெங்ஙனமுய்வேனந்தோ. (௬௧)

சுடலைவெண்பலியில்லென்று தூமனையாளையில்லோ
டடலைசெய்தாற்பூசித்து மமராதாழ்திருக்காளத்தி
நடலையில்பெருமான்கண்ணி னயனமபயியுமன்றேமுன்
னுடலையினமராயுள்ளா ரும்பாவான்கதியையுற்றார். (௬௨)

பற்பலநாளுஞ்செய்த தீங்கெலாம்பாறிமாய
வற்புதச்சிவபிரான்வா ழாலயந்தோறுஞ்சென்று
பொற்புறச்சூழ்ந்துபோற்றிப புண்ணியங்கொள்வேனென்று
சொற்படுகிளைமுன்யாவும் வெறுத்தனன்றுணிந்தெழுந்தான். (௬௩)

தன்னிழலெனத்தொடர்ந்த சுற்றமுந்தவாமனைஞ்ச
மன்னியகோறலாதித் தொழில்களுமறியத்தள்ளித்
துன்னியவன்புந்தானுந் துணியறநடந்துசென்று
கன்னியோர்பாகத்தெம்மான் காளத்திவரையைபபோற்றி. (௬௪)

மேதகுகாஞ்சியோத்தூர் விரிஞ்சைவக்கரையாலங்கா
டோதருட்பாசூரொற்றி யூர்திருமயிலையுள்வார்
காதரம்போக்கியாளுங் கழுக்குன்றமருணைமாதை
தீதான்செங்கைகூடப்பூர் திருமுதுகுன்றம்போற்றி. (௬௫)

மறைபலமுழங்குந்தில்லை வண்கழிப்பாலைகாழி
நிறையருட்டிருவெண்காடு நிகரறுகடவூர்நாகை
குறையில்வண்புகலூராரூர் குடந்தையையாறுமற்றை
யுறைபலதலமும்போற்றி யுறந்தைமாநகர்வந்துற்றான். (௬௬)

திருவுறையூரைச்சார்ந்த வனசரன்சிவனூர்கோயின்
மருவினன்றன்முன்விட்ட கோவினைவாயிற்கண்டா
னொருவருமகிழ்ச்சிபொங்க வோங்குமிவ்வறமேநாயே
னருவினைதொலைத்திவ்வண்ண மாக்கியதென்றுவந்தான். (௬௭)

இத்தலந்தன்னைநீங்கே னென்றுமென்றுள்ளத்தெண்ணி
யுத்தமசிவதீர்த்தந்தோயந் தொளிர்தளிமுக்காறசூழ்ந்து
வித்தகபஞ்சவான விமலனையுமையைத்தாழ்ந்து
பத்தியின்விபூதிவாங்கிப பூசினன்பணிந்தான்பின்னும். (௬௮)

பகருமிந்நியமமன்பிற் பற்பனுடவருந்தாற்றிப
புகரிலவண்ணத்தையா பூரணவருளபெறறீற்றிற்
சிகரவண்கயிலைசேர்ந்தான் றிருந்துபால்பிடேகிப்போர்
நுகர்தருபோகமயாரே நுவலபவாதவததின்மிக்கீர். (௬௯)

பாயசீருறந்தைமேய பஞ்சவானேசற்போற்றி
மேயபேரன்பிற்சூழ்வோர் விருமபிமுன்னின்றுதாழ்வோர்
தீயபாலபிடேகிப்போர் சிந்தித்துத்துதிததலசெயவோர்
தூயநீறணிவோர்மேன்மை சொலலவலலவாயாரொனறுன. (௭0)

வேடன் முத்தியடைந்தபடல முற்றிறறு.
ஆகத் திருவிருத்தம் - ௧௨௫௫.

---

## திருநீற்றுப்படலம்.

எழுதருமுருவக்காந்தி மதியிடத்தியையவைதத
முழுமுதலுறந்தைவிலவ வனத்துறைமுககண்மூர்த்தி
தொழுதகுமலர்த்தாள்காண்டற் கேதுவாய்த்துலங்காநிற்கும்
பழுதகனீற்றின்மேன்மை யறிந்தவாபகரலுற்றும. (௧)

ஒளிமிகுதெய்வநீற்றி னுண்மையையனந்தங்கோடி
யளியுளாகடுக்கைமாலை யாடரவணிந்தவெண்டோட்
டெளிவுடையொருவனேசொற் றிடவலோனவனல்லாத
வெளியமாலயன்முன்னுய யாவருஞசொலவலலாரோ. (௨)

வான்றவழ்சிகரகோடி மாபபுகழ்ச்சயிலமேய
தேன்றவழ்கடுக்கைவேணிச சிவபிரானிதன்பேருண்மை
கான்றவழ்கஞ்சமேய கடவுளுக்கருள்செய்தானென்
றான்றவமுடம்பினேற்கு மூணர்த்தினன்வியாதமேலோன். (௩)

அந்தண் மாசயிலேமேயா னருடலைக்கொளும்வியாதன்
சந்தமார்நீற்றினுண்மை தமியனேற்குணர்த்துங்காலை
மந்தணமிதுநீயோர்ந்து வளர்சிவபத்திவாய்ந்து
பந்தமதறவுள்வார்க்கே பகருதியென்றுசொற்றான். (ரு)

நீவிருமிப்பிறாக்குணர்தத வேண்டுமேனெடுவெற்பீன்ற
தேவியோாபாகத்தமமான் றிருவடிக்கன்புவாய்ந்து
பாவியரிணக்கமோவிய பக்குவசீலமபூண்ட
மாவியலொழுக்கினுர்க்கே மனஙகனிந்துணாக்கவேண்டும். (௬)

தாரியலகொன்றைவேணித் தம்பிரானடியார்க்கன்ப
ராரியாக்கினியாகாம மாகியவவிகருநீரா
சீரியர்கேட்பசசொற்ற குரவனுந்திஙகுசோா
னுரியலவருமபெமமா னலலருட்குரியரவா. (௬)

அன்னியசமையத்தார்க்கும் வாதனுசெயறிவிலாக்கு
மன்னியகுணமிலாககுஞ் சிவகதைவாஞ்சியாக்கும
பன்னியகுரவன்கேட்ட பண்பினமாணுக்கரோடு
துன்னியவளற்றுவீழ்வன் றனேந்தெனச்சொல்லும்வேதம். (எ)

எண்ணினுரணாதமவாழ்வு மெண்ணில்வான்பிரமர்வாழ்வு
மெண்ணிலிந்திரர்தமவாழ்வு மெண்ணிலபலலமராவாழ்வு
மெண்ணிலபல்லறஙகணலகு மிலகுவெண்ணீற்றின்வாழ்விற்
கெண்ணிலோரணுவேயென்னு மெண்ணிலாத்தெய்வவேதம். (அ)

ஆரியனுபதேசத்தோ ரங்கைநீறமையவைத்து
வார்புனலாற்குழைத்து மனுமுறைதரிக்கவேண்டுஞ
சேர்தருமற்றுளோருத் தூளமேசெய்யவேண்டு
நாரியல்குரவற்குள்ள விலக்கணநவிலக்கேண்மின். (கூ)

குலங்குணமழகுவாய்மை கோதறுநியாயநீதி
நலம்படுசொற்கண்மேன்மை நாடுதிண்பொறைமுன்னுய
வலம்படுசிறபபுவாய்ந்து மாதேவன்பாதபத்தி
யலங்குநீறணிவார்நேய மமைந்தவன்குரவனுவான். (க0)

செந்திருநிறத்தோனுதித் தேவாதலைமைதேர்ந்தே
யெந்தையார்வடிவிலாத வடிவமுப்போதுமெண்ணி
மந்திரம்புவனந்தத்து வங்கலைபதம்வன்னங்க
டந்திரமாதியோர்ந்த தன்மையன்குரவனுவான். (கக)

பதிபசுபாசவுண்மை பகர்நெறியுணர்ந்துதூய
மதியினைந்தெழுத்துமோர்ந்து வஞ்சனைசினம்பொய்யாதி
*விதிவிலக்கிகந்துதள்ளி விடயத்துவிருப்பமோவித்
துதிபெறநிற்போன்றானே தூய்மைசாலகுரவனாவான். (கஉ)

மாசறுபூசையாதி வகுத்தகாலத்தியற்றி
யீசர்தமபுராணமாதி யினியநூலபலவுமோர்ந்து
பேசுநாற்பதந்தெளிந்து பெருகுமானந்தபோதத்
தேசுசாலவிளக்கமிக்கோன் றிருவருட்குரவனாவான். (கங)

வடமொழியாதிமற்றை வண்மொழியிலக்கணங்க
டிடமுறவுணர்ந்துசெப்புந செய்கையுள்ளவனுமாகி
மடனறவடைந்தோருள்ள மாறின்றிநானுஞ்செய்யக்
கடவனேகுருமாணுக்க னியலையுங்கழறக்கேண்மின். (கச)

ஓக்குநற்குலத்திற்றோன்றி யோஙகுமாசாரம்பூண்டு
பக்குவஞ்சைவநேயம பழுதறவுடையோனாகி
மிக்கசீரறிவுசில மெய்யுரையழகுவாய்ந்து
தக்கநல்லொழுக்கமிககோன் சாருமாணுக்கனாவான். (கரு)

வஞ்சனைசூதுபொய்மை வழக்கழிவிகழ்ச்சியாதி
நெஞ்சினுநினையானாகி நிமலன்மெய்யடியார்க்காணிற்
செஞ்சரணங்கள்போற்றிச் சிவனெனநினைதன்னோர்பால்
விஞ்சியவிருப்பங்கொள்வோன் விளங்குமாணுக்கனாவான். (கசு)

மாலயனாதியோர்புல் வாழ்க்கையின்மனம்பற்றாணப்
பாலமாரமூற்கணைகள் பரனருள்பெறவிருப்பனு
சாலவுமுடையோனாகித் தலமெலானுசார்ந்துபோற்றுஞ்
சீலமூண்மருவிநிற்போன் சிறந்தமாணுக்கனாவான். (கஎ)

மனமொழியுடலமூன்றாற் குரவற்குவழிபாடாற்றல
கனவினுமறவானாகிக் கனிவுளத்தினனாய்நிற்போன்
புனிதமாணுக்கனின்னோன் புகரறுத்துயர்வுபூண்ட
முனிவின்முன்னுரைத்தவாசான் பாற்செலமுன்னிமாதோ. (கஅ)

தினமுடமாதம்பக்கஞ் செவ்வியதணையும்போதிற்
றனதுநாடனக்குத்தாரா பலமதிபபலமுஞ்சார
வினைதருமோரைசுத்தி நிகழ்தருநல்லிராசி
புனைதரவுணர்ந்தாசானபாற் போயினிதடியிற்றாழ்ந்து. (கக)

* விதித்தல்-சொல்லல்.

வடதருநீழல்வைகும் வரதனென்றெண்ணிநின்று
விடயவாதனைகணித்த விமலவாசிரியன்வாக்கா
லிடமருள்செய்யவாங்க ணிருந்துபதேசம்பெற்றுக்
கடவுள்வெண்ணீற்றுமேன்மை கனிவொடுகேட்டல்வேண்டும். (உ0)

இருகிரகணங்கைத்தோற்றங் கார்த்திகைமதியேய்வாரம்
பருவமத்தோதயஞ்சேர் மகோதயம்பரனிராமூற்
கருதுநாணீறுசெய்யக் கவர்வர்கோமயமுணர்ந்தோர்
மருவுறுபயனுறுதான் மற்றைநாட்கவரின்மாதோ. (உக)

விடியுமுனெழுந்துநீரிற் றோய்ந்துவெண்ணீறுபூசி
மடியுடுத்துருத்திராக்கம் பவுத்திரந்தரித்துமாறுக்
கொடியனைநோக்கிடாது மோனமேகொண்டுழிக்
கடிவருநஞ்சமுண்ட கடவுளையுள்ளத்துள்ளி. (உஉ)

இலகுமைந்தெழுத்தோனயா யிரந்தரமுள்ளத்தெண்ணிக்
கலவுபாதகங்கணிக்குங் கௌவியநல்குகின்ற
குலவுமான்முன்னர்ச்சார்ந்து கோதிலெட்டுறுப்பினனு
நிலவுமைந்துறுப்பினுனு நெடிதுறவணங்கிப்போற்றி. (உ௩)

சொல்லியபசுவின்காயத் திரியினாற்றுதித்துப்போற்றிப
புல்லகண்டம்பாலாதி பொருந்துமின்னடிசிலோடு
நல்லரிசியின்மாவூட்டி நறும்புனலினிதருத்திச்
செல்லுமவ்வான்பினேகி யம்மனுவயுதஞ்செபபி. (உச)

காதுசிற்றத்தான்மூப்பான் கருப்பவான்கன்றீனவா
ளேதுவற்றியபாலாமே யுற்றவான்மலந்துய்க்கின்ற
தீதுசாலானிவற்றிற் றிருவெண்ணீறியற்றற்காகக்
கோதுறுமயங்கொண்டாலென் றுரைப்பர்நூலுணர்விற்கூர்ந்தோர்.()

அந்தணர்தமக்குவெள்ளை யரசருக்கரீத்தவண்ணஞ
சிந்தைசெய்வணிகருக்குக் கபிலைபின்னோர்க்குச்செப்பின்
முந்துமைவருணமாகு மொழிந்தவானரியதென்னி
லெந்தநன்னிறத்தானேனு மிழிவிலையேற்கலாமால். (உ௬)

ஊழுதயத்திற்சிந்தை யுன்னியதியையுமப்பா
லேழெனுங்கடிகைக்குள்ளே யிருஞ்சிவஞானப்பேறும்
வாழிநன்கிரண்டாம்யாம மெற்படும்வயங்குமுச்சி
யாழியவன்புசாரு மானிடைமயங்கொள்வார்க்கே. (உஎ)

கைத்தலங்களிற்பலாசங் சஞ்சத்தின்மயத்தையேந்தி
யுத்தமதலத்தில்வெற்பி லுயர்நதித்தடத்திலவில்வ
பத்திரமுள்ளகானிற் கோட்டத்திற்படியின்மேலாஞ்
சுத்தமாரிடத்திற்கோநன் மயம்புடமிடுதெறாய்தாம. (உஅ)

கோகனமாடகேசஞ் சயிலங்கேதாரங்கூறும
வாகுசால்காருசிநீப வனமருசசுனஙகுடந்தை
தோகைசேர்பதியுறந்தை சிராமலைசுடரானைக்கா
சீகரவாவிசூழுரு சிதம்பரமுதற்றலத்தில. (உகூ)

மனுமுறைதவறிடாமல் வண்புடமிடும்விபூதி
புனைவோர்ப்பனவற்கோறன் முதற்பழிபோகுமன்றி
நினைதருபுவியிற்சுத்த நிலையுடையிடத்துஞ்செய்ய
வனையதேயாகுமன்பா மடத்தினுமாருமென்ப. (ஙO)

கோமயங்கவரச்சாதங் கொண்டதையுண்டைசெய்ய
வாமம்வெஙகதிர்முன்வைககக் கோரநற்பதடிவைத்து
நாமமாரழலமைக்கப புருடநன்னலஞ்சால்வண்மை
யாமதையெடுக்கவீச மைநதுமந்திரபகளாமால். (ஙக)

கற்பவெண்பூதியீது காமாகானசத்துக்காய்ந்த
சொற்படுமயஙகவாந்து துகிலகொடுவடித்தநீர்விட்
டற்புறவுருட்டிமுன்சொல விதிவழாதழல்சாறாய
நெற்பதடியினிட்டாக்கு நீறநுகற்பமாமால. (ஙஉ)

கண்டகோமயங்கடமமைக் கையினலெடுத்துருட்டி
மண்டுமிபதடியாதன் மருவசசெய்தழலுளளாகி
யெண்டகுபக்குவத்து விளைந்ததுதோந்தெடுத்துக்
கொண்டநீறுபகற்பபபோ கொள்ளுமென்றுரைபபாசான்றோர். ()

காயந்தகோமயவெருத்தூள் கண்டதுசேரக்கூட்டி
வாய்ந்ததீமூட்டிபபின்னர் மருவியபாகநோக்கித்
தோய்ந்தமேற்பொடியைநீக்கித் தூயதையெடுத்துக்கொள்வ
தாய்ந்திடினகற்பமென்ன வருமறையங்கங்கூறும. (ஙச)

கற்பமுன்னுயமூன்றுங் கரிசறுவிசேடமாகுஞ்
சொற்படுமகற்பந்தானத் துணைசசிறப்புடையதன்று
பற்பலவனத்தினுள்ள மயமெடுத்துண்டைபண்ணி
முற்படியன்றிச்செய்தன் மொழியிலவுகிகநீறும். (ஙரு)

ஈதுமாதேவன்ருட்கன் பிலலவாபேதைமாதர்
கோதுதீரொழுக்கநீத்தா கோதையாபுணாபபிற்கூர்ந்தா
ரோதுகையொன்ருலேற்போ ருற்றகானீனாமுன்ளுத்
தீதுசால்பலருமபூச லாமெனசசெபபுமவேதம. (கூசு)

முன்சொன்னமூன்றிற்கின்ரு மொழிதரினுரியராகாா
பின்சொன்னவிரண்டுமீச னருள்பெறுபெரியோாககாகா
வென்சொல்கேன்சற்பநீற்றை யேறறணுவளவுசிந்திற்
புன்சொலேபெறுவாமுனசெய் புண்ணியமனைததுநீஙகி. (கூஎ)

ஈசனுங்கற்பமாக வியற்றும்வெண்ணீறுமொன்றே
காசினிநீறகற்பங் கழறியபெயாககேயாகு
மாசிலையாபததுற்ருற் கிடைத்தநீறணிநதுகொள்க
தேசுசாலபத்திமேனமை செழிதநிடுநதவததானமிககீா. (கூஅ)

நீற்றைநூதனபாண்டததி னிறைத்தைநதுமனுவுஞ்சொலலித்
தேற்றுருத்திரஙகணூறு மூலமோரயுதஞ்செபபிய
போற்றுறுநலமிருத்திஞ் சயமயுதமபுகன்று
சாற்றியதலததமைத்த தகுவெண்ணீற்றையுஙகலந்து. (கூகூ)

சந்தனநானமெளவல் சண்பகங்கோட்டமவாச
நந்தியகருபபூரஞ்சீாப பாதிரிஙயககுமேல
மூந்துதண்பனிநீராதி மூரிநீருலகினமிகக
கநதமீசத்தாற்கூட்டிக கலநதிடன்முறைமையாமால். (ச0)

காஞ்சனஞ்செம்புவெண்பொன் கஞ்சபாத்திரஙகளாகி
லாஞ்சமமொன்றற்கொன்றங கிழிவுளதெனினுமாகும
வாஞ்சையிற்பைகுடுக்கை மருவிலையிடத்துமவைத்து
நீஞ்சொணுபபிறவிவேலை நீக்குநீறணியலாமால. (சக)

கடஙகளிலடைந்தநீற்றைக் கையினுலெடுத்தீசத்தாற்
ருேடங்குசொலபாத்திரத்திற் றுலஙகுறவைத்துக்காலை
திடமபெறுமுசசிமாலை யிரவினுஞ்சிவநூலசொன்ன
விடஙகளில்மனுக்களசொலலிப புனைந்திடுமியலபுஙகேண்மின். (சஉ)

வேறு.

சிரமீசமுகமபுருட மூரஙகோரநாபியிடைச் சிறந்தவாமந், தரு சத்தனுசானுமுத லவயவத்திற்றரிபபதற்குச் சாற்றுநூல்கள், வரு தான்மெண்ணூன்கும பதினுறுமோரொட்டு மதிக்குமைந்து, மொரு

வாதவிமமுறைமை யனைத்துமுறையொவ்வொன்று வுளபபக்கேண்மின. (௪௩)

உசசிநுதலிருசெவிகண ணிரண்டுசெழுங்குமிழதனிணைக ளூரமற்றபபான, மெசசுபுயமுழங்கையவை யடிநுதிகைமணிக்கட்டு விளங்குநாபி, யிசசைவிலாததோணமுதுகு முழங்காலங்குறுகீழ்ககாலிரணடுபாதம, வைசசிடுசநதரமுபபா னிரணடிடமபூமுதலெட்டு வடிவுநதெயவம (௪௪)

தலைமுகமாபுறநாபி யிருமுழங்காலகரத்தாறு சாாவிலாககள்
குலவுநடுமுதுகுகளம பதினைறுமடிபதியென கோமாறுகு
மிலகுசிரநெறறியுர மிருதோளபகககஙகளபின்பா லிருநான்கென்ப
மலரவனவேளவனமுனரிவாதனெடுபிதிாககளிறைவழுததுஙகாலே

ஓதுதலைமுகமரும முயர்புயஙகளிந்தாக வுளைக்குந்தானங்
கோதகலுமைவரிறைவெண்ணீறறைநீரிறுறகுழைத்துப்பின்னர்
வேதநுவல்சிறுவிரலைப் பெருவிரலைநீககிமற்றை விரலாற்சன்ம
வேதமறவணிதிரி புண்டரமாம்விதிமாலெம் பெருமான்றேவர்

அங்குலமாறீரிண்டுமூன்றொன்றுநால்வருணரணிவரங்க[தாகுங்
மெங்குமலாதெககுலததாயிழையார்ககும் பின்னவருககிசைத்த
தங்குகுறுககாயணித றார்த்தமுகம்பெறிறறீமை சாருமன்றி
யிங்கிதநேத்திரமிரண்டி னளவாபபுண்டரமிடுதலியையுமென்ப

ஒத்தநுதலிருதோளி லிருவிழியினளவணித லுரத்தின்மீதா, லத்தனத்துக்குள்ளமர வணிவதுவேமேன்மைவிர லாறின்காறு, மததகமொண் ணுதன்மாபு புயங்களினுந்தரித்திடலும் வண்மையாகு, முத்தமமறறிடமபோலங் குலமொன்றுசிரத்தினுக்கு முரியதாகும். (௪௮)

உயர்முகமாய்வெண்ணீற்றைக் குழைத்துவிதிப்படியணியினொழியாதுற்ற, துயரமுழுதொழியுநறு நீறென்றேபவக்கடற்குத் தோணியாகும், வியனிரவியுதயமுசசி சந்தியத்தயாமமாம் விளம்புங்காலம, பயனுதவுவெண்ணீற்றைப் புண்டரமாயணிந்திடுவர் பரனுக்கன்பர். (௪௯)

தேசுறுவெண்பொடியினையுத் தூளஞ்செய்திடுமுறையுஞ் செப்புங்காலை, நேச்முறுபுசிப்புறங்கன் முன்பினிருவகையியக்க நீத்தபின்னும், பேசுசிவதீககையிலார் கொடியரைக்காணினுஞ்

செய்தல் பெருமையாகு, நீசர்முகமேநீறு புனையாதமுகமென்று நிகழ்த்தும்வேதம். (ருo)

புண்ணியதீர்த்தத்தாடு பயன்மனுவேதிடுபயன்முற் புகலாநிற்கும், கண்ணியபல்பயன்யாவு நீறணிநற்பயனோடு கருதப்பேராமோ, வண்ணியநீறணியவாமெய் யுரோமமொன்றிற்கிலிங்கமொன்றென் றறையுநூல்கள், எண்ணியபைகுடுக்கைமுத லளித்தோர்களரனுருவ மெய்துவாரால். (ருக)

நற்காலத்திடைசசுவண மளித்திடலுமமைழவறந்துநன்மைசாம்புந், துற்காலந்தனிலன்னங் கொடுத்திடலுநதுலாபார முதலாசசொன்ன, சொறகானதானங்களைல்குதலுமற்றுநறுந் தூயநீற்று, மற்காணுந்தானததுக கொவ்வாதெனறிடிலதன்சீர் வகுக்கலாமோ. (ருஉ)

பூதியணியாமலொரு தானஞ்செய்தாலுமகம் புரிந்திட்டாலுஞ், சோதிவளராலயஙகை தொழுதாலுநன்னதிக்கட டோயந்திட்டாலு, நீதிகொடென்புலத்தவருக கூட்டிடினுந்தூய நெறிசெய்தாலுங், கோதுபடுதீயபல னல்லாதுநற்பலன்கை கூடிடாதே. (ருங)

சுந்தரவெண்ணீறணிந்து கண்மணிமாலிகைபூண்டு தூயவன்புற்,றெந்தைதிருவைந்தெழுதது முசசரித்தாசசனைபுரியு மியல்பினோரைச, சிநதையிலவஞசனைகொண்டு சினந்தோருநிந்தைமொழிசெப்பினோரும், வந்துமலப்புழுவாயப்பல் பவமெடுத்துப்பின்பளற்று மறுகிவீழுவார். (ருச)

வறுமைநனியடைந்தாரு மாநிலத்துப்பழிமொழியே வழங்குவாரு, முறுபிணிகளடைந்தாரு மொருவருககொன்றுதவாதவுலோபர்தாமு, மறுவில்குணததவர்ககிடாசெய் மடவோரும் வழககழிவு வகுக்கின்றோருங், குறுமதிவேணியனுறந்தைப பிரானீற்றைமுனனிகழ்ந்த கொடியோர்கண்டீர். (ருரு)

சிவனையவனடியாரைத் திருநீற்றைக்கண்மணியைத் திகழுமூக்க, ணவனுரைத்தசதுமறையை யாகமத்தைப்புராணத்தையருந்தீர்த்தத்தைத், தவமுதவுதருமத்தை நிந்திப்போர்நிரயமேலாஞ் சார்வாரென்ன, வுவமையறுநூலனைத்து முழங்குமரு மாதவத்தாலுயர்ந்த சான்றீர். (ருசு)

ஆவாவிப்புண்ணியநீற் றினைநினைக்குந்தொறுமுருகு மடியேனுள்ள, மோவாதுகண்பனிநீ ருகுக்குமயிர்சிலிர்க்குமதை யுரைக்குந்தோறுந், தாவாவின்னமுதினுந்தீங் கண்டினும்பாகினுமினிகருந் தடங்கையேந்தித், தேவாதிதேவனரு ணினைந்துபுனை தொறுமின்பந் தேங்குமாதோ. (௫எ)

கழிமுடைவெந்நோயராய்த் தீயராய்க்கழிகாமக் கவலையோரா, யிழிதொழிலராய்க்குலத்து மிழிஞராயுள்ளவர்க ளெனினுமம்மான், பழிதபுவெண்ணீறணிவ ரொனிலவரோநமையெல்லாம் பரிந்தாட்கொள்வோ, ரொழிதருமற்றோர்களையா நினைத்தாலும் பெருங்குற்ற முண்டுமாதோ. (௫அ)

போற்றுதிருவுறந்தையமர் புண்ணியநாயகனருளிற் புகுத்தாநிற்கு, நீற்றுநெறிமுறையையிகழ்ந் தெண்ணுமடவருந்துணிந்து நிந்தைவார்த்தை, சாற்றுமடவருமவர்தந் தீநாவும்வாழ்கவவர் தம்மைசசேர்கை, மாற்றுதலிலாதகொடு மடவர்களும்புடவியிடை வாழ்கமாதோ. (௫௯)

பஞ்சவருணேசனுறை யூரின்விதிப்படிநீறு பலிக்கசசெய்து, தஞ்சமெனவணிவரிக பரமுத்தியடைவரிது சரதமோர்மி, னெஞ்சமிகுகனிவொடுமிந் நீற்றுமான்மியங்கேட்போர் நிசழ்த்துவோரும், வஞ்சமகலமரராய் வாழ்குவரொன்றுன்கூத மதிவல்லோனே. (௬0)

திருநீற்றுப்படல முற்றிற்று.

ஆகத திருவிருத்தம்-ககுகடு.

## தீர்த்தப்படலம்.

கூர்த்தநன்மதி யாளர்சாலுறந்தையிற் கொன்றை
சேர்த்தசெஞ்சடைச் சிவபிரான்றிருவருள் சிவண
வார்த்தவெம்பவ மூழ்குநர்க்கெளிதறுத தருஞ்சீர்
போர்த்தமெய்ச்சிவ தீர்த்தமான்மியஞ்சில புகல்வாம். (க)

இருவினைச்சிமிழ்ப் புண்டுழலேழையா மெனக்குங்
கருவினைத்துடைத் தருள்பவன்கண்ணுதற் கடவுள்
பொருவினைத்தவிர் தளிக்குளொள்ளழற்றிசைப் பொலியுந்
திருவினைக்குடை பவர்க்கருளுஞ்சிவ தீர்த்தம். (உ)

திலகவாணுதல் பங்கினனுறந்தைமா தேவ
னுலகமேவுபல் லுயிர்களுமடைந்துற மூழ்கிக்
கலகமார்வினை கழித்துயக்கருணையா லன்றே
யிலகவாக்கிடப் பட்டதாலிருஞ்சிவ தீர்த்தம். (ரு)

கண்டுபோற்றினு மூழ்கியுட்கொள்ளினுங் கருத்துட்
கொண்டிருப்பினுந் துதிபபினுஞ்சூழினுங் கொடிய
மண்டுதீவினை நீங்குவர்மேற்பவ மருவா
ரண்டர்நாயகன் றிருவுருக்கொண்டினி தமர்வார். (சு)

மருவுமோரிரு கிரக்ணம்வயங்கமா வாசை
பருவமார்கழி யாதிரைபகர்விதி பாத
மொருவிலித்தகு நாளிலத்தடங்குடை யுரவோர்
பொருவிலாசசிவ ஞானமுற்றின்பத்துப் பொலிவார். (ரு)

மேடமைப்பசி யாடிதைப்பிறபபினன் மேன்மை
நீடுகார்த்திகைச சோமவாரஙகளி னிலவு
மாடிமேவுறு குருவினிலத்தட மாடி
னூடுகங்கைநா ருடலின்பெரும்பய னண்ணும். (சு)

சிங்கமாமதி வருகதிர்வாரநற் றினத்திற்
றுங்கமார்கழிப் புலரியிற்றுலங்குதைத் திங்கட்
பங்கமில்புகர் வாரத்தினத்தடம் படிவோ
ரங்கணெண்ணிய வெண்ணியாங்கேயினி தடைவார். (எ)

மாசிமாமதி மகத்தினுமருக்கனல் வாரத்
தேசில்சத்தமி கூடியதினத்தினு மிண்டை
வாசவத்தடங் குடைதரின்மடந்தையர் தான
நேசமுற்றொரு நூறுசெய்திடுபல னேரும். (அ)

கன்னிமாமதி வருமமாவாசையிற் கருத்துட
பொன்னிகொள்ளுமச் சிவதடம்படிந்துதென் புலத்தார்க்
குன்னியொண்புன லிறைத்திடிலோங்கிருங் கயையை
மன்னியாயிரஞ் சிராரத்தஞ்செய்பெரும்பயன் மருவும். (கூ)

கார்த்திகைத்திரு மதிவருகாரியிற் கலந்த
சீர்த்திசால்பிர தோடத்திற்சிவதடஞ் சேர்ந்து
பூர்த்திநீர்படிந் துட்கொளிற்பூவுல காளும்
பார்த்திபத்திரு நுகர்ந்துபின்சுவர்க்கத்திற் படர்வார். (கo)

மீனமாமதி யினும்விடைமதியினும் விமல
மானவச்சிவ தடமடைந்தன்புற வாடி
லூனமின்மகப் பேறுமுற்பேறெலா முறுமந்
நானநற்பய னுலறுபாவமு நவில்வாம். (கக)

தந்தைதாயர்மா துலருடன்பிறந்தவர் தக்கோர்
சுந்தரந்திகழ் மடந்தையர்பாலர்க ளேய
வந்தணாளர்க ளருந்தவத்தினர்முத லான்றோர்
நொந்திடக்கொடுந் தீமைசெய்கொடியர்நோன் பிழந்தோர். ()

சேதுமுற்புன லாடலைச்சிவதரி சனத்தை
வேதவாகம புராணத்தைநிந்தைசெய் வீண
ரோதுவித்தவர் வேதியர்பொருள்கவர்ந் துண்டோர்
தீதுசெய்தய லார்பொருள்கவர்ந்திடுந் தீயோர். (கங)

வந்திரந்தவர்க் களிப்பமென்றுரைத்துப்பின் மறுத்தோர்
தந்திரம்புரிந் தொருவர்நன்களிப்பதைத் தடுப்போர்
முந்துநன்றியை மறந்தவர்சுற்றத்தை முனிந்தோர்
மந்திரம்புகல் குரவனுக்கிடர்புரி மடவோர். (கச)

துறந்துளோர்தமை யிசழ்ந்தவர்நன்னெறி தொலைத்தோர்
மறந்துமீதரா வுலோபர்கள்வத்திர மணிகள்
சிறந்தபொன்முதற் பொருள்கரவிற்கொளுந் தீயா
ருறந்தமாதர்கற் பழித்தவர்மதுப்புலா லுண்போர். (கரு)

இனையர்பாதகம் யாவுமொண்கதிரின்மு னிருள்போற்
புனையுமத்தட மன்புறமூழ்குறிற் போமா
லனையதீர்த்தமா டுநரகத்துள்ளினர் யாரும்
வினையினீங்குவர் முத்தராகுவர்பிணி மேவார். (கசு)

இன்னநற்றட மூழ்குறுமியல்பினை யிருநூல்
சொன்னசங்கிர கத்தினுஞ்சிலவுறச சொல்வா
நன்னயம்பொலி குணத்தொடுபுனிதராய் நடந்தாங்
கென்னையாளுடை யான்றிருமுன்பணிந் தெழுந்து (கஎ)

மங்கலக்கண பதிதனைத்துதிசெய்து வணங்கிப்
பொங்குமத்தடக் கூலத்திற்பொருந்துகூ விளத்தை
யெங்கணுயக னெனவெண்ணிவலம்புரிந் திறைஞ்சி
யங்கையாலருக் கியமுதன்முகமனன் களித்து. (கஅ)

பொன்னிமாநதித் திசைமுகம்பொருந்தவாங் கிருந்து
பன்னுசங்கற்ப விதிமொழிந்தெழுந்துநீர்ப் பணிந்து
மன்னுசுத்தியின் மூழ்கியாங்குறுகடன் வயக்கி
யுன்னுமீரவத் திரங்களோந்தாடைவே றுடுத்தி. (௧௯)

பூதிகண்டிகை புனைந்துவாய்மோனமே புரிந்து
சோதியார்தரு மிருவகைநியாசமுந் துலக்கி
யாதிபஞ்சவர் ணேசனையகத்துறத் தியானித்
தோதுமூலமோ ராயிரமுருச்செபஞ் செய்து. (௨0)

மோனநீங்கியாங் கருந்தவர்மறையுணர் முனிவ
ரானவர்க்கெலா மியன்றபொன்றுதிய வளித்து
மானமாலய னுதியர்தொழும்பஞ்ச வர்ன
ஞானநாயகன் பொன்மயக்கோயிலு ணண்ணி. (௨௧)

குறிமருங்குறு நறுமலர்க்கூவிளந் தருவை
நெறியினற்பணிந் தெழுந்தட்டதிபமு நிறைத்து
மறுவிலாமல ராதியாலருச்சனை வயக்கி
யறியுமெண்ணிரண் டாமுபசாரமு மாற்றி. (௨௨)

வேண்டுநற்பொருள் வேண்டியேவிடைகொடு வலமாய்
மீண்டுபஞ்சவர் ணேசனற்றிருமுனர் மேவி
யாண்டநாயக னடிபணிந்தெழுந்துசங் கற்பம்
பூண்டுமாமுகப் பிள்ளையைமுன்புபூ சித்து. (௨௩)

அத்தனுக்கிய லருக்கியமுதலபி டேக
நித்தவாகம விதிவழிநிகழ்தரப் புரிந்து
சுத்தவத்திர முதற்கொடுபுனைந்துதூ மலராற்
பத்திரங்களா லருச்சித்துநிவேதனம் பண்ணி. (௨௪)

தூபதீபமே முதலுபசாரமுந் துலக்கி
மாபராபரை தன்னையுமிம்முறை வணங்கி
நீபமாலிகைக் கடவுடம்பூசையு நிரப்பித்
தாபநீக்குதண் டீசனைவிடைகொடு சார்ந்து. (௨௫)

வேதியர்க்குமற் றடியவர்பசிதெற மெலிந்தோ
ராதியர்க்குநன் கனமளித்தருந்திடன் முறையா
மீதுமேடஞ்சே மீனமாமதிசெய விசையுந்
பாதிலாநிறை மதியினுஞ்செய்திடிற் சிறக்கும். (௨௬)

நம்பரன்சிவ நிசிபிரதோடங்க ணல்ல
வம்புகழ்த்திரு நாள்களிற்செய்தன ராகி
னும்பர்போற்றிடும் வெள்ளியங்கிரியிடத் தொப்பி
றம்பிரானரு கிருப்பர்பேருவகையிற் றழைந்து. (௨௭)

எடுத்துரைத்தநாண் மூழ்குதற்கரியதே யென்னி
லடுத்தவத்தமக் கியன்றநாளத்தட மூழ்கிக்
கடுத்ததும்பிய கண்டனைப்போற்றிடக் கடவோர்
விடுத்ததீவினை யாளராய்விளங்குவர் மாதோ. (௨௮)

வேறு.

மைந்தரில்லையென்று துய ரடைந்துவாடு மைந்தருறையூர்ம ருவிச் சிவதீர்த்தத்தி, னைந்துதினம்விதிப்படியே மூழ்கியுப்பி ல ன்னமொரு போதயின்றை வண்ணர்மூன்றுந், சுந்தரவொண் காந்திமதி யம்மைமூன்றுந்தூ வானெய்ச்சுடர்நா டோறுமாக்கி, முந்துபிரதக்கணமா யிரங்காற்செய்து முன்னியிருவரையுமினி தருச்சித்தேத்தி, (௨௯)

பாவுபொறியடக்கி யொருமனமாயல்லிற் பகருநங்கைமா ன்மியமெய் யன்பிற்கேட்டு, மேவுதரைமிசைக்கிடந்தே துயின் றுபின்னாள் விடியலினுமத்தீர்த்தம் படிந்துமேன்மை, யோவுத லின்மறையவர்மூற் பரமனன்பருவப்பவறு சுவையுறு வூட்டிப் பின்னர்த், தாவறுபாரணஞ்செய்யி னோராண்டெல்லை தவிராது மதவேணிகர்மைந் தனையீன்பாரால், (௩௦)

அன்றியும்வந்தியர்பிருகு வாரந்தோறு மப்புனறேய்ந்தொ ருகாந்தி மதிப்பிராட்டி, தன்றிருமுனிறைஞ்சுபுநெய் விளக்கமே ற்றித் தனிச்சுவைப்பாயசநிவேத னஞ்செய்விதுக், குன்றியலா வன்பினது வாங்கியுண்டுகோயில்வலஞ் சூழ்ந்திவ்வா றோராண் டெல்லை, யொன்றியவிவ்விரதநெறி யாற்றுவாரே லொளிர்மக வீன்றெடுப்பர்குறை யொழிந்துமாதோ. (௩௧)

வண்டுளருந்தண்டுளப மாலைமார்பன் வளம்பொலியச்சிவ தீர்த்த மன்பின்மூழ்கிப், புண்டரவெண்பூதியணிந் தக்கமாலை பு னைந்துதிருவைந்தெழுத்து முள்ளத்தெண்ணி, யண்டமுதவிய காந்தி மதியெம்மோபோ டைவண்ணப்பெருந்தகையை முக்கா ற்சூழ்ந்து, தண்டமெனவெதிர்பணிந்து குடந்தம்பட்டுத் தாவா தபேரன்பிற் றுதிக்கலுற்றான். (௩௨)

அன்றாலமுழுவதுமுண் டடியேனுதி யமரர்பலனையும்புரந் தவண்ணல்போற்றி, குன்றுதவனைசிலையாக் கொண்டுவிண்டார் குலவுபுரமூன்றெரித்த கோமான்போற்றி, கன்றுநிற்சரணடை ந்த பாலற்காகக் காலனுயிர்குடித்தகழற் கடவுள்போற்றி, மன் றுடுமெணிபோற்றி யுறந்தைமேய மாப்புகழ்சாலைவண்ண வள்ள ல்போற்றி. (௯௩)

நீறுடுதிருமேனி நிமலபோற்றி நிலவுபேரன்பினர்பா னே யபோற்றி, யேறுடுகொடியுயர்த்த வேந்தல்போற்றி யெம்மனோ ர்க்கருள்புரியு மிறைவபோற்றி, யாறுடுசெஞ்சடிலத் தையபோ ற்றி யனைத்துயிர்க்குமின்பமரு ளாதிபோற்றி, பாறுடுவெஞ்சூல ப் படையாயபோற்றி பஞ்சவர்ணப்பெருமானின் பாதம்போற்றி

வேறு.

என்றுமனமழன்மெழுகிற கரைந்துருகவருவிமழை யிருக ண்வார, நின்றுநனிதுதிபுரியு நவியபசுந்துழாய்மாலை நெடி யோன்முன்னர்க், குன்றுசிலையாகவளைத் தவுணர்புரமூன்றெரி த்த கோமான்றோன்றி, நன்றுநினதுளககருத்து நவிழியெனப்ப ணிந்தெழுந்து நவிலுமாயோன். (௯௫)

அத்தநறுமனைபுனைநின் னடியிணைக்கனிடையறு வன்புவே ண்டு, மித்தலத்தென்பெயர்விளங்கு மாறுதிருவருட்குறியொன் றினிதுதாபித், துத்தமமார்தரப்போற்ற வேண்டுமதினென்றுநீ யுறைந்துபோற்றும், பத்தர்தமக்கிட்டகா மியமுதவிநனிவிளங் கு பண்புவேண்டும். (௯௬)

மருவுநினதருளினினி துலகளிக்குமடியேற்கு மாறுப்பற்ப ல், வெருவுமசுரர்களுழல்வா ரன்னவரைவீறழிக்கும் வீரம்வே ண்டும், பொருவறுமித்தலத்தடியேற் கிருபபிடமும்வேண்டுமி வை புரிந்தீயென்று,திருவமர்நாயகனிரப்பத் தெய்வநாயகனீது திருவாய்விள்ளும். (௯௭)

நம்மடியார்பலருள்ளுஞ் சிறந்துளைநீயெனிலுனக்கு நல்கா துண்டோ, தெம்மடியப்பொருவலிமுன் யாவுமளித்தனநமக்கு த்தென்மேற்கெல்லை, யம்மவிடங்கொண்டுறைதி யித்தளியின்ம ருத்துறுதிக் கணைந்துகோதி, லெம்மருணற்குறிதாபித் திடுதிவி டைபெறுகுதியென் றிறைமறைந்தான். (௯௮)

நிறையுவகைக்கடன்மூழ்கி நெடியமாலத்தளிக்கு ணெடுங்காற் றிக்கி, னறைகுறியொன்றுறத்தாபித் தடிவணங்கியசுராரடி யறுமா றேட்டி, மறைபுகலத்தலத்திறைசொல் லியதேத்துவடமுகமாய் வாழ்கின்றானன், குறையுமவன்தாபித்த குறிதொழுவோரொண்ணி யவை யுறுவாரொன்றும. (௩௯)

மலர்மகனுமிந்திரனும வானவருந்திருவுறந்தை மருவியன்பி, னலர்தருமசிவதீர்த்தம் படிநதுதனிததனிபெருமா னருள்பெற்று ய்ந்தார், குலவுநபிலனுமூழ்கி யிறபபொழிந்தான் றுறவறத்தோர் கொடுத்தசாபங், கலவவுரு*வுருவடைபாா வதன்மூழ்கியவவுருவங் கழித்துய்ந்தானே. (௪௦)

கோதறுயிர்சிவதீர்த்த பெருமையெவருரைபபார்கங்கா கூப மென்ன, வோதவுறுபவநீர்த்த மொன்றுண்டாலதன்சீரு முரைக் கமுற்று, தேதமினற்றிருவுறைபூா வாவிகுளஙகூபமவல் யாவுந்தீர்த்த, மாதரமாாதரகமொணமி னென்றுரைத்தான்சூதமுனி யாயமே லோன். (௪௧)

தீர்த்தப்படல முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கரு௫சு

## வேதச்சுருதிப்படலம்.

தூயவேதச் சுருதியென்பானெனுரும்
பாயசீருறந் தைபபதிமேவியங்
காயதீர்த்தமன் பிற்படிந்தைந்திற
நாயனாரரு ணண்ணியதோதுவாம. (௧)

உரத்துவாச விதழியொண்மாறெரு
கரத்துவாசஞ் செயககொள்கடவுடாள
சிரத்துவாசஞ் செயப்புனையுந்திறற்
பரத்துவாசநன் றுமப்படிமையோன். (௨)

மன்னுமம்முனி வன்வழிவந்தவன்
மின்னுநேர்சடை வித்தகனுமமே
பன்னுநாவன் படிறுபடாநலந்
துன்னுவேதச் சுருதியென்பானரோ. (௩)

* உரு-அட்டை

கரையும்வேதக கடற்கரைகண்டவன்
றரைவிளங்கவன் றன்மனைமாதராள்
புரையிலபொற்பினள் புண்ணியசீலையென்
றுரைசெயுமபெய ராடனகொபயிலாள. (ச)

அனையமாமனை யோடுமெவவந்தண
னினையுஙகஙகை நெடுநதிசசாரொரு
வனையுமபாாபபனச சேரியினமன்னியோ
புனையுமிலலறம போற றுபுவாழுநாள. (ரு)

தழைதருஞ்சிவத தானமெலாஞ்சென்று
மழைதருஙகளத் தானைவழிபட
விழைதருங்ாருத் தாளனவிருமபுமெல
லிழைதருமமிடை யாளொடெழுநதனன். (சா)

அரியதனமனை யாளொடுமநதணன்
பிரியமேவுமி னின றுமபெயாநதுபோய்க்
கரியகானமலை யாறுங்கடந்துசீ
ருரியசெலவத் துளுவமுற்றனரோ. (எ)

சாலநன்மை தழைககுமங்நாட்டிடை
ஞாலநலகிய நானமுகததான் றிரு
மாலவாவி வணஙகுமவளமபதி
கோலமாமதிற் கோகருணஞ்சென்றான். (அ)

கோடிவண்டு குடைதரத்தாமரை
கோடிபூததது கோதின்முபபத்துமுக்
கோடிதேவருங கூடுநதுறையது
கோடிதீாததமில லோடுஙகுடைந்தனன். (கூ)

நீறுகணமணி தாஙகிநெடுவினை
நூறுமைநதெழுத் தெண்ணிநுணுகிடைச்
சிறுவேற்கட் டிருவொடுமந்தணன்
வீறுசால விமலன்றளிமேவினான். (ய0)

பாடுசாலவிடை முன்புபணிநதெழுந
தாடுபூஙகொடி யாலயஞசூழ்வந்து
கூடுமன்பிற் குலவுமுலகெலா
நாடுமல பாநாதன்முனெய்தினான். (கக)

மையறீர்த்தருண் மாபலமூர்த்தியை
யையலெனறடி யேனோநனகாட்கொளுந்
ந்தயலபஙகுடைத் தானுவைக்கண்டனன்
மெய்யலாதுண ராமறைவிததகன். (கஉ)

ஆடினனகளித தஞ்சலிசென்னிமேற்
சூடினனிருந் தோததிரமாமறை
பாடினனபுள கபபடாபோாவைமெய்
மூடினுனள ஞருஙமுனிவனே. (கங)

சஙகுதாஙகியுந தாமரைதாஙகியு
மெஙகுநாடியுங காணருமேநதலபாற்
பொஙகுமனபிற் புறவிடைகொணடன
னஙகுநினறகன றனமனையாளொடும. (கச)

மனனுபேரருண மாபலமூாததியை
யுனனுவாருள ளொளியைசசிலபகற்
பனனுமனபிற பணிவதறகெணணுபு
மினனுமநநகாத தஙகினனமினனெடும். (கரு)

ஊலமாரமு தாககியவண்ணலைக
காலநதோறுங கனிவிறபணிநதுமெய்ச
சீலமாமறைச செமமனுறையுநாண்
ஞாலமேததும விழாவொனறுநணணிற்றே. (கசு)

குலவுகோகருணக்குணகருன றிற்கு
நிலவுநறறிரு நாளெனநீடெழி
லுலவுமவிணமுத லாயவுலகங்கள
பலவுமாங்குப படாநதனவெனபவே. (கள)

கூறுநாரணா கூட்டமுநான்மறை
தேறுநான்முகா கூட்டமுந்திண்டிறல்
வீறுவாசவா கூட்டமுமிகவொளி
யேறுவானவா கூட்டமுமீண்டின. (கஅ)

எண்ணின்மாதவ ரெண்ணினமுனிவர்க
ளெண்ணில்விஞ்சைய ரெண்ணிலவுணாக
ளெண்ணிலுசித்தர் கருடரியக்காக
ளெண்ணிலாத வுர்கருமீண்டினா. (ககூ)

ஆயநான்மறை யந்தணராய்புகழ்த்
தேயமன்னர் செழிக்குமவணிகர்கள்
பாயசூத்திரர் மற்றுமபகர்பல
நேயமார்தரும வந்துநெருங்கினார். (௨0)

கரிநெருங்கி னவாவுங்கலினவாம்
பரிநெருங்கின பைம்பொற்கொடிஞ்சித்தேர்க்
கிரிநெருங்கின கீதமபயில்பொழி
யரிநெருங்கின வமபொழிலந்நகர். (௨௧)

தெருவெலாஞ்சனந் தெற்றியெலாஞ்சன
மருவுமேடைபொன் மாடமெலாஞ்சனம்
பொருவிலாமலர்ப் பொங்கரெலாஞ்சனங்
குருவுலாமதிற் கோகருணத்தினே. (௨௨)

பண்புகூர்திரு நாளிற்பல்லோர்களு
நண்புகூரு நெருங்கிலங்கேனுநள
ளெண்புகாதென் றிசைத்திடலென்னைகொல்
கண்புகாது கருததுமபுகாதரோ. (௨௩)

அறத்துமிக்கநன் ஞானிலணங்கனா
திறத்துமிக்க செழுமுலைக்கோடுகள
புறத்துந்தைக்கும பொருவின்மணிபபணி
நிறத்துந்தைக்கு நெருக்குறுமைந்தர்க்கே. (௨௪)

கலவுமின்ன நெருக்குறுகாலையிற்
குலவுதெய்வதக் கோசசெவிபபோநக
ருலவுபொன்செய விமானத்துமாபதி
நிலவுகாட்சி நிரம்பவளித்தனன். (௨௫)

வந்தயாவரு மாபலநாயகர்
சந்தமாரும பவனிதரிசித்தார
முந்தமுந்த வணங்கிமுடியின்மேற்
கந்தநாண்மலர்க் கைகுவித்தின்புற்றார். (௨௬)

உரியகற்பின் மனையொடுமொண்குணப
பெரியவேதச் சுருதியுமபெட்புறாக்
கரியநாயக னன்றபவனிகண்
டிரியவெவ்வினை யின்பத்துண்மூழ்கினான். (௨௭)

விழவின்மேவக் குழாத்துளோர்வேதியன்
மழலைவாயுடை மைந்தனும்பாரிய
மழகமைந்து மருங்குறவாருட
குழகனாதிருக் சோலந்தொழுதனன். (௨௮)

தானுமப்பனவியுந் தாழ்தடக்கைமழ
மானுமேந்திழை போகமிடமிழுசிழந்
தானுமேன்பு முருந்தினறுரால
மீனுமைந்த னொருங்கிலிருந்தனன். (௨௯)

விமனமேறசெல் கருதயிலைமீட்டவசு
சமலமாயின சண்டிலனசேனைசித
தமலமினமலை யாளொடசசாவிரை
யமலாதுனபத நமுநம்திதுருவினன. (௩௰)

சோயிலுங்குள னுங்குளிகோபுர
வாயிலுந்திரு மண்டபமுங்கிளா
*ஞாயிலுங்கமழ் காவுநகைமணி
வேயிலுமமுளா விரைந்துதுருவினன். (௩௧)

எங்குநாடியுங் கண்டிலனெனசெயவான
பொங்குமவெந்துயரப படடுப் புழுங்குவான்
றங்குமோ தமிர னிமிழிதாளையுண
முங்குமவிழு முழுங்குறகூவுமால (௩௨)

கூவுஞ்சோ நங் குலையுஞசனங்களுண்
மேவுமோக்கும வியாகுமவிழுமெழு
நாவுமெஞசம புலருநடுங்குமாங்
கோவுமவேவிட முற்றாறுமமோ. (௩௩)

மைந்தனேயெனும மாமணியேயெனு
முயநதிடேனினி யோகெடுவேனெனு
மெந்தநாளு மெனநகுயிரோயெனுஞ
சிநதைவெந்துயா தீரவருகெனும. (௩௪)

கோதுதீரநத குலவிளக்கேயெனும
யாதுசெயகே னருமருநதேயெனுந
தீதுதீரகுஞ செழுமபொருளேயெனுங
காதனின்முகங் காணவருகெனும. (௩௫)

---

* ஞாயில-மதிலுறுப்பு.

கலவுசோர்ங் கடத்தவருகென
நிலவுவாய்முத்த நேரவருகென
முலவுநின்னடை நோக்கவுறுகெனும்
பலவுமிவ்வகை பன்னியழுங்குவான். (௧௬)

இனையபன்னி யிடருறுவேதியன்
றனையங்குள்ளவர் கண்டுளஞ்சாம்பினர்
முனையவெவ்வினை தூண்டிமுடுக்கலிற்
றனையவேதச் சுருதிநகைத்தனன். (௧௭)

கற்றுளாரொனி னுங்கணையம்பொறி
செற்றுளாரொனி னுந்திகழ்நல்வரம்
பெற்றுளாரொனி னுமமுனைவினைபிழை
யற்றுளாரொனி னும்விடலாகுமோ. (௧௮)

குலையுமந்தணன் கோபமுதிர்ந்துசீ
தொலையுமவேதச் சுருதியைப்பார்த்துநீ
நிலையுந்தணணளி நீந்தனையாதலா
லலையுமபேயுரு வாகெனவைதனன். (௧௯)

அக்கணத்தி னருகுநின்றொலாந்
தொக்கவச்சந் தொடர்புற்றிரிதர
மிக்ககேள்விகொள் வேதச்சுருதியூர்
நக்கபேயுரு நண்ணினனென்பவே (௨0)

விண்டுவாதியா காணரும்வித்தகன்
மண்டுபேரரு ளாலருமந்தனை
யண்டுமோசிறை யந்தணனேடுபு
கண்டுவந்து கவலையற்றனரோ (௨௧)

வெய்யசாபங்கொள் வேதச்சுருதியும்
பொய்யனென்றுயர் போகியருளென
மையறீர்திருக் கோகருணம்வள
ளையன்முன்பணிந் தன்பினரற்றினன். (௨௨)

புலம்புவானுக் கிரங்கிபொருவில்பொற்
சிலம்புவில்லிநனு செய்பதலங்கடாழ்ந்
தலம்புதீர்த்தம் படிநின்னனொரு
நலம்புகழ்த்தலத் தேகுநடமதி. (௨௩)

அன்னதானநல் லற்புதத்தானமென்
றின்னநீரநின் னுள்ளத்திலெண்ணுதி
யென்னநாத னியம்புமொழியுணர்ந்
துன்னருங்களிப் புற்றுவணங்கினான். (சச)

அங்குநின் றுமில் லாளொடகன்றனன்
பொங்குந்தெய்வப் புகழ்சால்சிவத்தல
மெங்குஞ்சென்று தொழுதங்கியைதரத்
தங்குதீர்த்தம் படிந்துநதவிர்ந்திலான். (சரு)

துன்றுமித்துய ரொங்குத்தொலைதருஞ்
சென்றுபஃறல மெங்குந்திரிந்தன
மென்றுள்ளெண்ணிமுன் னன்மையியைதர
வொன்றுமேன்மை யுறந்தைவந்துற்றனன். (சசா)

குறிகொள்சங்கரன் கோயிலுட்புக்கனன்
செறிகொள்பூஞ்சிவ தீர்த்தமபடிந்தனன்
வெறிகொள்பேயுரு விட்டுவிளங்கினன்
மறிகொள்கைப்பரன் வாககுநினைந்தனன். (சஎ)

சிறந்ததானமிதேயெனுந்தேற்றத்தான்
பிறந்தவான்பயன் பெற்றனமெனறுள்வா
னறந்தவாத வருளுருவண்ணலை
நிறந்தவாதவனைத்தொழநேர்ந்தனன். (சஅ)

நீறுபூசி நிறைகண்மணியற
மூறுமாபுனைந் தைந்தெழுத்துன்னியே
மாறுதீர்ந்த மனமனையாளொடு
மாறுசூடிதன் றலயஞ்சூழ்ந்தனன். (சகூ)

கருமிடற்றுச்செவ் வேணிக்கடவுளார்
திருமுனெய்துபு சென்னிவணங்கினா
னருமகிழ்ச்சி யடர்ந்தெழுவன்புளம
பொருமநின்று புகலுந்துதியரோ. (ருo)

வேறு.

நீற்றையிகழ்வணிகனுறு கேழலுருததவிர்த்தாண்ட நிமலபோற்றி, கூற்றைநிகர்படைததடக்கைக் காதிமகனிடர்தொலைத்த குழகபோற்றி, யாற்றையுறுமுதங்கமுனி தலமடையப்பொலிவளித்த

வண்ணல்போற்றி, பேற்றையுறுமம்முனிவற் கைவண்ணங்காட்டிய வெம் பெருமான்போற்றி. (ருக)

திருநெடுமாலேவவரு கருடனுக்குவலியளித்த தேவபோற்றி, கருநெடுங்கட்கத்துருவின் புகழ்சிறிதுகேட்பவஞர் கழித்தாய்போற்றி, பெருநெடுவாரணமவெருவச் சேவன்மேற்கடைக்கணித்த பெருமான்போற்றி, குருநெடுமாமுடிவளவற் கித்தலமான்மியந்தெரித்த குழகபோற்றி. (ருஉ)

முருகுவிரிகுழலுமையோ டரவுலகமொருவியிவண் மூளைத்தாய்போற்றி, பெருகுதவவலியுடைசகு ராதித்தன்புரிகோயில் பெட்டாய்போற்றி, யிருகுலமால்வரைபபுயமற் றவன்செய்விழாவுவந்துகதி யீந்தாய்போற்றி, குருகுசெறிதருமுன்கைக் கத்துருமைந்தனுக்குவிழி கொடுத்தாய்போற்றி. (ருஙு)

அத்தகுகத்துருவுங்கார்க் கோடகனும்பணியவரு ளளித்தாய் போற்றி, யுத்தமவவ்வுதங்கமுனிக கொபபிலாக்கதியளித்த வொருவபோற்றி, சித்தமலமந்துழலோர் வனசரற்குக்கயிலையரு டேவபோற்றி, மூத்தலமும்புகழ்கற்ப நீறணிந்ததிருமேனி முதல்வபோற்றி.()

சிவதடத்தெண்புனலாடி யடிபணிந்துதுதிபுரிந்து திருமால்வேண்ட, வவமுறசுரரைக்கடியும வலியளித்தித்தலத்துறைய வளித்தாய்போற்றி, தவமிகுமற்றவன்பதிட்டை புரியிலிங்கத்தினிதுறையுந் தாணுபோற்றி, கவலையறநான்முகனு தியர்போற்றவரமளித்த கடவுள்போற்றி. (ருரு)

உருவுருவங்கடிந்தொருவற் புரந்துகபிலனுக்குமரு ளொருவ போற்றி, வெருவுமடியேன்கொடிய பேயுருவந்தொலைத்தாண்ட விமலபோற்றி, பொருவுதவிரொழிற்காந்தி மதியமமையொருபாகப புராணபோற்றி, மருவுறையூர்வில்வவன மூக்கீசம்வளர்பஞ்ச வான போற்றி. (ருசு)

என்றுதுதித்தருட்காந்தி மதிபதமும்பணிந்தருளா லில்லாளோடு, நன்றுவளர்திருக்கயிலை யினிதடைந்தானிருவுறந்தை நகர்வாழ் நம்பன், றென்றுபடுபுகழ்க்காதை யினும்பலவுண்டவைமுழுதுஞ் சொலவல்லார்யா, ரொன்றுபெருந்தவமுனிவீ ருணர்மின்களென்றுரைத்தா னுப்பில்சூதன். (ருஎ)

கேட்டமாதவரொழுந்து சூதமாதவற்பணிந்து கிளர்கைகூப்பி, வாட்டமோவினமுறந்தை மானமியங்கேட்டானந்த வடிவமானோ,

நாட்டமூன் றுடையபிரா னனையசினக்கியாமபுரித லுடின்யாதே, வேட்டவருள்செயுமுணர்வோ மென்றுதுதித்தின்புற்றா மேன்மையிக்கசார. (௫௮)

திருவுறையூர்ப்புராணமன்பி னெழுதுவோரெழுதுவிப்போர் செவியிற்கேட்போர், மருவுமதுகேட்பிப்போர் வாசிப்போர்பூசிப்போர் வகுத்துச்சொல்வோர், பொருவிலபொருளுரைப்போர்க்குப் பொன் ஞ[illegible]லவளிப்போர் புகன்றயாரு, மிருநிலபோகமுஞ்சுவர்க்க வின்பமுந்துய்த்திருங்கதியி னெய்திவாழ்வார். (௫௯)

ஆவாழ்கமறைபுகலந் தணாவாழ்கமனுநீதி யான்றசெங்கோற், கோவாழ்கவுழவுதொழிற் குடிவாழ்கமழைபொழியுங் கொண்மூவாழ்க, நாவாழ்கநாயன்மார் பாவாழ்கநல்லுறந்தை நகர்வாழ்மக்கட், டேவாழ்ககாந்திமதி யருள்வாழ்கவன்பரெல்லாஞ் செழித்துவாழ்க. ()

கார்திகழுங்கருமிடறுஞ் செஞ்சடையும்வெண்ணீறுங் கதிருமுக்கண்ணும், வார்திகழுமுலையுமைபா கமுமவராபயமுமொளிர் மழுவுமானும், பார்திகழுந்திருவுறந்தைப் பஞ்சவர்ணப்பெருமானார் பசுமபொன்மன்றத், தோதிகழுநடநவில வெடுத்ததிருவடியுமுளத் திருத்திவாழ்வாம். (௬௧)

வேதச்சுருதிப்படலமுற்றிற்று.

ஆ படலம் ௧௫ - க்கு, பாயிரமுள்பட திருவிருத்தம் - ௧௪௧௭.

## திருவுறையூர்ப்புராணம்

### முற்றுப்பெற்றது.

---

ஸ்ரீ பஞ்சவர்ணேசர் திருவடிவாழ்க.

ஸ்ரீ காந்திமதியம்மை திருவடிவாழ்க.

ஸ்ரீ மெய்கண்டதேவர் திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

---

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௧ | ௫ | சலிக்கதோ | சலிக்கததோ |
| ௬ | ௩ | ஞுடமை | ஞுடைமை |
| ௰௯ | ௧௦௮ | தலமை | தலைமை |
| ௬௧ | ௭௦ | செல்வு | செலவு |
| ௬௪ | ௮௭ | வாஙகனை | வாஙகானை |
| ௸ | ௯௩ | மொலாம | மெலாம் |
| ௭௫ | ௫௧ | வைகுல் | வைகுதல் |
| ௮௫ | ௨௦ | மரி | மறி |
| ௸ | ௨௧ | பொருத | பொருமா |
| ௯௧ | ௬௧ | மிதேறி | மீதேறி |
| ௸ | ௬௬ | பொருத | பொரயா |
| ௧௦௦ | ௧௪ | மலைந்த | வலைந்த |
| ௧௦௬ | ௫௮ | மலைக்கண் | மலைகண் |
| ௧௧௦ | ௯௨ | மேல்வாய | மேலவாய |
| ௧௨௦ | ௧௬௯ | பறிததே | பறித்தெ |
| ௧௨௨ | ௧௮௮ | மருகு | மறுகு |
| ௧௩௧ | ௨௫௮ | புனை | புணை |
| ௧௩௩ | ௨௬௯ | மிசைப்பலென் | மிசைப்பொன் |
| ௧௪௨ | ௬௬ | இந்தங் | இந்தத் |
| ௧௪௩ | ௭௩ | பேர்தீர்த்த | பேர்ததீர்த்த |
| ௧௪௪ | ௭௬ | தேவர்கா | தேவர்க்கா |
| ௧௪௮ | ௧௦௯ | வருந்தல் | வருதல் |
| ௧௫௯ | ௨௩ | தனிதனி | தனித்தனி |
| ௧௬௦ | ௩௪ | முலை | முக |
| ௧௬௮ | ௨௨ | பவுத்திர | பவித்திர |
| ௧௭௪ | ௯ | சிரார்த்தம் | சிராததம் |
| ௧௭௭ | ௨௯ | தூ | தூய |
| ௧௮௦ | ௧௧ | மலபா | மாபல |
| ௧௮௩ | ௨௯ | மேண்பு | மெண்பு |

அடையாறு,
சென்னை-20.